Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.30
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

தெளிவான வானிலை. சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.
30°c 28°c

பக்கம் 54 | சுடர்: 28 | கதிர்: 251 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆடி 19, ஞாயிறு 04.08.2013

தேர்தல் பிரசாரத்துக்காக தெற்கில் அரச சொத்துக்கள் 02


வென்றது நாச்சிக்குடா சென்.மேரிஸ் 22

கட்டுப்பாடு வேண்டும் விராட் கோஹ்லிக்கு 23

# யாழ்.குடாநாட்டில் 1 லட்சம் படையினர்

## படைக் குறைப்பு என்று மஹிந்த ஹத்துருசிங்க சொல்வது பச்சைப் பொய் என்கிறார் சம்பந்தன்

கொழும்பு, ஓகஸ்ட் 04
யாழ்.குடாநாட்டில் தற்போது 13 ஆயிரம் படையினரே நிலைகொண்டுள்ளனர் என்று யாழ். மாவட்ட பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ள கருத்தை அடியோடு நிராகரித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், அங்கு ஒன்றரை லட்சத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் உள்ளனர் என்றும் குறிப்பிட்டார்.



ஐ.நா. செயலாளர் நாயகம் மற்றும் சர்வதேச சமூகத்துக்கு இலங்கை அரசு அளித்துள்ள வாக்குறுதியின்படி யாழ்.குடாநாட்டில் மக்களின் வீடுகள், காணிகள் அனைத்திலுமிருந்து இராணுவத்தினர் உடனடியாக வெளியேறவேண்டும் என்றும் சம்பந்தன் தெரிவித்தார்.

யாழ்.அரியாலையில் இராணுவத்தின் பயன்பாட்டில் இருந்த தனியாருக்குச் சொந்தமான வீடுகள் மற்றும் காணிகள் என்பவற்றை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வமாக விடுவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட யாழ். மாவட்ட பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, ''யாழ்ப்பாணத்தில் தனியார் காணிகள் மற்றும் வீடு

தொடர்ச்சி: பக்கம் 21

## உயர்தரப் பரீட்சை நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக.04
ஜி.சீ.ஈ உயர்தர பரீட்சை நாளை 5 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் நாடெங்கும் உள்ள 2164 பரீட்சை நிலையங்களில் ஆரம்பமாகின்றது.

இப் பரீட்சையில் புதிய, பழைய பாடத்திட்டங்களின் படி 2 இலட்சத்து 92 ஆயிரத்து 706 மாணவர்கள் தோற்றுகின்றார்கள். புதிய பாடத்திட்டத்தின்படி 2 லட்சத்து 35ஆயிரத்து 318 பாடசாலை பரீட்சார்த்திகளும், 45 ஆயிரத்து 242 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றுகின்றனர். பழைய பாடத்திட்டத்தின்படி 12 ஆயிரத்து146 தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர்.

பரீட்சை நடைபெறுவதற்கு 30 நிமிடத்துக்கு முன்னதாகப் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்துக்கு வர வேண்

தொடர்ச்சி: பக்கம் 04

## மாரடைப்பால் வேட்பாளர் நேற்று சாவு

யாழ்ப்பாணம், ஓக.04
வட மாகாண சபைத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் நாகபாம்புச் சின்னத்தில் போட்டியிடும் சுயேச்சைக் குழு வேட்பாளர் ஒருவர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார்.

வைத்திலிங்கம் இராமசந்திரன் எனப்படும் ராமு (வயது -73) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சுன்னாகம் ரயில் நிலையத்துக்கு அருகாமையிலுள்ள வைரவர் ஆலயத்திலிருந்தே இவரது சடலம் நேற்றுக்காலை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி நபர் 25 வருடங்களுக்கு மேலாக மனைவி

தொடர்ச்சி: பக்கம் 21

## மயிலிட்டி, காங்சேன்துறை மக்களை வேறு இடத்தில் குடியேற்ற முயற்சி

யாழ்ப்பாணம், ஓக.4
மயிலிட்டி, காங்கேசன்துறையைச் சேர்ந்த மக்களில் மல்லாகம், சுன்னாகம் பகுதிகளில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களைச் சிமெந்து தொழிற்சாலைக்குச் சொந்தமான காணியில் குடியேற்ற அமைச்சர் ஒருவர் நடவடிக்கை எடுப்பதாக நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வலி. வடக்கில் உயர் பாதுகாப்பு வலயப் பகுதியிலுள்ள மயிலிட்டி, காங்கேசன்துறை மற்றும் பலாலியைச் சேர்ந்த மக்கள் தமது சொந்த நிலங்கள் விடுவிக்கப்படாமையால் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர்.

இந்த மக்களின் பூர்வீக நிலங்களைச் சுவீகரிக்கும் நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்துள்ளது.

இவ்வாறானதொரு நிலையில் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள இந்த மக்களை அவர்களின் சம்மதமின்றி வேறு இடங்களில் குடியமர்த்துவதற்குரிய நடவடிக்கைகளை அமைச்சர்

தொடர்ச்சி: பக்கம் 21

## அரச நிகழ்வில் தேர்தல் பிரசாரம்

### வேட்பாளரும் கலந்து கொண்டார்



யாழ்ப்பாணம், ஓக.04
வடக்குத் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சி ஒன்றுக்கு ஆதரவாக அமைச்சர் ஒருவரும், படையினரும், அரச அதிகாரிகளும் அரச நிகழ்வைப் பயன்படுத்திய போதும் தேர்தல்கள் திணைக்களத்தினாலேயோ, பொலிஸாராலேயோ அது குறித்து எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

வட மாகாண சபைத் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டிய தரப்புக்கள் மௌனம் சாதிப்பது நீதியான தேர்தல் இடம்பெறுமா என்ற சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றஞ் சாட்டியுள்ளது.

வட மாகாண சபைக்கான

தொடர்ச்சி: பக்கம் 21

## சாரதியையும், நடத்துநரையும் மோசமாக தாக்கிய சீருடையினர்

### முழங்காவிலில் நேற்றுச் சம்பவம்

முழங்காவில், ஓக.4
நடுவீதியில் வைத்து தனியார் பஸ் சாரதியும், நடத்துநரும் சீருடையினரால் தாக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை முழங்காவில் மன்னார் வீதியில், முழங்காவில் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் இடம் பெற்றது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:

மன்னார்-முழங்காவில் வீதியில் மன்னாரிலிருந்து வந்த தனியார் பஸ்ஸும் பூநகரியிலிருந்து சீருடையினரை ஏற்றி வந்த பஸ்ஸும் முழங்காவில் வீதி

தொடர்ச்சி: பக்கம் 04

## வன்னிப் பெண்மணிக்கு ஆசிய சமாதான விருது

கொழும்பு, ஓக. 04
வன்னியைச் சேர்ந்த பெண் சமூகச் செயற்பாட்டாளருக்கு ஆசியாவில் மதிப்புமிக்க அமைதி விருது அறிவிக்கப்பட்டுள்ளது.



கிராமிய மட்ட சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகப் பணியாற்றியுள்ளதாகவே தவசிறி சாள்ஸ் விஜயரட்ணம் என்ற பெண் ''என் சமாதான விருது''க்கு (N Peace Award) தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவருடன் ஆப்கானிஸ்தான், நேபாளம், பிலிப்பைன்ஸ், கிழக்கு திமோர், இந்தோனேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த மேலும் ஐந்து பெண்கள் இந்த ஆண்டுக்கான சமாதான விருதைப் பெறுகின்றனர்.

பெண்களின் தலைமைத்துவத்தைக் கௌரவிக்கும் வகையில், இந்த விருது ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. தவசிறி சாள்ஸ் விஜயரட்ணம், வன்னியில் பல்வேறு பெண்கள் சமூக அமைப்புகளில் முக்கிய பொறுப்புகளை வகித்து வருகிறார்.

சமூக மட்ட - பெண்கள் கிராமிய அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளராகவும், கரைச்சிப் பிர

தொடர்ச்சி: பக்கம் 21

## விஜயின் 'தலைவா' படத்தை இங்கு திரையிட தடைவரும்

கொழும்பு, ஓக. 04
நடிகர் விஜயின் 'தலைவா' படத்தை இலங்கையில் திரையிடுவது தொடர்பில் இழுபறி நிலைமையே காணப்படுகின்றது.

இது தொடர்பில் இன்னமும் தீர்மானம் எதனையும் மேற்கொள்ளவில்லை என்று இலங்கைத் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் அசோக சேர

தொடர்ச்சி: பக்கம் 21

## இலங்கையில் இன்னமும் ஊடக சுதந்திரம் இல்லை

### ஐ.நா.சபை குற்றச்சாட்டு

நியூயோர்க், ஓக. 04
இலங்கையில் இன்னமும் ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்படவில்லையென்று குறிப்பிட்டுள்ள ஐ.நா.சபை, ஊடக அடக்குமுறை தொடர்வதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்துவது அவசியமானது என்றும் ஐ.நா. சபை வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ-மூனின் பேச்சாளர் மார்ட்டின் நென்கீயிடம்,

தொடர்ச்சி: பக்கம் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புல்மோட்டையில் காணிகள் அபகரிப்பு



புல்மோட்டை, ஓக. 4

புல்மோட்டைப் பகுதியில் இராணுவத்தினரும், பௌத்த துறவிகளும் காணி அபகரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக அரிசிமலை, பொன்மலைக்குடா, தேத்தாவடித் தீவு, விரந்தீவு, மண்கிண்டிமலை ஆகிய பிரதேசங்களில் உள்ள காணிகளை இராணுவத்தினர் ஏற்கெனவே அபகரித்த நிலையில் தற்போது பௌத்த துறவிகளும் இந்தப் பகுதியில் உள்ள எஞ்சிய காணிகளை அபகரிப்பதாக அந்தப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து கடந்த ஜூலை மாதம் 23 ஆம் திகதி மாகாண சபை அமர்வின்போது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், இந்த நிலையில் காணிப் பிரச்சினை தொடர் பாக உயர் மட்டக் குழு ஒன்று கூடி பேச்சு நடத்தியதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற இந்த விசேட கூட்டத்தில் மறுநாள் கூடி காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது என முடிவு செய்யப்பட்டது.

இதன்படி மறுநாள் கூட்டத்தில்;

கிழக்கு மாகாண கல்வி, காணி அமைச்சர் விமல வீரதிஸாநாயக்க, வீதி அபிவிருத்தி அமைச்சர் உதுமான் லெப்பை, தவிசாளர் ஆரியவதி, நாடாளுமன்ற உறுப்பினர் எம். எஸ்.தௌபீக் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள், காணி ஆணையாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் பொது மக்களுக்குச் சொந்தமான காணிகளுக்கு எந்தவித இடையூறும் ஏற்படாத வகையில் செயற்படுவது, காணிகள் அளவை செய்யப்படுவதை உடனடியாக நிறுத்துவது தொடர்பான முடிவுகள் எட்டப்பட்டு, இவை தொடர்பில் உரிய திணைக்களங்களுக்கு எழுத்து மூலம் கடிதம் அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-10)

# வீடுகள் மீளக் கிடைக்கும் என்று காத்திருந்த மக்கள் ஏமாற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 4

கொழும்புத்துறை மேற்கு சுவாமியார் வீதியில் படையினரின் பாவனையில் உள்ள தமது வீடுகள் விடுவிக்கப்படும் என்று எண்ணி அங்கு சென்ற வீடுகளின் உரிமையாளர்கள் இறுதியில் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

அரியாலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை 512 படைப் பிரிவின் பாவனையில் இருந்த வீடுகளை விடுவிக்கும் நிகழ்வு யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வுக்கு கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் படைமுகாம் அமைந்துள்ள வீடுகளின் உரிமையாளர்களும் இராணுவத்தினரால் அழைக்கப்பட்டிருந்தனர்.

தமது வீடுகளும் விடுவிக்கப்படவுள்ளன என்ற எதிர்பார்ப்புடன் சுவாமியார் வீதி மக்களும் இந்த நிகழ்வுக்குச் சென்றிருந்தனர். வீடுகளைக் கையளிக்கவுள்ளதாகத் தெரிவித்து இவர்களிடம் கையொப்பங்களும் பெறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆயினும் இவர்களின் வீடுகள் எதுவும் மீளக் கையளிக்கப்படவில்லை. நடைபெற்ற நிகழ்வில் அரியாலைப் பகுதி வீடுகள் மாத்திரமே கையளிக்கப்பட்டன.

நீண்ட காலத்தின் பின்னர் தமது சொந்த வீடுகளுக்குச் செல்லவிருக்கிறோம் என்ற ஆவலுடன் சென்ற மக்கள் நீண்ட நேரம் காத்திருந்து விட்டு ஏமாற்றத்துடன் திரும்பினர் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-17)

# தேர்தல் பிரசாரத்துக்காக தெற்கில் அரச சொத்துகள்

## 'கபே' அமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக.4

மத்திய, வடமேல் மாகாணங்களில் தேர்தல் பிரசாரங்களுக்காக அரச கட்சிகள் சட்ட விரோதமாக அரச சொத்துக்களைப் பயன்படுத்துகின்றன. இது மிக மோசமான நடவடிக்கையாக உள்ளது என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்பான 'கபே' தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் 'கபே' மேலும் தெரிவித்துள்ளதாவது:

மத்திய, வடமேல் மாகாணங்களில் தேர்தல் விதிமுறைகளை மீறி அரச கட்சிகள் அரச சொத்துக்களைப் பயன்படுத்தி வருகின்றன.

அரச வாகனங்கள் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுத்தப்படுகின்றன. அரச விடுதிகள் பிரசாரத்துக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

மாத்தளையில் காணி அமைச்சர் உட்படப் பலர் தேர்தல் விதிமுறைகளை மீறி ஊர்வலத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன.

> தேர்தல் காலத்தில் அனைத்துக் கட்சிகளும் சமமாக மதிக்கப்பட வேண்டும்

தேர்தல் காலத்தில் அனைத்துக் கட்சிகளும் சமமாக மதிக்கப்பட வேண்டும். சம நிலையான சூழல் கொடுக்கப்பட வேண்டும்.

அரச கட்சிகளின் இந்தச் செயற்பாடு ஏனைய கட்சிகளின் வழமையான பணிக்கு இடையூறு ஏற்படுத்துவதாக உள்ளது. இந்த நிலை நீங்க வேண்டும்-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

# கூட்டமைப்பு தனித்து போட்டியிட ஹக்கீமே முக்கியமான காரணம்

## விமலின் புதிய கண்டுபிடிப்பு



'' கூட்டமைப்புக்கு முஸ்லிம் காங்கிரஸ் தனது வக்கிரமான ஒத்துழைப்பை வழங்கி வருகின்றது. இது தான் கூட்டமைப்பு தனித்துப் போட்டியிடக் காரணம்'' என வீடமைப்பு பொறியியல் கட்டுமானம் மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

''ரவூப் ஹக்கீம் சந்தர்ப்பவாத அரசியல் நடத்துகிறார். குறிப்பாகக் கிழக்கில் தேர்தல் இடம்பெற்ற போது அரசுக்கு எதிரான பிரசாரத்தை மேற்கொண்டார். ராஜபக்ஷ அரசுதான் பள்ளிவாசலை உடைக்கின்றது என பிரசாரம் செய்து வாக்குகளைப் பெற்றுக்கொண்டார். தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் அதே பள்ளிகளை உடைக்கும் அரசுடன் ஒட்டிக்கொண்டார். தற்போது வட மாகாணத் தேர்தலிலும் கூட்டமைப் புக்கு வக்கிரமான ஒத்துழைப்பை ஹக்கீம் வழங்குகின்றார். இவ்வாறான பொய்யான ஒத்துழைப்புக்களைக் கொடுப்பது தவறென ஹக்கீம் உணர வேண்டும் - என்றார். (ஐ-10)

# குற்றம் நிரூபிக்கப்பட்டால் காவி உடையை களைவேன்

**பொது பல சேனாவின் செயலர்**

கொழும்பு, ஓக.4

பொதுபல சேனா அமைப்பு ஒரு முஸ்லிம் நபருக்கோ முஸ்லிம் வர்த்தக நிலையத்துக்கோ அல்லது முஸ்லிம் பள்ளிவாசலுக்கோ தாக்குதல் நடத்தியது என்பது நிரூபிக்கப்பட்டால் நான் மகியங்கனை விகாரைக்குச் சென்று எனது காவி உடையை களைவேன் என அந்த அமைப்பின் செயலாளர் ஞானசாரதேரர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் டிலான் பெரேராவினால் பொதுபல சேனா மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பாக நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.(ஐ-10)

# கீரிமலை மயானத்துக்கு செல்ல தனியார் காணியூடாகப் பாதை

## அமைச்சர் அத்துமீறி நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 4

கடற்படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கீரிமலை மயானம் மற்றும் கோயிலுக்கான பாதை இருப்பதனால் தனியார் காணிகள் ஊடாகப் புதிய பாதை அமைக்கும் முயற்சிகளில் அமைச்சர் ஒருவர் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த தனியார் காணி உரிமையாளர்களிடம் சம்மதமின்றியே மேற்படி நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வலி.வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கீரிமலை முத்துமாரி அம்மன் கோயில் மற்றும் கீரிமலை மயானம் என்பன கடற்படையினரின் கட்டுப்பாட்டுக்குள் உயர் பாதுகாப்பு வலயப் பகுதியினுள் அமைந்துள்ளன.

ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ள போதும் அதற்குச் செல்வதற்கான பாதையைக் கடற்படையினர் கைப்பற்றி வைத்துள்ளனர்.

இதனால் குறித்த ஆலயத்துக்குச் செல்வதற்குத் தனியார் காணியூடாகப் பாதை அமைக்கும் முயற்சியை அமைச்சர் ஒருவர் மேற்கொண்டுள்ளார்.

தனியார் காணி உரிமையாளரின் அனுமதி பெறப்படாமலேயே மேற்படி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் குற்றஞ்சாட்டியுள்ளார். (த-5)

# சீட்டினால் பறிபோனது தாய் ஒருவரின் உயிர்

## சுதுமலை வடக்கில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக. 4

சீட்டுக்குப் பணம் செலுத்திவந்த பெண் வறுமை காரணமாக அதனைத் தொடர்ந்து செலுத்த முடியாத நிலை ஏற்பட்டதை அடுத்து தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் சுதுமலை வடக்கு, மானிப்பாயில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த வசந்தராஜா விக்னேஸ்வரி (வயது-46) என்ற பெண்ணே தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். இவர் எட்டுப் பிள்ளைகளின் தாயாவார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

குறித்த பெண் சீட்டுக்குப் பணம் செலுத்தி வந்துள்ளார். ஆயினும் வறுமை காரணமாக அவரால் தொடர்ந்து அதனைச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் சீட்டுக்கான பணத்தைச் செலுத்துமாறு கோரி சீட்டுப் போடுபவர்கள் நேற்று முன்தினம் காலை 10 மணி முதல் குறித்த பெண்ணின் வீட்டுக்கு வெளியே காவல் இருந்துள்ளனர்.

குறித்த பெண் வீட்டுக்குள் இருந்துள்ளார். பிற்பகலில் அவரது மகள் வீட்டின் உள்ளே சென்று தாயாரைக் கூப்பிட்டுள்ளார். பதில் வரவில்லை. அறையொன்றின் கதவு பூட்டப்பட்டிருந்தது. இதனையடுத்து கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தபோது அவர் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டுள்ளார். உடனடியாக அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

வைத்தியசாலையில் அவரைச் சேர்த்தபோது அவர் உயிரிழந்துவிட்டமை மருத்துவ பரிசோதனையில் தெரியவந்தது. விசாரணைகளின் பின்னர் சடலம் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் இறப்பு விசாரணை மேற்கொண்டார். (த-4)

# தீருவில் பொதுப் பூங்காவில் பெயர் பலகைகள் உடைப்பு

## விசமிகள் கைவரிசை

வடமராட்சி, ஓக.4

தீருவில் வயலூர் முருகன் ஆலயத்துடன் இணைந்த வெளியில் அமைக்கப்பட்ட பொதுப் பூங்காவின் இரு பெயர்ப்பலகைகள் இரவு வேளையில் இனந்தெரியாதோரால் சேதமாக்கப்பட்டுள்ளன.

கடந்த ஜூலை மாதம் 11 ஆம் திகதி வல்வெட்டித்துறை நகரசபை பொதுப் பூங்கா மீளமைக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதன்படி பூங்கா அமைப்பதற்கான அனைத்துப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு விசமிகள் பூங்காவின் பெயர்ப்பலகைகளை உடைத்து சேதப்படுத்தியுள்ளனர்.

பூங்கா அமைக்கப்படும் காணி உரிமத்தை ஆட்சேபித்து பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.


இந்த வழக்கை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு பொலிஸார் வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் ந. அனந்தராஜ் மற்றும் உப தலைவர் க.சதீஸ், உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளனர். இந்த வழக்கு விசாரணைக்காக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் கடந்த 30 ஆம் திகதி புதன்கிழமை எடுத்துக் கொள்ளப்பட்டு வேறு ஒரு திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பொதுப் பூங்காவின் இரு பெயர்ப் பலகைகளும் அடித்து நொருக்கப்பட்டுள்ளதுடன், பூங்காவில் நடப்பட்டிருந்த இரு மருத மரங்களும் பிடுங்கி எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் குறித்து வல்வெட்டித்துறை நகர சபையினர் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (ஐ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சைக்கு பாதுகாப்பு அதிகரிப்பு



வலி.வடக்கு, ஓக.4

நாளை ஆரம்பமாகவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கான மண்டபங்களின் பாதுகாப்பு கடந்த காலங்களைவிட இம்முறை மிகவும் கடுமையாக நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக கல்வித்திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் பரீட்சை மண்டபங்கள் மற்றும் வினாத்தாள்கள் வைத்திருக்கும் பாடசாலைகளுக்கு பொலிசார் மட்டுமே பாதுகாப்பு வழங்குவது வழமையாக இருந்தது. இம்முறை கடந்த காலங்களைப் போலல்லாது பரீட்சைத் திணைக்களமும் பாதுகாப்பு அமைச்சும் இனைந்து பாதுகாப்பு நடவடிக் கைகளை மேற்க்கொண்டுள்ளனர்.

பரீட்சை நடைபெறும் நாள்களில் குறிப்பாக ஒரு மாத காலத்துக்கு பாசாலைகளுக்கு ஆசிரியர்கள் செல்ல முடியாது என்பதுடன் பரீட்சை மண்டபத்தில் கடமையாற்றும் மேற்பார்வையாளர்கள், உதவியாளர்கள் என எவரும் பரீட்சை நடைபெறும் வேளையில் மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல முடியாது. அவ்வாறு யாராவது சென்றால் பொலிசார் அவர்களைக் கைது செய்யவும் முடியும்.

பாடசாலைகளில் மேலதிக வகுப்புக்கள் நடத்தல் விளையாட்டுக்களை நடத்தல், போட்டிகளை நடத்தல் என எந்த வகையான செயற் பாடுகளையும் மேற்க்கொள்ளக் கூடாதென பரீட்சைத் திணைக்களத்தினால் அனைத்துமாகான கல்வித் திணைக்களங்கள், பணிப்பாளர்கள் அனைவருக்கும் இது தொடர்பான அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (வ-86-11)

# 13 பிளஸ் தொடர்பில் மக்களுக்கு எதுவும் தெரியாது

## இப்படிக் கூறுகிறார் சு.க. வேட்பாளர்

யாழ்ப்பாணம்,ஓக. 4

13 பிளஸ் பற்றி பொது மக்களுக்கு எதுவும் தெரியாது. முதலில் அதனை மக்களுக்குத் தெளிவு படுத்த வேண்டும் என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர் செவ்வேள் தெரிவித்தார்.

வடமாகாண தேர்தலில் போட்டியிடும் அவர் வெள்ளிக்கிழமை காலை கொக்குவிலுள்ள அவரது அலுவலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

நான்கு வருடங்களாக நான் அரசியலில் உள்ளேன். கல்வி, சுகாதாரம், மருத்துவம் போன்ற அடிப்படைப் பிரச்சினைகள் பலவற்றை தீர்ப்பதற்கு உதவியுள்ளேன்.

என் மீது இரண்டு குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. நான் லண்டனிலிருந்து வந்துள்ளமையால் மீண்டும் அங்கு சென்று விடுவேன் எனவும், வங்குரணை சிதறடிப்பதற்காக ஜனாதிபதியால் அனுப்பப்பட்டவன் எனவும் கூறினர். நான் அவற்றை முறியடித்தேன். தேர்தலில் கள மிறங்க முன் ஜனாதிபதி, பொது மக்களிடம் கலந்தாலோசித்து மக் களின் வேண்டுகோளாணைக் கேற்றபடியே களமிறங்கத் தீர்மானித்தேன்.





தொழில் வழங்குவதென் பது பெரிய விடயமல்ல. தொழிலை உருவாக்க வேண்டும். குடா நாட்டைப் பொறுத் தளவில் சுகாதாரம் என்பதும் அரசியலில் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

35 கிரா மங்களில் நான் பல செயற் பாடுகளை முன் னெடுத்து வருகின்றேன். நாம் யதார்த்தம் அறிந்து செயற்படுபவர்கள். பொது மக்களுக்கு 13+ பற்றி எதுவும் தெரியாது. அதனை முதலில் மக்களுக்கு தெளிவு படுத்த வேண்டும்.

மக்களுக்கான தீர்வை அவர்களே தீர்மானித்த பின்னரே அரசுடன் போக வேண்டும்.

பிரச்சினைகள் அற்ற சமூகத்தினையே நான் விரும்புகிறேன். என்னால் சில விடயங்களைச் சாதிக்க முடியுமென்ற நம்பிக்கையில் களமிறங்கியுள்ளேன். அவ்வாறு என்னால் சாதிக்க முடியாவிட்டால் பதவி விலகுவேன்- என்றார். (த-10)

# பாண்டியன்தாழ்வுப் பகுதியில் 18 மின் மோட்டர்கள் திருட்டு



"இரவு நேரத்தில் ஒளியில்லாமல் மோட்டார் சைக்கிள் ஒன்று ஓடித்திரிகிறதாகவும் அதில் வருவோரே திருட்டுக்களில் ஈடுபடலாம் எனக் கருதுகிறோம் என்று பிரதேசத்தைச் சேர்ந்த சிலர் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், ஓக. 4

யாழ்.பாண்டியன் தாழ்வுப் பகுதியில் ஒரு மாத காலத்தினுள் வீடுகளிலிருந்து 18 மின் மோட்டர்கள் திருடப்பட்டுள்ளதாகப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இரண்டு தினங்களுக்கு ஒரு தடவை என்ற அடிப்படையில் இரவில் இவ்வாறு திருட்டு இடம்பெறுகிறது. சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்படுகிறது. எனினும் இதுவரை எந்தவொரு மின் மோட்டரும் பொலிஸாரால் மீட்கப்படவில்லை. அவை எங்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன என்பது தெரிய வில்லை என்று மக்கள் விசனம் தெரிவிக் கின்றனர்.

ஒரு மாத காலமாக இந்தத் திருட்டுத் தொடர்கிறது. ஆரம்பத்தில் இது தொடர்பாக அங்குள்ள ஏனையவர்களுக்கு தெரிந்திருக்கவில்லை. பின்னரே திருட்டுக்கள் அதிக வீடுகளில் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்ட நிலையில் இதுவரை சுமார் 18 மின் மோட்டர்கள் திருடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவும் ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர் ஒருவரது வீட்டில் நள்ளிரவு வேளை நுழைந்த திருடன் வெளியில் பொருத்தப்பட்டிருந்த மின்குமிழை ஒளிராமல் செய்துவிட்டு கிணற்றடியில் சிமெந்தால் கட்டிய சிறிய அறையின் கதவைக் கழற்றி மின் மோட்டரை புத்தி சாதுரியமாகத் திருடிச் சென்றுள்ளனர்.

அங்கு இரவு நேரத்தில் ஒளியில்லாமல் மோட்டார் சைக்கிள் ஒன்று சென்று வருவதாகவும் அதில் வருவோரே இவ்வாறு திருட்டுக்களில் ஈடுபடலாம் எனவும் பிரதேசத்தைச் சேர்ந்த சிலர் தெரிவிக்கின்றனர்.

ஒரு மாத காலத்துக்கு முன்னர் வீடு ஒன்றுக்கு அருகிலுள்ள தொலைத் தொடர்பு நிலையம் முன்பாக பாதுகாப்பாக இருந்த இரும்பிலான இரட்டைக் கதவுகளை திருடிச் சென்றுள்ளனர் என்று பிரதேச வாசிகள் மேலும் தெரிவித்தனர். (வ-4)

# இரத்ததான நிகழ்வு



யாழ்ப்பாணம், ஓக. 4

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு இரத்த தான நிகழ்வு இடம்பெறும். இதில் வலி.மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட குருதிக் கொடையாளர்கள் கலந்து சிறப்பிக்குமாறு தலைவர் திருமதி. ஐ.நாகரஞ்சினி கோரியுள்ளார்.

நாளை திங்கட்கிழமை வட்டு. லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் காலை 9.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை இரத்ததான நிகழ்வு இடம்பெறும்.

வலி.மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெறும் இரத்த தான நிகழ்வில் மாவட்ட மட்டத்தில் உள்ள இளைஞர், யுவதிகள் கலந்து கொள்வர். (ஒ-50)

# மதுபோதையில் மோ.சை.ஓடியவருக்கு ரூபா 10 ஆயிரத்து 500 அபராதம்

வடமராட்சி, ஓக. 4

மதுபோதையில் மோட்டார் சைக்கிளில் ஓடித் திரிந்த நபர் ஒருவருக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் 10 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

நெல்லியடி போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் வாகன சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த வேளை மது அருந்திய நிலையில் மோட்டார் சைக்கிளில் சென்ற இந்த நபர் சிக்கிக் கொண்டார்.

மது போதையில் மோட்டார் சைக்கிள் ஓட்டியமை, சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருக்காமை ஆகிய இரு குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி மோட்டார் சைக்கிள் சாரதிக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணையின் போது மோட்டார் சைக்கிள் சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டதன் பேரில் மது போதையில் மோட்டார் சைக்கிள் ஓடியமைக்காக 7 ஆயிரத்து 500 ரூபாவும், சாரதி அனுமதிப் பத்திரம் இன்மைக்கு 3 ஆயிரம் ரூபாவுமாக மொத்தம் 10 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ந-8)

# மீற்றர் வட்டிக்கு பணம் கொடுப்பதை நிறுத்தவும்

## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 4

யாழ்.மாவட்டத்தில் மீற்றர் வட்டிக்குப் பணம் பெறுபவர்கள் அதனைத் திருப்பிச் செலுத்தமுடியாது தமது உடைமைகள், வீடு, வளவுகளை விற்கவேண் டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். எனவே மீற்றர் வட்டிக்கு எவரும் பணம் கொடுக்கவோ, வாங்கவோ வேண்டாம் என்று யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி தெரிவித்தார். நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த செய்தி யாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பணம் பெறுவதற்கான மீற்றர் வட்டி மிக அதிகமாக உள்ளதால் பலர் அவற்றைத் திருப்பிச் செலுத்தமுடியா மல் திணறுகின்றனர். வேறுவழியின்றி பலர் தமது உடைமைகளை விற்றுப் பணத்தைச் செலுத்துகின்றனர். சிலர் தமது வீடுகளைக் கூட விற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அதனால் வேறுவழியின்றி தற்கொலைக்கு முயற்சி செய்கின்றனர்.

குடும்பங்கள் சிலவற்றில் கணவனுக்குத் தெரியாமல் மனைவிமார் மீற்றர் வட்டிக்குப் பணம் பெறுகின்றனர். பின்னர் அதனைச் செலுத்தமுடியாத நிலையில் கடன் கொடுத்தவர்கள் வீடுகளுக்குச் சென்று பணம் அறவிட முற்படுகின்றபோதே கணவன்மாருக்குச் சம்பவம் தெரிய வருகிறது. அவ் வாறான இந்த மீற்றர் வட்டியால் சில குடும்பங்கள் பிளவுபடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.-என்றார். (வ-4)

# நடமாடும் சேவை கோப்பாயில் இன்று

அச்சுவேலி, ஓக. 4

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இன்றும் நாளையும் இரண்டு தினங்களுக்கு தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது. இன்று கோப்பாயிலும் நாளை அச்சுவேலியிலும் நடமாடும் சேவை நடைபெறுகின்றது.

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 'பவ்ரல்' அமைப்பின் அனுசரணையுடன் ஜூன் மாதம் முற்பகுதியில் 3 தினங்கள் தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான நடமாடும் சேவை நடைபெற்றது. அதில் 1830 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட போதிலும் மேலும் பலர் அடையாள அட்டைக் கான விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்குத் தயாராக உள்ளனர் என பொது அமைப்புக்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து நடமாடும் சேவை நடைபெறுகின்றது.

இன்று ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்திலும் நாளை திங்கட்கிழமை அச்சுவேலி இராசமாணிக்கம் கல்யாண மண்டபத்திலும் நடைபெறுகின்றது.

நடமாடும் சேவையில் மூத்த பிரஜைகள் மற்றும் ஓய்வூதியர் அரச உத்தியோகத்தர்களுக்கு தனித்தனியான கருமபீடங்கள் செயற்படவுள்ளன என வலி.கிழக்கு பிரதேச செயலர் ஸ்.பிரதீபன் தெரிவித்தார். (வ-11+7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிப் பிணக்கு தீர்க்கப்படாமையால் சந்தையின் அபிவிருத்திக்கு தடைகள்

முல்லைத்தீவு, ஓக.4

முல்லைத்தீவு விசுவமடு பொதுச் சந்தையின் காணிப் பிணக்கு தீர்க்கப்படாமையினால் சுற்றுவேலிகளை அமைக்க முடியாமல் இருப்பதாக புதுக்குடியிருப்பு பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு உட்பட்ட விசுவமடு பொதுச் சந்தையின் அடிப்படை வசதிகள் இதுவரை பூர்த்தி செய்யப்படாத நிலையே காணப்படுதுடன் அதன் சுற்றுவேலிகள் அமைக்கப்படாததால் சந்தை வளாகம் கால்நடைகளின் உறைவிடமாக மாறியுள்ளது.

மேலும் இந்தச் சந்தைக் குரிய காணியின் ஒரு பகுதி விசுவமடு விவசாயிகள் கூட்டுறவுச் சங்கத்தின் பொறுப்பில் உள்ளது.

இதனால் சந்தையின் அபிவிருத்தி வேலைகளை முன்னெடுக்க முடியாத நிலை தோன்றியுள்ளதாகத் தெரியவருகின்றது.

இது தொடர்பாக புதுக் குடியிருப்புப் பிரதேச சபை யின் செயலாளர் மிதிலை நாதனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது; விசுவமடு பொதுச் சந்தைக் குரிய காணியின் ஒரு பகுதி விசுவமடு விவசாயிகள் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்தப் பிணக்கு இன்று வரை தீர்க்கப்படாத நிலையில் உள்ளது.

இதன் காரணமாகவே சந்தையின் அபிவிருத்தி வேலை முன்னெடுக்க முடியாதுள்ளது என்று தெரிவித்தார். (க-6)

# நான்கு வருடங்களாகியும் அடிப்படை வசதியில்லை

## சன்னார் கிராமத்தில் மீள்குடியமர்ந்தோர் கவலை

மன்னார், ஓக.4

மீள் குடியமர்வு செய்யப்பட்ட மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக் குட்பட்ட சன்னார் கிராமத்தில் உள்ள தமிழ் மக்கள் எந்தவித அடிப்படை வசதிகளும் இன்றி பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாக அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

நாட்டில் இடம்பெற்ற போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட நிலையில் கடந்த 4 வருடங்களுக்கு முன் சன்னார் கிராமத்தில் மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டனர். அப்போது சன்னார் கிராமத்தில் 150 தமிழ்க் குடும்பங்கள் மாத்திரமே மீள் குடியேற்றம் செய்யப்பட்டன.

அவர்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க எந்த அரச நிறுவனங்களும் முன்வரவில்லை. இந்த நிலையில் தனியார் நிறுவனங்கள் அவசர தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுத்தன.

சன்னார் கிராமத்தில் கடந்த 4 வருடங்களுக்கு முன் சுமார் 150 தமிழ் குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ள நிலையில் அவர்கள் மீள்குடியேறியபோது அமைக்கப்பட்ட தற்காலிக குடிசையிலே இன்று வரை வாழ்ந்து வருகின்றனர்.

குறித்த கிராமத்தில் இது வரை வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லை,உரிய முறையில் வீதிகள் செப்பனிடப்படவில்லை, மின்சாரம் போன்ற அத்தியாவசிய தேவைகள் எவையும் ஏற்படுத்திக் கொடுக் கப்படவில்லை.

இந்த நிலையில் சன்னார் கிராமத்தில் கடந்த 8 மாதங்களுக்கு முன் அரசால் மீள் குடியமர்வு செய்யப்பட்ட 27 முஸ்லிம் குடும் பங்களுக்கும் தேவையான சகல அடிப்படை வசதிகளும் அரசினால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த 27 குடும்பங்களுக்கும் தனித் தனியே ஒரு ஏக்கர் காணி வழங்கப்பட் டுள்ளது. வீட்டுத்திட்டம், வீதி புனரமைப்பு, பள்ளிவாசல் நிர்மாணிப்பு, குடிதண்ணீர்த் திட்டம், பொது தேவைகளுக்கு அரச காணி ஆகியவை ஒதுக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 4 வருடங்களுக்கு முன் குடியேறிய தமிழ் மக்களுக்கு எந்தவித வசதிகளையும் அரசும்,மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் பணிமனை அதிகாரிகளும் வழங்காத நிலையில் கடந்த 8 மாதங்களுக்கு முன் குடியமர்ந்த மக்களுக்கு சகலவித உதவிகளையும் வழங்கியுள்ளமை வேதனையை ஏற்படுத்தியுள்ளதாகவும், சன்னாரில் கடந்த 4 வருடங்களுக்கு முன் மீள் குடியேறிய தமிழ் மக்கள் கவலை தெரிவித்துள்ளதோடு இந்தப் பிரதேசத்துக்கு உரிய அரச அதிகாரிகள் சுய நலத்துடனும், அரசியல் செல்வாக்குகளுடனும் செயற்பட்டு வருவதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (வ-12)

# இளம்பெண் ,இரு பொலிஸார் கிளிநொச்சி விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், ஓக.4

கிளிநொச்சி 155ஆம் கட்டைப்பகுதியில் இடம் பெற்ற விபத்தில் மூவர் படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்றது.

சம்பவத்தில் இளம் பெண் ஒருவரும் போக்குவரத்துப் பொலிஸாரும் படுகாயமடைந்தனர்.

மோட்டார் சைக்கிளில் வீதியைக்கடக்க முற்பட்ட பெண்ணை இரணைமடுப்ப பகுதியிலிருந்து வேகமாக வந்த பொலிஸாரின் மோட்டார் சைக்கிள் மோதியதாகவும் மூவரும் படுகாயமடைந்ததாகவும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த மூவரும் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இவர்களில் பொலிஸார் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார் விபத்து தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

**மூவரும் கிளிநொச்சி பொது வைத்திய சாலையில் சேர்க்கப் பட்டனர்.**

# பஸ் சேவைகள் இடம்பெறாமையால் இடர்களை எதிர்கொள்ளும் மக்கள்

அக்கராயன், ஓக. 4

அக்கராயனுக்கும் துணுக்காய்க்கும் இடையிலான பஸ் சேவைகள் கடந்த ஒரு மாதமாக இடம் பெறாததால் மக்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரியவந்துள்ளது.

இதனால் அக்கராயன் மற்றும் மல்லாவி மருத்துவமனைகள், துணுக்காய்ப் பிரதேச செயலகம், மல்லாவி மத்திய கல்லூரி, அக்கராயன் மகா வித்தியாலயம் ஆகியவற்றுக்குப் போக்குவரத்து செய்வதில் பாடசாலை மாணவர்களும், பொதுமக்களும் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை தொடர்ச்சியான டிப்பர் வாகனங் களின் போக்குவரத்துக் காரணமாக அக்கராயனுக்கும் துணுக்காய்க்கும் இடையிலான 22 கிலோமீற்றர் நீளமான வீதி பெரும் குன்றும் குழியுமாக மாறியுள் ளது.

மழைகாலம் ஆரம்பிக்கவுள்ளதால் இந்த வீதியால் போக்குவரத்துச் செய்வதில் மக்கள் பெரும் இடர்களை எதிர்கொள்வரெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-18)

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

## உயர்தரப் பரீட்சை .....

டும் என பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார். முதலாம் கட்டப் பரீட்சைகள் காலை 8.30 மணிக்கும், இரண்டாம் கட்டப் பரீட்சைகள் நண்பகல் 12.30 மணிக்கும் ஆரம்பமாகும். வெள்ளிக்கிழமைகளில் மட்டும் பரீட்சை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும். மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெறும் பகுதிகளில் பரீட்சை மண்டபங்களுக்கு அருகில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுதல் தவிர்க்கப்பட்டுள்ளது. பரீட்சைகளுக்கு இடையூறு விளைவிக்கும் விதத்தில் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடக்கூடாது எனப் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (த-8)

**கடையும் வீடும் விற்பனைக்கு**

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் மாநகர சபை பிரதேச எல்லைக்குள் அமைந்துள்ள கடையுடன் சேர்ந்த வீடும் காணியும் உடனடியாக விற்பனைக்கு உண்டு. 0718454025

**STUDIO EQUIPMENT FOR SALE**

-Sound Card (10 In -10 Out)
-YAMAHA Powered Monitor
-Behringer B2-Pro Microphone
-Benq Projector

Contact - 0772298861

**விற்பனைக்கு**

Discovery 125 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 0772366357 (3023)

**German Institute**

German, Swiss மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகின்றது. ஜேர்மனியிலிருந்து வந்த ஆசிரியையினால் Goethe Institute (A1) examக்கு ஏற்றவாறு வகுப்புக்கள் இடம்பெறுகின்றது. புதிய வகுப்புக்கள் 17.08.2013 ஆரம்பம்.

தொடர்பு:இல.10, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 0771604823

# வன்னேரிக்குள மக்களுக்கு குடிதண்ணீர்

கிளிநொச்சி மாவட்டம் வன்னேரிக்குளத்தில் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிலவி வரும்கிராமங்களுக்கு சுமார் 190 மில்லியன் ரூபா செலவில் ஜெய்க்கா திட்டத்தின் கீழ் குடிதண்ணீர் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத் தின் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் ஒன்றாகக் காணப்படும் வன்னேரிக்குளம் பிரதேசத்தில் திக்காய், சோலை, குஞ்சுக்குளம், ஐயனார்புரம் ஆகிய பகுதிகளில் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு கடுமையாக நிலவி வருகின்றது. இதற்கான குடிதண்ணீரை வழங்கும் திட்டமொன்றை ஏற்படுத்தித் தருமாறு இங்குள்ள மக்கள் தொடர்ச்சியாக வேண்டுகோள்விடுத்து வந்துள்ளனர்.

தற்போது மேற்படி கிராமங்களின் குடிதண்ணீர்த் தேவையை நிறைவு செய்யும் வகையில் குழாய் மூலமாக நீரை விநியோகிக்கும் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஜெய்க்கா திட்டத்தின் கீழ் சுமார் 190 மில்லியன் ரூபா செலவில், குறித்த திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கான கள நிலைமை தொடர்பான ஆய்வுகள் கடந்த 31 ஆம் திகதி இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-6)

# சாரதியையும், நடத்துநரையும் மோசமாக தாக்கிய சீருடையினர்

யில் எதிர் எதிரே விலத்திச் செல்ல முற்பட்டுள்ளன. வீதியில் திருத்த வேலை இடம் பெற்று வருவதனால் மன்னாரில் இருந்து வந்த தனியார் பஸ் சாரதி தனக்குரிய பக்கத்தில் வீதியோரமாக பஸ்ஸை நிறுத்தியுள்ளார். ஆனால் பூநகரியில் இருந்து வந்த பஸ் சாரதி தொடர்ந்து செல்வதற்காக ஓரமாக நிறுத்தப்பட்டிருந்த தனியார் பஸ்ஸை பின் நகர்த்துமாறு கோரியுள்ளார். ஆனால் போதிய இடவசதி இல்லாததால் பஸ் பின் நகர்த்தப்படவில்லை.

இதனையடுத்து தனியார் பஸ்ஸின் நடத்துநர் இறங்கி வந்தபோது சீருடையினர் அவரைத் தாக்கியுள்ளனர். இதனைப் பார்த்த சாரதியும் கீழே இறங்கிவந்தபோது அவரையும் தாக்கியுள்ளனர். இச்சம்பவத்தை அடுத்து அப் பகுதியில் பெருமளவான பொதுமக்கள் கூடினர். இதன் போது அங்குவந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்ளாது அந்த இடத்தில் இருந்து அனைவரையும் கலைந்து செல்லுமாறு பணித்ததாக சம்பவத்தை நேரில் பார்த்த பொதுமக்கள் உதயனிடம் தெரிவித்தனர். (ஐ-400)

# புனரமைப்புப் பணிகளில் மக்கள் கடும் அதிருப்தி

அக்கராயன், ஓக. 4

துணுக்காய் பழைய முறிகண்டிக் குளத்தின் புனரமைப்பு வேலைகள் தொடர்பாக இந்தப் பகுதி மக்கள் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். சுமார் 36 குடும்பங்கள் வாழ்கின்ற இந்தக் கிராமத்தில் நெற்பயிர்ச்செய்கை முக்கியமான தொழிலாக விளங்குகின்றது. பழைய முறிகண்டிக் குளத்தை நம்பியே இந்தக் கிராம மக்கள் உள்ளனர்.

இந்த நிலையில் குளத்தின் புனரமைப்புப் பணிகள் திருப்பதியளிப்பதாக இல்லையென கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். அணைக்கட்டு, வாய்க்கால்கள் என்பனவற்றின் புனரமைப்புப் பணிகள் உரிய வகையில் அமையவில்லை என்பது மக்களின் குறையாக உள்ளன. மேலும் புனரமைப்புப் பணிகளில் உள்ள குறைபாடுகளால் எதிர்காலத்தில் தாம் பாதிப்புக்களை எதிர் கொள்ள வேண்டி வரும் எனவும் அவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (க-18)

3மாதகால பயிற்சி நெறி

**அக்ஷயா**

பயிற்சிக் கட்டணம் ரூ20000/=

பேசியல், மேக்கப், கெயாஸ்ரைல், தலைமுடி அயன்பன்னுதல், தலைமுடிசுருட்டுதல், கேளிங், சாறி பிளவுஸ் கட்டிங், சாறிவேக் மேற்படி பயிற்சிகள் நடைபெறுகின்றன. பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். * ஒட்டிய கன்னங்களை குண்டு கன்னங்களாக மாற்றும் குளிசை, உடல் எடை கூட்டும் குளிசை * உடல் எடை குறைக்கும் பால்மா, குளிசை, கோப்பி * கருவளையம், நாட்பட்ட பருக்கள், இளநரை, முடி கொட்டுதல் அனைத்துக் குமான குளிசை, தலைமுடி வளரச்செய்யும் ஆயுர்வேத எண்ணெய் * கறுப்பு, பிறப்பிலே கறுப்பு, நாட்பட்ட வடுக்கள், பருக்கள் அனைத்தையும் மாற்றும் ஒறியினல் வைத்நிங் கிறீம் * வைத்நிங் பேசியல், தலைமுடி அயன் பண்ணுதல், சுருட்டுதல், கேளிங், செய்து கொள்ளலாம், முகம் கழுத்தில் உள்ள காய்கள் அகற்றப்படும்.

T.P- 0772106155 அக்ஷயா- நாவலர் வீதி, பிறவுன்றோட் சந்தி அருகில், யாழ்ப்பாணம்.

# இலங்கையில் இன்னமும் ஊடக சுதந்திரம் இல்லை

"இன்னர் சிற்றி பிரஸ்" எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்ட குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

ஊடக சுதந்திரம் தொடர்பில் பெரியளவில் சர்ச்சைகள் நிலவி வருகின்றன. ஊடக சுதந்திரம் மிகவும் அவசியமானது. அடக்கு முறைகள் எதுவுமின்றி சுதந்திரமான முறையில் தங்களின் கடமைகளை மேற்கொள்ள ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்பட வேண்டும் என்று ஐ.நா செயலரின் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கையின் மூன்றாவது பழைமைவாய்ந்த நிதிக் கம்பனியான Alliance Finance Company PLC அதன் Micro Finance பிரிவில் வேலை செய்வதற்கு சுறுசுறுப்பும் ஆழ்ந்த அனுபவமும் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்களை எதிர்பார்க்கிறது.

## MANAGER/ ASSISTANT MANAGER MICRO FINANCE

விண்ணப்பதாரர்கள், Micro Finance துறையில் 3-5 வருடங்கள் அனுபவமும் வாடிக்கையாளர்களுடன் நல்லுறவைப் பேணும் இயல்பாற்றலும் உயர்ந்த சேவை மனப்பான்மையும் உள்ளவர்களாகவும் சக உறுப்பினர்களை ஊக்குவிப்போராகவும் இருப்பது விரும்பத்தக்கது.

## MICRO FINANCE EXECUTIVES

Micro Financeஇல் 2- 3 வருடங்கள் அனுபவத்துடன் புதிய வாடிக்கையாளர் சேவை நிலையங்களை உருவாக்கி பேணுவதோடு வாடிக்கையாளர்களிடம் விஜயம் செய்து நெருங்கிய உறவுகளை பேணும் ஆற்றலையும் கொண்டிருக்க வேண்டும். முழுமையான வெளிக்கள செயற்பாடுகளுக்கு பொறுப்பாகவும் வாடிக்கையாளர்களை மையமாக கொண்ட செயற்பாடுகளை மேற்கொண்டு வாடிக்கையாளர் தேவைகளை ஆராய்ந்து இலக்குகளை அடையக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும்.

## TRAINEE MICRO FINANCE OFFICERS

பாடசாலைவிட்டு விலகியவர்கள் உள்ளூர் மக்களுக்கு சேவை செய்வதிலும் Micro Finance துறையில் பயிற்சிபெறுவதிலும் அக்கறை உள்ளவர்கள் இந்த பதவிக்கு விண்ணப்பிக்கலாம். சிறந்த சிங்கள/தமிழ் மொழியறிவு இருப்பது விரும்பத்தக்கது.

## MANAGER ENTREPRENEURIAL DEVELOPMENT SERVICES

3–5 வருட துறைசார் அனுபவமும் தொழில் அபிவிருத்தி சேவை உத்தியோகத்தர் குழுவை முகாமைப்படுத்தும் ஆற்றலுடன் தொழில் அபிவிருத்தி சேவையில் முழுமையான பொறுப்பை வகிக்க கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். வாடிக்கையாளர்களின் விசுவாசத்தையும் Micro Finance வலையமைப்பின் தரத்தையும் நிலையான தன்மையையும் உறுதிப்படுத்த வேண்டும்.

## ENTREPRENEURIAL DEVELOPMENT SERVICE OFFICERS

தொழில் அபிவிருத்தி சேவையில் தேவையான அனுபவத்துடன் 2-3 வருட துறைசார் அனுபவம் உள்ளவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரருக்கு இலாப அடிப்படையிலான ஊக்குவிப்பு, பல்வேறு கம்பனி அனுகூலங்கள் ஆகியவற்றுடன் கவர்ச்சிகரமான சம்பள பொதியும் வழங்கப்படும்.

உங்கள் ஆற்றலில் நம்பிக்கை உள்ளவரும், சவாலானதும் எதிர்கால முன்னேற்றம் குறித்து உத்தரவாதம் அளிப்பதுமான வேலையை எதிர்பார்ப்பவருமானால் கீழ்கண்ட முகவரியில் உள்ள பிரதம செயற்பாட்டு அதிகாரிக்கு இரண்டு சிபார்சாளர்களின் தொடர்பு விபரங்களுடனும் உங்கள் கலர் புகைப்படத்துடனும் சுய விபரக் கோவையை இந்த விண்ணப்பம் வெளியாகி 07 நாட்களுக்குள் அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை குறிப்பிடவும்.

**The Chief Operating Officer,**
**Alliance Finance Co. PLC**
No. 84, Ward Place, Colombo 07.
or mail your CV to : microfinancecareers@alliancefinance.lk

Since 1956
Alliance Finance Co. PLC
Built on Trust. Powered by Innovation.

*Your Friend Yesterday, Today & Always...*

PEOPLE • (C/10811)

The first Company in the Banking and Non-banking sector of Sri Lanka to be certified with ISO 9001:2008 Quality Management system and ISO 22301:2012 for Business Continuity Management Systems.

A long-term investment grade rating
RAM BBB/P2 - Positive Outlook

## வட பகுதிக்கு விற்பனை முகவர் தேவை

றோயல் லங்கா இன்டஸ்றீஸ் (பிறைவேற்) லிமிட்டெட் பொருள்கள் - மினறல் வாட்டர், சுவீற்ஸ், யூஸ்வகை.

தொடர்பு: 024 790 0011
077 411 1040

(37497) (10,6,3)

## வேலையாள்கள் தேவை

எமது நிறுவனத்துக்கு சேவிஸ் வேலை, மெக்கானிக் வேலை தெரிந்தவர்கள் பழகுபவர்கள் ஆண்கள் தேவை. பாட்ஸ் விற்பனை செய்வதற்கும் பெண்கள் தேவை.

சந்நிதிமுருகன் வேக் சொப் அன்ட் சேவிஸ்
இல. 241, பருத்தித்துறை வீதி,
வீரமாகாளி அம்மன் கோயிலடி அருகில், யாழ்ப்பாணம்.
தொடர்பு:
077 711 0199, 021 222 8076,
077 201 8275

(30198) (10,6,3)

## காணி விற்பனைக்கு

யாழ்/கைதடியில், கந்தசாமிகோயில் மிக அருகில் 4 பரப்பு காணி உடன் விற்பனைக்கு. விலை பேசித் தீர்மானிக்கப்படும். (C/10815)
தொடர்பு: 0777 - 361316

## வாடகை

வெள்ளவத்தையில் இன்னும் 3 மாதத்தில் குடிபுகும் நிலையில் 1600 Sqf 3 Bedroom, Pent house Apartment. (C/10818)
விவரங்களுக்கு - 0777 - 786440

## முதலீட்டாளர்கள் தேவை

யாழ். நல்லூர் கோயில் பகுதியில் நல்ல இலாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் Educational Schoolக்கு 15 Laks முதலீடு செய்பவர்கள் தேவைப்படுகின்றார்கள். விரும்பியோர் 077 3347332 என்ற இலக்கத்திற்கோ அல்லது skylineiibt@gmail.com என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும். (C/10817)

## TV கள் விற்பனை

Sony TV மலிவான விலைகளில் விற்பனைக்குண்டு. 21" 25" 29"-10,000/= தொடக்கம்
தொடர்பு:
WISDOM LANKA TRADING
262, ஐந்து சந்தி, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 077 254 9969, 077 601 3362

(30205)(3,6,11)

ZOA
RELIEF | HOPE | RECOVERY
www.zoa-international.com

**Recruitment of suitable candidates for positions in FOOD SECURITY and DRR PROJECTS in the North and East of Sri Lanka**

**All candidates applying for the positions listed below must possess team spirit to work in a multi disciplinary team, cultural sensitivity, concern for human welfare and respect for human dignity.**

## Project Coordinator (1 position)

**Tasks & Requirements;**

- Manage, coordinate and implement a CfW and DRR project in the North and East;
- Report and monitor the project progress in line with project requirements;
- Motivate, stimulate and coach project staff (>10 staff);
- Liaise with other Organizations and the Government in Districts;
- Degree or Diploma in relevant field;
- Relevant work experience in CfW, livelihood and community development work;
- Strong project implementation, reporting, networking and management skills;
- Fluency in English and Tamil and working knowledge of Sinhala;
- High level of Computer Literacy;
- Travel extensively to working areas in the North and East.

## Project Officers (3 positions)

**Batticaloa, Kilinochchi, Mannar - reports to Project Coordinator**

## Project Assistants

**Based in rural villages of the north and east - reports to Project Officer**

**Tasks & Requirements;**

- Implement CfW and DRR projects;
- Conduct needs assessments and coaching / trainings;
- Passion, empathy and experience in agriculture extension work;
- Strengthening communities in disaster risk reduction capacity;
- Fluency in Tamil and working knowledge of English and Sinhala;
- Undertake daily field trips on a motor bike;
- Ability to keep accurate records and reporting;
- Ability to live in and enjoy relating to rural communities.

## Project Officer - Small business development (1 position)

**Based in Kilinochchi**

**Tasks & Requirements;**

- Identify small business initiatives in rural villages;
- Preparation of business plans for selected beneficiaries and follow up for start up and progress;
- Strong networking skills and good reporting skills;
- Track record in developing small business by yourself or with community;
- Fluency in Tamil and working knowledge of English and Sinhala.

## Monitoring & Evaluation Officer (1 position)

**Reports to Project Coordinator**

**Tasks & Requirements;**

- Responsible to closely monitor project progress;
- Responsible for leading baseline survey;
- Development of context appropriate monitoring tools;
- Responsible for organising the final evaluation of the project;
- Prepare activity / progress reports for other relevant stakeholders, as and when needed;
- Responsible to work on improvement of internal monitoring & inter-district monitoring missions;
- Minimum 2 years experience in Humanitarian work and Project Monitoring;
- Experience with collecting and analyzing both qualitative and quantitative data;
- Ability to present data to a wider audience;
- Excellent command of written & spoken English & Tamil (Sinhala is an added advantage).

**Female candidates are particularly encouraged to apply.**

Please send a cover letter stating why you are suited for this job along with a complete C.V. and the names and contact numbers of two non related referees on, or before **12 August 2013** to jobs@zoasrilanka.org. (Indicate the position in the subject line of the e-mail or top left hand corner in the envelope) or to **ZOA, HR Officer, No. 34, Gower Street, Colombo 05.**

**ONLY SHORTLISTED CANDIDATES WILL BE NOTIFIED.**

(C-10752)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ தனலஷ்மி யந்திரம்




**Free Gift**
**Shiv-Hanuman Pendant & Idol**



August 10ம் திகதிக்கு முன் கொள்வனவு செய்யுங்கள்

flex அருள் WELLAWATTE

SRI LANKA 0777 614 186

மேலதிக விபரங்களை தென்னிந்திய தொலைக்காட்சியில் காலை மற்றும் இரவில் கண்டு களியுங்கள்! (C/10807)

JAYA TV CAPTAIN TV MEGA TV Z தமிழ்

FLEX Graphic

## கேரள ஆயுர்வேத மருத்துவம்

**நமது சிகிச்சைகள்**

- இருதயவலி
- புற்றுநோய் தணிப்பு
- ஈரல் பிரச்சினைகள்
- மூட்டுவலி
- இடுப்புவலி
- புரோட்ஸ்ரேட் பிரச்சினைகள்
- ஒற்றைத்தலைவலி
- மனஅழுத்தம்
- இருமல்
- சளி
- படுக்கைப்புண்
- நச்சு வைரஸ் பாதிப்பு
- பாலியல்குறைபாடு

Tel : 011 551 7897
011 555 1879
011 555 8442
Fax : 011 551 7756

**சில பிரச்சினைகளைத் தீர்த்திட சிறிய வழிமுறைகள்**

### கல்லீரல் மருத்துவம்

அதிக மதுபாவனை உடல் நலத்தை கெடுக்கும்

**உங்கள் கல்லீரலை பரிசோதனை செய்தீர்களா?**



நோய்க்கான அறிகுறிகளில் அவதானமாக இருங்கள்.
-கருமைப் படர்வு.
-கால்களில் வீக்கம்.

**Free consultation**
Daily@ Ceylinco House.
monthly clinics are conducted islandwide.

தயவுசெய்து மருத்துவருடன் கலந்தாலோசியுங்கள்

**Hotline : 0777 708 310 / 0777 555 600**
**0777 708 330 / 0777 708 434**

பிறின்ஸ் பார்மசி
462/B, ஆஸ்பத்திரி
வீதி, யாழ்ப்பாணம்.

11th Floor. Westwing.
69. Janadipathi Mawatha
Colombo1.
E.mail:fairpharmasrilanka@yahoo.com
Website:www.ayurveda.lk. (C/10804)

FAIR PHARMA (PVT) LTD
Kerala Ayurvedic Medicine

Approved by Department of Ayurveda, BOI, an ISO : 2008 QMS Certified Company

## வாகனம் விற்பனைக்கு

பொடியுடன் கூடிய எல்வ் வாகனம் விற்பனைக்கு உள்ளது.
NPLH XXXX
தொடர்பு:
021 228 5137, 077 302 0719
(37496)(3.6.11)

## மணமகள் தேவை

யாழ். இந்துகௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1983, அத்தம் முதலாம் பாதம், கி.பா 41¼, 8 இல் சூ, செவ்வாய் உள்ளஅரச தொழில் பார்க்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.

(30197) (3.6.11) தொடர்பு: 077 625 8169

## விநியோகஸ்தர்கள் தேவை (DISTRIBUTORS)

எமது முன்னணி நிறுவனத்திற்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பிரதேசங்களுக்குத் தேவைப்படுகின்றனர்.
தொடர்பு: 071 880 9599
(C/10808)(3.6.11)

## மணமகள் தேவை

மணமகள் தேவையா? ஒரு sms இனூடான உங்களின் பதிவினை மேற்கொண்டு காத்திருங்கள். உங்களின் டயலொக் மொபைலில் (Dialog) REG bride என ரைப் செய்து 77000 இலக்கத்திற்கு sms பண்ணவும். மேலதிக தகவலிற்கு www.realmatrimony.com Call : 011 4380900 0114344230

## மணமகன் தேவை

மணமகன் தேவையா? ஒரு sms இனூடான உங்களின் பதிவினை மேற்கொண்டு காத்திருங்கள். உங்களின் டயலொக் மொபைலில் (Dialog) REG groom என ரைப் செய்து 77000 இலக்கத்திதிற்கு sms பண்ணவும். மேலதிக தகவலிற்கு www.realmatrimony.com Call : 011 4380900 0114344230

## sms ஊடாக வரன் தேடல்

sms இனூடாக Realmatrimony இல் பதிவதாயின், உங்களின் மொபைலில் <உங்களின் பெயர்>, <பிறந்த திகதி>, ரைப் செய்து 0777 111 786 என்ற இலக்கத்திற்கு sms பண்ணுங்கள். அதே நாள் இலவச சேவையினையும் பெறலாம். மேலதிக தகவலுக்கு அழையுங்கள் www.realmatrimony.com
Call : 011 4380900 0114344230 (C/10812)

MMW

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு:
021 5671111
advt@uthayan.com

## கட்டடத் தொகுதி வாடகைக்கு

மானிப்பாய் வீதி, ஆறுகால்மடத்தில் சகல வசதிகளுடனும் கூடிய 3 மாடிக் கட்டடத் தொகுதி வாடகைக்கு உண்டு. இதில் கீழ்ப்பகுதி (80 அடி நீளம், 30 அடி அகலம்) வங்கி, நிறுவனங்கள் விரும்பத்தக்கது. மேல் மாடி அறைகள், உத்தியோகத்தர்கள், மாணவர்களுக்கு மட்டும்.
தொடர்பு: 077 514 2046,
021 221 3118, 077 248 7578
(30185)(3.6.11)

## இடம் தேவை

கீழ்காணும் இடங்களில் இருந்து 10–20 பேர்ச் இடம் தேவை காலி, மாத்தறை, கண்டி, திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், இரத்தினபுரி, வவுனியா, அனுராதபுர, நீர்கொழும்பு, புத்தளம், அம்பாறை, பதுளை மற்றும் தம்புள்ள

பிரதான நகரத்தில் அல்லது 5 கி.மீ சுற்றுவட்டத்தில் உள்ள வியாபார இடமாக இருக்கவேண்டும். தெளிவான உரிமம், நீர் மற்றும் மின்சாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விபரங்களுடன் தொடர்புக்கொள்ளவும்
0716 812416/ 4722136
அல்லது மின்னஞ்சலிடவும்.
md@advantagetpl.lk (C/10809)

## Can Lanka
Immigration Service Inc.

நீங்கள் கனடா மண்ணில் Federal Skilled worker (FSW) ஆக நிரந்தர குடியுரிமை பெற விரும்புகிறீர்களா?

**கீழ்வரும் தகுதிகளை உடையவரா?**

- டிப்ளோமா / இளமாணிப்பட்டம் / முதுகலைமாணிப்பட்டம் (A-Z Engineering துறை மற்றும் ஏனைய துறைகள்)
- வயது 40 இற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்
- ஆங்கில புலமைத்துவம் :- (IELTS (General) - 6.0/6.5 Band overall)
- கடந்த 04 வருட சேவைக்காலத்தில் 01 வருடத்திற்கு குறையாத முழு நேர வேலை அனுபவம்



மேலதிக தகுதிகள்:
* திருமணமானவராயின் வாழ்க்கைத் துணையின் கல்வித்தரம், ஆங்கிலத்திறன்
* கனடாவில் இரத்த உறவுகள்
* ஒழுங்கு படுத்தப்பட்ட வேலை தருநர் ஒப்பந்தம்

மேலதிக சேவைகளாக:-
தற்காலிக வேலை அனுமதிப்பத்திரம்

மேலதிக தொடர்புகளுக்கு:- CanLanka Immigration Service Inc.
Canada Contact: - 1-416-938-3768
Sri Lanka Contact :- 0094-772849207
E-Mail:- infocisinc@gmail.com
(30194)

## SB TRAVELS & TOURS
SPECIAL AIR FARES

| | | | |
|---|---|---|---|
| MADURAI | 15,800/- | LONDON | 96,000/- |
| TRICHI | 16,500/- | MALDIVES | 21,800/- |
| CHENNAI | 15,800/- | MILAN | 85,000/- |
| BOMBAY | 26,800/- | TORONTO | 158,500/- |
| BENGALURU | 17,800/- | NEW YORK | 113,500/- |
| KOCHI | 17,200/- | MELBOURNE | 104,000/- |
| DELHI | 43,200/- | PERTH | 75,800/- |
| MALAYSIA | 31,600/- | CANTON | 65,500/- |
| SINGAPORE | 26,600/- | NERITA | 68,000/- |
| BANGKOK | 28,500/- | AUCKLAND | 124,100/- |
| SYDNET | 104,500/- | | |

*Condition Apply
VISA MASTER American Express Card Accepted

ONEWAY: SHARJA - 16,500/-, DUBAI -16,500/-, DOHA - 23,500/-
No: 132 Sri Kathirasan Street, Colomb13,
Tel: 0094 2333322, 2334470, 2540280 Fax: 011 2334460
E-mail: sbtravels99@yahoo.com, sbtravels@sltnet.lk (C/10801)

## விசா பெற்றுக்கொள்ள இருப்பவர்கள்

**UK, Australia, Canada, USA, New Zealand , Denmark, France, Germany, Italy, Japan, Netherlands, Norway, Switzerland, Sweden etc...**மற்றும் ஏனைய நாடுகளுக்கு எமது பல வருட அனுபவமுள்ள UK, USA, CANADA போன்ற நாடுகளில் பயிற்சி பெற்ற சட்டத்தரணிகளால் புதிய நிபந்தனைகளும், விதிமுறைக்கமைய விசா பெற்றுக் கொள்வதற்கான உதவிகள் செய்து கொடுக்கப்படும்.



**Student Visa**
மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கு சென்று படிப்பதற்கும் பகுதி நேர வேலைவாய்ப்பு மற்றும் அந்த நாட்டில் Settle ஆக விரும்புகின்றவர்களுக்காக:

**Visit Visa**
சுபகாரியங்களுக்கும், திருமணங்களுக்கும், மங்கள, அவமங்கள காரியங்களுக்கும் மற்றும் அவசரமாக செல்ல இருப்பவர்களுக்கும் விசேடமாக உடனே விசா பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

தாமதமாகிய வீசாக்கள் - திரும்பிய வீசாக்கள் உள்ளதா? விசா பெற்றுக் கொள்வதில் பிரச்சனை உள்ளதா?

**Refused? Rejected?**
- உங்கள் ஆவணங்களை சரியான முறையில் சமர்பிக்கத் தவறி விட்டீர்களா?
- உங்கள் வீசா முடிந்ததும் இலங்கைக்கு திரும்பி வருவீர்களா என்ற சந்தேகமா?
- உங்கள் வங்கியில் சேமிப்பு பணம் பற்றாக்குறையா?
- உங்கள் ஆவணங்கள் திருப்தி தரக்கூடியதாக இல்லையா? மற்றும் ஏதாவது காரணங்கள் இருப்பின் இது நிவர்த்தி செய்து சரியான முறையில் VISA பெற்றுக் கொடுக்கப்படும்.



- விசா சம்பந்தமான சகல ஆலோசனைகள் வழங்கப்படும். வீசா விண்ணப்பபடிவம் பூர்த்தி செய்து கொடுக்கப்படும்.
- Embassy கடிதங்கள் மொழி பெயர்த்துத் தரப்படும்.
- Ticket, Hotel Booking, Travels Insurance செய்து தரப்படும்.
- வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் Sponsor கடிதங்களுக்கு விசா பெற்றுக் கொள்வதற்கு தேவையான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.
- வெளிநாட்டில் உள்ள உறவினர்களிடனம் செல்வதற்கான வசதிகள் செய்து தரப்படும்.

### வங்கியில் பணவைப்பு
Saving book, Fixed Deposit, Statement
3, 6, 12 மாதங்களுக்கான (முன், பின் ) பணவைப்பு

**Migration / Skill Migration / Work Permit / Visit Visas / Student Visas / Dependent / Family Visas / Business / Investment / Rejection Appeals / New Applications etc...**

எவ்வித முற்பணம் இல்லாமல் எம்மிடம் வந்து கதைத்து உண்மையான, நேர்மையான, நம்பிக்கையான முறையில் ஆலோசனைகளை பெறலாம்.
(C/10803)

(நேரத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்).

SKYWALK Visa Solutions
ஸ்கைவோர்க் வீசா சொலூஷன்
No.65, 1/1, Galle Road, Dehiwala. (Food City - 1st Floor)
077-7711905

## Vacancies for Marketing Executives.
## Join us Today

பல்தேசிய நிறுவனத்துக்கு Education Technologies கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**Benefits**
*. Unlimited income potential
*. Comprehensive Training
*. Basic Salary / Travel Allowances/Commission/ Incentives
*. Overseas Travel / Conferences for Achievers
*. Management positions within 6 months - 1 year
*. Motor Bike / Car Allowances.

**Requirement**
*. Age 18-35 years
*. G.C.E (A/L) qualification
*. A positive attitude with a pleasing personality
*. நேர்முகத் தேர்வு 05.08.2013 - 18.08.2013 வரை

**வெளிமாவட்டங்களில்**
(கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு, வவுனியா ஆகிய இடங்களில்)
**வசிப்பவர்களும் விரும்பத்தக்கது.**

**Education Technologies**
**No 100, 2nd Floor, Manipay Road, Jaffna.**
**Contact - Manager. Mr. G.Anthany**
**077 356 6835 / 021 567 1130**
**www.pioneerhouselearing.com**
(30195) (10.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேலம்பிராய்
கண்ணகி அம்மன் ஆலயம்
அருள்மிகு சிவகாமி அம்மன் தேவஸ்தானம்
04.08.2013

மண்டலாபிஷேக பூர்த்தி
நவோத்திர ஸகஸ்ர (1009)
சங்காபிஷேக விஞ்ஞாபனம்

நிகழும் மங்கலகரமான ஸ்வஸ்த்தி ஸ்ரீ விஜய வருஷம் ஆடித்திங்கள் 19 ஆம் நாள் (04.08.2013) ஞாயிற்றுக்கிழமை அருள்மிகு சிவகாமி அம்மனுக்கு (1009) நவோத்திர ஸகஸ்ர சங்காபிஷேகம் நடைபெற்று அத்துடன் ஏனைய பரிவாரமூர்த்திகளுக்கு அபிஷேகம் நடைபெற்று விஷேட பூசைக்குப் பின் அருள் பிராசாதம் வழங்கப் பெற்று மகேஸ்வர பூசை (அன்னதானம்) நடைபெறும்.

கிரியா கால விவரம்

04.08.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு விக்னேஸ்வர பூசை புண்ணியாகவாசனம், யாகபூசை, வேதஸ்தோத்திர, தேவார பாராயணத்தைத் தொடர்ந்து கும்ப ஆலய பிரதஸணம் (1009) சங்காபிஷேகம் நடைபெற்று பிரசாதம் வழங்கப்படும்.

மாலை 5 மணிக்கு சிவகாமி அம்மனுக்கு விஷேட பூசை நடைபெற்று திருவூஞ்சல் மற்றும் அம்பாள் உள்வீதி, வெளிவீதி வலம் வந்து அருள் பிரசாதம் வழங்கப்படும்.



சங்காபிஷேக கிரியா குரு:
பிரம்மஸ்ரீ க. யசோதர குருக்கள் J.P.(ஆகமவிசாரத B.A)
51 A, மெல்போட்கிரசன், தெஹிவளை.

பரிபாலன சபை.
077 074 8748

(C/9676)(45.6.3)

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

## ஜோதிலிங்கங்களின் இரத பவனி

யாழ்ப்பாணம், ஓக.4

பிரம்மகுாரிகள் இராஜயோக நிலையத்தால் இந்தியாவில் இருந்துகொண்டு வரப்பட்ட ஜோதிலிங்கங்களின் இரத பவனி இன்று ஞாயிற்றுக் கிழமை வடமராட்சி, வலிகாமம் ஆகிய பிரதேசங்களில் இடம்பெறவுள்ளது.

வடமராட்சியில் காசிவிஸ்வநாத இரத பவனி வல்லிபுரத்தாழ்வார் ஆலயத்திலும் வலிகாமத்தில் ஸ்ரீ சோமநாதர் இரத பவனி கீரிமலை நகு லேஸ்வரத்திலும் இடம் பெறும். (ஒ-14)

## பொதுக்கூட்டம்

தென்மராட்சி, ஓக.4

சரசாலை வடக்கு ஐக்கிய நாணய சங்கத்தின் 81 ஆவது ஆண்டு நிறைவு பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு சங்க மண்டபத்தில் இடம் பெறும்.

சங்கத் தலைவர் த.சபாநாயகம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட உதவி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதனும் சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் திருமதி ம.நல்லதம்பி, கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் ம.பாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொள்வர். (ந-9)

## இ.போ.ச. ஊழியர் பணிக்கொடை தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக.4

இலங்கை போக்குவரத்துச் சபையில் கடமையாற்றிய ஊழியர்களுக்கான பணிக்கொடை கொடுப்பனவு சம்பந்தமாக நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு சிவன் பண்ணை வீதியில் அமைந்துள்ள தொழில் திணைக்களத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது. இதில் கலந்து கொள்ளுமாறு 24 ஊழியர்களுக்கு யாழ். உதவித் தொழில் ஆணையாளர் அழைப்பு விடுத்துள்ளார். அவர்களின் பெயர்கள் வருமாறு:- ஆர்.அருணகிரிநாதன், எஸ்.சதானந்தன், எஸ்.பாலசுந்தரம், எஸ்.லோகநாதன், எம்.அருள்சோதிநாதன், எஸ்.சிவநேசன், எஸ். கமலநாதன், ஏ.எஸ்.தியாகராஜா, எம்.சிவகுரு, ரி.இரத்தினசபாபதி, எம்.சிறிகாந்தன், எஸ்.சிவஞானம், ஆர்.சிவசுப்பிரமணியம் , எல்.பூபாலசிங்கம், எஸ்.சுந்தரேஸ்வரன், தே.கைலாயபிள்ளை, ஜே.சிவராஜா, கே.சிவராஜன், கே.கணேசராசா, டி.ஞானசேகரன், கே.சிவராஜா, சி.கேதீஸ்வரன், இந்திரலிங்கம், ஸ்ரீசந்திரபோஸ். (ஒ-17)

## மாவிட்டபுரத்திலும் கீரிமலையிலும் நாளை இசைச் சங்கமம்

தெல்லிப்பழை, ஓக.4

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய காம்யோற்சவ தேர்த் திருவிழாவையும், தீர்த்தத் திருவிழாவையும் முன்னிட்டு நாளை திங்கட்கிழமை தெல்லிப்பழை பிரதேச செயலக கலாசாரப் பேரவையும், மாவை ''ப்ருந்த'' கானாலய நிறுவனமும் இணைந்து நடத்தும் தெய்வீக இசைச் சங்க மம் யாழ் முன்னணிக் கலைஞர்களால் நடத்தப்படவுள்ளது.

தேர்த் திருவிழா நாளை முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மாவைக் கந்தன் ஆலய முன்றிலிலும் இரவு 8 மணி முதல் 12 மணிவரை கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திலும் இசைச் சங்கமம் நடைபெறவுள்ளது என்று பிரதேச செயலகத்தினர் அறிவித்துள்ளனர். (ஒ)

## மெய்வன்மைப் போட்டி

சுழிபுரம், ஓக.4

சுழிபுரம் மத்தி நாவலர் சனசமூக நிலைய முன்பள்ளி சிறார்களின் வருடாந்த மெய்வன்மைப்போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை பற்பகல் 1.00 மணிக்கு தலைவர் சி.நிரஞ்சன் தலைமையில் முன்பள்ளிவளாகத்தில் நடைபெறவுள்ளது. (ந-86)

ஓம் சக்திவேல் ஓம்




"மதம், மொழி வேறுபாடின்றி அருள்வாக்கு உரைத்து அற்புதங்களாற்றும் சக்திவேல்"

Hornsey - London அருள்மிகு சக்திவேல் ஆலயம் விஜயவருட மகோற்சவ விஞ்ஞாபனம் - 2013

முதலாம் ஆண்டு திருவிழா

"அருவமும் உருவமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிளம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய"

அன்பார்ந்த அடியார்களே!

நிகழும் மங்களகரமான விஜயவருடம் ஆடிமாதம் 22 ஆம் நாள் (07.08.2013) புதன்கிழமை கொடியேற்றத் திருவிழாவுடன் விஜய வருட மகோற்வசம், சக்திவேல் ஆலயத்தின் முதலாவது மகோற்சவமாக ஆரம்பமாகும். ஆவணி மாதம் 07 ஆம் நாள் (23.08.2013) வரை மகோற்சவம் நடைபெற உள்ளது.

20.08.2013 அன்று தேர்த்திருவிழா - முற்பகல் 10.15 முதல் நண்பகல் 12.15 வரை

*Beloved Devotees!*

'Shakthivel Temple' first year festival celebration (Thiruvizha) from 07.08.2013 to 23.08.2013
We are inviting you to get Shakthivel blessings!!

Chariot festival (Thaer Thiruvizha) 0n 20.08.2013 from 10.15 A.M to 12.15 P.M

Address: Shakthivel Temple, Shakthivel Hindu Association , 657, Green Lanes, Hornsey, London, N8 0QY
Tel: 020 3640 8113, Fax: 087 1522 7277. E-mail: omshakthivelan@gmail.com. Web: www.shakthivel.co.uk

முக்கிய குறிப்பு:- ஆலயத்துக்கு வருபவர்கள் 24 மணிநேரம் முன்பு மாமிசம் / மாமிசம் கலந்த உணவுகளை உட்கொள்ளாது இருக்க வேண்டும்.

Note: Not to eat non - veg or non - veg mixed food before 24 hours of entering temple

"ஸ்ரீ செல்வச்சந்நிதி வேலவனின் அற்புதங்களும் அனுக்கிரகங்களும்" என்ற ஐந்தாவது இலவச வெளியீடு இரதோற்சவத்திலன்று (20.08.2013) வெளிவர உள்ளது என்பதையும் மகிழ்வுடன் பக்தர்களுக்கு அறியத்தருகின்றேன். இதில் மெய் சிலிர்க்க வைக்கும் அதிசய அற்புதங்களே இடம்பெறுகின்றன. 31.07.2013 அன்று சந்நிதி முருகன் ஓர் அடியவளிடம் நேரில் சென்று கதைத்துத் தரிசனம் [illegible] இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

தகவல்:- சக்திவேல் ஆலய நிர்வாகத்தினரின் பணிப்பிற்கிணங்க சி.சிவகுமாரன்
(ஸ்ரீ வாணி வெளியீட்டகம் "அற்புதங்களும் அனுக்கிரகங்களும்" நூலாசிரியர்)

(30187)
(2.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கால்களை பராமரியுங்கள்
லாவா வைத்தியசாலை

Tel :021-2224333



கிரமமான சோதனை இன்மையால் நாட்பட்ட நோய்களின் விளைவாக கால்களை இழக்கவேண்டி வரலாம்!

கால்களின் நரம்புப்பாதிப்பினை அறிந்து கொள்ள கணினி மயப்படுத்தப்பட்ட பரிசோதனையும் வைத்திய ஆலோசனையும்.

Foot Care Centre
**Lava Hospitals**
LH
No 75,Temple Road.Jaffna
(C/10750)



## காணி விற்பனைக்கு
கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலிலுள்ள 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தரகர் வேண்டாம்.

தொடர்பு : 077 754 3682 (C/10819) (3.6.11)



## மணமகள் தேவை
யாழ். இந்து கௌரவ குடும்பம் 1982 இல் பிறந்த பூரம், 7 இல் செவ்வாய் உடைய Software Engineering முடித்த Bachelor of Information Technology Degree செய்து கொண்டிருக்கும் நற்பண்புள்ள மணமகனுக்கு வெளிநாட்டில் மணமகள் தேவை.

தொடர்பு: 077 082 0092 (30200)(3.6.11)


# முல்லைத்தீவில் கம்யூ.கட்சி அலுவலகம்

நெடுங்கேணி, ஓக. 4

முல்லைத்தீவு மாவட்ட நகர்ப் பகுதியில் கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகம் சிறைச் சாலை மற்றும் புனர்வாழ்வு மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவால் திறந்து வைக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட தேர்தல் தொகுதிக்கு கட்சியின் பேச்சாளர் கலாநிதி சதீஸ் குமார் வேட்பாளராக நிறுத்தப்பட்டு முதலாவது தேர்தல் பிரசாரக்கூட்டமும் அமைச்சரால் நடத்தப்பட்டுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சிறைச்சாலை புனர்வாழ்வு முன்னாள் அமைச்சர் டி. எஸ். குணசேகர கலந்து கொண்டார்.

(வ-435)


## ரோலிங் சட்டர்
Powder coated **Rolling Shutters**



25 வருடகால சேவை அனுபவம்
உறுதியான நம்பிக்கையான ரோலிங் சட்டர்களுக்கு உடனடியாக தொடர்பு கொள்ளவும்

**NAFIS INDUSTRIES ( PVT ) LTD**
கொழும்பு : 075 5279488, 077 7721152,
யாழ்ப்பாணம் : 077 5890125, 021 2240221, 0777722589,



# YAMAHA
## விஷேட விலைக்கழிவு

நீங்கள் விரும்பும் YAMAHA மோட்டார் சைக்கிள் இப்போது புதிய வர்ணங்களிலும் புதிய விலைகளிலும்





| | | |
|---|---|---|
| RAY | ~~2,15000.00~~ | 2,11000.00 |
| SZ-y | ~~3,16000.00~~ | 2,78000.00 |
| SZ-R | ~~3,26000.00~~ | 2,98000.00 |
| FZ-16 | ~~3,75000.00~~ | 3,35000.00 |
| FZ-8 | ~~3,99000.00~~ | 3,47000.00 |
| Fazer | ~~4,36000.00~~ | 3,93000.00 |

கையிருப்பு உள்ளவரை மட்டுமே!

உங்கள் தெரிவுகளுக்கு இன்றே முந்துங்கள்

A.M.W (Pvt) Ltd இன் அங்கீகரிக்கப்பட்ட முகவர்

**டிஜிட்டல் எலக்ரோனிக்ஸ்**

62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
077 6623 824/2224040

குஞ்சர்கடைச் சந்தி, நெல்லியடி.
077 9893 343

(C/10719)(10.6.3)



## காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் இருபாலையில் பருத்தித்துறை வீதியில் முகப்பைக் கொண்ட செவ்வக வடிவான நான்கு பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு
தொடர்புக்கு :
**0772 002 442**



# STUDY & WORK IN CANADA
## UK, NEW ZEALAND, AUSTRALIA,
SWEDEN, GERMANY, FRANCE, INDIA, UKRAINE, DUBAI, CYPRUS, ITALY, CARIBIEN COUNTRIES, MALAYSIA, SINGAPORE & SCHENGAN COUNTRIES

**CANADA** we assist you for
- Student Visa
- Work Permit Visa
- Super Visa
- Skill Migration
- Federal Skill Workers

**UK** we assist you for
Student Visa
Minimum Qualification
O/L with IELTS 4.0
- Holiday Maker Visa
- Family Sponsor
- Tourist Visa

MBBS/ MD/ BDS/ NURSING/ PHARMACY
in Caribien Countries (America)
Ukraine, Russia, Belarus, Georgia
Minimum Qualification: A/L with 2B, 1C or Equivalent

Aug, Sep, Oct Intake in Progress

We Assist for New Zealand, Canada, Australia & Shengan Countries Work Permits
100% Legal Assistance
Work Permits Available

ALL EMBASSY FORM FILLING ONLINE FORM FILLING AND DOCUMENTATION

**SIEG INTERNATIONAL**
111/2, Brown Road, Kokuvil East, Jaffna.
(Near Technical College)
Mobile: 077 3502612, 072 3502611



Mahindra
Rise.

# முன்னிலை வகிப்போம்

65 வருட காலமாக நெடுஞ்சாலை முதல் ஆகாயம் வரை அதிசிறந்த வாகனங்களை உற்பத்தி செய்ததன் மூலம் பெற்றுக்கொண்ட நம்பிக்கையுடன் மாபெரும் மஹிந்திரா குழும நிறுவனத்துக்குச் சொந்தமான மஹிந்திரா டூ வீலர்ஸ், முழுமையான நம்பிக்கை மற்றும் சக்தியுடன் எதிர்காலத்துக்குப் பொருத்தமான மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஸ்கூட்டர்களுடன் இப்போது இலங்கையில்.

## பவர் ஸ்கூட்டர்ஸ்
- உறுதிமிக்க 125CC Z சீரிஸ் எஞ்சின்
- மெருகூட்டப்பட்ட டெலஸ்கொப்பிக் சஸ்பென்ஷன்
- எதிர்காலத்துக்குப் பொருத்தமான கவர்ச்சிமிக்க தோற்றம்
- முன்பக்க எரிபொருள் நிரப்பி, 4 in 1 என்ட்டி தெ.ப்ட் திறப்பு, மொபைல் ச்சாஜர், டிஜிட்டல் டேஷ் போட் உட்பட இன்னும் பல சிறப்பம்சங்கள்
- ஆசனத்துக்குக் கீழ் அதிக இடவசதி
- அழகிய பல வர்ணங்களில்.

*சில சிறப்பம்சங்கள் மாதிரியைப் பொருத்து வேறுபடலாம்.



MAHINDRA Duro 125
MAHINDRA Rodeo RZ
MAHINDRA PANTERO
MAHINDRA centuro

## அறிவார்ந்த மோட்டார் சைக்கிள்கள்
- Mci-5 (Micro-chip ignited 5 Curve) எஞ்சின்
- சேர்விஸ் றிமைன்டருடனான மெருகூட்டப்பட்ட முழுமையான டிஜிட்டல் ஸ்பிடோ மீற்றர்
- துடுக்கான கவர்ச்சிமிக்க தோற்றம்
- முதற்தர சிறப்பம்சங்கள் - சென்ட்ரல் லொக்கிங், வெண்ணிற LED விளக்குகள், ரிமோட் கீ

*சில சிறப்பம்சங்கள் மாதிரியைப் பொருத்து வேறுபடலாம்.

அதி சிறந்த மோட்டார் சைக்கிளொன்றையும் அதி சிறந்த விற்பனையின் பின்னரான சேவையையும் நுகர்ந்துகொள்ள நீங்களும் தயாராகுங்கள்.

விஷேட லீசிங் வசதிகள்

GENUINE
Authorised Service Centre

www.mahindratwowheelers.com

(சி/10814)

ஐடியல் டூ வீலர்ஸ் தனியார் நிறுவனம்
611, காலி வீதி, கொழும்பு 06.
தொ - 0112 221222
பெக்ஸ் - 0112 221223
IDEAL 2 Wheelers


அழையுங்கள்
மேல் மாகாணம் - 077 002 3973, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் - 077 002 3969
மத்திய மாகாணம் - 077 002 3968, தென் மாகாணம் - 077 002 3971, வட மத்திய மாகாணம் - 077 002 3974




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 127

## இனிப்பு எதற்கு... பழங்களே போதும்



பழங்கள் இனிப்புச் சுவையுடன் இருப்பதற்கு காரணம் அதில் காணப்படும் ப்ரக்ரோஸ், குளுக் கோஸ் போன்றன அடங்கியிருப்பதே, இது உட லுக்கு ஆற்றலையும் சக்தியையும் உடனடியாகவும் தரவல்லன.

இதுபோல் மாப்பொருளின் வடிவங்களான;
சுக்குரோஸ் – வெள்ளைச் சீனி
மோல்டோஸ் – தானியங்கள்
லக்டோஸ் – பால்
போன்ற வகையில் காணப்படினும் இவை எமது குருதியில் ஈர்க்கப்படும் முன்பு செரிமானம் அடைய வேண்டும். அதன் பின்பு அவை ஆற்றல் தரும் பொருளாக மாறமுடியும். பொதுவாக மாப்பொருள் கள் ஜீரணமடையும் போது அமிலத் தன்மை வெளிப்படுகின்றன.

உதாரணம் வெள்ளைச் சீனியை உணவில் அதிகம் சேர்ப்பவர்களுக்கு அஜீரணம் ஏற்படுவதை அவதானிக்கலாம். இவை சமிபாடு அடையும் போது உற்பத்தியாகும் அமிலங்கள் இரைப் பையின் உட்புறச்சுவர் படலங்கள் குடலின் உட்புற சுவர் படலங்களை அரித்து எரிச்சல் ஊட்டுகின்றன. இந்த வெல்லம் அமிலத்தன்மை ஆகியன எமது பற்களையும் சேதமடையச் செய்கிறது.

எமது பற்கள் கற்கள் அல்ல அவைகளின் உள்ளே குருதி விநியோகம், போசனை பொருள்கள் ஊட் டச்சத்துக்கள் உட்புற பகுதியில் ஓடிக் கொண்டே இருக்கின்றன. அத்துடன் குருதியில் வெல்ல அதிகரிப்பானது வெள்ளை அணுக்களின் போரி டும் வல்லமையை குறைக்கின்றன. எனவே நாம் சிறிதளவு வெல்லத்தை பயன்படுத்தினால் உடல் நலம் கெடுவதில்லை.

இவற்றை இயற்கையாக கிடைக்கும் உணவுகளில் பெறுவது ஆபத்து இல்லை. இந்த உண்மைகளை மனதில் கொண்டு உணவில் இனிப்பு வகைகளை சேர்ப்பதற்கு பதிலாக பழங்களை வாங்கி உண் பதனால் உங்கள் வளமான எதிர்காலத்துக்கு நீங்களே உதவி செய்தவர்களாகி விடுவீர்கள்.
பழங்கள் பற்றிய தகவல்கள் சில:-

01. இயற்கை உணவான பழங்கள், எமது உயிர்நீரான நீராகாரம், அதிகம் உடையவை, நினைவாற்றலை அதிகரிக்கத் தூண்டுகின் றன. நார்ச்சத்தை அதிகம் கொண்டிருக் கின்றன அத்துடன் கொழுப்பற்ற உணவாகும்.
02. பழங்களில் கவர்ந்திழுக்கும் நிறங்களுக்கு காரணமான flavonoids (ஃபிளேவனய்ட் கள்) எனும் சேர்மானங்கள் காணப்படுகின் றன. இவை புற்று நோய்களுக்கு எதிரான புற்றுநோயைக் குணமாக்கும் அல்லது குறைக்கும், உயிர்வலியற்ற எதிர்ப்பொருளா கச் செயல்படுபவை. (Anti oxidants)
03. பழங்களில் காணப்படும் நார்ப் பொருள் ஜீரணபாதையில் ஆரோக்கியத்தை மேம் படுத்துகின்றது. குடல்களில் உள்ள உணவுப் பொருள்களை வேகமாக நகர்த்துவதன் மூலம் மலச்சிக்கல் மற்றும் குடல் உட்சுவர் களில் ஏற்படும் கோளாறுகளைத் தவிர்க் கிறது.
04. நார் பொருளானது பழங்களில் காணப்படும் புரக்ரோஸ் எனும் வெல்லச்சத்தை எமது ஜீரணப்பாதையில் உட்கவரப்படுதலை தாம தப்படுத்துவதால் குருதியில் திடீர் வெல்ல அதிகரிப்பு ஏற்படாது ஒரே சீரான அளவில் வெல்ல மட்டத்தை பேணுவதற்கு உதவுகிறது.
05. நார்ப் பொருள் மிகுந்த பழங்கள் குறிப்பாக மலக்குடல் சார்ந்த புற்று நோய்கள் வராது தடுத்து தக்க பாதுகாப்பை அளிக்கின்றன.
06. இதய நோயாளிகளுக்கு பழங்கள் இதமானவை.
07. குளிர்ச்சியான உணவுகளில் பழங்களும் கீரையும் முக்கிய இடத்தைப் பிடிக்கின்றன.
08. சமீபத்தில் கண்டுபிடிப்புகளின்படி அளவுக்கு மீறிய எடை உடையவர்கள் தங்கள் எடையை குறைத்துக் கொள்ள விரும்புவார்களே யாயின், உப்புகள் குறைந்த கொழுப்பற்ற கொலஸ்ரோல் அளவு உணவாகக் காணப் படுவது பழங்களே. கொழுப்பு மலிந்த சிற்றுண்டிகளாக வெற்று கலோரிகளாக திணிக்கப்பட்ட உணவுகளை உண்பதை விட ஊட்டச் சத்துக்கள் அதிகமாகக் காணப்படும் பழங்கள் உள்ளெடுப்பது நல்லது.
09. பழங்களில் உடல் நலத்துக்குத் தேவையான விற்றமின்கள், தாதுப் பொருள்கள், கனியுப் புகள், கேரட்டின் தேவையான அளவு காணப் படுகின்றன. (உதாரணம்:- விற்றமின் C, பொட்டாசியம், இரும்பு, மக்னீசியம், CA)
10. உலர்விக்கப்பட்ட பழங்கள், உறைவிக்கப்பட்ட பழங்கள், டப்பாக்களில் அடைக்கப்பட்ட பழங்கள் போன்றவை பதனிடப்படும் போது சில விற்றமின்கள், அழிந்தாலும் பின்னரும் கூட எமக்குத் தேவையான அளவு விற்ற மின்கள், கனியுப்புகள் கிடைக்கக் கூடியதாக இருக்கின்றன.
11. சாப்பிடுவதற்கு பின்பு பழம் சாப்பிடாமல் முன்பு சாப்பிடும் போது அதனுடைய பயன் அதிகம் நம்மைச் சேருகின்றது.

எஸ். சுதாகரன்,
தாதிய உத்தியோகத்தர், நீரிழிவு சிகிச்சை நிலையம்,
யாழ். போதனா வைத்தியசாலை.

## முதியோரின் நலன்

ஒரு மனிதன் தன் வாழ்நாளில் பல பாத்திரங்களை ஏற்கிறான். முதலில் குழந்தையாக தவழ்ந்து பின்னர் இளமைப் பருவம் எய்தி, தொழில்வாய்ப்பை பெற்றபின் குடும்பஸ்தன் ஆகி காலச்சக்கரத்தின் அபரிமிதமான சுழற்சியின் விளைவாக இறுதியில் மூக்குக் கண்ணாடி அணிந்து, முகம் சுருங்கி, உடல் மெலிந்து, கண் பார்வை எல்லாம் அற்றநிலையில் கூன் விழுந்து முதுமையாகி மறைவதுதான் சரித்திரம் எனும் ஷேக்ஷ்பியரின் கருத்திற்கிணங்க விதைகளாக விழுந்து, விழுதுகள் பரப்பி, இறுதியில் சாவையே எதிர்நோக்கி சருகுகளாக தவிக் கும் முதியோர்களைப் பற்றியே இந்த ஆக்கம் இயம்ப விழைகிறது.

ஐ.நா.சபையின் கணிப்பீட்டில் தற்போது உலகில் ஒவ்வொரு பத்துப் பேருக்கும் ஒருவர் என்ற அடிப்படையில் காணப்படுகின்றனர். இது 2050 ஆம் ஆண்டில் 1/5 அடிப்படையிலும் 2150 இ ல் 1/3 எனும் அடிப்படையிலும் இருக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. புள்ளி விவரங்களினடிப்படையில் தற்போது உலகளாவிய ரீதியில் 60 கோடி முதியவர்கள் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது. இத்தொகை 2050 ஆம் ஆண்டளவில் 900 கோடியாக அதிகரிக்கலாம் என நம்பப்படுகிறது. கடந்த காலங்களில் உலகளவில் இறப்பு விகிதம் குறைந்து வருவது இதற்கு அடிப்படைக் காரணமாக அமைகிறது.

இலங்கையிலுள்ள முதியோர்களில் 60-70 வயதுக்கிடைப்பட்டோர் 54.4% உம், 70-80 வயதுக்கிடைப்பட்டோர் 32.3% உம், 80-90 வயதுக்குட்பட்டோர் 10% உம், 90 வயதுக்கு மேற்பட்டோர் 1.3% ஆகவும் காணப்படுகிறது.

இதனைவிட இலங்கையில் புள்ளி விவரங்களினடிப்படையில் 45.3% முதியோர் தமது பிள்ளைகளின் பராமரிப்பில் வாழ்ந்து வருகின்றனர். ஓய்வூதியம் மூலம் 13.5% உம், விவசாயம் மற்றும் ஏனைய தொழில் மூலம் 10.3% உம், தமது சொத்துகள் வருமானம் மூலம் 7.7% உம் வாழ்க்கையை நடத்துகின்றனர். எல்லாவற்றையும் விட மேலாக அண்மைக்கால ஆய்வுகளின்படி கடந்த ஒரு தசாப்தத்துக்கு இடைப்பட்ட காலத்தில் முதியோர் இல்லங்களில் தமது பெற்றோரை சேர்த்துவிடும் அவலநிலை அதிகரித்து வருவதாக புள்ளி விவரத் தகவல் குறிப்பிடுகின்றன. இந்த விடயங்களை நாம் ஆத்மார்த்த வாக்கு மூலங்களாக இதயங்களில் பதிவாக்கிச் சிந்திக்க வேண்டும்.

இதேவேளை வயது முதிர்ந்து செல்கையில் பலரும் தம்மையும் அறியாமல் ஒருவித பயப்பீதியால் பீடிக்கப்படுகின்றனர். இது எல்லோருடைய வாழ்க்கைச் சக்கரத்தின் நியதியின் அடிப்படையிலே நிகழ்கிறது. முதுமையடையும்போது உடலின் நோய் எதிர்ப்பு சக்தியானது மெதுவாக குறைய ஆரம்பிக்கிறது. இதனால் இதயநோய், பக்கவாதம், மூட்டுவலி, நீரிழிவுநோய், உயர் குருதியமுக்கம் போன்ற பல்வேறு நோய்கள் அவர்களைத் தாக்குகின்றன. பரம்பரைக் காரணிகள், வாழ்க்கைமுறை போன்ற பிற காரணிகளும் இதில் செல்வாக்கு செலுத்துகிறது. உடல் ரீதியாக மட்டுமன்றி பல்வேறுபட்ட உளவியல் தாக்கங்களும் முதியோர்களை வாட்டி வதைக்கிறது.

ஒரு பிள்ளையை பெற்று வளர்ப்பதற்கு எத்தனையோ இடர்பாடுகளை பெற்றோர்கள் சந்திக்கின்றனர். உணவை மறந்து உறக்கம் தொலைத்து,



உதிரத்தைப் பாலாக்கி கண்ணும் கருத்துமாக வளர்த்து பாரினில் உருவாக்கி விடுகின்றனர். ஆனால் பல இளம் சமுதாயத்தினர் ஏற்றிவைத்த ஏணியை எட்டி உதைத்து விடுகின்றனர்.

பல்வேறுபட்ட அக, புறக்காரணிகள் காரணமாக இளம் சமுதாயத்தினர் முதியோர் நலனில் அக்கறை காட்டுவதில்லை.
நவநாகரிக வாழ்க்கை முறை
இயந்திரமயமான வாழ்க்கை முறை
முதியோரின் தொற்று வியாதிகள்
பராமரிப்பு செலவினம்
அலட்சியப் போக்கு
போன்ற காரணங்களால் சமூகத்தின் ஆணி வேர்களாக திகழும் முதியோர்கள் அவர்தம் பிள்ளைகள் வளர்ந்ததும் அவர்களால் அநாதரவாக கைவிடப்பட்ட நிலை இன்றும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. முதியவர்களின் முகவரிகள் வாழ்வில் எண்ணற்ற தத்துவங்களை விளக்கி நிற்கின்றன. இயற்கை அவர்கள் மீது வரைகின்ற இத்தகு கோடுகள் மூலம் நாம் படிக்க வேண்டியவை அநேகம் உள்ளன.

மருத்துவபீட மாணவர்கள்
என்.சங்கர் 2009/Fm/052
எம்.சிவதீபன்ராஜ் 2010/Fm/19
என்.நயன்திறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UK, Australia, Canada, USA, New Zealand, Denmark, France, Germany, Italy, Japan, Netherlands, Norway, Switzerland, Sweden etc...

## வங்கியில் பணவைப்பு

Saving book, Fixed Deposit, Statement
3, 6, 12 மாதங்களுக்கான (முன், பின்) பணவைப்பு

Migration / Skill Migration / Visit Visas / Student Visas / Dependent / Business / Investment / New Applications etc...

(நேரத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்).

(சி/10802)(3.6)

SKYWALK Visa Solutions
ஸ்கைவோர்க் வீசா சொலூஷன்
No.65, 1/1, Galle Road, Dehiwala. (Food City - 1st Floor)
**077-7711905**

## காணி, வீடு விற்பனைக்கு

கொக்குவில் மேற்கு, பொன்னையா ஒழுங்கை இல. 7/6 இல் உள்ள 4 ½ பரப்பு காணியும், அங்கீகரிக் கப்பட்ட வரைபடத்தின் படி கட்டி முடிவு பெறாத 3 அறை வீடும் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 021 221 3292 (30183) (10,6,16)

## All the Best

இம்முறை G.C.E உயர்தர பரீட்சை எழுதும் மாணவர்கள் சிறப்பாக பரீட்சை எழுதி சிறந்த பெறுபேறுகளுடன் வெற்றிபெற CSC - ASIAN கொம்ப்யூட்டர் கல்விநிலையத்தாரின் வாழ்த்துக்கள்.

CSC - ASIAN
COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION
யாழ்ப்பாணம் - சாவகச்சேரி
நெல்லியடி - கிளிநொச்சி - வவுனியா

## பஸ் விற்பனைக்கு

யாழ்ப்பாணம்-முல்லைத்தீவு சேவையில் ஈடுபடும் அசோக் லேலண்ட் தொடர் இலக்கம் NAXXXX, NDXXXX, யாழ்-கொழும்பு சேவையில் ஈடுபடும் Non/AC சீற் அஜஸ் ரபில்ஸ் தொடர் இலக்கம் NDXXXX விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 078 1516 (30132)(3.6.11)



## கேக் ஐசிங்

பயிற்சி வகுப்புகள்
11.08.2013
ஞாயிறு காலை 9.00 மணிக்கு புதிய பிரிவு ஆரம்பமாகின்றது
ஆர்வமுள்ளவர்கள் கீழ்க்காணும் முகவரியுடனோ தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும்
**Sindrella Beauty Palour**
155, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 077 223 8603 (30176)(2.6.3)

## உழவு இயந்திரம் விற்பனைக்குண்டு

புதிய TAFFE RC தொடர் இலக்கம் 900 மணி வேலை செய்த நிலையில் பெட்டியுடன் உழவு இயந்திரம் விற்பனைக்குண்டு.

(30216) (3.6.11) தொடர்பு: 077 068 7437- வவுனியா

## வான் வாடகைக்கு

ஹைஏஸ் வான் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 373 4109 (30196) (3.6.11)

## காணி விற்பனைக்குண்டு

6ஆம் கட்டை, பூதர்மடம் நீர்வேலி தெற்கில் பருத்தித்துறை வீதியில் 10 பரப்புக் காணி சிறிய வீட்டுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 071 847 4193, 075 039 1714.

## விற்பனைக்கு

ஹோட்டல் பாவனைக்குரிய ஷோக்கேஸ், (வளைவு ஷோக்கேஸ்) லையிட், விளம்பரப் பலகை, ஹொட் கபேட், புதிய மேசை, சில்வர் கதிரைகள் ஆகியன விற்பனைக்குண்டு.

தொடர்பு: 021 222 9926

## சிறுநீரகம் தேவை

41 வயதுடைய ஆண் நோயாளி ஒருவருக்கு O இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத் தேவை. சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 955 9443, 077 903 0383 (30193) (3.6.11)

## நாகபூஷணி திருமண சேவை
### மணமகள் தேவை

1979 இல் பிறந்த 8 இல் செவ்வாய் உள்ள கிரகபாவம் 80 உடைய யாழ்ப்பாணத்தில் தனியார் நிறுவனத்தில் பணி புரியும் மணமகனுக்கு மணமகள் எதிர்பார்க்கப்படுகிறது. துரிதமாகவும், மிகச் சிறந்த முறையிலும் நீங்கள் விரும்பும் உள்நாடு, வெளி நாடு மற்றும் அரச/ தனியார் உயர் தொழில்களிலுள்ள மண மகன்/ மணமகளைப் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்.

நாகபூஷணி திருமண சேவை
125, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
021 222 9306, 077 138 7596, 075 554 6000
காலை-8.15 AM முதல் 5.45 PM வரை (30177) (3.6.11)

## Nikon

இலங்கையில் பிரபலமான புகைப்படக்கருவி மிகக்குறைந்த விலையில்



D90 + 18-105mm VR
ரூ.118,000/- மட்டும்

(சி/10693)(3.6)

உத்தரவாத சான்றிதழுடன்
ஏக விநியோகத்தர்
Photo TECHNICA
இல. 288, காலிவீதி, கொழும்பு-03
தொடர்புகளுக்கு வேறு கிளைகள்:
விஹாணி : 0710-556556

## வீடு விற்பனைக்கு

- 3 படுக்கை அறைகள், பெரிய விருந்தினர் ஹோல், பிரத்தியேகமான கராஜ் மற்றும் களஞ்சிய வசதி உள்ளது
- இரண்டு மலசலகூடங்கள் மற்றும் குளியலறை, சொந்தக் கிணறு வசதியுடன் 15 பேச்சஸ் நிலப்பரப்பில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு.




வீட்டு முகவரி
இல. 58,
கெறவலப்பிட்டிய றோட்,
ஹெந்தல, வத்தளை.

தொடர்பு : 0777222524 (சி/10724)(3.6)

## கார் விற்பனைக்கு

HONDA ACCORD FULL OPTION (புல் ஒப்சன்)
CAR-18-XXXX
தொடர்பு: 071 347 6838 (30186)(3.6.11)

E.S.பேரம்பலம் நிறுவனத்தின் முழுமையான ஆதரவுடன்
யாழ். பாலர் கல்விக்கழக நிர்வாகத்திலுள்ள
12 ஞானக்குழந்தைகள் இல்ல
பாலர் பாடசாலைகளுக்கிடையிலான
47 ஆவது வருடாந்த
விளையாட்டு விழா - 2013

இடம் : யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மைதானம்
காலம் : 04.08.2013 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 9 மணி

தலைவர்
S.B.காசிநாதன் MA.MEd. அவர்கள்
[தலைவர், பாலர் கல்விக் கழகம், ஓய்வுநிலை ஆசிரியர்- சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்]

பிரதம விருந்தினர்கள்
R. வசந்தசேனன் அவர்கள்
[ஓய்வுநிலை மாவட்ட நீதிபதி, யாழ்ப்பாணம், பணிப்பாளர், சத்தியசாயி பாடசாலை, மானிப்பாய்]
திருமதி பத்மினி வசந்தசேனன் அவர்கள்

சிறப்பு விருந்தினர்
லயன் E.S.P. நாகரத்தினம் அவர்கள்
[உரிமையாளர், E.S.P. நிறுவனம்]

கௌரவ விருந்தினர்
செ. செல்வராசா அவர்கள்
[ஓய்வு நிலை முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி]

அனைவரையும் வருகைதந்து பாலர்களை ஊக்குவிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்
யாழ். பாலர் கல்விக்கழக உறுப்பினர்கள்
ஞானக்குழந்தைகள் இல்ல
ஆசிரியர்கள், பாலர்கள்

(சி/10738)(3.45.6)

## காணி விற்பனைக்கு

தொழிற்சாலைகள் மற்றும் பண்ணைகள் அமைப்பதற்கு ஏற்றவகையில் வடிவமைக் கப்பட்ட சுற்றுமதிலுடன் யாழ்.காரைநகர் வீதி,சண்டிலிப்பாய் ஐயனார் கோயில் வீதியில் 32 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:075 731 6139 (30143)(3.5.6)

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அண்மை யிலுள்ள ஓடை லேனில் சிறிய வீடு (3 அங்கத் தவர்களுக்குள் அரச ஊழியர் விரும்பத் தக்கது) வாடகைக்குண்டு.

தொடர்பு:077 244 5706 (30157)(3.6.11)

## காணி விற்பனைக்கு

வடமராட்சியில் உபய கதிர்காமதிற்கு அருகில் கந்த முருகேசனர் வீதியில் உள்ள 9½ பரப்பு பனை மரங்களுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 474 3527

## காணி விற்பனைக்கு

ஆனைக்கோட்டை சந்திக்கு அருகில் ஒரு பரப்புக் காணி விற் பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.

தொடர்பு இல : 0779428654 (30163) (10,6,3)

## கற்பிக்கப்படும்

தரம் 6 முதல் O/L வரை கணிதம் பல வருட அனுபவமுள்ள ஆசிரியரால் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். O/L பரீட்சை எடுக்கும் மாணவருக்கு விசேட மீட்டல், பழைய வினாத் தாள்களில் பயிற்சி மேலதிக கட்டணமின்றிக் கற்பிக்கப்படும்.

தொடர்பு: 077 937 0228 (30125) (3.6.11)

## வீடு விற்பனைக்கு

சுதுமலை வடக்கு,மானிப்பாயில் 3¼ பரப்பில் 4 அறையும்,சமையலறையும் 3 Hall உடன் நவீன மலசலகூடமும் குளியலறையுடன் சுடுநீர் உண்டு. சுற்றிவர மதிலுமுள்ள வீடு விற்பனைக்குண்டு. தை மாதம் புனரமைக்கப்பட்டுள்ளது. உரிமையாளர் வெளிநாடு செல்வதால் விற்பனையாகிறது. (30141) (3.5.6)

தொடர்பு:0778030073,011 304 2022

## ஆங்கிலவகுப்பு

தரம் 1-5 வரையான ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பம். அடிப்படையில் இருந்து இலக்கணம் கற்பிக்கப் படும்.
ஆரம்பம்: 05.08.2013 அன்று. 4', 5' மாணவர்களுக்கான விசேட ஆங்கில கற்கை நெறியும் இடம் பெறும்.

தொடர்பு: 077 933 2890 (30140) (3.5.11)

## வாகனம் விற்பனைக்கு

Ashok Leyland Lorry
விற்பனைக்கு.
NPLI இலக்கம்
தொடர்பு: 077 990 5751 (30089) (3.6.11)

## வாடகைக்கு உண்டு

கண்டி வீதி, நெடுங்குளம் சந்தியில் சகல வசதிகளுடன் கூடிய 2 கடைகளும் (80 அடி), வீடும் வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 912 0444, 077 436 7017 (30168)(3.6.11)

## IMMEDIATE VACANCIES IN
INNOVAGE INTERNATIONAL (PVT) Ltd.

சர்வதேச ரீதியில் இயங்கிக் கொண்டிருக்கும் அமெரிக்க நிறுவனத்தின் 5 புதிய கிளைகளில் நிரந்தர வேலைவாய்ப்பு



* Customer Service
* Marketing executive
* Managers
* Asst. Managers

குறைந்தபட்ச கல்வித் தகைமை O/L
தகைமைக்கேற்ப பயிற்சி வழங்கப்படும்
பயிற்சியின் போது ரூபா. 12,000/- 15,000/-
பயிற்சியின் பின் ரூபா. 30,000/- 50,000/- சம்பளம்.
வெளிநாட்டில் தொழில் புரிய வாய்ப்பு வழங்கப்படும்.

NOTE
கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசத்தினர் களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தங்குமிட வசதி உண்டு
077 632 0962, 077 892 07777

(30119)(10,3,6)

BOC இலங்கை வங்கி

## மீட்கப்படாத அடகு நகைகளின் பகிரங்க ஏல விற்பனை

யாழ்.மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கை வங்கி கிளைகளில் 10.11.2012 இற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 10.05.2012 இற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

| கிளையின் பெயர் | ஏலவிற்பனைத் திகதி, இடம்,நேரம் |
|---|---|
| யாழ். மேற்தரக்கிளை (யாழ். கச்சேரி,யாழ்.பஸ் நிலையம், விரிவாக்கற் கிளைகள் உட்பட) | |
| யாழ். பிரதான வீதிக்கிளை | யாழ்ப்பாணம் அதிமேற்தரக்கிளை |
| காரைநகர் | யாழ்ப்பாணம் |
| சுன்னாகம்(புன்னாலைக்கட்டுவன் விரிவாக்கற்கிளைகள் உட்பட) | 2013 ஆகஸ்ட் 10ஆம்,11ஆம் திகதிகளில்(சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை) காலை 9.30 மணிக்கு |
| மானிப்பாய் (சாவல்கட்டு விரிவாக்கற்கிளை உட்பட) | |
| சங்கானை | |

இந்த ஏல விற்பனையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

சிரேஷ்ட முகாமையாளர்,
இலங்கை வங்கி (வடபிராந்தியம்),வடபிராந்திய காரியாலயம்,
ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.

தொடர்பு: 021 222 4683,021 222 3126 (சி/10739)(3.5.6)

## லண்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்கான விளக்கம்

- மேலே குறிப்பிட்டுள்ள நாடுகளுக்குச் செல்ல விரும்புவோர் நேரில் வரவும்
- போய்ச் சேர்ந்த பின்பு பணம் செலுத்தலாம்
- மேலதிக விவரங்களுக்கு நேரில் வரவும்
- நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

அனி இன்டர்நஷனல் எடியுகேஷன் கன்சல்டன்சி சர்விஸ்
இல. 72, இறுப்பையடிச் சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
**Tel: 021 492 1831, 021 492 1832**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொமர்ஷல் வங்கியின் அருணலு புதிய பரிசுத் திட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 4

கொமர்ஷல் வங்கியின் அருணலு சேமிப்புத் திட்டத்தில் இணைந்து 2012 ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு இந்த வருடம் தொடக்கம் விசேட பரிசில்களை வழங்கவுள்ளனர்.

வங்கியில் அருணலு சேமிப்புக் கணக்கினை ஆரம்பித்து 5 ஆயிரம் ரூபா வரை பேணி வரும் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காக புதிய பரிசுத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

2013 ஓகஸ்ட் மாதம் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் தேசிய மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கும் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெறும் மாணவர்களுக்கும் புதிய திட்டத்தின் பிரகாரம் பணப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

2013 ஆம் ஆண்டு தொடக்கம் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெறும் மாணவனுக்கு 2 ஆயிரம் ரூபா வீதமும், இரண்டாமிடத்தைப் பெறும் மாணவனுக்கு ஆயிரத்து 500 ரூபாவும் , மூன்றாமிடத்தைப் பெறும் மாணவருக்கு ஆயிரம் ரூபாவும் அவரது கணக்குக்கு மாதாந்தம் வைப்புச் செய்யப்படுமெனவும், மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெறும் மாணவருக்கு 50 ஆயிரம் ரூபா பணப் பரிசிலாக அவரது கணக்கில் வைப்புப் செய்யப்படும்.

இதேவேளை, வலய மட்டத்தில்முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கு வழமை போல 10 ஆயிரம் ரூபா, 7 ஆயிரத்து 500 ரூபா, 5 ஆயிரம் ரூபா வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

# ‘சிங்கர்’ நிறுவனத்தின் மூன்று காட்சியறைகள்



யாழ்ப்பாணம், ஓக.4

‘சிங்கர்’ கம்பனியின் வாடிக்கையாளர் சேவையை இலகுபடுத்தும் நோக்குடன் புனரமைப்புச் செய்யப்பட்ட தளபாடங்களுடன் கூடிய காட்சியறைகள் அண்மையில் திறந்து வைக்கப்பட்டன.

யாழ்.மாவட்டத்தில் 11 விற்பனை நிலையங்களுடன் செயற்பட்டு வரும் ‘சிங்கர்’ கம்பனி மின் இலத்திரனியல் சாதனங்களை நாடளாவிய ரீதியில் சந்தைப்படுத்தி வருகிறது.

புதுப்பொலிவுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள இந்த நிலையங்களில் வாடிக்கையாளர்கள் இலகுவாகப் பொருள்களை கொள்வனவு செய்வதற்கான வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

‘சிங்கர்’ கம்பனியின் யாழ்ப்பாணம், சங்கானை, நெல்லியடி ஆகிய மூன்று விற்பனை நிலையங்களில் இந்த விஸ்தரிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் ‘சிங்கர்’ கம்பனியின் வியாபார அபிவிருத்தி முகாமையாளர் இந்திக குணதிலக, மாவட்ட முகாமையாளர் வி.தயாளன் ஆகியோர் கலந்து கொண்டு காட்சியறைகளைத் திறந்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த புதிய வடிவமைப்புக்களான இலத்திரனியல் பொருள்களை பாடசாலை மாணவர்கள் உட்பட வாடிக்கையாளர்களும் கண்டுகளித்தனர். (த-14-20-8)

# Hayles Agriculture

## நிறுவனத்தின் மகத்தான உற்பத்தித் திறனுடனான நெல் விதைப்பு



Hayles Agriculture Holdings Ltd நிறுவனம் தனது விவசாய உபகரணப் பிரிவினூடாக Kubota இயந்திரமயப்படுத்தப்பட்ட நாற்று நடுகை உபகரணத்தை அறிமுகப்படுத்தி, இலங்கையில் விவசாயம் மற்றும் பயிர்ச்செய்கைத் துறையில் மாற்றத்திற்கு மீண்டும் ஒரு முறை வழிகோலியுள்ளது.பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் முன்னெடுக்கப் படுகின்ற "Gamidiriya" நிகழ்ச்சித்திட்டத்துடன் (சமூக அபிவிருத்தி மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுச் செயற்திட்டம் - 2 ஆம் கட்டம்) இணைந்து வட மத்திய மற்றும் தென் மாகாணங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு இந்த இயந்திரத்தின் தனித்துவமான அம்சங்கள் தொடர்பில் நிறுவனத்தின் மேம்பாட்டு அலுவலர்கள் விளக்கமளித்துள்ளனர்.

இது தொடர்பில் Hayles Agriculture Holdings நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான எம்.ஆர்.ஸஹீட் கருத்துத் தெரிவிக்கையில் '' ஜப்பானின் Kubota நிறுவனத்தின் பிரதிநிதிகளும் Hayles நிறுவனத்தின் விவசாய மேம்பாட்டுச் சேவைகள் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவுகள் அணியும் ஒன்றிணைந்து இலங்கையில் இந்த இயந்திரத்தை உபயோகிப்பதற்கான களநிலைமைகள் தொடர்பான விரிவான சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்ததுடன், 2012 ஆம் ஆண்டு யால மற்றும் மஹா செய்கை பருவ காலங்களின் போது முதற்கட்ட பரீட்சார்த்த முயற்சிகளையும் மேற்கொண்டிருந்தனர். Kubota இயந்திரமயப்படுத்தப்பட்ட நாற்று விதைப்பு உபகரணத்தின் பயன்களை நேரடியாகக் கண்டு அதன் அனுபவங்களைப் பெற்றிருந்த நாம் இதனை உள் நாட்டில் விவசாயிகள் மத்தியில் அறிமுகப்படுத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம்'' என்று குறிப்பிட்டார்.

Kubota NSP - 4wவகை நாற்று நடுகை இயந்திரமானது இருவரைக் கொண்ட அணியுடன் ஒரு நாளில் ஒரு ஹெக்டேயர் பரப்பளவு வயலில் நாற்றுக்களை நடுவதற்கு உதவுவதால் இந்த இயந்திரம் விவசாயிகள் தங்களது தொழிலாளர் செலவுகளைக் குறைத்து பலாபலன்களை அதிகரித்துக் கொள்ள வழிவகுத்துள்ளது. விவசாயிகள் நாற்றுமேடைகளை செவ்வகத் துண்டுகளாக வெட்டியெடுத்து அவற்றை இயந்திரத்தின் உட்பகுதியில் வைக்கும் போது சம இடைவெளிகளைக்கொண்ட வரிசைகளாக இவ் இயந்திரம் அவற்றை நாட்டுகின்றது.ஒவ்வொரு வரிசைக்கும் இடையிலுள்ள இடைவெளியானது களைகளை இயந்திரத்தின் உதவியுடன் அகற்றுவதற்கு இடமளிப்பதுடன், சிறந்த காற்றோட்ட வசதியானது பூச்சிகள் உற்பத்தியாவதையும் குறைக்கின்றது. Kubota நாற்று நடுகை இயந்திரத்தின் தொழிற்பாட்டைநேரடியாகக் கண்டுள்ள உள்நாட்டு விவசாய நிபுணர்கள் தற்போது கிடைக்கப்பெறுகின்ற ஜப்பானிய தொழில்நுட்பத்துடனான இயந்திரமயப்படுத்தப்பட்ட நாற்று நடுகைமுறைமை விவசாய இரசாயன உற்பத்திகளின் பாவனையிலும் சேமிப்பிற்கு வழிவகுக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளனர்.

விவசாயத்தை இயந்திரமயப்படுத்தல், மேம்படுத்தப்பட்ட வடிவமைப்புக்கள் ஆகிய பல அம்சங்களை அறிமுகப்படுத்துவதில் முன்னோடியாகச் செயற்பட்டுள்ள Hayles Agriculture நிறுவனம் புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்தி, விவசாயத்தில் தொழில் நேர்த்திக்கு வழி வகுத்துள்ளது. Kubota நாற்றுநடுகை இயந்திரத்திற்குப் புறம்பாக Haysprayதுருப்பிடிக்கா இரும்பிலான முதுகில் தொங்க விடும் தெளிப்பான் கருவிகள், இணை கதிரடிப்பான் கருவிகள், இரு சக்கர மற்றும் நான்கு சக்கர டிராக்டர் வண்டிகள். இணை அறுவடைக் கருவிகள் போன்றவற்றையும் Hayles Agriculture நிறுவனம் சந்தைப்படுத்தி வருவதுடன், இலங்கையில் விவசாயத்துறையை இயந்திரமயப்படுத்துவதில் நீண்ட காலமாக முன்னிலை வகித்து வருகின்றது.

# மானிப்பாய் சம்பத் வங்கியின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழா

சம்பத் வங்கியின் மானிப்பாய் கிளை தனது மூன்றாம் ஆண்டு நிறைவு விழாவை கடந்த 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கிளை முகாமையாளர் தலைமையில் வெகு விமர்சையாகக் கொண்டாடியது.

இந் நிகழ்வுக்கு விருந்தினர்களாக சம்பத் வங்கி பிராந்திய முகாமையாளர், சண்டிலிப்பாய் பிரதேச செயலர், வர்த்தகப் பெருமக்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், வாடிக்கையாளர் என பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந் நிகழ்வை பிரதிபலிக்கும் வகையில் சின்னசிறார்களுக்கான ஆற்றலை ஊக்குவிக்கும் முகமாக கவர்ச்சிகரமான பரிசில்களுடன் கூடிய ஒரு சித்திர போட்டியை வங்கியினர் ஒழுங்கு செய்திருந்தனர்.

கடந்த 29 ஆம் திகதி மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடத்தப்பட்ட இந்த போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரி, மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, மானிப்பாய் சிந்மய பாரதி பாடசாலை, மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயம், மானிப்பாய் புனித ஆன்ஸ் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை ஆகியனவற்றில் தரம் 1 - தரம் 4 வரை கல்வி பயிலும் 200 ற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கு பற்றியிருந்தனர். இவற்றில் 03 வெற்றியாளர்களும், 5 ஆறுதல் பரிசு வெற்றியாளர்களும் ஒவ்வொரு தரத்துக்கும் தனித்தனியே தெரிவு செய்யப்பட்டு, வங்கிக் கிளையின் ஆண்டு விழா வைபவத்தின்போது, பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். முதற் பரிசாக 5 ஆயிரம் ரூபாவும், இரண்டாம் பரிசாக 3 ஆயிரம் ரூபாவும், மூன்றாம் பரிசாக 2 ஆயிரம் ரூபாவும் 20 ஆறுதல் பரிசில்களும் வெற்றியாளர்களுக்கு வழங்கப்பட்டன.

இந் நிகழ்வை நினைவுபடுத்தும் வகையில் சமூக அக்கறையுடன் கூடிய இரத்ததான நிகழ்வொன்று தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் உதவியுடன் ஒழுங்கு செய்யப்பட்டது.இதில் வங்கி ஊழியர்கள், பணியாளர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் மானிப்பாய் பொலிஸ்பிரிவு உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர் என்றும் சம்பத் வங்கி மானிப்பாய் கிளை முகாமையாளர் இ.குமணன் தெரிவித்தார்.



கொமர்ஷல் வங்கியின் ‘அருணலு’ சேமிப்புத் திட்டத்தில் இணைந்து 2012 ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற தென்மராட்சி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கு கொமர்ஷல் வங்கியின் சாவகச்சேரிக் கிளையில் நடைபெற்ற பரிசில் வழங்கும் நிகழ்வில். (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## விரைந்து மீள்விக்கப்பட வேண்டிய வடக்கின் பனை வளம்

வடக்கின் பொருளாதாரத்தின் மூன்றாவது கண், பனை வளம், விவசாய வளம், கடல் வளம் ஆகிய இரண்டுடனும் நிகர் நிற்கும் வகையில் அது எங்கள் மாநிலத்தில் மேலோங்கி நின்றது.

அந்நியர் ஆட்சிகள் இந்த மண்ணில் காலூன்றுவதற்கு முன்னர், இயற்கை தந்த எமது சுதேசிய வளங்களே வாழ்வின் ஆதாரங்களாக விளங்கின.

நாடு சுதந்திரம் பெற்றதன் பின்னர், மேற்குலகின் இயந்திரமயமான கைத்தொழில் செல்வாக்கினால், சுதேசிய பொருளியல் வளங்களின் பெறுமானம் தேய்ந்து போனதும், குறிப்பிடத்தக்க அளவு பின்னடைவு கண்டதும் ஒரு வகையான 'துன்பியல்' ஒழுங்காகியது.

அதன் மத்தியிலும், வடக்கின் பிரதான இயற்கை வளங்களின் பயன்கள் குறிப்பிட்டுக் கூறுமளவுக்கு ஓரளவு உயிர்ப்புடன் விளங்கின. சுதந்திர இலங்கையின் பொருளாதார வளர்ச்சியைக் கட்டி வளர்க்க மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களில், செயற்பாடுகளில் வடக்கும், கிழக்கும் ஒப்பீட்டளவில் ஓரங்கட்டப்பட்டன. ஓர வஞ்சகம் மேலோங்கி நின்றது.

அதற்கு அடுத்து, போர்க் காலத்தில் தமிழர் மாநிலங்கள் இரண்டிலும் பொருளாதார வளர்ச்சி, அரசுகளால் அமிழ்த்தப்பட்டது. அதன் பெறுபேறாக வடக்கில் மிகப் பெரிய அளவில் பின்னடைவு கண்டிருப்பது பனை, தென்னை உற்பத்தித்துறைகள் எனலாம்.

இத்துறைகளை இன்றுள்ள இருள் சூழ்ந்த நிலையில் இருந்து மீள்விப்பதற்கான பணிகளையும், காலத்துக்கு உகந்த திட்டங்களையும், மூச்சாக முன்னெடுக்க வேண்டிய வேளை இப்போதாகும்.

வடக்கில் நீண்டு, நெடிந்து சென்ற போர்க் காலத்தில், பனம், தென்னம் தோட்டங்கள் தட்டிக் கேட்க எவரும் இல்லை என்ற திமிருடன் வெட்டி அழிக்கப்பட்டன.

1993ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின் பிரகாரம் பதினொரு மில்லியன் (11, 120, 000) பனைகள் வடக்குக்கு வளமும் வருமானமும் தந்தன. அவை பல்லாயிரம் மக்களுக்கு வாழ்வாதாரங்களை ஈந்தன.

ஆனால், இரண்டொரு வருட இடைவெளியில் கற்பக தருக்கள் என்று ஏற்றிப் போற்றப்படும் அவற்றில் 3.5 மில்லியன் பனைகள் அழிந்தன, அழிக்கப்பட்டன. எறிகணை வீச்சுக்களில் தப்பிக் கொள்வதற்கான பதுங்கு குழிகள் அமைக்கவும், காவல் அரண்கள் கட்டவும், தட்டிக் கேட்க எவரும் இல்லையென்ற இறுமாப்புடன் அழிக்கப்பட்டன.

அவ்வாறு அழிக்கப்பட்ட அத்தனை பெரும் எண்ணிக்கையான பனைகளை, மீள் நடுகை செய்து பயன் பெற இன்னும் பல பத்து வருடங்களுக்கு காத்திருக்க வேண்டும் என்பது ஒருபுறம் இருக்க–

அதற்கான நிதிமூலங்கள் உட்பட ஆதார வசதிகள் செய்யப்பட வேண்டும். அதற்குரிய முழுப் பொறுப்பையும் அரசே ஏற்க வேண்டும்.

அருகிலுள்ள தமிழகத்தில், பனம்பொருள்களில் சிறுகைத் தொழில் பொருள்களை மட்டுமன்றி நவீன தொழில்நுட்பங்களைக் கையாண்டு மிகப் பல வழிகளில், வகைகளில் பொருளாதாரமும் மக்கள் வாழ்வு நிலையும் உயர்த்தப்படுகின்றன.

இந்தத் தருணத்தில், பனை அபிவிருத்தி சார்ந்த 47 பயிற்சி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளதாகவும், அங்கு சிறந்த பனை சார் உற்பத்திப் பொருள்கள் தயாரிக்கப்படுவதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. நவீன தொழில்நுட்பங்கள், சந்தைவாய்ப்பு, ஏற்றுமதி விருத்தி என்பவற்றின் ஊடாக, வடக்கின் பொருளாதார உயர்ச்சிக்கு பனை வளங்கள் ஊடாக வகை செய்வதற்குத் திட்டமிட்டுச் செயற்பட வேண்டும்.

எங்கும், எதுவும், எல்லாமே பிளாஸ்ரிக் என்ற நிலை. பனை வளப் பொருள்களின் இடத்தை வெகு வேகமாகக் கபளீகரம் செய்து வருகிறது பிளாஸ்ரிக். எங்கும், எதற்கும், எதிலும் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் சார்புப் பொருள்களே மலிந்துள்ளன.

இதனால் சுற்றுப்புறச் சூழல் மிகப் பெரிய அளவில் பாதிப்புறும் அபாயம் தடுப்பார் இன்றி அதிகரித்து வருகிறது. பிளாஸ்ரிக் பொலித்தீன் பொருள்களின் உக்கும் தன்மை மிக மிகக் குறைவு. அதனால் மண்ணுக்குக் கீழே நீர் செறிந்து செல்லவிடாது தடுப்பதால், அது தேங்கும் தன்மை அதிகரிக்கிறது. அதனால் விவசாயம் பெரிதும் பாதிப்புறும், அத்தோடு குடிதண்ணீர் வளங்களும் அருகிப் போகும்.

எமது இயற்கை வளங்களை பாதுகாக்கத் தவறுவோமாயின், ஏற்கெனவே வறண்ட பிரதேசமான வடக்கு, பாலை வனமாக மாறும் பேராபத்தும் தேடி வரலாம்.

பனை வளத்தை முந்தைய நிலைக்கு மீள்விப்பதற்குத் திட்டமிட்டுச் செயலாற்றுவதோடு, நில, நீர் வளங்களைக் கெடுத்து விடாது பாதுகாப்பதும், நிலைபேண் அபிவிருத்திக்கு மிகப் பிரதானமாகும். இவை குறித்து எப்போது உள்ளார்ந்து உழைக்கப் போகிறோம்.....?

# இந்து சமுத்திரத்தில் சீனாவின் செல்வாக்கு

முத்தரப்பு உடன்படிக்கையானது, இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுடன் இந்தியா தனது பிராந்தியப் பாதுகாப்பில் ஒன்றிணைந்து செயற்படுவதோடு மட்டுமல்லாது, தொடர்பாடல்களைமேற்கொண்டுதேவையான தகவல்களை வழங்குவதுடன் கண்காணிப்பு முறைமைகளையும் நடைமுறைப்படுத்த வழிசமைக்கிறது.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் வர்த்தக மற்றும் மூலோபாய நலன்களைக் கருத்திற் கொண்டு அதில் செல்வாக்குச் செலுத்துவதற்காக சீனா மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளும் தமது கடல் சார் செல்வாக்கை விரிவுபடுத்துவதில் தமக்கிடையே போட்டியிடுகின்றன.

எவ்வாறெனினும், இந்து சமுத்திரப் பிராந்தியத்தை சீனா கட்டுப்படுத்துவதைத் தடுப்பதற்காக இந்தியா அண்மையில் கடல் சார் பிராந்திய அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

தென்னாசியாவில் சீனாவானது தனது வர்த்தக சார் கடல்சார் நலன்களை அடைந்து கொள்வதற்கு விரும்பும் அதேவேளையில், இந்தியாவானது உபகண்டம் என்ற வகையிலும் ஆசியக் கண்டத்தில் அதிகாரம் மிக்க நாடாக விளங்குகின்ற வகையிலும், இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் கடல்சார் பாதுகாப்பின் முக்கியத்துவத்தில் அதிகம் செல்வாக்குச் செலுத்துவதாக நம்புகிறது.

பிராந்தியத்தில் உள்ள அயல்நாடுகளுடனான ஒத்துழைப்புடன் கடல் சார் பாதுகாப்பில் ஈடுபடுவதை நோக்காகக் கொண்டு இந்தியா ஜூலை மாதத்தின் ஆரம்பத்தில் இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய இருநாடுகளுடன் இணைந்து முத்தரப்பு கடற்பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டது.

வரையறுக்கப்பட்ட பொருளாதார வலயத்தில் கண்காணிப்புக்களை மேற்கொள்ளுதல், சோதனை மற்றும் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், கடற்கொள்ளையர்களின் நடவடிக்கைகளை முறியடித்தல், புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வணிகக் கப்பல்களை வழங்குதல், அவற்றைக் கண்காணித்தல் போன்றன உள்ளடங்கலான நடவடிக்கைகளை இலங்கை மற்றும் மாலைதீவு ஆகியவற்றுடன் இணைந்து மேற்கொள்ள இந்தியா திட்டமிட்டுள்ளது.

க்வாடர் துறைமுகமானது Gwadar Port சீனாவின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்படுவதாக அறிவிக்கப்பட்டதை அடுத்தே இந்தியா ஜூலைமாத ஆரம்பத்தில் முத்தரப்பு உடன்படிக்கையை வரைந்தது.

சீனா அரசின் சீனத் துறைமுக பொறியியல் நிறுவனத்தின் நிதியுதவியுடன் இலங்கையின் கொழும்புத் துறைமுகத்தில் அமைக்கப்பட்ட 500 மில்லியன் அமெரிக்க டொலர்களைக் கொண்ட புதிய கொள்கலன் துறைமுகமானது ஓகஸ்ட் 2013இல் திறக்கப்படவுள்ளது. இக்கொள்கலன் துறைமுகத்தின் 85 சதவீதத்தை சீனத் துறைமுக பொறியியல் நிறுவனம் கட்டுப்படுத்துவதுடன், அடுத்த 35 ஆண்டுகளுக்கு இத்துறைமுகமானது இந்நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும்.

இதைவிட கொழும்பு கடற்கரையோரத்தில், 125 ஏக்கர் நிலப்பரப்பானது சீன அரச நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்திய – அமெரிக்கா ஆகியன இணைந்து அண்மையில் மேற்கொண்ட இராணுவக் கூட்டுப் பயிற்சியை அடுத்தே தற்போது இவ்வாறான மூலோபாய முக்கியத்துவம் மிக்க கூட்டு உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனாவின் வர்த்தக சார் செல்வாக்கு அதிகரித்துள்ள அதேவேளையில், சீனாவானது இன்னமும் பாதுகாப்புடன் தொடர்புபட்ட குறிப்பிடத்தக்க நகர்வுகளை மேற்கொள்ளவில்லை. சீனாவானது தொடர்ந்தும் பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் போன்ற நாடுகளில் துறைமுகங்களை அமைப்பதற்கும் புனரமைப்பதற்கும் பெருமளவான முதலீட்டை மேற்கொண்டுள்ள போதிலும், தனது அயல்நாடுகளின் பௌதிக ரீதியான பாதுகாப்புக்கு தனது நாடே முதன்மையாக விளங்குவதாக இந்தியா நம்புகிறது.

இந்தியா, மாலைதீவு மற்றும் இலங்கை ஆகிய மூன்று நாடுகளும் இணைந்து மேற்கொண்டுள்ள கடல்சார் முத்தரப்பு கூட்டு உடன்படிக்கையானது முரண்பாடுகளைத் தவிர்த்து, பிராந்தியத்தில் ஒற்றுமையை நிலைநாட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இக்கடல் சார் பாதுகாப்பு உடன்படிக்கையை கென்யா, ஓமான், தன்சானியா அல்லது மொறிசியஸ் போன்ற நாடுகளுடன் இணைந்து விரிவுபடுத்துவதற்கான முயற்சிகளை இந்தியா மேற்கொள்ளலாம்.

இந்நிலையில் இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் எல்லைப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் இந்தியா மிக நீண்ட கால மூலோபாயம் மிக்க பங்களிப்பை வழங்கிவருகிறது. இந்தியாவானது இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் எல்லைப் பாதுகாப்பு நடவடிக்கையை தானே தலைமை தாங்குவதாக அறிவித்தால், எரிசக்தி வளங்களில் அதிக செல்வாக்கைச் செலுத்தி வரும் சீனா மீது இந்தியா அழுத்தங் கொடுக்க முடியும்.

வரையறுக்கப்பட்ட பொருளாதார வலயத்தில், இலங்கை மற்றும் மாலைதீவு நாடுகளின் கரையோரங்களிலிருந்து 200 கடல்மைல் தொலைவு வரை கண்காணிப்பு நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதை இந்தியா நோக்காகக் கொண்டுள்ளது. ஏனைய நாடுகளின் வரையறுக்கப்பட்ட பொருளாதார வலயத்தில் இந்தியா தனது கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற்கு முத்தரப்பு உடன்படிக்கை வழிசமைக்காவிட்டாலும் கூட, மிகச்சிக்கலான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும், கண்காணிப்புக்களை மேற்கொள்வதற்கான வாய்ப்பை வழங்குகிறது. ஏற்கனவே குறிப்பிட்டது போன்று இந்தியா கடல்சார் பாதுகாப்பை தென்னாபிரிக்கா அல்லது வளைகுடா நாடுகளுக்கு விரிவுபடுத்துவதன் மூலம் இவ்வாறான நலன்களை அடைந்து கொள்ள முடியும்.

ஆயுதக் கப்பல்கள் உள்ளடங்கலாக கடற் கண்காணிப்பு மற்றும் சட்ட அமுலாக்கம் போன்றவற்றை நோக்காகக் கொண்டு சீனாவானது கடந்த வாரம் சீனக் கரையோரப் பாதுகாப்புப் பணியை நவீனமயப்படுத்தியது. ஜப்பான், பிலிப்பீன்ஸ், வியட்நாம் போன்றவற்றுடன் சீனா முரண்பாட்டைக் கொண்டுள்ள போதிலும் தென்சீனக் கடலில் தனது ஆதிக்கத்தை மேலும் வலுப்படுத்துவதாகவே சீனாவின் இந்த நகர்வு காணப்படுகிறது. தொடரும் இந்திய சீனப் போட்டியில் ஜப்பான் மற்றும் பாகிஸ்தான் என்பன முதன்மைப் பங்களிப்பை வழங்கும்.

எடுத்துக்காட்டாக, இலங்கை மற்றும் இந்தியா இடையிலான குழப்பங்கள் அதிகரித்தால், தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தியாவின் முத்தரப்பு கூட்டு உடன்பாடானது பரந்தளவில் அரசியல் அழுத்தத்திற்கு உட்படுவதுடன், இதனை நடைமுறைப்படுத்துவதில் பெரும் சவால்களைச் சந்திக்க வேண்டியேற்படும். இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் கடற்கொள்ளை போன்ற பல்வேறு விடயங்களில் முத்தரப்பு உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. இதனால் இதனை மிகப் பொருத்தமான வகையில் நடைமுறைப்படுத்துவதுடன், விரிவுபடுத்திக் கொள்வது உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

பிராந்திய ஒற்றுமை மற்றும் பிராந்தியக் குழப்பங்கள் குறைவடைவதன் மூலம் இந்து சமுத்தர பிராந்தியத்தில் சீனா தனது பொருளாதார முதலீடுகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் குறைவடையும் என இந்தியா சவால் விடுத்துள்ளது. சீனாவானது இப்பிராந்திய நாடுகளில் உள்ள துறைமுகங்களைத் தான் தனியாக கட்டுப்படுத்த முடியும் என நம்புகிறது. இது ஒரு நிலையற்ற திட்டமாக காணப்படுகிறது. சீனாவின் உள்நாட்டில் எழுந்துள்ள குழப்பங்கள், கடன் ஆபத்துக்கள் போன்றவற்றின் மத்தியில் தற்போது சீனாவின் பொருளாதாரமானது சற்று வீழ்ச்சியடைந்துள்ளது. முன்னர் இரட்டை இலக்கத்தில் அதிகரித்திருந்த சீனாவின் பொருளாதாரமானது தற்போது 7சதவீதமாக உள்ளது. சீனாவினதும் இதன் வெளிநாட்டு பங்காளி நாடுகளினதும் அரசியல் மற்றும் சமூக ரீதியாக அடிக்கடி எழுப்பும் குழப்பங்களால் இந்து சமுத்திரப் பிராந்தியம் உட்பட கடல்சார் பாதுகாப்புக்கள் மேலும் சீனாவுக்கு சவாலை ஏற்படுத்தும் எனக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், கடல் பாதுகாப்பை பகிர்ந்து கொள்வதற்கான ஓர் அறிமுகமாக முத்தரப்பு உடன்பாடு நோக்கப்படும் அதேவேளையில், இந்தியா இந்த விடயத்தில் தனது அதிகாரத்தை அதிகம் செலுத்த வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது. இந்தியாவானது இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் நீண்ட காலமாக நிலவும் பிரச்சினைகளைக் கருத்திற் கொண்டு இதன் பாதுபாப்பை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

இப்பிராந்தியத்தில் சீனாவானது தனது வர்த்தக சார் செல்வாக்கை விரிவுபடுத்தும் அதேவேளையில், அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு விவகாரங்களில் போட்டி ஏற்பட்டுள்ளது. இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகள் சீனாவின் அபிவிருத்தி சார் உதவிகளுக்குள் உள்ளீர்க்கப்பட்டுள்ளது போல் உடனடியாகத் தெரிந்தாலும் கூட, நீண்ட கால அடிப்படையில் இப்பிராந்தியத்தில் தொடர்பாடலை நிலைப்படுத்தி இந்தியாவானது மிகப் பொருத்தமான, வினைத்திறனுள்ள திட்டத்தை வரைந்து செயற்பட வேண்டியது அவசியமாகும்.★

(நன்றி: புதினப்பலகை)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தனியார் பஸ்களுக்கு வருகிறது புதிய நடைமுறை

கொழும்பு,ஓக.4

யாழ்.- கொழும்பு மார்க் கத்தில் பயணங்களை மேற்கொள்ளும் தனியார் பஸ்கள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து மாத்திரமே பயணத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று அந்த ஆணைக் குழுவின் தலைவர் ரொஷான் குணவர்தன வலியுறுத்தியுள்ளார்.

புதிய பஸ் சேவைக் கட்டமைப்பில் பஸ் உரிமையாளர்களின் விருப்புகளுக்கு ஏற்றவாறு அவர்கள் விரும்பும் இடங்களிலிருந்து பய ணங்களை ஆரம்பிப்ப தற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. ஆசன ஒதுக்கீடுகளின் போது ஏற்படும் முறைகேடுகளை நிவர்த்தி செய்தல் மற்றும் பஸ் சேவையை முறையாக ஒழுங்குபடுத்தவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது- என்று அவர் கூறினார். (ச-22)

# கைபேசியில் 'ஆபாசம்' வைத்திருந்த நபருக்கு

## ரூ. 50 ஆயிரம் தண்டம்

வடமராட்சி ஓக. 4

கையடக்கத் தொலைபேசியில் ஆபாசப்படம் பதிவு செய்து வைத்திருந்த இளைஞர் ஒருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் 50 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டுள்ளது.

பருத்தித்துறை பொலிஸார் இரவு வேளை ரோந்து சென்ற வேளை அல்வாய் வடக்குப் பகுதியில் இளைஞர் ஒருவரின் கைத்தொலைபேசியை பரிசீலனை செய்த போது அதில் ஆபாசப்படம் பதிவு செய்யப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து அந்த இளைஞர் கைதுசெய்யப்பட்டு அவருக்கு எதிராகப் பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இளைஞர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். ஆபாசப்படம் வைத்திருந்த குற்றத்துக்காக 50 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்ட நீதிபதி, அபராதம் செலுத்தத் தவறின் ஒரு வருட சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (ஒ-8)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



கதிர்காமத்தம்பி சண்முகராசா

தோற்றம் 1953.11.20 மறைவு 2010.08.08

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சிவபாக்கியம் (மனைவி),
(30066)(2.3.6) பிள்ளைகள்: உஷாந்தினி, றேகன்.
5ஆம் வட்டாரம், அனலைதீவு. பேரன்: இந்துஜன்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 08.12.1939
உதிர்வு 16.07.2012
திதி:- 04.08.2013

## அமரர் பூதப்பிள்ளை சின்னத்துரை

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)
(கேசன் – உரும்பிராய் வடக்கு)

அப்பா....
அன்பால் எம்மை அரவணைத்து
அழகாய் எம்மை வழிநடத்தி
பண்பும் பணிவும் பயில வைத்து
தரணியிலே எம்மைத் தவழவிட்டீர்களே.... அப்பா
உங்கள் பிரிவால் தினமும் நாங்கள் பரிதவிக்கின்றோம்
ஓராண்டு கடந்துவிட்டது என்பதை நம்பமுடியவில்லையே.... அப்பா
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் ஆறாது அப்பா உங்கள் பிரிவு.

இன்று (04.08.2013) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியிலும் அதன்பின் இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கேசன், உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய். (30142)(2.6.3) - குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 19*10*1953
மறைவு 04*08*2011

## திருமதி சறோஜினிதேவி தர்மலிங்கம்

ஆண்டுகள்இரண்டு சென்றாலும்
அகலாது உங்கள் நினைவுகள்
நீங்காது எம் பாசம் ஆறாது எம் துயரம்
என்றும் உங்கள் நினைவுடன்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

கரவெட்டி மேற்கு,
கரவெட்டி. குடும்பத்தினர்.

## ஈர விழிகளுடன் உள்ளங்களின் நினைவலைகள்

5 ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 08 - 04 - 1929
உதிர்வு 12 - 07 - 2008

24 ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 26 - 07 - 1936
உதிர்வு 30 - 07 - 1989

அமரர் சிவக்கொழுந்து மாசிலாமணி

அன்பு செய்தீர்! அரவணைத்தீர்
இன்பமாய் நாம் வாழ நீர் உழைத்தீர்!
கல்வி தந்தீர்! செல்வம் தந்தீர்!
கடின உழைப்பிற்கு வழி சொன்னீர்!
ஐந்து ஆண்டுகள் சென்றாலும்
மறக்குமா உங்கள் முகம்.

திருமதி பாக்கியமலர் மாசிலாமணி

அன்பின் அணிகலனாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
அமைதியின் உறைவிடமாய்
ஆண்டுகள் இருபத்துநான்கு ஆனாலும்
என்றும் உம் திருமுகத்தை
எம் நினைவு மறக்காது.

மாசிலாமணி ஆபரணமாளிகை,
96/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சென்ற இடங்கள் ...
சீர்பெறவே இறைஞ்சிடுவோம் - சுதர்சன் (சுதன் - மகன்)

(30152)(2,6,3)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்
சந்திரசேகரம் சூரியகுமார்

கடந்த 01.07.2013 அன்று இறைபத மடைந்த சந்திரசேகரம் சூரியகுமார் அவர்களின் அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (04.08. 2013) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து, அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பங்களா வீதி,
மல்லாகம். குடும்பத்தினர்.
T.P: 021 224 2171 (30188)(10.6.3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மன்னார் தமிழ்ச் சங்கம் நடத்திய நிகழ்வின்போது முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தின் குழந்தைக் கலைஞர்கள் வழங்கிய 'யார் குழந்தை' என்ற நாட்டுக் கூத்து நாடகம் இடம்பெற்றது. (க-12)



வவுனியாவில் இடம்பெற்ற சர்வதேச கூட்டுறவாளர் தின நிகழ்வுக்கு சமுகமளித்தவர்களில் ஒரு பகுதியினர். (க-402)



வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட கலை கலாசார பெருவிழாவின் இறுதிநாள் நிகழ்வில் நாடகங்களை திறம்பட நெறியாள்கை செய்து மேடையேற்றியமைக்காக தைரியநாதன் குடும்பத்தினரை வவுனியா வடக்கு பிரதேச செயலரும், உதவிச் செயலரும் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். (ஒ-422)



கிளிநொச்சி நகரில் ரயில் பாதை அமைக்கும் வேலைகள் துரிதமாக நடந்து வருகின்றன. (ஒ-18)



கிளிநொச்சியில் இடம்பெற்ற சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் அமைக்கப்பட்டிருந்த மரக்கறி வகைகளுக்கான பிரிவு. (க-6)




தரம் -5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த கிளிநொச்சிப் பாடசாலை மாணவர்களுக்கு தேசிய சேமிப்பு வங்கியின் கிளிநொச்சிக் கிளையினர் கௌரவம் வழங்கி பரிசில்கள் வழங்கியபோது... (க-6)



பச்சிலைப்பள்ளி இயக்கச்சிப் பகுதியில் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அமைத்து வரும் குழாய்க்கிணறு. (ஒ-18)



தட்டுவன்கொட்டிக் கிராமத்தில் தமது தேவைக்கு குடிதண்ணீரைச் சேமித்துக் கொண்டிருக்கும் பெண் ஒருவர். (க-6)



கிளிநொச்சியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் மாவட்ட சமூக சேவைகள் திணைக்களத்துக்குரிய கட்டடம். (க-6)



அக்கராயனுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்கு குழாய்கள் பொருத்தும் பணிக்காக குழிகள் அமைக்கும் பணிகள் முழுமூச்சாக நடந்து வருவதைக் காணலாம். (ஒ-18)



முன்னாள் கிளிநொச்சி அரச அதிபர் க.பொன்னம்பலத்தின் நினைவு நாள் நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெற்றபோது கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும், மேலதிக அரச அதிபர் செ. ஸ்ரீநிவாசன் விழா நாயகரின் திருவுருவப்படத்தை திரை நீக்கம் செய்த பின்னர் மாலை சூட்டுவதையும் காணமுடிகின்றது. (க-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



24 வருடங்கள் ஒரே பாடசாலையில் சேவையாற்றிய உப அதிபர் நல்லையா நகுலநாதனின் சேவை நயப்பு விழா கடந்த முதலாம் திகதி யாழ். நாவாந்துறை றோ.க. வித்தியாலயத்தில் அதிபர் எப்.எக்ஸ் அன்ரன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் விழா நாயகன் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். (ஓ-14-21)



யாழ்.வரணிப் பிரதேச வைத்தியசாலையில் இடம்பெற்ற வரணிப் பிரதேச தாய்மார் கழகங்களின் சுகாதாரம் மற்றும் போஷாக்கு விழிப்புணர்வு கண்காட்சியை வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி, வைத்தியர் வ.ஆறுமுகம் நாடா வெட்டி திறந்து வைப்பதையும் அருகில் சாவகச்சேரி பிரதேச சபைச் செயலர் செல்வி தி.தர்ஷினி மற்றும் தாதியர், தாய்மார்கள் நிற்கின்றனர். (எ-122)




யாழ். சரவணை கிழக்கு பள்ளம்புலம், சோளாவத்தை ஒன்றியத்தின் அனுசரணையுடன் பள்ளம்புலம் முருகமூர்த்தி சனசமூக நிலையத் தலைவர் தலைமையில் நடைபெற்ற பாடசாலை மாணவர்களுக்கான கல்வி மேம்பாட்டு நிதி உதவி வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வேலணை மத்திய கல்லூரி அதிபர் சி.கிருபாகரன் மாணவி ஒருவருக்கு நிதி உதவி வழங்குவதையும், அருகில் தீவக கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் ப.ஆரூரன், நிலையத் தலைவர் ப.ஞானபண்டிதன் , பிரிவு கிராம உத்தியோகத்தர் ஆகியோர் காணப்படுகின்றனர். (எ)



சென்.ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலயத்தின் தமிழ் தினவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட முன்னாள் பாடசாலை அதிபர்களான அருட்சகோதரிகள் ஜெறோம், செல்வராணி , அதிபர் அருட்சகோதரி ஜீவந்தி ஆகியோர் மண்டபத்துக்கு அழைத்து வரப்படுவதையும் யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் தரம் 5 மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம். (எ)



அகில இலங்கைத் திருமுறை மன்றம் அண்மையில் பூரணத் தினத்தன்று யாழ்ப்பாணம் சத்திரச்சந்தி ஸ்ரீஞானவைரவர் தேவஸ்தானத்தில் நடத்திய திருமுறைப் பெருவிழாவில் தேவஸ்தான பரிபாலன சபையினரால் கலாபூஷணம் சிற்றம்பலம் சிவனந்த ராசா நாகலிங்கம், கமலநாதன் ஆகியோர் 'திருமுறை இசைவல்லார்' விருது வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதைக் காணலாம். (எ)



கொடிகாமம் பிரதேச ஆயுள்வேத வைத்தியசாலையின் புதிய கட்டடவேலைகள் கட்டி முடிக்கப்பட்ட நிலையில் அதன் தோற்றத்தை படத்தில் காணலாம். (ஒ-122)



சர்வதேச விதவைகள் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங் கும் கூட்டுறவு சமாசம் நூறுக்கும் மேற்பட்ட பெண் தலைமைத்துவத்தின ருக்கு விதவைகளுக்கு பரிசில்களை வழங்கியது. சமாச தலைவர் எஸ். இலகு நாதன் பெண்மணி ஒருவருக்கு பரிசில்கள் வழங்குகிறார். அருகில் மகளிர் குழு தலைவி ஜெபமணி ஜோசப் காணப்படுகிறார். (ஓ-17)



வரணி ஆசிரிய பயிற்சி நிலையத்தில் இடம்பெற்ற அடையாள அட்டை பெற்றுக் கொடுக்கும் நடமாடும் சேவையின் போது தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் பொது மக்களினால் வழங்கப்பட்ட ஆவணங்களை பரிசீலிப்பதையும் அவருடன் இணைந்திருந்து பணியாற்றும் உத்தியோகத்தர்களையும் காணலாம். (ஓ-122)



யாழ்.சரவணை கிழக்கில் கரித்தாஸ், கியூடெக் நிறுவனத்தால் கணவனை இழந்த பா.கிருபா [illegible] உத்தியோகத்தர் [illegible] தாங்கி வழங்குகிறார். அருகில் பிரிவு கிராம உத்தியோகத்தர் நிற்கிறார். (எ)



யாழ்.அத்தியடி கிராம அலுவலராகக் கடமையாற்றிய திருமதி றசிகலா விஜயரட்ணம், சமுர்த்தி உத்தியோகத்தர் செல்வி சி.டெய்சிராணி ஆகியோரின் சேவையைப் பாராட்டி அத்தியடி மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம் நடத்திய விழாவில் இருவரும் கௌரவிக்கப்படுகின்றனர். (எ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?


**மேடம்:** நீண்ட நாள் திட்டமிட்ட பணியை எளிதாக நிறைவேற்றுவீர்கள். நண்பரின் உதவி கிடைக்கும். அதிக பண வரவில் குடும்பத் தேவையை நிறைவேற்றுவீர்கள். மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்துவர்.


**இடபம்:** வேலைப்பளு அதிகரிப்பால் சஞ்சலம் ஏற்படலாம். பண வரவை விட செலவு அதிகரிக்கும். அறிமுகம் இல்லாதவருக்கு உதவுவதில் நிதான நடைமுறையைப் பின்பற்றவும்.


**மிதுனம்:** மனதில் உற்சாகம் அதிகரிக்கும். வெற்றி இலக்கை நோக்கி நடைபோடுவீர்கள். பணவரவு கூடுதல் அளவில் கிடைக்கும்.


**கடகம்:** பிறரது ஏளனப் பேச்சை எண்ணி வருந்த வேண்டாம். அரசின் சட்டதிட்டத்தை கூடுதலாக மதித்து செயற்படவேண்டும். ஓய்வு நேரத்தில் இசைப்பாடலை ரசிப்பதால் மனம் இலகுவாகும்.


**சிங்கம்:** நற்குணம் உள்ள புதியவரின் நட்புக் கிடைக்கும். ஆன்மிக கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வீர்கள். ஆதாய பணவரவு கிடைக்கும்.


**கன்னி:** மன உறுதியுடன் புதிய பணி ஒன்றில் ஈடுபடுவீர்கள். எதிர்ப்பு விலகி அனுகூல நிலை உருவாகும். தொழிலில் உற்பத்தி, விற்பனை இலக்கு நிறைவேறும். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

**நாளை**

ஆடி-20 திங்கட்கிழமை 05.08.2013
திதி: சதுர்த்தசி பி.இ. 02.23 வரை
நட்சத்திரம்: புநர்பூசம் மா. 06.46 வரை
சுபநேரம்: 12.04 - 01.34 வரை
இராகுகாலம்: 07.34 - 09.04 வரை


**துலாம்:** மனதில் இனம் புரியாத வருத்தம் ஏற்படலாம். தொழில் இலக்கு கூடுதல் கால அவகாசத்தில் நிறைவேறும். அவசியமற்ற பணக்கடன் பெற வேண்டாம்.


**விருச்சிகம்:** உறவினர் ஒருவர் எதிர்பார்ப்புடன் நடந்து கொள்வார். உங்களின் இயலாத சூழ்நிலையை இதமாகச் சொல்வது நல்லது. தொழில் வளர்ச்சி பெற கிடைத்த வாய்ப்பை தவறாமல் பயன்படுத்துவீர்கள்.


**தனுசு:** மனதில் பலநாள் இருந்த குழப்பம் புதிய நிகழ்வு ஒன்றால் தெளிவாகும். தொழிலிடத்தில் ஆரவாரம் தவிர்த்து பணிபுரிவீர்கள். சராசரி பண வரவுடன் நிலுவைப்பணமும் கிடைக்கும்.


**மகரம்:** நிதானம் சமயோசித குணத்துடன் செயற்புரிவீர்கள். உழைப்புக்கான நற்பலன் அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு எதிர்ப்பாளரின் தொல்லை குறைந்து, பொறுப்பான பதவி பெற அனுகூலம் உண்டு.


**கும்பம்:** செயல்களில் கவனச்சிதறல் உருவாகி, இடையூறு தரலாம். சக தொழில், பணி சார்ந்தவரிடம் சச்சரவு வராத அளவில் பேசுவது அவசியமாகும்.


**மீனம்:** திட்டமிட்ட பணி நிறைவேற கூடுதல் முயற்சி, உழைப்பு தேவைப்படும். நம்பகத்தன்மை இல்லாதவரிடம் முக்கியமான விடயத்தைச் சொல்ல வேண்டாம். அளவான பணவரவு கிடைக்கும். போக்குவரத்தில் கவனத்தைக் கடைப்பிடியுங்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | | | | | 8 | 7 | 2 |
| 5 | 2 | | | 1 | 6 | | | 4 |
| | | | 2 | | 4 | | | |
| | 9 | | | | 8 | 5 | | |
| | 8 | | 3 | 4 | 5 | | 6 | |
| | | 5 | 7 | | | | 8 | |
| | | | 6 | | 7 | | | |
| 2 | | | 9 | 8 | | | 5 | 1 |
| 9 | 7 | 8 | | | | | 2 | 6 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 6 | 1 | 2 | 5 | 9 | 3 | 4 | 7 |
| 4 | 3 | 2 | 7 | 6 | 8 | 1 | 9 | 5 |
| 7 | 9 | 5 | 1 | 3 | 4 | 8 | 6 | 2 |
| 6 | 2 | 4 | 5 | 7 | 3 | 9 | 1 | 8 |
| 3 | 1 | 9 | 8 | 2 | 6 | 5 | 7 | 4 |
| 5 | 7 | 8 | 9 | 4 | 1 | 2 | 3 | 6 |
| 2 | 4 | 7 | 3 | 1 | 5 | 6 | 8 | 9 |
| 9 | 5 | 3 | 6 | 8 | 7 | 4 | 2 | 1 |
| 1 | 8 | 6 | 4 | 9 | 2 | 7 | 5 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


**VACANCIES**

**- IT Lecturer**
**(BSc or equvalant qualification)**
**- Business Developer**
**(Good spoken English, young energetic individual with pleasant outgoing personality and computer knowledge of internet and e-mail)**

Interested Candidates should send their resume before 15th of August 2013 at (jaffna@idmcc3.lk) or below mentioned address. (சி/10728) (3.6)

**Contact no:**
**021 222 9901**
**077 5632056**

IDM **Nations Campus**
**Jaffna Branch**
Managed by Aharam Solution (Pvt) Ltd
#216, Navalar Road, Jaffna

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பம் 12.12.1974 அனுச நட்சத்திரம் 4ஆம் பாதம், கிரகபாவம் 29½ , கனடாவில் தொழில்புரியும் மணமகனுக்கு தகுந்த குணமான படித்த அழகிய மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கிறார்கள். பொருத்தமானோர் குறிப்புடன் தொடர்புகொள்ளவும்.

**பொ.பிரகலாதன்**
C/o கதிர்காமநாதன், கைதடி வடக்கு, கைதடி.

**FIRE EXTINGUISHER**
**தீ அணைக்கும் கருவிகள்**

யாழ்.நகரில் தீ அணைக்கும் கருவிகள் விற்பனைக்குண்டு


வியாபாரத் தாபனங்கள், வாகனங்கள், காரியாலயங்கள், வீடுகளுக்கும் தேவையான சகல விதமான கருவிகளும் எம்மிடம் விற்பனைக்குள்ளது.

(30159)(3.5.6)

**YARL FIRE PROTECTORS**
146,கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 146, KANNATHIDDY ROAD JAFFNA.
T.P.: 021 221 9905

**AAT வகுப்புக்கள் ஆரம்பம்**

வவுனியாவில் AAT,I,II,III புதிய பிரிவுகள் ஆரம்பம். டிசெம்பர் மாத பரீட்சைக்கானது. விண்ணப்ப முடிவு திகதி 07.08.2013. ஆரம்பம் 10.08.2013. Sun British College
தொடர்பு: 077 971 3221, 024 222 6649 (35212)(3.6.11)

**லொறி விற்பனைக்கு**

ASOKE Ley land 1612, GOLD Commode, LNXXXX. கென்டெய்னர் பெட்டி பொருத்தப்பட்ட புத்தம் புதிய லொறி உடன் விற்பனைக்குண்டு.7000 km ஓடியது.
(35214) (3.6.11) தொடர்பு: 071 845 2548

**தேவை**

தனியார் சாரதிப் பயிற்சிப் பாடசாலைக்கு பெண் அலுவலர் தேவை. சிங்கள பேச்சாற்றலும், ஆங்கில எழுத்தாற்றலும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
T.P: 077 703 3550 (30060) (3.6.11)

**காணி விற்பனைக்கு**

தச்சன் காட்டுச் சந்தியில் இருந்து (கீரிமலை) அம்பனைச் சந்திக்கும் செல்லும் பிரதான வீதியில் 100m தூரத்தில் 12 பரப்புக் காணி (தறணை) குழாய்க் கிணறுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 021 321 3579 (30069) (3.6.11)

**வீடு விற்பனைக்கு**

பொஸ்கோ பாடசாலைக்கு முன்பாக 1½ பரப்புக் காணியுடன் அதி நவீன வசதியுடன் புதிதாகக் கட்டப்பட்ட 6 அறைகள், 2 Hall, Attach bath room, Kitchen உடன் வீடு முழுவதுமாக Tiles பதிக்கப்பட்ட 04 வாகன தரிப்பிட வசதியுடன் அமைந்த மேல்மாடி வீடு விற்பனைக்குண்டு. நல்லூர் முருகன் கோயில் அருகில்.
(கச்சேரி, பிரதான வைத்தியசாலை ஆகியன அருகில் அமையப் பெற்ற வசதியான வீடு)
தொடர்பு: 077 0289212 (30095)(3.6.11)

**FACTORY விற்பனைக்கு**

மாதமொன்றுக்கு 500,000/= இலாபம் தரக்கூடிய யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பிரபல்யமான கம்பனி ஒன்று கட்டடத்துடன் விற்பனைக்குண்டு.
இதில் உற்பத்தி செய்யப்படும் யோகட்வகைகள், குளிர்பானங்கள், ஐஸ்கட்டிகள், ஐஸ்பழம், ஐஸ்கிறீம், ஜெலிவகைகள் போன்ற வகைகளும் சகல வசதிகளும் கொண்ட இந்த பகுதி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 367 0822, 021 568 7882

**IELTS** A1 B1 B2 Knowledge Universe Sri Lanka
Spoken English -Fast Track Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
தனிப்பட்ட முறையில்.உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய.அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே நிறுவனம். (சி/11083) (3.6)
K.U Education,No 75,Temple Road,Jaffna. IELTS Centre

**FitsAir**
friend in the skies...


உங்களுக்கு மிகவும் அண்மையில் நாங்கள்


உங்கள் பயணச்சீட்டு பதிவு அலுவலகம் தற்போது யாழ் நகரின் மையப்பகுதியில்

**CHANGE OF TICKETING OFFICE**
To serve tou better... we are moving to a more convinient locations
(சி/10572) (3.6)
Fits Aviation Ticketing Office
No, 272/1, Stanly Road, Jaffna
Email ID- fitsair@metrotravels.lk
Tel- 021 221 7199 , 0777541112


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி விக்கினேஸ்வரி தாமோதரம்பிள்ளை
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி **வல்லிபுரம் தங்கமுத்து**
அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்,
அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!
*அதிபர்,ஆசிரியர்கள், மாணவர்கள்*
**யா/மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்,**
**கொடிகாமம்.** (30211)(3.5.6)

## பருத்தித்துறையில் மோ.சைக்கிள் திருட்டு

வடமராட்சி, ஓக. 4
பருத்தித்துறை மீன் சந்தைக்கு முன்பாக உள்ள முதலாம் குறுக்குத்தெருவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 49 சிசி ரக மோட்டார் சைக்கிள் ஒன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை திருட்டுப்போயுள்ளது.
தும்பளைப் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிளே இவ்வாறு திருட்டுப்போனதாகும்.

இச் சம்பவம் குறித்து மோட்டார் சைக்கிளைப் பறிகொடுத்தவர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ஒ-8)

## மரண அறிவித்தல்கள்

### துரையப்பா குலராஜசிங்கம் (குலம்)



சிவன்கோயிலடி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் உசன் மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா குலராஜசிங்கம் 02.08.2013 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் (ராணி) அன்புக் கணவரும், மைதிலி, சிவனேஸ்வரன் (நேசன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுப்பிரமணியம் சுதாஸ் (வேல் பாமசி உரிமையாளர் - கொடிகாமம்) அவர்களின் அன்பு மாமனும், செல்வராஜா (லண்டன்), நவநீதசிங்கம் (கனடா), தனபாலசிங்கம் (கனடா), மதனறாஜா, காலஞ்சென்ற அன்னபூரணி மற்றும் சிவயோக செல்வம் ராசபூபதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுபீட்சன், அஸ்னா, அஷானா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஈச்சங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **நேசன்** (மகன்),
**சுதாஸ்** (மருமகன்).

(30212) (45.6.3)

## சைக்கிளும் களவு

வடமராட்சி, ஓக.4
நெல்லியடி பஸ் நிலையத்தில் ஒதுக்குப்புறமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் ஒன்று நேற்று சனிக் கிழமை பகல் திருட்டுப்போயுள்ளது.
பஸ் நிலையத்தின் தெற்குப் புறத்தில் உள்ள கடை ஒன்றுக்கு அருகில் சைக்கிளை நிறுத்தி வைத்துவிட்டு வேலைகளை முடித்துக்கொண்டு மீளவும் எடுக்க முன்வந்தவர் சைக்கிளைக் காணாது திகைத்தார்.
கரவெட்டி வாசி ஒருவரே சைக்கிளைஇழந்தவராவார். (ஒ-8)

### பஸ்ரியாம்பிள்ளை பிலிப்



*(ஓய்வுபெற்ற மீன்பிடிப் பரிசோதகர்,சமாதான நீதிவான்)*

பாஷையூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பஸ்ரியாம்பிள்ளை பிலிப் (01.08.2013) அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பஸ்ரியாம்பிள்ளை- மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், பிலோமினாவின் ஆசைக்கணவரும்,காலஞ்சென்ற இராயப்பு அடிகளாரின் சகோதரரும், பிறைன் அடிகளாரின் மாமனாரும், கோட்வின் (பிரான்ஸ்), இந்திரா, சித்திரா(லண்டன்), சுகுணன் (பிரான்ஸ்), சுமித்திரா (ஆஸ்திரேலியா), சுபத்திரா(ஆசிரியை-புத்தளம்) ஆகியோரின் பாசமிக்க தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.08.2013) திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக் கப்பட்டு, பூதவுடல் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
3ஆம் குறுக்கு வீதி, பாஷையூர். (30203)(3.5.6) தொ.பே.: 021 300 6131

## வலி.மேற்கு பிரதேச சபைக்கான கட்டடம் முடிவுறும் நிலையில்

யாழ்ப்பாணம், ஓக.4
வலி.மேற்கு பிரதேச சபைக்கு பலநோக்கு அபிவிருத்தி கொண்ட இருமாடி நவீன கட்டடப் பணிகள் அடுத்த இரு வாரங்களில் முற்றுப் பெற்றுவிடும்.
உள்ளூராட்சி உட்கட்டமைப்பு மேம்படுத்தல் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட நவீன கட்டடமே விரைவில் பூர்த்தியாகும் நிலையில் உள்ளது.
வடமாகாணத்தில் மேற்படி திட்டத்தின் 14 உட்கட்டுமான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு முன்னிறுத்தப்பட்டுள்ள போதிலும் இத்திட்டமே இறுதியாக பூரணப்படுத்தப்படுகிறது.
ஏற்கனவே 13 திட்டங்கள் முன் னெடுக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளன.
வலி.மேற்கு பிரதேச சபைக் கான நவீன கட்டடத்தொகுதி விரைவில் திறந்து வைக்கப் பட்டதும் இரண்டாவது மாடியில் நிர்வாக அலகும், கீழ் தளத்தில் வருமானத்தை அடிப்படையாகக் கொண்ட கலாச்சார மண்டபமும் இயங்க ஆரம்பிக்கும். (ஒ-41)

### திருமதி மேரியோசேப்பின் அவுறாம்பிள்ளை



சின்னத்தோட்டம், பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் மணல் ஒழுங்கை பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரியோசேப்பின் அவுறாம்பிள்ளை 01.08.2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அவுறாம்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கபிரி யேற்பிள்ளை மற்றும் லூர்து மரியா தம் பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான எமிலியாம் பிள்ளை - செபமாலை தம்பதியரின் அன்பு மருமகளும், அலெக்ஸ் (சுவிஸ்), வினி (ஜேர்மனி), றெக்ஸ் (ஜேர்மனி), காஞ்சனா (பிரான்ஸ்),நிவியா, அனிஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், சிறீபோன் (ஜேர்மனி), சுவேதினி (சுவிஸ்), துரைரட்ணம் (பிரான்ஸ்), டிலுசினி (ஜேர்மனி), ஜதிஸ் (T.O-R.D.A- கிளிநொச்சி), சுஜிதா ஆகி யோரின் அன்பு மாமியும், தங்கப்பொன்னு, பவளம், ஜடா, ராசமணி, தாசன் (லண்டன்), காலஞ்சென்றவர்களான செல்லன், பொன்ராஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து நாளை (05.08.2013) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பருத்தித்துறை புனிததோமையார் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக் கப்பட்டு, தொடர்ந்து பருத்தித்துறை வெளிச்சவீட்டடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**மணல் ஒழுங்கை,**
**பருத்தித்துறை.** (சி/10741) (45.6.3)
**அவுறாம்பிள்ளை**
**(கணவர்)**

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் இராசேந்திரன் (ராசா)



வேலணை மேற்கு, திருவள்ளுவர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் இராசேந்திரன் (02.08.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்(J.P)-தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும்,தில்லைநாயகியின் அன்புக் கணவரும், சதீஸ் (780 இல. தனியார் பஸ் நடத்துநர்), கோகிலா, விஜிதா, வசீகரன், காலஞ்சென்ற தர்ஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மஸ்ரீ, ரதீஸ்தீபன் ஆகியோரின் அன்பு மாமனும், பாலசுப்பிர மணியம், காலஞ்சென்ற தெய்வேந்திரன் மற்றும் பாலேந்திரன் (லண்டன்), தவமலர் (மட்டுவில்), இரஞ்சிதமலர், குலேந்திரன் (ஜேர்மனி), சிவனேந்திரன் (ப.தெ.வ அ.கூ.சங்கம்- வேலணை), முருகேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், அபின்ஷா, லுஜனிகா, வர்ஷாந், வதுசணன் ஆகி யோரின் அன்புப் பேரனும், சோமசேகரத்தின் அன்பு மைத்து னரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப.10 மணிக்கு தாளையடி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**6ஆம் வட்டாரம்,**
**வேலணை மேற்கு.**
**தொ.இல:021 320 5572**

தகவல்:
**குடும்பத்தினர்.**
(30191) (10,6,3)

### யோகேஸ்வரி சபாரட்ணம்



அராலி மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோகேஸ்வரி சபாரட்ணம் நேற்று(03.08.2013) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரட்ணத்தின் அன்பு மனைவியும், சுதாமதி (நூலக உதவி யாளர், வலி.மேற்கு பிரதேச சபை), அருள்மதி (லண்டன்),ஜெயப்பிரகாஷ் (சமுர்த்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், சங்கானை), நிஷாந்தினி ஆகியோரின் அன்புத் தாயும், தேவமனோகரன், உதயகுமார்(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சஞ்சீவன், சந்தோஷ் (லண்டன்), சஞ்சிகா(லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி பூனாவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அராலி மத்தி, வட்டுக்கோட்டை. (30202)(5.3.6) குடும்பத்தினர்.

### திருமதி நாகராசா சீதாலட்சுமி



வேலணை கிழக்கு, 4 ஆம் வட் டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஆனந்தன் வடலி வீதி, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகராசா சீதாலட்சுமி (01.08.2013) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், நாகராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுப்பையா -இளையபிள்ளை தம்பதியரின் மருமகளும், சிங்கராசா (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான பத்மவதனி, கதிர்காமராசா மற்றும் நாகசோதி,சிவராசா (டோகா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சரோஜினி, பேரின்பநாயகம், அசோகவதனி, காலஞ் சென்ற பாலச்சந்திரன் மற்றும் அதிரூபா ஆகியோரின் அன்பு மாமியாரும், தனுஷா, லக்ஷன் (பிரான்ஸ்), பிரசாத், பிரதீப்,சாருஜன், திவாகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற கந்தசாமி, காவேரி ஆகியோரின் அன்புச் சகோ தரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

101/1, ஆனந்தன் வடலி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (30190)(3.6.11)
தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## தர்மலிங்கம் ஸ்ரீஸ்கந்தராசா (ஸ்ரீ)



''தர்மவாசம்'' பலாலி கிழக்கு, பலாலியை பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் ஸ்ரீஸ்கந்தராசா கடந்த (27.07.2013) சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம்-சின்னத்தங்கம் தம்பதியரின் கடைசி மகனும், லலிதாவின் (தேவி) அன்புக் கணவரும், லோஜிதா, விதுஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.08.2013) திங்கட்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞான வைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
T.P:077 8435608, 077 202 1740,
075 037 8021

(30083) (10,18,14)

தகவல்:
சகோதரர்கள்.

# மரண அறிவித்தல்

## திருமதி மயில்வாகனம் நாகம்மா

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், நாராணிகேணி பலகாடு காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மயில்வாகனம் நாகம்மா நேற்று (03.08.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-ராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மதியாபரணம்-சரசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மயில்வாகனத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அன்னலட்சுமி (ராணி) மற்றும் குமாரலிங்கம் (கனடா), பரமேஸ்வரி (சோதி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மஞ்சுளாவின் அன்புத் தாயும், நடராசா பத்மநாதனின் அன்பு மாமியும், சிவப்பிரியா, சிவரூபி ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2013) ஞாயிற்றுக்கிழமை கருங்காலியிலுள்ள அவரின் சகோதரி அரசரட்ணம் பரமேஸ்வரி (சோதி) யின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 9.00 மணியளவில் தகனக்கிரியைக்காக பலகாடு, நீலகிரி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கருங்காலி, காரைநகர். (30218) (10,6)

தகவல்:
குடும்பத்தினர்.

# குளவி தாக்கி இருவர் காயம்



மன்னார், ஓக.4

மன்னார் பேசாலையில் சமுர்த்தி பணம் பெறச் சென்ற தலைமன்னார் பியர் கிராம மக்கள் மீது நேற்று வெள்ளிக்கிழமை காலை குளவி கொட்டியதில் காயமடைந்த இரண்டு சமுர்த்தி பயனாளிகள் பேசாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மன்னார் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி பயனாளிகளுக்கான சமுர்த்தி கொடுப்பனவுகள் தற்போது வழங்கப் படுகின்றன.

இந்த நிலையில் தலைமன்னார் பியர் கிராம மக்கள் தமது மாதாந்த சமுர்த்தி கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள நேற்று முன்தினம் காலை பேசாலை சமுர்த்தி வங்கிக்கு வருகை தந்தனர்.

இதன்போது மக்களுக்கு சமுர்த்தி பணம் வழங்கப்பட் டுக் கொண்டிருந்த போது மது போதையில் அவ்விடத்துக்கு வந்த ஒருவர் மரத்தில் இருந்த குளவிக் கூட்டின் மீது கல்லால் எறிந்துள்ளார். இதன்போது மரத்தில் இருந்த பெரும் குளவிகள் அந்தப் பகுதியில் சமுர்த்தி கொடுப் பனவைப் பெற்றுக்கொள்ள பரவலாகக் காணப்பட்ட மக்களை துரத்தித் துரத்திக் கொட்ட ஆரம்பித்தன.

இதன்போது சமுர்த்தி அதி காரிகள் பயனாளிகள் என அனைவரும் அவ் விடத்தை விட்டு ஓடிச் சென்றனர்.

குளவித் தாக்குதலுக்கு உள் ளான 2 சமுர்த்தி பயனாளி கள் பேசாலை வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டனர். (வ-12)

# மரண அறிவித்தல்கள்

## ஸ்ரீமதி விஜயலட்சுமி அம்மா நடராஜக் குருக்கள்



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் ஆவரங்கால் சிவன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீமதி விஜயலட்சுமி அம்மா நடராஜக் குருக்கள் நேற்றுமுன்தினம் 02.08.2013 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுவாமிநாதக்குருக்கள் -வாலாம்பிகை தம்பதியரின் அன்பு மகளும் சிவஸ்ரீ நடராஜக்குருக்களின் (ஸ்தானிக குரு, ஆவரங்கால் சிவன் கோயில்) அன்பு மனைவியும் நித்தியானந்தி, சியாமளா, யோகானந்தேஸ்வரக் குருக்கள், சுபாஷினி, காயத்திரி ஆகியோரின் அன்புத் தாயும் சுதாகரக்குருக்கள், ஸ்ரீ தரசர்மா, வத்ஸலா, கிருஷ்ணகுமார குருக்கள், ஜனார்த்தனசர்மா ஆகியோரின் அன்பு மாமியும் கபிஸ்ணசர்மா, கரிமேனசர்மா, கேதாரசர்மா, சங்கீர்த்தனசர்மா, சஞ்சுதசர்மா, சதாத்மிகா, சங்கோபிதரசர்மா, ஹரிகோபிதசர்மா, விவிதகோபிதா, கிருஷிகேசசர்மா, ரிஷிவர்ணசர்மா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் காலஞ்சென்ற தியாகராஜசர்மா மற்றும் கோகுலராணி, சரண்னியபுரிஷ்வர குருக்கள், பத்மாவதி, பர்வதபர்த்தினி, முத்துகுமாரசாமி குருக்கள் ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்றவர்களான இராஜேந்திர குருக்கள், சோமாஸ்கந்தசர்மா, கனகசபாபதி சர்மா, இராஜராஜேஸ்வரி, நீலாதாட்சி ஆகியோரின் அன்பு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரிரியைகள் இன்று (04.08.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று ஆவரங்கால் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன்கோயில், ஆவரங்கால்.
0212058034, 0777110971 (37676)

தகவல்: சிவஸ்ரீ வே.நடராஜக்குருக்கள்,
குடும்பத்தினர்.

## கணபதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை

துன்னாலை மத்தி, கோவிற் கடவையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை கடந்த 02.08.2013 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பத்தினிப்பிள்ளையின் கணவரும் வல்லிபுரம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), பாலச்சந்திரன் (ஜேர்மனி), இரதோற்சவன் (மல்லாவி), நாகராசா, குணசேகரம் (ஆசிரியர், வேலாயுதம் மகா வித்தியாலயம், பருத்தித்துறை), உதயகுமாரி, உதயகுமாரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் விமலகுமாரி, நிர்மலாதேவி, புஸ்பநாயகி, ஜெயமதி, நந்தகுமாரி, கணேஸ்வரன், கலைமதி ஆகியோரின் மாமனும் கோபிதரன், நிசாந்தி, நிலானி, நீரஜா, மேனகி, காலஞ்சென்ற கிருசாந்தன் மற்றும் மேகலா, நிசங்கன், கிருசாயினி, ஆதீசன், பபிதா, சிவானுஜன், கபிலன், கோபினா, சருஜனன், ஜதுசன், சபிதா, அஜிதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இறுதிக்கிரியைக்காக வேரொண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துன்னாலை மத்தி,
கரவெட்டி.

(37676)

தகவல்:
குடும்பத்தினர்.

## சுப்பிரமணியம் கருணாகரன்



யாழ். சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகவும், France Dourdanஐ வசிப்படமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கருணாகரன் கடந்த 01-08-2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்து சுப்பிரமணியம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற தம்பியையா-மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், பிரேமாவதியின் (பேபி) அன்புக் கணவரும், நிரூபா, நிரூபன், நிரூஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவபாக்கியம் (கனடா), காலஞ்சென்ற மகேஸ்வரி, சிவனேஸ் வரி (கனடா), கிருபாகரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதர ரும், ரவிராஜ், வெண்ணிலா ஆகியோரின் மாமனாரும், டானியா, கிஷான் ஆகியோரின் பாச மிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05-08-2013) திங்கட்கிழமை மு.ப. 10.30 மணிக்கு Funerarium d'Arpajon Avenue de Verdun 91290 Arpajon என்னும் முகவரியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P: 0033950969759

(சி/10761) (10,16,14)

தகவல்:
குடும்பத்தினர்.

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 22.10.1947 — மறைவு 17.07.2012

## அமரர் முருகேசு கனகரத்தினம்

(ஓய்வுபெற்ற லிகிதர், சிமெந்து தொழிற்சாலை கே.கே.எஸ்)

பண்பின் உறைவிடமாய் பாசத்தின் திருவுருவாய்,
சீரும் சிறப்புடனும் எம்மை வாழவைத்த அன்புத்
தெய்வமே! நீர் எம்மைப் பிரிந்து ஓராண்டு ஓடிவிட்டது.
என்றும் எங்கள் நினைவில் நிலைத்து இருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் நாளை (05.08.2013) திங்கட்கிழமை செல்வசந்நிதியில் நடைபெறும். இதில் உற்றார், உறவினர், நண்பர்கள் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சுமந்திரன் (மகன்)
077 720 6003

உங்கள் பிரிவால் வருந்தும்
குடும்பத்தினர்.
(U.S.A)


# மணமகள் தேவை

இந்து ஆஸ்திரேலியா PRஉடைய 1976ஆம் ஆண்டு சுவாதி 2ஆம் பாதம், 11இல் சூரியன், செவ்வாய் உடைய மணமகனுக்கு 1980ற்குப் பின்பும், சைவ போசனமும் படித்த மணமகளை தாயார் தேடுகிறார்.

தொடர்பு:- 0774029875 -0772775114

# கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா?உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.அழையுங்கள்.

0779086737 GUNAA BEST PC
52,Hospital Road,Jaffna.



# நினைவலைகள்

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி — 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 26.03.1935
மறைவு 15.08.2012

தோற்றம் 16.08.1925
மறைவு 02.12.2009



தர்மறாஜா சிவக்கொழுந்து
திதி: பிரதோஷசம்

சின்னத்தம்பி தர்மறாஜா

ஆல மரத்தினைப் போல் ஆற நிழல் தந்து அன்பு காட்டி
அரவணைத்த எம் அன்னையும் தந்தையும்
வழிகாட்டி ஆளாக்கிய தெய்வங்கள். அவர்களது
ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

புத்தூர் றோட், சுவினை. (30201)(10,6,3)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராஜயோகினி தீதி யாழ். வருகை



யாழ்ப்பாணத்துக்கு வருகை தர இருக்கும் வைத்திய கலாநிதி தீதி நிர்மலா கஜாரியா இந்தியாவின் இராஜஸ்தானில் உள்ள நல்லதோர் உலகக் கலாசாலையின் இயக்குநரும் பிரம்ம குமாரிகள் உலக ஆன்மிகப் பல்கலைக்கழகத்தின் ஆசிய பசுபிக் பிராந்திய இயக்குநருமான இவர் சுமார் 50 வருடங்களுக்கு மேற்பட்ட ஒரு யோகி.

ரக்ஷ பந்தன் விழாவுக்காக வட மாகாண பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையங்களைச் சேர்ந்த மாணவர்கள் அனைவரும் யாழ். தலைமையகத்தில் நாளை 5ஆம் திகதி முதல் 7ஆம் திகதி வரை அதிகாலை முதல் இரவு வரை ஒன்றுகூட உள்ளனர்.

தீதி நாளைமறுதினம் செவ்வாய்க் கிழமை மாலை 7.00 மணிக்கு ஜோதி லிங்க இரதபவனியின் பிரதான அனுசரணையாளர்கள் 30 பேரை விசேடமாகச் சந்திக்கிறார். வழமை போல் தீதி அவர்களோடு இடம்பெறும் பிரமுகர்களின் சந்திப்பு இரதபவனி நிகழ்வுகள் காரணமாக இந்த முறை தவிர்க்கப்பட்டுள்ளது.

நாளை 5ஆம் திகதி காலை வரவேற்பு நிகழ்ச்சி, பிரசாதம், ஆசீர்வாத அட்டை வழங்கல் என்பன இடம்பெறும். அன்று மாலை இரதபவனி சேவையில் ஈடுபடவுள்ள மாணவர்களுக்காகவும் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கும் மாணவர்களுக்காகவும் தீதி அவர்களோடு விசேட வகுப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

செவ்வாய்க்கிழமை காலையில் இராஜயோக தியான அடிப்படைப் பாடநெறியைப் பின்பற்றிய ஏனைய மாணவர்கள் அனைவருக்கும் ரக்ஷ பந்தன் புனித நூல் அணிவிக்கும் விழா இடம்பெறும். (ஒ)

ஆண்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

மலேசியா

மலேசியாவில் உள்ள
பிரபல்யமான நிறுவனத்தில்
GENERAL WORKERS (Cleaners)

மாதாந்த சம்பளம் RM 900
இலங்கைப் பெறுமதிக்கு ரூபா. 37,000

மலேசியாவில் இவை அனைத்தும் இலவசம்
- மெடிக்கல் (Medical) - இலவசம்
- இன்சூரன்ஸ் (Insurance) - இலவசம்
- தங்குமிடவசதி (Accommodation) - இலவசம்
- ஒப்பந்த முடிவில் இலவச விமான டிக்கட் (Air Ticket)
- 3 வருட கால ஒப்பந்தம் (3 Years Contract)

8 மணிநேர வேலை + Over Time
வாரத்தில் 6 நாள்கள் வேலை

அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட கட்டணம்

Labour Licence No. 2598
Asma Enterprise Travels & Tours
111-1/1, Sri Sumanatissa Mawatha, Colombo - 12.
Tel : 011-3091521 Hotline : 077-3179592

## தரம் 5 மாணவருக்கு கருத்தரங்கு

வலி.தென்மேற்குப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கருத்தரங்கில் புலமைச்சுடர் ஆசிரியர்கள், வளவாளர்களாகக் கலந்துகொள்வர். (வ-14)

## மருதங்கேணி, குடத்தனையில் நடமாடும் சேவை

'கபே' நிறுவனத்தின் ஆதரவுடன் தேசிய ஆள்பதிவுத் திணைக்களம் நடத்தும் நடமாடும் சேவை வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமையும், 8ஆம் திகதி வியாழக்கிழமையும் நடைபெறவுள்ளது. புதன்கிழமை குடத்தனை நற்தூது மண்டபத்திலும், வியாழக்கிழமை மருதங்கேணி பிரதேச செயலகத்திலும் இந்தச் சேவைகள் இடம்பெறும். தேசிய அடையாள அட்டை, பதிவாளர் சேவை, சமாதான நீதிவான் சேவை, பொலிஸ் சேவை ஆகிய சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-8)

## கிராம சேவையாளர் இருவர் சித்தி

வடமராட்சி, ஓக.04

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் கிராம சேவையாளர்களுக்கான அதி உயர் தர பதவிக்கான போட்டிப் பரீட்சையில் இருவர் சித்தியடைந்துள்ளனர்.

குடத்தனை வடக்கு, முள்ளியான் ஆகிய பிரிவுகளில் கடமையாற்றும் ந.பாலசுந்தரம், அம்பன், செம்பியன்பற்று தெற்கு பிரிவுகளில் கடமையாற்றும் சி.வித்தியாபதி ஆகிய இரு கிராம சேவையர்களே இந்தப் பரீட்சையில் சித்திய டைந்துள்ளவர்கள் ஆவர். (ஒ-8)

1 ஆவது பிறந்தநாள் அழைப்பு



இன்று (04.08.2013)
ஞாயிற்றுக்கிழமை
பி.ப 4 மணியளவில்
எமது செல்வப் புதல்வன்
கமலேஷ்வரசர்மா
அவர்கள் தனது 1ஆவது பிறந்தநாளை தனது
இல்லத்தில் வெகுவிமர்சையாகக் கொண்டாடுகின்றார்.
அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம்
வருகை தந்து செல்வப்புதல்வனை வாழ்த்தி
விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்.



(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக
ஏற்றுக்கொள்ளவும்)

சீரணி நாகபூஷணி அம்பாள்,
கோயில் வீதி, சண்டிலிப்பாய்.
T.P: 0777111330

சிவஸ்ரீ.
சோமாஸ்கந்தகுருக்கள்,
விஜயலஷ்மி,
துஷ்யந்தசர்மா குடும்பத்தினர்
(30217)(10,14)

பரதநாட்டிய அரங்கேற்றம்



செல்வி
பிருந்தா ரவீந்தினி
யூட் சாந்தராஜ்




காலம்:- இன்று (04.08.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணி
இடம்:- வீரசிங்கம் மண்டபம்

குயிலுவக் கலைஞர்கள்
நட்டுவாங்கம்:- திருமதி சுதர்சினி கரன்சன்
(கலா வித்தகர், நுண்கலைமாணி)
குரலிசை:- இசைமாணி திரு. தவநாதன் றொபேட்
(விரிவுரையாளர் இசைத்துறை இராமநாதன்
நுண்கலைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
மிருதங்கம்:- திரு.சி.துரைராசா (இசைக்கலைமாணி)
வயலின்:- திரு. அ.ஜெயராமன் (இசை ஞானச்சுடர்)
தலைமை:- திரு.யோ.யோன்சன் ராஜ்குமார்
(பிரதி இயக்குநர் திருமறைக்கலாமன்றம்)
பிரதம விருந்தினர்:- ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரன்
(இயக்குநர் நாட்டிய மந்திர், நடனப்பள்ளி)
சிறப்பு விருந்தினர்:- பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா
(முன்னாள் தமிழ்த்துறை தலைவர், யாழ்.பல்கலைக்கழகம்)
கலைஞர்கள், ஆர்வலர்கள், சுற்றத்தார், நண்பர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை இனிதே நாடும்

இல.25/2, (13 B), மூளாய்வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். திரு.திருமதி யூட் சாந்தராஜ் குடும்பத்தினர்.
(10756) (2-6-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி
உத்தியோகத்தரும் நலன்புரி சங்க பொருளாளருமாகிய
ச.ஜெயப்பிரகாஷ்
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி சபாரட்ணம் யோகேஸ்வரி**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலி.மேற்கு பிரதேச செயலகம்
சங்கானை. (c/10757)(3.8.11)

பிரதேச செயலர்,
நலன் புரிசங்க
உறுப்பினர்கள்.

## பதவி வெற்றிடம்

பிறின்ஸ் அக்கடமியின் சட்ட பீடமானது கீழ்க் காணப்படும் பதவிக்கான விண்ணப்பங்களைக் கோருகின்றது. இந்த விளம்பரம் பிரசுரமான திகதியில் இருந்து ஏழு (07) நாள்களுக்குள் பொருத்தமானவர்களை விண்ணப்பிக்குமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

வருகை விரிவுரையாளர் (பகுதி நேரம்-ஆங்கிலம்)
தகைமை: எல்.எல்.பி / சட்டத்தரணி
அனுபவம்: ஒரு வருடத்திற்கு மேல்
இடம்: யாழ்ப்பாண வளாகம்

தயவு செய்து பூரணப்படுத்திய சுயவிவரக் கோவையை கீழ்வரும் முகவரிக்கு / மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.

PCC
PRINCE CITY CAMPUS
(c/10810)(3.8.11)

**Human Resources Manager**
**Prince City Campus,**
**No.31 1/1, 42nd Lane ,**
**Colombo-06**
or
**hrm.prince@gmail.com**

## உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## வாகனம் விற்பனைக்கு உண்டு

227 -XXXX எனும் இலக்கம் கொண்ட மிற்சுபிட்சி கன்டர் கூலர் மொடல் பெட்டி கொண்ட வாகனம் விற்னைக்கு உண்டு.



மருதனார்மடம்
அக்கடமி முன்பாக
கடைத் தொகுதிகளும்
வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0779234583

## வெற்றிடம்

மலேசிய நாட்டு தயாரிப்பான மோட்டார் சைக்கிள்களின் யாழ் மாவட்ட விநியோக நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. காட்சியறை முகாமையளர் - 02
2. சந்தைப்படுத்தல் அதிகாரி - 02
3. காட்சியறை உதவியாளர் - 02

அனுபவம் தகுதிக்கேற்ற சம்பளம், தரகு வழங்கப்படும்.
குறைந்தபட்சம் க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம் தேவையான பயிற்சி வழங்கப்படும்.
ஆங்கிலம், சிங்களம் பேச கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**யாழ் மாவட்டத்தில் காட்சியறை விற்பனை கூட்டு முயற்றியாளர்களும் தேவை**

**SHEVEN HILLS**
754, Hospital Street
Jaffna. (C/10820)
shevenhillsauto@gmail.com
**0777 307 494**

## தேவை

ஓகன், வயலின், நடனம், சங்கீதம் ஆகிய வகுப்புக்கள் நடத்துவதற்கு வீடு வாடகைக்குத் தேவை. பகுதியாக இருப்பினும் பரவாயில்லை. யாழ். நகர் அல்லது பல்கலைக் கழகத்தை அண்மித்த பகுதிகளில் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0779420902

## வீடு விற்பனைக்கு உண்டு

19, பிரப்பன் குளம் வீதி, யாழ்ப்பாணத்தில் வீட்டுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 021 222 7625
ஞாயிற்றுக்கிழமை மட்டும் -0212221617

## விற்பனைக்கு

புதிய யப்பான் தயாரிப்பான Cannon 550D Model, Sony video camera மற்றும் Laptop Samsung விற்பனைக்கு உண்டு.
(f/s10762)(10,16,14) தொடர்பு: 077 4125104

## விற்பனைக்கு

KORG
PRO-X
TRINITY MUSIC
WORKSTATIONDRS



தொடர்புகொள்ளவேண்டிய முகவரி :
S. திவாகர்
சூராவத்தை சுன்னாகம்
077 6283902
(30226)(10,16,14)

## வீடுகள் வாடகைக்கு

வைத்தியசாலை, கம்பனி,விருந்தினர் விடுதி நடத்தக்கூடிய, போதிய வாகனத் தரிப்பிடமும், இணைந்த குளியலறைகளும் கொண்ட பல்கலைக் கழக சூழலில் விசாலமான மாடி வீடு, கொக்குவில் பொற்பதி வீதியிலும், திருநெல்வேலியிலும் வாடகைக்கு உண்டு
தொடர்பு: **077 746 6589** (30224)(10,16,14)

## கார் விற்பனைக்கு

TOYOTA PREMIYO HG-xxxx
தொடரிலக்கமுடைய கார் உடனடியாக விற்பனைக்குண்டு
தொடர்பு: 077 840 3797 (f/10676)(10,16,14)

## வேலையாள் தேவை

பெண்களுக்குரிய ஆடைகள் தைப்பதற்கான வேலையாள்கள் தேவை (பெண்கள் மட்டும்)
தொடர்புகளுக்கு:
077 452 9465, 075 727 3711
**K.K.S. Road, Thellipalai.** (30225)(10,16,14)

## மணல் மண் விற்பனைக்குண்டு

பூச்சு மற்றும் கட்டட வேலைகள் அனைத்துக்கும் உகந்தது.

| | |
|---|---|
| 01 டிப்பர் | 15000/= |
| 01 டிறக்ரர் | 5000/= |
| 01 லான்மாஸ்ரர் | 1750/= |

தொடர்புகளுக்கு: 077 778 2192
411, கண்டி வீதி, அரியாலை. (f/10759)(10,16,14)

## வேலை ஆள்கள் தேவை

யாழ். நகரில் உள்ள சைவ உணவகத்துக்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.

* களஞ்சிய காப்பாளர்
* உணவு பரிமாறுபவர்
* சுத்திகரிப்பாளர்
* சமையல் உதவியாளர்
* சிட்டை எழுதுநர்

(30223)(10,16,14)
தொடர்பு : **077 655 1343**

## Computer Typing

English & Tamil Computer Typing செய்து கொடுக்கப்படும்.
0771 479 485 (30230)(10,16,14)

## A/L இணைந்த கணித வகுப்புகள்

குழுக்களாகவும், தனியாகவும் கற்பிக்கப் படும்.
T.P: 077 0869315
(30227)(10,16,14) (யாழ் இந்துக் கல்லூரிக்கு அருகில்)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

ஜேர்மன் செப்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:077 618 4743
(30215)(3.8.11)

## வீடு வாடகைக்குண்டு

யாழ்.நகர் மத்தியிலுள்ள பாங்சால் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 717 9778
(30218)(3.8.11)

## காணி விற்பனைக்கு

A9 வீதியில் இருந்து 800m தூரத்தில் பருத்தித்துறை வீதி துணைவியில் சிறிய வீடு, நல்ல நீர் கொண்ட கிணற்றுடன் கூடிய 50 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பெறுமதி 50 இலட்சம்.
தொடர்பு: 077 187 7071, 071 199 4764
(c/10816)(3.8.11)

## மாணவர்களே! உங்கள் வெற்றிக்கான கையேடு

இதோ!
வெளிவந்துவிட்டது
**STEP 12**

சிறப்புத் தேர்வு எழுதுவது எப்படி?




பாராட்டுக்குரிய
லவக்குமார் ரிஷிகேசன்
வாழ்த்தும் அனுபவப்பகிர்வு
சாதனைகளும்...

தமிழ்
ஆங்கிலம்
கணிதம்
விஞ்ஞானம்
வரலாறு
வர்த்தகம்
சிங்களம்
சித்திரம்
மாதிரி
வினாத்தாள்

இவ்வாரம்
பாராட்டுப்பெறும் திருமலை
புனித சூசையப்பர் கல்லூரி

எதிர்பார்க்கை
வினாத்தாள்கள்
உள்ளடங்கலாக

உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள
சுடர்ஒளி, உதயன் முகவர்களை நாடுங்கள்
தொடர்புகளுக்கு - 077 2374191, 011 5738855
வடமாகாணத் தொடர்புகளுக்கு - 021 [illegible], 021 5677222

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

# யாழ்.குடாநாட்டில் 1 லட்சம் படையினர்

களிலிருந்து இராணுவத்தினர் விரைவில் வெளியேறுவார்கள். 2008ஆம் ஆண்டுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் 43 ஆயிரம் படையினர் இருந்தனர். தற்போது 30 ஆயிரம் இராணுவத்தினர் குறைக்கப்பட்டு 13 ஆயிரம் படையினர் நிலைகொண்டுள்ளனர்'' - என்று தெரிவித்திருந்தார்.

யாழ். மாவட்ட பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதியின் இந்தக் கூற்றுத் தொடர்பில் நேற்று 'உதயனி'டம் கருத்துத் தெரிவிக்கும்போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் இரா.சம்பந்தன் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்.குடாநாட்டில் மக்களின் காணிகள் மற்றும் வீடுகளிலிருந்து இராணுவத்தினர் விரைவில் வெளியேறுவார்கள் என்று யாழ். மாவட்ட பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி கூறிய கருத்தை நாம் வரவேற்கின்றோம். ஆனால், அங்கு தற்போது 13ஆயிரம்படையினரேநிலை கொண்டுள்ளனர் என்று அவர் தெரிவித்துள்ள கருத்தை அடியோடு நிராகரிக்கின்றோம்.

அண்மையில் நாடாளுமன்றில் நாம் உரையாற்றும் போது யாழ்.குடாநாட்டில் 15 படைப்பிரிவுகள் உள்ளன என்றும், அங்கு ஒவ்வொன்றிலும் 10 ஆயிரம் வரையான இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர் என்றும் தெரிவித்திருந்தோம். இதை நாடாளுமன்றில் நாம் தெரிவித்தபோது அங்கு அரச தரப்பில் எவரும் இதற்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை. எனவே, ஒன்றரை லட்சத்துக்கு மேற்பட்ட இராணுவத்தினர் யாழ்.குடாநாட்டில் தற்போதும் நிலைகொண்டுள்ளனர் என்பதை நாம் அடித்துக்கூறுகின்றோம்.

யாழில் மக்களின் வீடுகள் மற்றும் காணிகளில் சிலவற்றைத்தான் இராணுவத்தினர் விடுவித்துள்ளனர். இன்னமும் பெருமளவிலான காணிகள், வீடுகள் இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் உள்ளன.

எனவே, ஐ.நா. செயலாளர் நாயகம் மற்றும் சர்வதேச சமூகத்திற்கு இலங்கை அரசு அளித்துள்ள வாக்குறுதியின்படி யாழ். குடாநாட்டில் மக்களின் வீடுகள், காணிகள் அனைத்திலுமிருந்து இராணுவத்தினர் உடனடியாக வெளியேறவேண்டும் - என்றார். (த-சி)

# வன்னிப் பெண்மணிக்கு ஆசிய சமாதான விருது

பெண்கள் வலையமைப்பான பெண்கள் அபிவிருத்தி சம்மேளனத்தின் பொருளாளராகவும் இவர் பணியாற்றுகிறார்.

இவர், ஆதரவற்ற, பின்தங்கிய சிறுவர்கள் கல்வியைப் பெறுவதற்கும். ஊட்டச் சத்துக் குறைபாடுள்ள குழந்தைகளைக் கொண்ட குடும்பங்களுக்கான உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல், பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்கள், காணி உறுதிகள் போன்ற அவசியமான சட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொடுப்பது உள்ளிட்ட சமூகப் பணிகளை ஆற்றியுள்ளார்.

பெண்களின் உரிமைக்காகவும், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தும் வகையில், கடன்கள், உதவிகள், தொழிற் பயிற்சிகளை பெற்றுக் கொடுப்பதற்கும் இவர் பணியாற்றி வருகிறார்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள தவசிறி விஜயரட்ணம், எனது சமூகத்தின் தேவைகளுக்காக பல ஆண்டுகளாக அமைதியாக சேவையாற்றி வருகிறேன்.

இந்த விருதுக்கு தெரிவு செய்யப்பட்டது எனக்குக் கிடைத்த மிகப் பெரிய கௌரவம்.இது எனது சேவையைத் தொடர்வதற்கு மேலும் உந்துதல் அளிப்பதாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டுக்கான ''என் சமாதான விருது''க்கு இலங்கையைச் சேர்ந்த வாசுகி ஜெயசங்கர் உள்ளிட்ட ஆறு பெண்கள் போட்டிக் களத்தில் இருந்த போதிலும் வன்னியை சேர்ந்த தவசிறிக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்த விருது வழங்கும் நிகழ்வு தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் வரும் ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ளது.(த)

# அரச நிகழ்வில் தேர்தல் பிரசாரம்

தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி இடம்பெறும் என்று இந்த மாதம் முதலாம் திகதி தேர்தல்கள் ஆணையாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இராணுவம் வைத்திருந்த வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு அரியாலையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இவர்களுடன் ஆளும்கட்சி சார்பில் வட மாகாண சபைத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் சட்டத்தரணி முடியப்பு றெமிடியஸூம் கலந்து கொண்டார்.

இதனை விட இந்த நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ், ஆளும் கட்சிக்கு எதிர்வரும் தேர்தலில் ஆதரவாக வாக்களிக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

தேர்தல்கள் விதிமுறைகளின் பிரகாரம், தேர்தல்கள் அறிவிக்கப்பட்டதன் பின்னர் அரச நிகழ்வில் அரசியல் எதுவும் பேசக் கூடாதென்பதுடன், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் யாரும் அவ்வாறான நிகழ்வுகளில் பங்கெடுக்கக் கூடாது. ஆயினும், இவற்றை மீறி நடந்த இந்த நிகழ்வுக்கு எதிராக சம்பந்தப்பட்ட தரப்புக்கள் எந்த நடவடிக்கைகளும் எடுக்க முன்வரவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

# மயிலிட்டி, காங்சேன்துறை மக்களை வேறு இடத்தில் குடியேற்ற முயற்சி

ஒருவர் முன்னெடுத்துள்ளார் என அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

மாவிட்டபுரம் – கீரிமலை வீதியின் ஒரு பகுதியில் அமைந்துள்ள லங்கா சிமெந்து நிறுவனத்துக்குச் சொந்தமான காணியிலேயே இந்த மக்களைக் குடியமர்த்தநடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பிரதேசத்திலுள்ள விக்ரோரியா விளையாட்டுக் கழகம் தமது விளையாட்டு மைதானமாக முன்னர்பயன்படுத்திய காணியை யு.எஸ். எயிட் நிதியுதவியில் துப்புரவு செய்தபோது, குறித்த காணி தமக்குச் சொந்தமானது என்று உரிமை கோரிய லங்கா சிமெந்து நிறுவனம் அந்தப் பகுதியை சுற்றி கொங்கிறீட் தூண்களால் வேலி அமைத்துள்ளது.

இவ்வாறானதொரு நிலையில் மக்களை குறித்த பிரதேசத்தில் குடியேற்ற அமைச்சர்ஒருவர் முயற்சிமேற்கொண்டுள்ளார் எனக் கூறப்பட்டது. வட மாகாணசபைத் தேர்தலை இலக்காகக் கொண்டே இவ்வாறானதொரு நடவடிக்கைகள் அரசியல் நோக்கோடு முன்னெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

# விஜயின் 'தலைவா' படத்தை.....

சிங்க தெரிவித்தார்.

'தலைவா' திரைப்படத்தை இலங்கையில் கொழும்பு தவிர்ந்த ஏனைய இடங்களில் திரையிடுவதில் எந்த விதமான சிக்கல்களும் இல்லை. ஆனால் கொழும்பில் திரையிடுவது தொடர்பில் தொடர்ந்தும் கலந்துரையாடி வருகின்றோம்.

இது தொடர்பில் விரைவில் தீர்மானமொன்றை மேற்கொள்ளவுள்ளோம். அதுவரை எதனையும் உறுதியாகக் கூற முடியாது என்றும் அசோக சேரசிங்க குறிப்பிட்டார்.

ரஜனிகாந்த், கமலஹாசன், விஜய் போன்ற நடிகர்கள் இலங்கைக்கு எதிராகச் செயற்பட்டு வருகின்றனர். அவர்களின் திரைப்படங்களை இலங்கையில் திரையிட அனுமதிக்கக் கூடாது எனக் கூறிய கடும்போக்கு சிங்கள அமைப்பான 'ராவணாசக்தி' அமைப்பு இலங்கைத் தணிக்கைச் சபையிடம் மனுவொன்றையும் கையளித்திருந்தது.

இந்தத் திரைப்படங்களை இலங்கைத் திரையரங்குகளில் திரையிட்டால் அந்தத் திரையரங்குகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அந்த அமைப்பு எச்சரித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (த-5)

## கண்ணீர் அஞ்சலி

ஸ்ரீமதி நடராஜக்குருக்கள் விஜயலஷ்மி அம்மாள்



நீர்வை நகர்ப் பிறந்தே
நடராஜக் குரு துணையாய்
சீர்மை பெறு ஆவரங்கால்
செழிப்புற வாழ்வு பெற்றீர்
ஆர்வமுடன் இல்லற ஆலய
அரும்பணிகள் ஆற்றிட்டீர்
கூர்வேல் கந்தப்பிரான்
கழலடியில் பெறுக சாந்தி!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் ஆத்மா நீர்வைக்கந்தன் திருவடிகளில் நிலையான சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

**சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக் குருக்கள்**
பிரம்மஸ்ரீ பாலமுருகன் சர்மா, நீர்வைக்கந்தன் ஆலயம்,
நீர்வை வாழ் அந்தண சமூகம்.
(30232)

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னப்பிள்ளை கனகசபை

(பொன்னம்மா ரீச்சர், இளைப்பாறிய அதிபர்)



புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு இல.31, கோயில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னப்பிள்ளை கனகசபை (01.08.2013) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் கனகசபை (இளைப்பாறிய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா-தங்கம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-பொன்னம்மா தம்பதியரின் மருமகளும், தர்மசீலன் (மதுவரி அத்தியட்சகர், யாழ்ப்பாணம்), ஞானசீலன் (லண்டன்), ரூபிகா (லண் டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தனலட்சுமி, சாருலதா (லண்டன்), யசோதரன் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், தேனுகா (A/L கணிதப்பிரிவு, வேம்படி மகளிர் கல்லூரி), ஜெஸ்நிலா, பிருந்தன், பிருந்தா (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான மீனாட்சி, தர்மலிங்கம், திருநாவுக்கரசு மற்றும் செல்லம்மா (கனடா), நற்குணராசா (பிரான்ஸ்), சிவக்கொழுந்து (கனடா), இராசேந்திரம் (கனடா), ஆகி யோரின் அன்புச் சகோதரியும், கனகாம்பிகை (பிரான்ஸ்), காலஞ் சென்ற தனபாலசிங்கம் மற்றும் இந்திராணி (ஓய்வு பெற்ற ஆசிரியை) குகபாலன் (பேராசிரியர், யாழ்.பல்கலைக்கழகம், புவியியல் துறை), லோகநாதன் (ஜேர்மனி), திருநாவுக்கரசு (அதிபர், மலைமகள் வித்தியாலயம், ஹற்றன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.08.2013) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, மு.ப 10 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்பு: 077 540 2816
31, கோயில் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
க.தர்மசீலன் (மகன்)
மதுவரி அத்தியட்சகர்

(30162)(3.6.11)

# மாரடைப்பால் வேட்பாளர் நேற்று சாவு

பிள்ளைகளைப் பிரிந்து தனிமையில் வாழ்ந்து வந்துள்ளார். இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவும் வழமைபோன்று குறித்த கோயில் மண்டபத்தில் படுத்துள்ளார். நேற்றுக்காலை பார்த்த போது அவர் உயிரிழந்த நிலையில் சடலமாகக் காணப்பட்டார். இதன் பின்னர் அவரது சடலம் உடல் கூற்றுப் பரிசோதனைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மாரடைப்பால் தான் அவர் உயிரிழந்தார் என யாழ். போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி சின்னையா சிவரூபன் தெரிவித்தார்.

உயிரிழந்த நபர் நடைபெறவுள்ள வட மாகாண சபைத் தேர்தலில் பொன்மதிமுகராஜா விஜயகாந் தலைமையிலான சுயேச்சைக் குழு-4 இல் போட்டியிடும் வேட்பாளர். கடந்த காலங்களில் இடம்பெற்ற சகல தேர்தல் [illegible] குழுவில் இவர் போட்டியிட்டு வந்தவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5-4-86)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்னை மடியில்
05.01.1928

அரண் அடியில்
06.07.2013

திருமதி
**சின்னத்துரை செல்லம்மா** (தங்கம்மா)
"ஆயிரம் பிறை கண்ட வள்ளல்"
(ஆக்லேன், உடுவில், சுன்னாகம்)
04.08.2013

கடந்த 06.07.2013 சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவியின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தபால், தந்தி, தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எங்கள் இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (04.08.2013) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் குடும்ப சகிதம் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

"சக்திவாசா",
ஆக்லேன், உடுவில்.

பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

(30222)(10.16.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஓக.4
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
பி.ப4மணி,
மன்னார் பள்ளிமுனை சென்.லூட்சியஸ் விளையாட்டுக் கழகம் எதிர் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம். (ந-23-34)


## முன்பள்ளி விளையாட்டு விழா இன்று

பருத்தித்துறை, ஓக.4
பொலிகண்டி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு முன்பள்ளியின் மைதானத்தில் நடைபெறவுள்ளது.
முன்பள்ளியின் தலைவர் சி.குலவீரசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள விளையாட்டு விழாவுக்கு பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் அதிபர் திருமதி சி.இராமநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (ந-34)

## கிரிக்கெட் இறுதியாட்டம் இன்று



யாழ்ப்பாணம், ஓக.4
ஈச்சமோட்டை சனசமுக நிலையம் நடத்தும் முன்னாள் கிரமசேவகர் அமரர் சுந்தரலிங்கம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுத் தொடரின் அரையிறுதியாட்டம் மற்றும் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை ஈச்சமோட்டை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.
காலை நடைபெறும் அரையிறுதியாட்டத்தில் கார் போயிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சீஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
பிற்பகல் 3 மணிக்கும் இடம்பெறும் இறுதியாட்டத்தில் ஊரேழு றோயல் விளையாட்டுக் கழகமும், காலையில் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் வெற்றி பெறும் அணியும் மோதவுள்ளன.
இன்றைய இறுதியாட்ட நிகழ்வுகளுக்கு, பிரதம விருத்தினராக ஈச்சமோட்டை ஜே/66 கிராம சேவகர் சிவானந்தம் கலந்து கொள்ளவுள்ளார். (ந-23)



சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு கூட்டுறவு அமைப்புக்களிடையேயான விளையாட்டுப் போட்டிகள் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமாகின. போட்டி ஒன்றை யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் க. அருந்தவநாதன் ஆரம்பித்து வைக்கின்றார். (ந-17)

### நாமகள் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடர்

# தாவடி காளியம்பாள், யங்ஹென்றிஸ் இறுதியில் மோதுகின்றன இன்று





யாழ்ப்பாணம், ஓக. 4
தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டம் இன்று நடைபெறவுள்ளது.
பிற்பகல் 4 மணிக்கு கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள இறுதியாட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.
இறுதியாட்டத்துக்கு முன்னதாக மூன்றாமிடத்துக்கான ஆட்டம் நடைபெறும். அதில் அராலி பாரதி விளையாட்டுக் கழகமும், மானிப்பாய் ரேட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.
இறுதியாட்ட நிகழ்வுகளுக்குப் பிரதம விருந்தினராக வலி.வடக்குப் பிரதேச சபை தவிசாளர் எஸ்.சுகிர்தனும், சிறப்பு விருந்தினராக கிராம சேவகர் டி.என்.பாலேந்திரா, வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் என்.நவரெட்ணராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-23)




வவுனியாவில் நடைபெற்ற வடமாகாண தடகளப் போட்டிகளில் இடம்பெற்ற ஆண்களுக்கான தட்டு எறிதல் போட்டியின் போது.... (ந-23)

## மரதன் ஓட்டப் போட்டிக்கு விண்ணப்பம்

பருத்தித்துறை, ஓக. 4
பருத்தித்துறை கூவில் தீபஜோதி சனசமூக நிலையத்தின் 39 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இடம்பெற உள்ள மரதன் ஓட்டப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள், வீரர்களை கூவில் தீபஜோதி சனசமூக நிலையத் தலைவரைத் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ந-34)

## வென்றது நாச்சிக்குடா சென்.மேரிஸ்

யாழ்ப்பாணம், ஓக.4
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற லீக் ஆட்டத்தில் நாச்சிக்குடா சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.
நாச்சிக்குடா சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும், மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையே இடம்பெற்ற ஆட்டத்தில் நாச்சிக்குடா சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி 5:2 கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ந-34)




## புத்தூர் எவறெஸ்ட் இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஓக.4
புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டம் மற்றும் 3ஆம் இடத்திற்கான ஆட்டங்கள் என்பன இன்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெறவுள்ளன.
கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெறவுள்ள இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
மூன்றாமிடத்திற்கான ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளை யாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
இந்த நிகழ்வுகளுக்குப் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி ஹத்துருசிங்க கலந்து கொள்ளவுள்ளார். (ந-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரட்மனின் துடுப்பாட்ட மட்டை வருகின்றது ஏலத்துக்கு



கிரிக்கெட்டின் பிதாமகர் என்றழைக்கப்படும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் ஜாம்பவான் பிரட்மன் பயன்படுத்திய துடுப்பாட்ட மட்டை ஏலத்துக்கு வரவுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி ஏலம் விடப்படும் இந்த மட்டை, ரூ.33 லட்சம் வரை ஏலம் போகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1948ஆம் ஆண்டில் மிகவும் சக்தி வாய்ந்த அணியாகத் திகழ்ந்த ஆஸ்திரேலிய அணியில் இடம் பெற்றிருந்த அனைத்து வீரர்களும் இந்த மட்டையில் கையெழுத்திட்டுள்ளனர்.

இதனை விற்பனை செய்யவுள்ள நிறுவனத்தைச் சேர்ந்த சார்லஸ் லெஸ்கி என்பவர் இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்,

''1948ஆம் ஆண்டு இங்கிலாந்து செல்வதற்கு முன்னதாக ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற தனது கடைசி முதல்தர ஆட்டத்தில் இந்த மட்டையைப் பயன்படுத்தித்தான் பிரட்மன் 115 ஓட்டங்கள் குவித்தார்'' என்று தெரிவித்தார்.

அந்த ஆட்டமே பிரட்மன் ஆடிய கடைசி டெஸ்ட் ஆட்டமாகும். அவர் 2001ஆம் ஆண்டு தனது 92ஆவது வயதில் காலமானார்.

டெஸ்ட் போட்டியில் துடுப்பாட்ட சராசரியில் இப்போதும் பிரட்மன்தான் முதலிடத்தில் (99.94) உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# இலங்கை – பாக். தொடரின் கால அட்டவணை வெளியீடு

இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுத் தொடரின் கால அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. இந்தத் தொடர் ஐக்கிய அரபு எமிரேட்சிஸில் நடைபெறவுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புக் காரணங்களால் பாகிஸ்தானில் சர்வதேசப் போட்டிகள் நடத்தப்படுவதில்லை. அதையடுத்தே குறித்த தொடரை ஐக்கிய அரபு எமிரேட்சிஸில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த தொடரில் இலங்கைக்கு எதிராக பாகிஸ்தான் அணி மூன்று டெஸ்ட், ஐந்து ஒருநாள் மற்றும் இரண்டு சர்வதேச '20/20' ஆட்டங்களில் பங்கேற்கவுள்ளது.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 11, 13ஆம் திகதிகளில் '20/20' ஆட்டங்களும், டிசெம்பர் 18, 20, 22 மற்றும் 27 ஆம் திகதிகளில் ஒரு நாள் ஆட்டங்களும், அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 8, 16 ஆம் திகதிகளில் டெஸ்ட் ஆட்டங்களும் நடைபெறவுள்ளன. (ற)

# மனோஜ் திவாரிக்கு அறுவைச் சிகிச்சை

இந்திய அணியின் இளம் வீரர் மனோஜ் திவாரி முழங்கால் அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்படவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்திய அணியின் இளம் வீரர் மனோஜ் திவாரி (வயது 27) இதுவரை 8 ஒருநாள், 3 சர்வதேச '20/20' ஆட்டங்களின் போட்டியில் விளையாடியுள்ளார்.

அண்மையில் கொல்கத்தாவில் நடந்த காளிகாட் கிரிக்கெட் கிளப் அணிக்கு எதிரான பயிற்சி முகாமில் உதைபந்து விளையாடிய போது இவரது இடது முழங்காலில் காயம் ஏற்பட்டது.

அதனையடுத்து ஓய்வில் இருந்த மனோஜ் திவாரி தற்போது அறுவைச் சிகிச்சை செய்து கொள்வதற்காக லண்டன் பயணமாகியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. அங்கு பிரபல சந்திர சிகிச்சை நிபுணர் ஆன்ட்ரூ வில்லியம்ஸ், வருகிற 7ஆம் திகதி அறுவைச் சிகிச்சை செய்ய உள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அறுவைச் சிகிச்சையின் பின்னர் எதிர்வரும் 16ஆம் திகதி இந்தியா திரும்பும் மனோஜ் திவாரி பெங்களூரில் உள்ள தேசிய கிரிக் கெட் அக்கடமியில் மறு வாழ்வு பயிற்சி மேற்கொள்ள உள்ளார். (ற)





**வொஷிங்டன் பகிரங்க ரென்னிஸ்: சானியா இணை வெளியேற்றம்**

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் வொஷிங்டன் பகிரங்க ரென்னிஸ் இரட்டையர் பிரிவில் இருந்து இந்தியாவின் சானியா மிர்சா இணை வெளியேறினர். செர்பியாவின் ஜெலீனா ஜொன்கோவிச் – சுலேவாக்கியாவின் செபொட்னிக் இணையிடம் 6:7, 6:4 என்ற செற் கணக்கில் தோல்வி கண்ட சானியா மிர்சா – பிளவியா பென்னட்டா இணை காலிறுதி ஆட்டத்துடன் தொடரில் இருந்து வெளியேறினர். (ற)

# கிரிக்கெட் சூதாட்டம்; மும்பையில் மூவர் கைது

இலங்கை மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான ஐந்தாவதும் இறுதியுமான ஒரு நாள் ஆட்டத்தின் போது பந்தயத்தில் ஈடுபட்ட மூவர் மும்பையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இறுதி 5 ஆவது ஒருநாள் ஆட்டதில் இலங்கை அணி 128 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

ஆட்டம் நடைபெற்ற அன்று மும்பையில் மூன்று பேர் சூதாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கணனி, 16 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் ஒரு தொகை பணம் என்பவற்றை வைத்தே குறித்த நபர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டனர் என்று மும்பை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(ற)

# கட்டுப்பாடு வேண்டும் விராட் கோஹ்லிக்கு

## அறிவுரை கூறுகிறார் ஸ்டீவ் வோ

இந்திய அணித்தலைவராகச் செயற்படும் விராட் கோஹ்லி தனது கோபத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று அறிவுரை கூறியுள்ளார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் அணித்தலைவர் ஸ்டீவ் வோ.

இந்திய கிரிக்கெட் அணி தற்போது சிம்பாப்வேக்கு எதிரான தொடரில் பங்கேற்று வருகின்றது. குறித்த தொடரில் இந்திய அணித்தலைவர் டோனிக்கு ஓய்வு கொடுக்கப்பட்டு, வீராட் கோஹ்லிக்கு அணித்தலைமைப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. மைதானத்தில் எத்தருணத்திலும் அமைதியாக இருக்கும் இந்திய அணித் தலைவர் டோனிக்கு நேர் எதிர்மாறான குணமுடையவர் விராட் ஹோக்லி. மைதானத்தில் தனது உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியாது ஆக்ரோஷமாக நடந்து கொள்கின்றார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே ஆஸி. அணியின் முன்னாள் தலைவர் ஸ்டீவ் வோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், ''அணித் தலைமைக்கு உணர்வுகளைகளைக் கட்டுப்படுத்துதல் மிக முக்கியமானது. அணிக்கு தலைமையேற்கும்போது கோஹ்லியின் ஆக்ரோஷம் ஒரு சில நேரங்களில் கட்டுகடங்காமல் இருக்கிறது. அவர் சமநிலையுடன் இருப்பது அவசியம். இளம் வீரரான அவருக்கு அணிக்குத் தலைவர் என்ற உள்ளுணர்வு இருக்க வேண்டும்.சகவீரர்களுக்குமுன் மாதிரியாக இருக்க வேண்டும். அவர் பல விடயங்களில் இன்னும் பாடம் கற்க வேண்டும். அணியின் ஏனைய வீரர்கள் ஆக்ரோஷம் அடையும் போது அதை கட்டுப்படுத்த கூடியவராக அணித்தலைவர் திகழ வேண்டும்.


டெண்டுல்கரும், லாராவும் சரிசமமான வீரர்களே. அவர்களில் ஒருவருடன் மற்றவரை ஒப்பிடுவதை நான் விரும்பவில்லை'' என்று தெரிவித்தார் வோ.(ற)

# சாதனை புரிந்தார் மிஸ்ரா

சிப்பாப்வேக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி பங்கேற்ற 5 ஆவதும் இறுதியுமான நேற்று நடைபெற்ற ஒருநாள் ஆட்டத்தில் இந்திய அணியின் பந்துவீச்சாளர் மிஸ்ரா சாதனை ஒன்றைப் பதிவு செய்துள்ளார்.

8.5 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசிய மிஸ்ரா 48 ஓட்டங்களைக் கொடுத்து 6 இலக்குகளைக் கைப்பற்றினார். அவற்றுடன் சேர்ந்து மிஸ்ரா இந்தத் தொடரில் மொத்தமாக 18 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார்.

அதையடுத்து இரு நாடுகள் மோதும் தொடரில் அதிக இலக்குகளை வீழ்த்திய இந்திய வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார் மிஸ்ரா. இந்திய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீநாத், நியூஸிலாந்துக்கு எதிராக 7 ஆட்டங்கள் கொண்ட தொடரில் 18 இலக்குகளைக் கைப்பற்றியிருந்தமையே சாதனையாக இருந்தது. அந்தச் சாதனையை தற்போது மிஸ்ரா சமன் செய்துள்ளார். மேற்கிந்தியத் தீவுகள் அணியைச் சேர்ந்த பேட்டர்சன் இந்தியாவுக்கு எதிராக 6 ஆட்டங்களில் 17 இலக்குகளைக் கைப்பற்றி மிஸ்ராவுக்கு அடுத்தபடியாக உள்ளார்.(ற)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலவச அழகுக்கலைப் பயிற்சி

590/- பதிவுக் கட்டணத்துடன் Facial, Gold Facial, Fruit Facial, Threading, Pedicure, Manicure, Nail Art, Hair Style, Hair Cut, Hair ironing, Pimple Treatment, Bridal Make என மேலும் பயிற்சிகள் அனைத்தும் செய்முறை விளக்கத்துடன் இடம்பெற்று, பயிற்சியின் முடிவில் சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும்.

அறிமுக வகுப்பில் கலந்து கொண்டு பதிவுகளை மேற்கொள்ளவும்.



திகதி: 06.08.2013
நேரம்: மு.ப. 10.00
இடம்: ஒறிபிளேம் யாழ். கிளை நிறுவனம்
187/30, யூனியன் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்தி அருகில், கொட்டடி வீதி)

★நிபந்தனைக்கு உட்பட்டது. (30208)

தொடர்புகளுக்கு: 0772288243 / 0215888000/01

## Learn Computer Hardware Technology

மிகத்தரமான கல்விநெறிகளை தொழில் வழங்கக்கூடிய வகையில் வடிவமைத்து அதற்கான பட்டதாரி நிபுணர்களால் மட்டுமே கற்பிக்கும் கே.யு எடியுகேசன் நிறுவனத்தின் இன்னொரு உடனடி வேலை வாய்ப்பிற்கான பயிற்சி நெறி.(With Optional Networking !)

1 மாத செயல்முறைக்கல்வி,அதன் பின் இரண்டுமாத தொழில்பயிற்சி. நூற்றுக்கணக்கான கணினி மற்றும் உதிரிப்பாகங்களை திருத்திப்பழகி வெளியேறுங்கள். உங்கள் வேலை வாய்ப்பிற்கு நாங்கள் உத்தரவாதம்.

15 வருடம் அனுபவம் வாய்ந்த நிபுணரின் பயிற்சி !

உங்கள் கம்பியூட்ரை நீங்களே திருத்துங்கள். !

### கணினி பழுது பார்த்தல் பயிற்சி நெறி.

KU Education


Learn only in 1 Month at :
**KU Education.**
Creating Employable Graduates
பயிற்சி நெறிக்கையேட்டிற்கும் விபரங்களுக்கும் நேரில் வரவும்.



0777-302882 | More on :http://edu.kugroup.info

இல 75,கோவில் வீதி(லாவா வைத்தியசாலை மேல்மாடி),யாழ்ப்பாணம்.

## EASY SHAPPATHI
## ஆட்டாமா சப்பாத்தி



★சிறியவர் முதல் பெரியவர் வரை விரும்பி உண்ணக் கூடியது
★மிக இலகுவில் தயாரிக்கக் கூடியது (எவ்வித எண்ணெயும் பாவிக்கத் தேவையில்லை)
★மிக விசேடமாக நீரிழிவு (சலரோகம்), கொலஸ்ரோல் மற்றும் உடல் ஆரோக்கியத்தைப் பேண விரும்புபவர்களுக்கான மிகச்சிறந்த சத்துணவு.
★பறாட்டா (BARATA) வும் பெற்றுக்கொள்ளலாம்

கிடைக்குமிடம்:-

| | | |
|---|---|---|
| **CITY MEDICALS** (கொமர்சல் வங்கிக்கு அருகில்) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | **VESTA** (சத்திரச் சந்தி) 153, K.K.S. Road, Jaffna, | **SHANTHY MEDICALS** கத்தோலிக்க அச்சகம் கடைத்தொகுதி, பிரதான வீதி, யாழ்ப்பாணம். |
| **நீலாம்பரி உணவகம்** K.K.S. Road, நட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். | **T.C.T.** நாவலர் றோட், யாழ்ப்பாணம். | **JITH FOOD CITY** 127, கண்டி வீதி, சுச்சேரி. |

ஏக விநியோகஸ்தர்:- **J.JEEVA MIXTURERS**
8, பிளர்ச்சஸ் ஒழுங்கை, (கண்டுக்குளி மகளிர் கல்லூரிக்குப் பின்புறம்)
கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021 222 9867
(30153)(10,6,3)

## PAPER CLASS — தமிழ் குகன்

ஆரம்பம் 07.08.2013
புதன்கிழமை
பி.ப 4.30 p.m. (30214)
யூனிவேர்சல் கந்தர்மடம்

## பார்மசிக்கு வேலையாள் தேவை

நெல்லியடி, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் இயங்கும் பார்மசிக்கு வேலை ஆள்கள் தேவை. அனுபவமுள்ள, பழக விரும்புவோர் தொடர்புகொள்ளவும்.

T.P: 077 4656428 (F/10758) (10,16,14)

## காணி விற்பனைக்கு

எழுதுமட்டுவாழ் சந்தியில் இருந்து கிளாலி செல்லும் வீதியில் (A9 இல் இருந்து 300 M) 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
077 7951215 (30209) (10,16,14)

## முற்றிலும் இலவசம்

சர்வதேச நாடுகளுக்கான
**விமானப் பற்றுச்சீட்டுக்களை**
வீட்டிலிருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் வீட்டில் இடம்பெறும் நற்காரியங்கள் திருமண வைபவங்களை தமிழர் பண்பாட்டுக் கலாச்சார முறைக்கமைவாக நவீனமயப்படுத்தப்பட்ட ஒழுங்கமைப்புக்கள்

N3C tours
இந்தியா,மலேசியா,சிங்கப்பூர்,பிரான்ஸ், லண்டன் போன்ற நாடுகளுக்கான சுற்றுலா ஏற்பாடுகள் செய்து தரப்படும்

**0718 48 61 62**

## வேலைவாய்ப்பு

விளம்பரம் மற்றும் விற்பனைத்துறைக்கு ஆண்கள் மற்றும் பெண்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். தகுதியுடையவர்கள் கீழ்வரும் முகவரிக்கு சுயவிவரக் கோவையை 10.08.2013 இக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

வயது எல்லை : 18 வயதுக்கு மேல்
கல்வித் தகைமை : O/L மற்றும் A/L
அடிப்படைச் சம்பளம் : 12,500/= மற்றும் மேலதிகக் கொடுப்பனவு.

சுயாதீன பணிப்பாளர்,
187/30,
யூனியன் ஒழுங்கை ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (30207) (10,16,14)

## தேவை

கொழும்பில் இயங்கி வரும் தனியார் நிறுவனத்துக்கு சுறுசுறுப்பான மேசன் / கூலி ஆள்கள் உடனடியாகத் தேவை. மாத வருமானம் 45,000/= முதல் 50,000/= வரை.

தொடர்புக்கு
T.P: 0777065127 (30204) (10,16,14)

## மாபெரும் ஆடித் தள்ளுபடி



வீட்டுக்குரிய அனைத்துத் தளபாடங்களையும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

இலுப்பையடிச் சந்திக்கும் ஆனைப் பந்திச் சந்திக்கும் இடையில்.
0778314201, 0773583879

## கொழும்பு, கண்டி என அலைய வேண்டிய தேவையில்லை

Visit Visa, Sponsor, Refusal
என்பனவற்றில்
கைதேர்ந்தவர்கள் நாங்கள்



★7 நாள்களும் சேவை
★ஒழுங்கு கட்டுப்பாட்டுடன் கூடிய கண்ணியம் மிக்க நிறுவனம்
★காலை 8 முதல் இரவு 8 வரை சேவை (30213)

**திசைகாட்டி பிறைவேற் (லிமிட்)**
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016 - 021 568 9090

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

Learn French The French Way
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

பிரான்ஸ், கனடாவுக்கு செல்வோர், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் படிக்கலாம். (கிளிநொச்சி, முல்லைத்தீவை சேர்ந்தவர்களும் இங்கு படிக்கிறார்கள்).

France இல் தொடர்ந்து French படிப்பதற்கும் Embassy விடயங்களுக்கும் எமது நிறுவனத்தின் Certificate உதவுகின்றது. ஏனெனில் உலகில் பிரெஞ் கற்பிப்பதற்கு France அரசாங்கம் அங்கிகரிக்கும் ஒரே நிறுவனம் "AF" மட்டுமே. சர்வதேச நிறுவனமொன்றில் French கற்றிட இது ஓர் அரிய சந்தர்ப்பம். உடன் பதிவுசெய்யுங்கள்

புதிய வகுப்பு: விரைவில் ஆரம்பமாகிறது 11-1pm(சனி, ஞாயிறு)
61, Kachchery-Nallur Road, Jaffna T.P.021.222.8093
கச்சேரி பஸ்தரிப்பிடத்தை அடுத்துவரும் சந்தியில் அமைந்துள்ள மாடிக்கட்டடம்

## உலகின் எந்த மூலைக்கும் படிக்க, உழைக்க எம்மிடம் மட்டுமே....

**டென்மார்க்கில் படிக்க**
**இரண்டு இலட்சம் வரை உழைக்க**

**சட்ட ஆலோசனைக்கு**

(30097)(10,6)

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090

## LONDON METROPOLITAN COLLEGE

சர்வதேச தரத்திலான ஆங்கில கற்கை நெறிகளை நடாத்தும் யாழ்ப்பாணத்தின் முன்னிலை ஆங்கில கல்வி நிறுவனம்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்

**IELTS** — ACADEMIC & GENERAL — Duration: 48 hrs Week/ Week ends
- ஒவ்வொரு மாணவர்மீதும் தனிப்பட்ட கவனம்
- முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட கற்பித்தல் வசதி
- IELTS 5.5-6.5 Band பெறுவதற்கான உத்தரவாதம்
- இலவச Tutorial Facilities

**City & Guilds A1 A2 B1 B2** — Duration: 48 hrs Week/ Week ends
- UK அரசாங்கத்தினால் சிபாரிசு செய்யப்பட்டது.
- இதுவரை நடந்த பரீட்சையில் 100% சித்தி.
- காலவரையறையற்ற சான்றிதழ் பெறமுடியும்.
- ESOL, SESOL பரீட்சைகளை தனித்தனியாக தோற்ற முடியும்.

**Certificate in SPOKEN ENGLISH WITH GRAMMAR** (Quick learning programme) — Duration: 60 hrs Week/ Week ends
- ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனை வளர்த்து கொள்ள விரும்புவோர்க்கான கற்கைநெறி.
- ஆங்கில உரையாடல் புலமையை வளர்ப்பது தொடர்பான பூரண விளக்கங்களுடன் கூடிய கற்கைநெறி.

**DIPLOMA IN ENGLISH** — Duration: 3 Months Week/ Week ends
Writing - 60Hrs Reading - 48Hrs
Listening - 48Hrs Speaking - 48Hrs
Be a power speaker — INTENSIVE COMMUNICATION PROGRAM
- தொழில்தேடுவோர், தொழில்புரிவோர், A/L பரீட்சைக்கு தோற்றியோர் ஆங்கில புலமையை வளர்த்து கொள்வதற்கான கற்கைநெறி.
- Speaking, Reading, Listening, Writing ஆகியன விசேட செயன்முறை மூலம் விரிவாக கற்பிக்கப்படும்.
- மாணவர்கள் தமது தேர்ச்சிக்கேற்ப தொடர்ச்சியாக Advanced Dip. In English இனை எம்மிடமே கற்க முடியும்.
- O/L எழுதிய மாணவர்களிற்கு தனிப்பட்ட ரீதியில் கற்கைநெறி ஒழுங்குசெய்யப்படும்.

ஒவ்வொரு மாத முதல் வாரத்திலும் புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படும். தவணை அடிப்படையிலான மிகக்குறைந்த கட்டணம்

#197, Arasady Road, Jaffna, Sri Lanka | Tel: 021 222 7230 | 021 753 8395
E mail: info@lmcjaffna.edu.lk | Web: www.lmcjaffna.edu.lk

## Personal Class-கணினி

*10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
*Ms office, Internet & E-mail, DTP, Web Design, Graphic Design, சிறுவர்களிற்கான கற்கைநெறி.
*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்
*குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எமது Laptop மூலமாக கற்பிக்கப்படும்.

TP:0779672038 ஆசிரியர்:KRC

## தேவை

Sky's பிரபலமான கட்டடங்கள் கட்டும் ஒப்பந்தம் செய்யும் ஸ்தாபனத்தின் யாழ் செயல்திட்டங்களுக்கு கீழ்வரும் உப கொந்தராத்துக்காரர்கள் தேவைப்படுகின்றனர். விரும்பியவர்கள் விண்ணப்பங்களை தபாலிலோ / நேரிலோ கீழ்வரும் முகவரியில் கையளிக்கலாம்.

* மேசன் கொந்தராத்துக்காரர் / சட்டரிங் கொந்தராத்துக்காரர்
* மாபிள் பதிக்க கூடியவர்கள்.
* மேசன்மார் / சட்டரிங் வேலை செய்யக் கூடிய தச்சன்மார்.

விவரங்களுக்கு:
கச்சேரியடி - 071 455 6078 / 077 706 9933
தெல்லிப்பழை - 071 453 0389/077 547 9434
யாழ்ப்பாணம்- 071 869 7269/071 864 3645
[illegible] - 077 182 3458 / 071 454 0731
(F/10702) (10,16,14)

## BIT @ MIS

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் தகவல் தொழினுட்பமாணி கடந்த 12 வருடங்களாக யாழில்.
R.Kumaran - B.Sc.
74,Sabapathy Lane, Jaffna. 0776577359

## காணி விற்பனைக்குண்டு

கோயில் கடவை பிள்ளையார் கோயில், துன்னாலை மத்தி, கரவெட்டியில் அமைந்துள்ள நிலப்பரப்பு 6 குளி, 16 15/32 விற்பனைக்குண்டு. (காணியின் பெயர் கொள்வழி)

மேலதிக விவரம்: ப.இரவீந்திரதாஸ் 0777 966 509
மயூரா-பாலன் 075 9918171
உரிமையாளர்: நி.நல்லையா (பணக்கார நல்லையா)
துன்னாலை கரவெட்டி T.P: 077 322 3171
(இறுதித் தீர்மானம் உரிமையாளர் எடுப்பார்)
(35211) (10,16,14)

## IMMEDIATE VACANCY

EDUCATIONAL CONSULTANT (FEMALE)
Closing Date: 15.08.2013

- GCE A/L சித்தியடைந்த கணனி அறிவுடைய 20-28 வயதிற்குட்பட்ட, ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றவர் எதிர்பார்க்கப்படுகின்றார்.
- கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்
- தகுதியானவர்கள் சுயவிபரக்கோவையுடன் நேரில் சமுகமளிக்கவும்

Hotline: 021 222 7230

LONDON METROPOLITAN COLLEGE
197, Arasady Road,
Jaffna, Sri Lanka
nimal@expogroup.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சூரியகாந்தி

உதயன் ஞாயிறு சிறப்பம்சம் 04 08 2013




# துரத்தும் துயரம்

## ஜாவா கரையிலிருந்து சாவுகளின் சாட்சி


பக்கம் 20

பக்கம் 21

பக்கம் 24


முகப்புக் கதை

அந்தக் குழந்தையை கரை சேர்த்து விடுவேன் என்ற நம்பிக் கையில்தான் பற்றிப் பிடித்தபடி நீந்தினேன்.

தான் இறந்தாலும் பிள்ளையாவது பிழைக்கட்டும் என்றுதான் அதன் தாயார் என்னிடம்கொடுத்தார். பாதி வழியில் “அண்ணா! பசிக்கிறது; நித்திரை வருகிறது” என்றது குழந்தை. கரையில் பணிசும் ரீயும் வைத்திருக்கிறார்கள் குடித்துவிட்டுத் தூங்கலாம் என்று சொன்னேன். ஆனால் கரையேறியபோது குழந்தை கையில் இல்லை. பின்னர் தேடிப் பிடித்தபோது அதனிடம் உயிர் இல்லை.


பக்கம் 4,5





பக்கம் 7





பக்கம் 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன் 04 08 2013 ஞாயிற்றுக்கிழமை

# தேர்தலுக்கான விடுவிப்பு இது

அதிரன்



யாழ்.குடாநாடு படையினரின் வசமான பின்னர் கிட்டத்தட்ட 17 வருடங்கள் அவர்களின் பாவனையில் இருந்து வந்த வீடுகள், காணிகள் என்பவற்றில் பெரும்பாலானவை தற்போது படையினரின் வசமிருந்து விடுவிக்கப்பட்டு வருகின்றன. அந்த வீடுகள், காணிகள் ஆகியவற்றை உரிமையாளர்களிடம் கையளிக்கும் நிகழ்வுகள் பெரும் எடுப்பில் தடல்புடலாக நடைபெற்று வருகின்றன. இந்த வீடுகளும், காணிகளும் திடீரென விடுவிக்கப்படுவதற்கு காரணம் இல்லாமல் இல்லை. குடாநாட்டின் பல பகுதிகளிலும் நீண்டகாலமாகத் தமது முக்கிய முகாம்களை நிறுவி வீடுகளை கட்டுப்பாட்டில் வைத்திருந்த படையினர் இப்போது அங்கிருந்து வெளியேறும் முயற்சிகளில் அவசர அவசரமாக ஈடுபட்டுள்ளனர்.

அவர்கள் குடாநாட்டை விட்டு வெளியேறுகிறார்கள் என்று நீங்கள் எண்ணக் கூடாது. அவர்கள் பொதுமக்களின் வீடுகளிலிருந்துதான் வெளியேறுகிறார்கள். திடீரெனப் படையினருக்கு ஏன் இந்த மனிதாபிமானம் வந்தது என்று எண்ணுகிறீர்களா? இருக்கவே இருக்கு அதற்கு ஒரு முக்கிய காரணம்.

செப்ரெம்பர் 21 ஆம் திகதி வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெற இருக்கின்றது. அந்தத் தேர்தலில் 10 அரசியல் கட்சிகளும் 23 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. வடக்கு மாகாண சபை தனியாகப் பிரிக்கப்பட்ட பின்னர் முதல் முறையாக நடைபெறும் தேர்தல் இது. என்றுமில்லாதவாறு இம்முறை இந்தத் தேர்தலில் அதிக கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் களத்தில் குதித்துள்ளன. அந்தளவுக்கு வடக்குத் தேர்தல் அதிக முக்கியத்துவத்துடன் நோக்கப்படுகிறது. இந்தத் தேர்தலின் மூலம் வடக்கின் ஆட்சியைக் கைப்பற்றி தமிழ் மக்கள் சுதந்திரமாக - தனித்துவத்துடன் வாழ விரும்புகிறார்கள் என்பதை அரசுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் எடுத்துரைக்க வேண்டும் என்ற இலக்கோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு களமிறங்கியுள்ளது. அதன் முதன்மை வேட்பாளராக முன்னாள் நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன் போட்டியிடுகிறார். நீதியரசராக அவர் பணியாற்றியமையால் மாகாண சபையின் சட்ட நுணுக்கங்கள் குறிப்பாக 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்தல் தொடர்பான முன்னெடுப்புக்களை மேற்கொள்ளப் பொருத்தமானவர் என்ற காரணத்தினாலும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய பொது நபர் என்பதாலும் அவரை முதன்மை வேட்பாளராக களமிறக்கியுள்ளதாக கூட்டமைப்பு கூறுகிறது. அதேவேளை அரச தரப்பில் ஒரு பெரும் கூட்டு களமிறங்கியுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றிலைச் சின்னத்தின் ஈ.பி.டி.பி., சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எப். நாபா அணி, அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், லங்கா சமசமாஜக் கட்சி ஆகியன கூட்டாக அரச தரப்பில் களமிறங்கியுள்ளன. அதனை விட ஐ.தே.க., ஜே.வி.பி. ஆகிய பிரதான கட்சிகளும் மேலும் சில கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் வடக்குத் தேர்தலில் குதித்துள்ளன.

இலங்கையிலுள்ள மாகாண சபைகளில் வடக்கைத் தவிர்ந்த ஏனைய அனைத்து மாகாண சபைகளும் அரச தரப்பான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்டுப்பாட்டில் உள்ளன. வடக்கு மாகாண சபை மட்டுமே இப்போது அரசின் கட்டுப்பாட்டில்லை. அதனையும் தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து விட்டால் தாம் நினைக்கும் எதனையும் வடக்கில் நடத்தி விட முடியும் என்றும் தமிழ் மக்கள் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசை ஏற்றுக்கொள்கிறார்கள் என்றும் சர்வதேசத்துக்குக் காட்டுவதற்காக வடக்குத் தேர்தலில் எப்படியாவது வென்று விட வேண்டும் என்ற பேராவாவில் அரச தரப்பு உள்ளது. அதற்காக அது தன்னிடமிருக்கும் அனைத்து அதிகாரங்களையும் பயன்படுத்த எண்ணியுள்ளது.

அதே நேரத்தில் வடக்கில் தமிழரின் ஆட்சியை நிறுவி இந்த அரசுக்கு சரியான பாடம் - தகுந்த பதிலடி கொடுக்க வேண்டும் என்பதில் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குறியாக உள்ளது. வடக்குத் தேர்தல் அரசுக்கும் கூட்டமைப்புக்கும் இடையிலான ஒரு இறுதிப் போராக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

தேர்தலில் தமிழர்களின் வாக்குகளை தம் பக்கம் ஈர்த்துக் கொள்வதற்காக யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் அமைச்சர் ஒருவர் தனது பிரசார உத்திகளை ஆரம்பித்திருக்கிறார். அவருக்கு ஒத்துழைப்பதற்காக யாழ்ப்பாணத்தின் பாதுகாப்புக்குப் பொறுப்பான ஒருவரும் நடவடிக்கைகளை ஆரம்பித்துவிட்டார்.

இதுவரை காலமும் தமது வீடுகள் விடுவிக்கப்படாமையால் பல குடும்பங்கள் அகதி முகாம்களிலும் அயலவர் வீடுகளிலும் தஞ்சமடைந்திருந்தன. பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கிய அந்தக் குடும்பங்கள் தமது வீடுகளையும் காணிகளையும் விடுவிக்குமாறு கோரிப் பல்வேறு போராட்டங்களை நடத்தியிருந்தன. இந்தப் போராட்டங்கள் எதனையும் கண்டுகொள்ளாமல் - செவிசாய்க்காமல் இருந்த படைத் தரப்பு இப்போது விழுந்தடித்துக் கொண்டு மக்களின் காணிகளை விடுவிப்பதன் மர்மம் என்ன?

நேற்று முன்தினம் அரியாலை பகுதியில் 512 ஆவது படைப் பிரிவின் கட்டுப்பாட்டில் இருந்த பொதுமக்களின் வீடுகளும், காணிகளும் அவர்களிடம் மீண்டும் கையளிக்கப்பட்டன. கிட்டத்தட்ட 15 வருடங்களுக்கு மேலாக இவை படையினரின் பாவனையிலிருந்தன. அதே போன்று ஒரு காலத்தில் குடாநாட்டையே ஒரு கலக்கு கலக்கிய அச்செழு இராணுவ முகாம் அமைந்துள்ள வீடுகளிலிருந்தும் படையினர் வெளியேறியுள்ளனர். அந்த வீடுகளும் உரிமையாளர்களிம் கையளிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று பல பகுதிகளிலும் படை முகாம்கள் அமைந்துள்ள வீடுகள் அவசர அவசரமாகப் படையினரால் விடுவிக்கப்பட்டுள்ளன. இந்தப் படை முகாம்கள் அமைந்திருந்த வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வுகளில் யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதியுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் கலந்து கொண்டார். அவருடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் வடக்குத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களும் கலந்து கொண்டனர். அரியாலையில் நடைபெற்ற வீடு கையளிப்பு நிகழ்வு உரையாற்றிய யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க, பொதுமக்களின் வீடுகளை நாங்கள் இன்று அவர்களிடம் திருப்பி ஒப்படைக்கிறோம். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக் கொண்டதற்கிணங்கவே இந்த நடவடிக்கையை மேற்கொள்கின்றோம். பொதுமக்களின் காணிகளை, வீடுகளை உடனடியாக விடுவிக்குமாறு அமைச்சர் டக்ளஸ் எங்களிடம் கோரியிருந்தார். அதற்கமையவே இந்த வீடுகளை விடுவிக்கும் நிகழ்வு இன்று இங்கு இடம்பெறுகிறது. அத்துடன் குடாநாட்டிலுள்ள படையினரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்திருந்தார்.

இதுவரை காலமும் படைத் தளபதிக்கு வராத ஞானம் இப்போது மட்டும் வந்தமைக்கான காரணம் என்ன? என்பது உங்களுக்கு இலகுவில் விளங்கியிருக்கும். இதுவரை படையினரின் பாதுகாப்பும் குடநாட்டின் பாதுகாப்பும் மிக முக்கியம் என்று சொல்லி வந்தவர்கள் இப்போது பொதுமக்களின் நலனில் அதிக அக்கறை கொண்டுள்ளமை போல வீடுகளை விடுவிக்கிறார்கள். எல்லாம் இந்த வடக்குத் தேர்தல் செய்த வேலை தான். வீடுகளை விடுவிக்கும் விடயத்தில் இதுவரை வாயே திறக்காமல் இருந்த இந்த அமைச்சர் இப்போது மட்டும் அவற்றை விடுவிக்குமாறு படைத் தரப்பை கோரியுள்ளதாகப் படை அதிகாரி கூறுவது வேடிக்கையாகத் தான் இருக்கிறது.

ஒட்டுமொத்தத்தில் இந்த காணிகள், வீடுகள் விடுவிப்பு எல்லாம் வடக்குத் தேர்தல் பிரசாரத்தின் ஒரு அங்கம்தான். சில நாள்களில் பலாலியிருந்தும் படையினர் வெளியேறுவர் என்ற அறிவிப்பு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. வடக்குத் தேர்தலுக்கான புஷ்வாணங்கள் தான் இவை எல்லாம். இவற்றைக் குடாநாட்டு மக்கள் இலகுவில் இனங்கண்டுவிடுவார்கள். இது அவர்களுக்கு கடந்த தேர்தல்களின்போதும் கண்டுகளித்த ஒன்றுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திசைமாறும் சுடுகலன்

ஔண்யன்

அந்த வீட்டில் நிறைய எலிகள்.

எப்படியாவது அவற்றை ஒழிக்க வேண்டும்.


வீட்டுக்காரர் நான்கைந்து பூனைகளை வாங்கிக்கொண்டு வந்தார். அந்தப் பூனைகள் செல்லப்பிராணிகளாக வளர்ந்ததால் அவை நேரம் தவறாமல் சாப்பாட்டையே எதிர்பார்த்தன. அவற்றுக்கு முன்னால் எலிகள் துள்ளிக் குதித்த போதும் அவற்றை பாய்ந்து பிடிக்க வேண்டும் என்ற எண்ணம் பூனைகளுக்குவரவேயில்லை. வீட்டுக்காரர் பூனைகளின் இயல்பை மாற்ற முடிவெடுத்தார். பூனைகளுக்கு வைக்கும் சாப்பாட்டில் மெல்லமெல்ல எலி இறைச்சியையும் சேர்த்துக் கொண்டார். அந்தச் சுவை அவற்றுக்குப் பிடித்துப் போனது. பின்னர் எப்படி எலிகளை வேட்டையாடுவது என்பது பற்றியும் பூனைகளுக்கு அவர் கற்றுக்கொடுத்தார். சில நாள்களில் அந்தப் பூனைகளுக்கு சாப்பாடு போடுவதை அவர் முற்றாக நிறுத்தியிருந்தார். பசியும் இறைச்சியின் ருசியும் சேர்ந்து கொள்ள பூனைகள் எலிகளை 'ஒரு மார்க்கமாக' பார்த்தன. பாய்ந்தன. பிடித்து புசித்து பசியடங்கின. நாளடைவில் அங்கிருந்த அத்தனை எலிகளையும் பூனைகள் வேட்டையாடி முடித்திருந்தன.

ஆனால் அதன் பின்னர் பூனைகளுக்கு உண்ண எதுவும் அங்கு இருக்கவில்லை. மெல்லமெல்ல அவற்றின் இரைதேடும் பார்வை சக பூனைகள் மீது திரும்பின. தக்கன பிழைத்துக் கொண்டன. வலிமையற்றவை அவற்றுக்கு இரையாகின. இப்போது எஞ்சியிருப்பவை இரண்டு பூனைகள் மட்டுமே. மீண்டும் பசி. நாவிலோ இறைச்சியின் ருசி. ரத்தம் சுவைக்காமல் வாழவே முடியாது. கடைசியில் அவற்றின் கண்ணெதிரே மாபெரும் இறைச்சி பொருளாக வீட்டுக்காரன் தென்பட்டான். பூனைகள் வீட்டுக்காரன் மீது பாயத் தொடங்கின. நீண்ட போராட்டம். கடைசியில் தனித்த வீட்டுக்குள் பூனைகளிடம் வீழ்ந்தான் வீட்டுக்காரன். இன்னும் சில வாரங்களுக்கு பூனைகளுக்கு சாப்பாட்டுக்குப் பஞ்சமில்லை. அதன்பின் மீண்டும் பசியெடுக்க, இருப்பதில் வலிதற்ற பூனை மீது மற்றப் பூனை பாய்வதென்னவோ நிச்சயமானது தான்.

அதிகாரம் பணத்தின் முன்னால் வாயெல்லாம் பல்லாகி சேவகம் செய்வதே வழமையாகிப் போய் விட்டது. அப்படித்தான் அந்த ஊரிலும் அதிகாரம் ஒரு தொழிற்சாலையிடம் தன் மானத்தை அடகு வைத்திருந்தது. முதலாளித்துவம் என்ன சொல்கிறதோ அதற்கு வாலாட்டிக் கொண்டிருந்தது அதிகாரம்.

தொழிற்சாலை மக்களின் ரத்தத்தை உறிஞ்சிக்கொண்டு பெரிதாகிக் கொண்டே வந்தது. உற்பத்தி பெருகப்பெருக அங்கிருந்து வெளியேறும் கழிவு நீரும் பெருகியது. கிராமத்தில் இருக்கும் குளத்தை விடவும் கழிவு நீரின் கன அடி அதிகம் தான். எப்போதுமே சுத்தமான ஊர்த் தண்ணீரை பருகியவர்களுக்கு இப்போது கழிவு நீர் மட்டுமே எஞ்சியிருந்தது. நின்ற வெள்ளத்தை வந்த கழிவு நீர் காவுகொண்டிருந்தது.

உணவில்லா விட்டாலும் பரவாயில்லை. நீரில்லாமல் எப்படி சொந்த ஊரில் எப்படி வசிக்க முடியும்? ஊரில் எங்குபோய் நீர் எடுத்தாலும் குப்பென்று துர்மணம் மூக்கைப் பொத்தியடித்தது. கண்ணாடிக் குவளையில் தூசு மண்டலம் நீரில் நீந்தி விளையாடின. இடையிடையே புழுக்களும் தலைகாட்டின. எந்த விதப் பிரகடனங்களும் இல்லாமல் ஊரவர்கள் நீராகாரம் அருந்தாப் போராட்டத்துக்கு அவர்களை அறியாமலேயே இழுத்து வரப்பட்டிருந்தனர். கால்நடைகள் நச்சுப் பதார்த்தங்களைக் கொண்ட கழிவு நீரைக் குடித்து வீதி வீதியாக இறந்து கிடந்தன.






அப்படி விரைவில் ஒவ்வொரு தெருவிலும் தாங்களும் தாகத்தால் நாவறண்டு வெற்றுடலாக வீழ்ந்து விடுவோமோ என்ற பயம் மெல்லத் துளிர்விட்டது மக்களுக்கு.

''தொழிற்சாலைக் கழிவை நிறுத்த ஆவன செய்யுங்கள்'' என்று எல்லோரும் கை தேயும் வரை எழுதிக்கொடுத்த மனுக்கள் எல்லாம் அதிகாரத்தின் குப்பைக் கூடையை நிறைத்திருந்தன. மக்களின் நியாயமான கோரிக்கைக் குரல்கள் மேலேழும் போதெல்லாம், அதிகாரத்தின் காது 'ஓட்டமற்றிக்காக' செவிடாகிக் போகும் அதிசயம் நிகழ்ந்தது.

பொறுத்துப் பார்த்தவர்கள் பொங்கியெழுந்தார்கள். தண்ணீருக்காக நாவறளும் வரை வீதியில் கோஷம் போட்டார்கள். அவர்கள் தனிநாடு கேட்கவில்லை. தண்ணீர் தான் கேட்டார்கள். ஆனாலும் வந்ததோ சீருடைப் படைகள். அவர்களுக்கு மானுட மொழி புரிவதில்லை. தெரிந்ததெல்லாம் துப்பாக்கியின் மொழி மட்டுமே. துப்பாக்கிகளுக்கு நிறையப் பசி. இப்போதெல்லாம் முன்னரைப் போல தமிழர்களின் இரத்தத்தை குடிக்க முடிவதில்லை. தாகத்தால் சிப்பாய்களின் துப்பாக்கிகள் தவித்துக் கொண்டிருந்தன.

தாகத்தின் வேகம் [illegible] [illegible] என்ற பேதங்களை கடக்கச் செய்திருந்தது. அதற்குத் தேவை உடன்குருதி. அது யாரிடமிருந்தாவது கிடைத்தால் சரி. தண்ணீருக்கான கோஷம் துப்பாக்கி ஏந்தியவர்களின் கண்களுக்கு தமிழீழக் கோஷத்தை ஞாபகப்படுத்தியிருக்க வேண்டும். முன்னரும் ஒரு பொழுதில் சுதந்திர வர்த்தக வலையத்தில் நியாயமான கோரிக்கையோடு போராடிய தொழிலாளர் வர்க்கத்தின் குருதியையும் இன பேதம் பார்க்காமல் இதே துப்பாக்கிகள் ருசிபார்த்திருந்தன. அதனால் எந்தக் கூச்சமும் அவற்றுக்கிருக்கவில்லை.

**எல்லா நினைப்பையும் முதல் வேட்டொலி கலைந்தோடச் செய்தது. கரியவாயோடு சன்னங்களைக் கக்கத் தொடங்கிய துப்பாக்கிகள் குருதிதேடி நாலாபுறமும் அலையத் தொடங்கின. வடக்கு நோக்கி சுடுகலன்கள் திரும்பியிருந்த காலத்தில் கரகோஷம் செய்து "ஜய வேவா" என்று கோஷம் போட்டவர்கள் சிதறிக் கிடந்தார்கள்.**

ஆனாலும் தம்மைநோக்கி தங்களின் படைகளின் துப்பாக்கிகள் நீளும் என்று ஊரவர்கள் ஒருபோதும் நினைத்துப் பார்க்கவில்லை. வடக்கில் குஞ்சுகளும், குருத்துகளும், குமர்களும் இன்னும் எல்லோருமாய் இதே துப்பாக்கிகளுக்கு இரையாகிக்கொண்டிருந்த போது வெடிகொளுத்தி வெற்றி விழாக் கொண்டாடியவர்கள் அல்லவா அவர்கள். அப்படிப் பட்ட தங்களின் மீது சிங்களத் துப்பாக்கிச் சன்னங்கள் பாயாது என்பது அவர்களின் நினைப்பு.

எல்லா நினைப்பையும் முதல் வேட்டொலி கலைந்தோடச் செய்தது. கரியவாயோடு சன்னங்களைக் கக்கத் தொடங்கிய துப்பாக்கிகள் குருதிதேடி நாலாபுறமும் அலையத் தொடங்கின. வடக்கு நோக்கி சுடுகலன்கள் திரும்பியிருந்த காலத்தில் கரகோஷம் செய்து ''ஜய வேவா'' என்று கோஷம் போட்டவர்கள் சிதறிக் கிடந்தார்கள். அவர்களைச் சுற்றி செங்குருதி ஆறாகி ஆறாத சூட்டோடு ஓடி மிச்சமிருந்த நீர் நிலைகளையும் நிணநீராக்கிற்று.

தண்ணீர் கேட்டவர்கள் செந் நீர் சொரிந்திருந்தார்கள். இப்போது அவர்களுக்குத் தெரிந்திருக்கும் சிங்களத் துப்பாக்கிகள் எப்போதும் அப்பாவிகளை மட்டுமே வேட்டையாடும் என்பது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நப்பின்னை



# இலங்கையை இந்தியாவிடமிருந்து காத்தவர் பிரபாகரன்

1991 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ராஜீவ்காந்தியின் சாவைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளை இந்திய அரசு தடை செய்யப்பட்ட இயக்கமாக அறிவித்தது. இந்தத் தடையானது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மீண்டும் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு வருகின்றது. தடையானது இரண்டு ஆண்டுகளுக்கே செல்லுமாதலால் ஈராண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிப்பது வழமையான நடைமுறையாகும்.

### இல்லாத இயக்கத்துக்குத் தடை

2009 ஆம் ஆண்டு மே திங்களில் விடுதலைப் புலிகள் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டதாக இலங்கை அரசு அறிவித்தது. இதனை இந்திய அரசும் ஏற்றுக் கொண்டது. ஆனால் 2010இல் முடிவுற்ற விடுதலைப் புலிகளின் மீதான தடையை, விடுதலைப் புலிகள் இல்லாத நிலையிலும் தொடர்ந்து நீடித்ததோடு 2012இலும் மேலும் இரண்டு ஆண்டுகளுக்குத் தடையை நீடித்துள்ளது இந்திய அரசு. இந்தத் தடையானது 2014இல் மீண்டும் நீடிக்கப்பட்டாலும் வியப்பேதும் இல்லை.

1991இலிருந்து 2010 வரை தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்வதற்காக கூறிய காரணங்களைவிட 2010 இல் இந்திய அரசு கூறிய காரணம் முரண்பாடானது; நகைப்புக்கிடமானதுமாகும். 1987இல் ஏற்பட்ட ராஜீவ்- ஜெயவர்த்தனா உடன்படிக்கையைப் புலிகள் ஏற்றுக் கொள்ளாத நிலையிலும் அவர்கள் சில சமரசங்களுக்கு வரவேண்டியிருந்தமை காலத்தின் தேவையாக இருந்தது.

இதன் பின்பு புலிகளும் பிரேமதாஸவும் பேச்சு மேசையில் உடன்பாட்டுக்கு வந்ததன் அடிப்படையில் 1989இல் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி என்ற பெயரில் அரசியல் அமைப்பைத் தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்தனர். இதன் முதல் மாநாடு 1990இல் வாகரையில் நடைபெற்றது. இந்த அரசியல் கட்சியின் இலட்சியம் 'அகன்ற தமிழீழம்' என்றும் இவ்வகன்ற தமிழீழத்தில் இந்தியாவின் தமிழ் நாடும் உள்ளடக்கப்பட்டுள்ளது என்றும் அதனாலேயே விடுதலைப் புலிகளுக்கான தடை தொடர்வதாகவும் இந்திய அரசு கூறுகின்றது.

### நகைப்புக்கிடமான குற்றச்சாட்டு

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி என்பதில் தமிழீழம் என்ற சொல்லே இடம்பெறவில்லை. அத்துடன் இலங்கையின் அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தின்படி பிரிவினை கேட்கும் கட்சிகள் பதிவு செய்யப்பட முடியாதவைகளாகும். இந்த நிலையில் பதிவு செய்யப்பட்ட கட்சி அகன்ற தமிழீழத்தை நிறுவுவதற்கு உள்ளது என்று கூறுவது முரணானது மட்டுமல்ல, நகைப்புக்கும் இடமானது. இதுமட்டுமல்ல தமிழீழ விடுதலைப் புலிகள் என்றும் அகன்ற தமிழீழத்தை ஆதரித்தவர்களல்லர். அவர்கள் அதற்கு முற்றிலும் எதிரானவர்கள். இலங்கைத் தீவினுள் அடங்கிய தமிழர்களின் வரலாற்றுத் தாயகத்தை வரைபடமாகக் கூட வெளியிட்டுத் தமிழீழம் என விடுதலைப் புலிகள் அறிவித்திருந்தனர். சரியான காரணங்களைக் கூற முடியாமையால் அகன்ற தமிழீழமே விடுதலைப் புலிகளின் திட்டம் என்று இந்தியா கூறுவது ஏற்றுக் கொள்ளப்பட முடியாத நகைப்புக்கிடமான குற்றச்சாட்டு.

இவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியாத, வலுவற்ற காரணத்தைக் கூறி இந்தியா, விடுதலைப் புலிகளைத் தடை செய்வதால் உண்மையான காரணம் எதுவாக இருக்கும் என்ற கேள்வி எழுவது இயற்கையே.

ராஜீவ் காந்தி ஈழத் தமிழர்களால் கொல்லப்பட்டதாலேயே தமிழ் மக்களுக்கு எதிரான போரில் மஹிந்த அரசுக்கு இந்தியா உதவியது என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. இதனை இந்தியா மறுக்கின்றது.

இந்திராகாந்தியை சீக்கிய சமூகத்தவர் கொன்றனர் என்ற காரணத்தால் அந்தச் சமூகத்தைப் புறக்கணித்துவிட்டோமா? இல்லையோ! சீக்கியரான மன்மோகன் சிங்தானே எமது பிரதமர் என்று விளக்கம் கொடுக்கின்றது இந்தியா. எனவே இதைவிட வேறு காரணம் இருக்கின்றதா என்றால் இருக்கின்றது என்பதுதான் உண்மையாகும்.

### இந்தியாவின் அடாவடிகள்

பாரத பூமி புண்ணியபூமி என்றும் உலகத்துக்கு அறவழியைக் காட்டியது என்றும் கூறுவர். இந்தியா பல நாடுகளின் விடுதலைக்குக் குரல் கொடுத்த நாடு என்று புகழுவர். தென்னாபிரிக்கவின் விடுதலைக்குக் குரல் கொடுத்தது இந்தியா. நமீபியாவின் விடுதலையையும் வலியுறுத்தியது. பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு முதன்முதலில் அலுவலகம் திறக்க இந்தியாதான் இடம் கொடுத்தது. அணிசேரா அமைப்பை உருவாக்கி வலுதாக்கியது இந்தியா என்று கூறுவர். இப்படிப்பட்ட இந்தியா ஆக்கிரமிப்புக்கு எதிரானது என்றும் கூறுவர். ஆனால் இந்தியா தன்னைச் சுற்றியுள்ள நாடுகளை எவ்வாறு கவனித்துக் கொள்கின்றது கவனித்துக் கொண்டது என்பது இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

1947இல் விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் இலக்கு காஷ்மீராகும். மன்னராட்சியில் இருந்த காஷ்மீரை இந்தியாவின் பகுதியாக ஆக்கிரமித்தது நேருவின் ஆட்சி. மறுபுறத்தே பாகிஸ்தான் காஷ்மீரை தனதாக்க முயற்சித்தது. இதில் இந்திய- பாகிஸ்தான் போர் ஏற்பட்டு காஷ்மீரின் சிறு பகுதியை பாகிஸ்தானும் பெரும்பகுதியை இந்தியாவும் ஆக்கிரமித்துக் கொண்டன. பின்னர் நடந்த போரில் காஷ்மீரின் பகுதியைச் சீனாவும் ஆக்கிரமித்துக் கொண்டது. ஐ.நா. சபை காஷ்மீரில் மக்கள் கருத்துக் கணிப்பு நடைபெறவேண்டும், மக்கள் விருப்பு நிறைவேறவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியது. இதனை இந்தியா ஏற்கவில்லை என்பதும் இங்கு கவனிக்கப்படவேண்டும். இன்றுவரை அங்கே விடுதலைக்கான போராட்டங்கள் காஷ்மீர் மக்களால் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இந்தப் போராட்டங்களுக்கு பாகிஸ்தான் பயங்கரவாதம் என்ற முலாம்பூசி இராணுவ அடக்குமுறைக்குள் காஷ்மீரை கடந்த 67 ஆண்டுகளாக இந்தியா ஆண்டு வருகின்றது.

காஷ்மீரைத் தொடர்ந்து 'சிக்கிம்' என்ற மன்னராட்சி நாடு இந்தியாவினால் திடீரென விழுங்கப்பட்டது. இந்தியாவின் வட எல்லையில் மேற்கு வங்கத்துக்கு வடக்கே பூட்டானுக்கும் நேபாளத்துக்கும் இடையே சீனாவுக்கு அருகே இந்த சிக்கிம் இருந்தது. 1975 ஏப்ரல் திங்கள் 22ஆம் நாள் திடீரென இந்தியப் படைகள் சிக்கிம் நாட்டை ஆக்கிரமித்துக் கொண்டன. அதே ஆண்டு மே திங்கள் 16 ஆம் நாள் இந்தியாவின் 22 ஆவது மாநிலமாக சிக்கம் சேர்க்கப்பட்டது. இது இரண்டாவது ஆக்கிரமிப்பு.

### பொருளாதார ஆக்கிரமிப்பு

தொடர்ந்து பூட்டான், நேபாளம் ஆகிய நாடுகளை நோக்கிய நகர்வுகள் நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் உலக நாடுகளின் கண்டனம் தொடரும் என்பதால் சற்று காலம் தாழ்த்தியது இந்தியா. உள்நாட்டு அரசியல் குழப்பங்களால் இவற்றை முழுமையாக ஆக்கிரமிக்க முடியாத நிலையில் இந்த நாடுகளில் பொருளாதாரத்தை ஆயுதமாக்கி பொருளாதார ஆக்கிரமிப்பை நடத்தி வந்தது.

பூட்டானை மன்னர் ஆட்சி செய்தாலும் அதன் வெளிநாட்டுப் பாதுகாப்பு இந்தியாவின் கண்காணிப்பிலேயே இருந்தது. இதே போன்றதே மன்னராட்சி நடைபெற்ற நேபாளத்தின் நிலையுமாகும். நேபாளம் கடல் வழிப்போக்குவரத்துக்கு முழுமையாக இந்தியத் துறைமுகங்களையே நம்பியிருந்தது. இதனால், நேபாளத்தின் பொருளாதாரத்தை வளர்ச்சி காணாதவாறு தன்னுடைய கட்டுப்பாட்டில் இந்தியா வைத்திருந்தது.

மன்னராட்சி நடைபெற்றாலும் நேபாளத்தில் நாடாளுமன்றம் இருந்தது. ஆனால் இந்த நாட்டின்



ராஜீவ்- ஜெயவர்த்தனா உடன்படிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதமரை தேர்ந்தெடுக்கும் கட்டுப்பாட்டையும் இந்தியாவே கொண்டிருந்தது. மன்னராட்சி நீக்கப்பட்ட பின்னரும் இதே வகையிலேயே ஆக்கிரமிப்பை இந்தியா தொடர்ந்தது. தேர்தலில் மாவோயிஸ்டுகள் வெற்றி பெற்றிருந்தும் இந்தியாவின் கையே மேலோங்கியுள்ளது. அதனால்சீனாவுடன்நேபாளத்து உறவு வளர்ந்து வருகின்றது.

பூட்டானிலும் மன்னராட்சி அகன்று விட்டது. அங்கு தேர்தல் மூலம் ஆட்சி நடத்தியவர்கள் சீனாவுடன் உறவை வளர்த்துக் கொண்டதைச் சகிக்காத இந்தியா தான் பூட்டானுக்கு வாங்கி வந்தமானியங்களை நிறுத்தியது. இதனால் அங்கு பொருளாதார தாழ்வு ஏற்பட்டது. அங்கு நடைபெற்ற தேர்தலில் ஆட்சியிலிருந்த கட்சி தோல்வியைத் தழுவியது. இந்திய சார்புக் கட்சி ஆட்சிக்கு வந்தது. உடனே, நிறுத்தப்பட்ட மானியங்களை மீண்டும் வழங்கத் தொடங்கியுள்ளது இந்தியா. ஆனால் சீனாவுடன் ஏற்பட்ட உறவை இதுவரை பூட்டான்முறித்துக் கொள்ளவில்லை. முறித்தும் கொள்ளாது என்றே அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

### இலங்கை மீதான இந்தியாவின் கண்

இவை எல்லாம் இந்தியாவின் வடபுலத்தில் என்றால் தென்புலத்தில் இலங்கை மீது என்ன நிலையை இந்தியா கொண்டிருந்தது என்பது ஆய்வுக்குரியதாகும்.

வெள்ளையர்கள் வெளியேறிய பின்பு 1956 வரை இலங்கை அமெரிக்க சார்பு நாடாகவே இருந்துள்ளது. 1956இல் பண்டாரநாயக்கா ஆட்சிக்கு வந்த பின்பு வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டது. பண்டாரநாயக்கா இந்தியப் பிரதமர் நேருவின் கொள்கைகளுடன் ஒத்துப் போகும் வகையில் வெளியுறவுக் கொள்கையை மாற்றியமைத்தார். ஆனால், பண்டாரநாயக்கா 1959 இல் சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர் ஆட்சிக்கு வந்தவர்களின் வெளியுறவுக் கொள்கையில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இந்த மாற்றங்களை இந்திய பாகிஸ்தான் போரில் பாகிஸ்தானுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்ததன் மூலமும் இந்திய சீனப்போரில் சீனாவுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்ததன் மூலம் காணக் கூடியதாக இருந்தது. எனவேதான் இந்திய தனது கவனத்தை தீவிரமாக இலங்கைத் தீவை நோக்கித் திருப்பியது.

### பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவின் ஐயம்

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் முக்கிய அமைச்சரான பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இராணுவத்தினரை யூகோஸ்லாவிய நாட்டுக்குக் கெரில்லா ஆயுதப் பயிற்சி பெற அனுப்பியிருந்தார். எதிரி நாடுகளே கிடையாத எமக்கு ஏன் இந்தக் கெரிலாப் பயிற்சி என்று எதிர்க் கட்சிகள் கேள்வி எழுப்பிய போது பீலிக்ஸ் டயஸ் நாயக்கா கூறியது இங்கு நினைவு கொள்ளத்தக்கதாகும்.

''நாம் எல்லாருடனும் நட்பாகத்தான் இருக்கின்றோம். இருக்க விரும்புகின்றோம். ஆனால், சில வேளைகளில் ஏதாவது ஒரு நாடு எம்மீது ஆக்கிரமிப்புச் செய்தால் பெரிய நாட்டை எதிர்த்துச் சின்னஞ்சிறிய நாம் போரிட முடியாது. எனவே நாம் பின்வாங்கி கெரில்லாப் போர் நடத்தக்கூடிய மலையகத்திலிருந்து போர் நடத்தி எதிரிகளை விரட்ட வேண்டும். அதற்காகவே இந்தப் பயிற்சி'' என பீலிக்ஸ் கூறினார். அவர் குறிப்பிட்டது இந்தியாவை என்பதையும் நினைவு கூறவேண்டியது இன்று சாலப்பொருந்தும்

### டில்லியின் நோக்கம்

இலங்கைத்தீவில் ஏற்பட்ட இன ஒடுக்குமுறையும் அதனால் ஏற்பட்ட தமிழ் தேசியத்தின் எழுச்சியும் இந்தியாவில் ஆட்சியாளர்களுக்கு ஒரு வாய்ப்பாக அமைந்து விட்டது. 1977, 1983 ஆகிய ஆண்டுகளில் தமிழ் மக்கள் மேல் ஏவி விடப்பட்ட வன்கொடுமைகள் தமிழ் இளைஞர்களின் தமது தாயகத்தை அடைவதற்கான சிந்தனைக்கு உரமிட்டன. இந்த எழுச்சியை இந்தியா தனக்குச் சார்பாக காய்களை நகர்த்தி தனது எண்ணங்களுக்கு ஏற்றவாறு கொழும்பு ஆட்சியாளர்களை ஆட்டிப் படைக்க முற்பட்டது. எழுச்சி பெற்ற இளைஞர்கள் பல குழுக்களாக இயங்கிய போது அவற்றை ஒற்றுமையாக்காமல் அவர்களைப் பிரித்து வளர்ப்பதிலேயே அதிக அக்கறை காட்டியது இந்திய அரசு.

பயிற்சி வழங்கியதிலேயும் இயக்கங்களுக்கிடையே வேறுபாட்டையே காட்டியது. தமது சொல்லுக்குக் கட்டுப்படக் கூடியவர்கள் யார்? யார்? என்று கண்டறிந்து அவர்களுக்கு உயர்ந்த பயிற்சியும் விடுதலை உணர்வுடன் தியாக உறுதியுடன் இருந்த விடுதலைப் புலிகளுக்குக் குறைந்தளவு பயிற்சிகளுமே வழங்கினர்.

விடுதலைப் புலிகளின் தலைவர் தமிழ்த் தேசியத்தை என்றுமே விட்டுக்கொடுக்க மாட்டார் என்பது இந்திய புலனாய்வாளர்களால் இந்திய அரசுக்கு அறிவிக்கப்பட்ட செய்தியாகும்.

தமிழ் இளைஞர்களின் எழுச்சியை வைத்து ஜே.ஆரின் ஆட்சியை தனது கைக்குள் வைத்திருக்கவே இந்திரா காந்தி முதலில் திட்டமிட்டிருந்தார். ஆனால் அவர் 1984 இல் கொல்லப்பட்ட அரசியல் அனுபவமற்ற ராஜீவ் பிரதமரானார்.

இவரது இலங்கை பற்றிய அணுகுமுறை இந்திராவின் அணுகுமுறைக்கு முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. இவரது காலத்திலேதான் தமிழ் இயக்கங்களுக்கிடையே மோதல்கள் அதிகரித்தன. இந்தியப் புலனாய்வாளர்கள் மோதல்களை நுட்பமாகத் தூண்டி விட்டனர்.

''இந்திய இராணுவத்தின் படை வீரனாக இருப்பதே பெருமை'' என்று இயக்கம் ஒன்றின் தலைவர் கூறியது இங்கு நினைவில் கொள்ளப்படத் தக்கதாகும்

இயக்கங்கள் ஒற்றுமையாகப் போராடினால் தமிழீழம் மலர்வதைத் தடுக்க முடியாது என்று நன்குணர்ந்த இந்தியா இயக்க மோதல்களை வளர்த்தது மட்டுமல்ல, தனக்கு ஆதரவாக தனியான குழு ஒன்றையும் பிறிதாக ஏற்படுத்திக் கொண்டது.

இந்தக் குழுவைத்தான் 1987 இல் ஜே.ஆர்.-ராஜீவ் உடன்படிக்கை ஏற்பட்டதும் இங்கே கூட்டி வந்து இருத்தியது. இந்தக் குழு இன்றும் இந்தியாவில் போதிய பொருளியல் வளர்ச்சியுடன் இருக்கின்றது. என்பதும் நோக்கற்பாலதாகும்.



தமிழ் மக்கள் தமிழீழத்தை அமைத்துவிட்டால் பின்னர் தமிழீழம், சிறிலங்கா ஆகிய நாடுகளை தனித்தனியே ஆக்கிரமிப்பது இலகுவான ஒன்றல்ல. எனவே தமிழீழம் ஏற்பட முன்னர் முழு இலங்கைத் தீவையும் ஆக்கிரமிப்பதே இந்தியாவின் நோக்கமாகும்.

### ஆக்கிரமிப்பு எண்ணம்

தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதாக இருந்திருந்தால் தமிழர்களையும், சிங்கள ஆட்சியாளர்களையும் ஒரே மேசையில் வைத்து இந்தியா நடுநிலைமையுடன் நின்று தீர்வைக் கண்டிருக்க முடியும். உண்மையில் இந்தியாவின் நோக்கம் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதல்ல. தமிழர் பிரச்சினையை வைத்துக் கொண்டு இலங்கைத் தீவை ஆக்கிரமிப்புச் செய்வது தான் அவர்களின் நோக்கமாக இருந்தது.

எனவேதான், தானாக ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொண்டு இலங்கைக்கு லட்சத்துக்கும் அதிகமான படைகளையும், நவீன போர் டாங்கிகளையும் கொண்டு வந்து குவித்தது. விடுதலைப்புலிகள் தவிர்ந்த இதர குழுக்கள் இந்தியா–இலங்கை உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டிருந்தன. விடுதலைப்புலிகள் ஒரு சமரசத்தை ஏற்று ஆயுதங்களை ஒப்படைக்கச் சம்மதித்திருந்தனர்.

''வெறும் 2,000 சாரம் கட்டிய பெடியங்கள்'' என்று ராஜீவ் காந்தியால் கூறப்பட்ட புலிகளை அடக்குவதற்கென்றே இந்தியப் படைகள் வந்ததாகக் கூறப்பட்டது. ஆனால் உண்மை இதற்கு முற்றிலும் மாறுபட்டதாகும். முதல் நோக்கம் புலிகளை அழிப்பதாக இருந்தாலும் உள்நோக்கம் வேறானதாகும். 2000 பெடியங்களை அழிப்பதற்காக ஒரு லட்சம் படைகள் தேவையா? போர் டாங்கிகள் தேவையா? என்றால், எவருக்கும் இலகுவில் புரியும் இந்தப் படைகளின் நோக்கம் வேறு பெரிய ஆக்கிரமிப்பு என்பது.

தமிழ் மக்கள் தமிழீழத்தை அமைத்து விட்டால் பின்னர் தமிழீழம் சிறிலங்கா ஆகிய நாடுகளை தனித்தனியே ஆக்கிரமிப்பது இலகுவான ஒன்றல்ல. எனவே தமிழீழம் ஏற்பட முன்னர் முழு இலங்கைத் தீவையும் ஆக்கிரமிப்பதே இந்தியாவின் நோக்கமாகும்.

### உள்நோக்கம்

இலங்கையின் வடக்கு -கிழக்குப் பகுதிகளைத் தனக்கு ஆதரவான குழுவிடம் ஒப்படைத்த பின்னர் இந்தியாவுக்கு ஆதரவான மலையகத் தமிழ்த் தலைவர்களையும் கைக்குள் வைத்துக் கொண்டு உணவுப் படைகளைக் கொண்டு மலையகத்தில் முரண்பாடுகளை ஏற்படுத்தி மலையகத்தை நோக்கிப் படைகளை நகர்த்தவே இந்தியா திட்டமிட்டிருந்தது. அதன் பின்னர் சில சிங்களத் தலைமைகள் மூலம் சிறிலங்காவையும் ஆக்கிரமிக்கவே இந்தியா திட்டமிட்டிருந்தது.

இந்தியாவின் திட்டத்தை நன்குணர்ந்த ஒரே தலைவராகப் பிரபாகரனே திகழ்ந்தார். இவ்வாறு அவர் உணர்ந்ததாலேயே போர் தொடங்குவதற்கு முன்னரே தலைவர் பிரபாகரனை அழித்துவிட இந்தியா திட்டமிட்டிருந்தது. இதைத் தனது நூலில் இந்திய அமைதிப் படைத் தளபதி குறிப்பிட்டிருந்தார். விடுதலைப் புலிகளுக்கும், இந்தியாவுக்குமிடையே போர் தொடங்கு முன்னர் பலாலியில் பேச்சு நடந்த பொழுது இந்தியத் தூதுவர் டிக்சிற் பிரபாகரனை சுட்டுவிடும்படி கோரியதையும் தனக்கு இந்திய இராணுவத் தளபதியைத் தவிர வேறு யாரும் கட்டளையிட முடியாதென அவர் மறுத்ததையும் அவர் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். ராஜீவ் காந்தியின் சாவுதான் விடுதலைப் புலிகளின் மீதான கோபம் என்பது இதன் மூலம் அடிபட்டுப் போகின்றது. இந்தியாவின் ஆக்கிரமிப்பை முற்றாகப் புரிந்து கொண்ட பிரபாகரன் அதனைத் தடுக்கவே பிரேமதாஸவுடன் ஓர் உடன்படிக்கைக்கு வந்தார். இந்தியாவின் இந்த ஆக்கிரமிப்பை அறிந்த ஒரே சிங்களத் தலைவராகப் பிரமேதாஸ விளங்கினார்.

அதனாலேயே பிரபாகரனுடன் உடன்பாடு கண்ட பிரேமதாஸ இந்தியப் படைகளை வெளியேறுமாறு பணித்தார். இந்தியப் படைகள் வெளியேறிய பின் புலிகளை அழிக்கலாம் என்பது பிரேமதாஸவின் திட்டமாகும்.

இந்தியாவின் ஆக்கிரமிப்புக்குள் இலங்கைத் தீவு சிக்குமானால் இந்திய ஆதிக்கத்துக்குள் இலங்கைத் தீவில் இருக்கும் தமிழர்கள் இந்தியத் தமிழ்நாட்டுத் தமிழர்களின் அடிமைகளாகவர் என்பதை ஏற்கமுடியாத தலைவர் பிரபாகரன் தமிழீழ விடுதலைக்கு இது முற்றிலும் எதிரானது என்று கருதி இந்திய ஆக்கிரமிப்பை எதிர்த்தனர். இதே போன்றே சிறிலங்காவும் ஒரு மாநிலமாக இந்தியாவின் ஆளுகைக்குள் வந்திருக்கும்.

இந்தியாவின் இந்த நோக்கத்தை முறியடித்தவர் பிரபாகரன் என்பதாலேயே விடுதலைப் புலி களைத் தொடர்ந்து தடை செய்கிறது இந்தியா. இதே காரணத்தால் தான் விடுதலைப் புலிகளை முற்றாக அழிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் சிறிலங்காப் படைகளுக்கு முழு உதவியும் வழங்கினார்கள். எனவேதான் இந்தியாவின் போரை சிறிலங்கா நடத்தியது என்று மஹிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார். சுருக்கமாகக் கூறுவதானால் முழு இலங்கையையும் ஆக்கிரமிக்க முற்பட்ட இந்தியாவின் திட்டத்தைத் தடுத்து தமிழீழத்துக்கும், சிறிலங்காவுக்குமான போரை நடத்தியவர் பிரபாகரன். இவ்வாறு சிறிலங்காவை ஆக்கிரமிப்பிலிருந்து காப்பாற்றப் போராடியவர் பிரபாகரன். ஆனால் இவ்வாறு தனது திட்டத்தை முறியடித்த விடுதலைப் புலிகளை அழிக்க இந்தியா போட்ட திட்டத்துக்கு முழு ஒத்துழைப்புக்கு கைகொடுத்து விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரை மஹிந்த ராஜபக்ஷ முன்னெடுத்தார் . வெற்றியும் கண்டார்.

இப்போது இலங்கையை ஆக்கிரமிப்பதற்கான கதவுகள் இந்தியாவுக்கு முழுஷமயாகத் திறந்து விடப்பட்டுள்ளன. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன் 28 07 2013 ஞாயிற்றுக்கிழமை

# பற்றி எரியுமா கற்பூரப் புல்வெளி?

ஞாயிறு காரம்

சந்திரசேகர ஆஷாத்

கற்பூரப்புல்வெளி- இது வன்னி மக்களின் விடுதலை உணர்வோடு ஒன்றிக் கலந்து சங்கமித்துவிட்ட ஜீவபூமி. இது ஆயிரமாயிரம் தமிழ் வீரர்களின் குருதியால் சிவந்து கனிந்து போயுள்ள வரலாற்று மண். கிராமத் தலைவன் ஒருவரின் அனுசரணையுடன் முள்ளியவளை கமுகு மரங்களைத் தறித்து ஒல்லாந்தர் கொள்ளையிட முயன்றபோது கிளர்ந்தெழுந்த அந்த மண்ணின் மைந்தர்கள் கற்பூரப் புல்வெளியில் தான் எதிரிகளை முகம் கொண்டனர். துப்பாக்கியுடன் குமிறி வந்த டச்சுப் படைகளை வாளாலும் வேலாலும் எதிர்த்துப் போரிட்டு விரட்டியடித்து வீர வரலாறு படைத்தனர்.

முல்லைத்தீவுக் கோட்டையிலிருந்து முன்னேறி வன்னியை விழுங்க வந்த ஒல்லாந்தரை மாவீரன் பண்டாரவன்னியன் கற்பூரப் புல்வெளியில் வைத்தே. தோற்கடித்து விரட்டினான் அதுமட்டுமன்றி முல்லைக் கோட்டையையும் கைப்பற்றி சாதனை படைத்தான். குளக்கோட்ட மன்னன் காலத்திலிருந்து எவருக்கு வணங்கா மண்ணாக முள்ளியவளைப் பற்று, கரைதுறைப்பற்று, தென்னமரவாடிப் பற்று, வெருகல்பற்று என வன்னிமைகள் தலை நிமிர்ந்து நின்றன. சங்கிலி மன்னனின் தந்தையான பராஜசேகரன் தன் கடைசி நாள்களில் அரண்மனையமைத்து முள்ளியவளையில் வாழ்ந்தமைக்கு ஆதரமாக இன்றும் பரராஜசேகரமேடு காட்சியளிக்கிறது. அந்த மன்னனின் மெய்ப் பாதுகாவலர்களான கற்கோளப் படையினரின் வாரிசுகள் இன்னும் முள்ளியவளையில் வாழ்கின்றனர். கற்கோளப் படையினரே போரில் கொடியேற்றி முன் செல்லும் வீரமறவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வன்னி வீரர்களும், கற்கோளப் படையினரும் கரங்கோர்த்து நின்று அந்நியரை ஓட ஓட விரட்டியடித்த வரலாற்றை கற்பூரப் புல்வெளியின் ஒவ்வொரு புல் நுனியும் புல்லடி வேர் முனைகளும் பொருத்தி வைத்துள்ளன.

அத்தகைய மகத்துவம் பெற்ற வீரக்களவெளியைக் கபளிகரம் செய்து தமிழனின் விடுதலை வரலாற்றை துடைத்தழிக்க முயல்கின்றனர். சில சிங்கள பௌத்த பேரினவாதிகளின் பாதந்தாங்கிகள்.

ஆம்! இன்று முஸ்லிம் மக்களைக் குடியேற்றும் முகமாக கற்பூரப் புல்வெளி கனகர வாகனங்கள் மூலம் அழிக்கப்படுகிறது.

கற்பூரப் புல்வெளி வன்னி மக்களின் உணர்வுகளில் ஒன்றிவிட்ட ஜீவநிலம். இதைத் தீண்டுபவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் வன்னி மக்களின் தன்மானத்தில் வீரவரலாற்றில் விடுதலை உணர்வில் கை வைக்கிறார்கள் என்பதுதான் அர்த்தம்.

இதை வீரம் செரிந்த வன்னி மக்கள் எந்தக் காரணம் கொண்டு அனுமதிக்கப் போவதில்லை. வன்னியில் தமிழ் மக்களுடன் சகோதரர்களாக வாழ்ந்த முஸ்லிம் மக்களும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

ஆனால் அமைச்சர் ரிஷாத் பதியுதீனும் அவரின் ஆதரவாளர்களும் தமிழ்- முஸ்லிம் மக்களிடையே முரண்பாடுகளையும் மோதல்களையும் ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளும் ஒரு நீண்ட நிகழ்ச்சி நிரலில் இது ஒரு பகுதியென்றே வன்னி மக்கள் திட்டவட்டமாக நம்புகின்றனர்.

ஏற்கனவே தமிழ் மக்களுக்குச் சொந்தமான முள்ளியவளை செல்வபுரம் பகுதியில் முஸ்லிம் மக்களைக் குடியேற்ற எடுக்கப்பட்ட முயற்சிகள் மக்கள் எதிர்ப்பின் காரணமாக முறியடிக்கப்பட்டன. பதிலடியாக தமிழ் மக்களின் சில குடிசைகள் இரவோடிரவாகத் தீக்கிரையாக்கப்பட்டன. எனினும் தமிழ் மக்கள் பொறுமை காத்து மோதல்களைத் தவிர்த்தனர்.

பின்பு வனப்பரிபாலன இலாகாவாலும் விடுதலைப் புலிகளாலும் வனவளத்தைப் பாதுகாக்கும் நோக்குடன் நீரூற்றி பாதுகாத்து வளர்க்கப்பட்ட தேக்கம்காட்டில் அதை அழித்து முஸ்லிம்களைக் குடியேற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இப்போது கற்பூரப் புல்வெளி இலக்கு வைக்கப்பட்டுள்ளது. இங்கு நாம் கவனிக்க வேண்டிய முக்கிய பிரச்சினை முஸ்லிம்களின் மீளக்குடியேற்றம் என்ற பேரில் அமைச்சர் ரிஷாத் பதியுதீனால் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு முயற்சிகளும் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் மோதல்களை ஏற்படுத்தும் வகையில்இருப்பதாகும். எப்போதுமே இலங்கை அரசு தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையே முரண்பாடுகளையும் மோதல்களையும் ஏற்படுத்துவதில் தீவிர அக்கறை காட்டி வருகிறது.

இரு தரப்பினரும் அடக்கியொடுக்கப்படும் சிறுபான்மையினர் என்ற வகையிலும் தமிழ் பேசும் மக்கள் என்ற வகையில் ஐக்கியப்பட்டு விடக்கூடாது என்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது அரசு. அந்த வேலைத் திட்டத்தை நிறைவு செய்ய சில முஸ்லிம் தலைவர்கள் முன்னின்று செயற்பட்டு வருகின்றனர். அவர்களில் அமைச்சர் ரிஷாட் பதியூதீனுக்கு முக்கிய இடம் உண்டு. ஏற்கனவே முஸ்லிம் காங்கிரஸைப் பிளவுபடுத்தி முஸ்லிம் சமூகத்தைப் பலவீனப்படுத்தி அரசுக்கு வலுச் சேர்த்த பெருமை இவருக்குண்டு.

அண்மைக்காலமாக முல்லை மாவட்டத்திலும் மன்னார் மாவட்டத்திலும் சிங்களக் குடியேற்றங்கள் மூலம் வடக்கை சிங்கள மயப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் ரிஷாட் பதியுதீன் அவற்றைத் தடுத்து நிறுத்த எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. மாறாக தமிழ் மக்களின் நிலங்களில் முஸ்லிம்களைக் குடியேற்றும் முயற்சிகள் மூலம் சிங்களக் குடியேற்றங்களிலிருந்து முஸ்லிம் மக்களின் கவனத்தைத் திசை திருப்பவே அவர் முயற்சிக்கிறார். தமிழ் முஸ்லிம் முரண்பாடுகளை உருவாக்க முயல்கிறாரோ என்ற சந்தேகமும் எழுகிறது.

அண்மையில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் மன்னார் முசலிப் பிரதேசத்தில் 6,000 சிங்களக் குடும்பங்களைக் குடியேற்றுவது தொடர்பாக ஓர் ஆலோசனைக் [illegible] [illegible] முசலிப் பிரதேசத்தில் முள்ளிக்குளம், மடிச்சுக்கட்டி, சிலாவத்துறை என்பன தமிழ் முஸ்லிம் மக்கள் பரம்பரை பரம்பரையாக வாழும் பிரதேசங்கள். இவற்றில் பெரும் பகுதி ஏற்கனவே கடற்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டு அங்கு அவர்களின் குடும்பங்கள் குடியமர்த்தப் பட்டுள்ளன. ஆனால் அந்த நிலங்களின் பாரம்பரிய குடியிருப்பாளர்களாகிய தமிழ், முஸ்லிம் மக்கள் தங்கள் சொந்தக் காணிகளில் குடியேற அனுமதிக்கப்படவில்லை. இப்படியான நிலையிலேயே அந்தப் பகுதியில் சட்டபூர்வமாக 6,000 சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்படவுள்ளன.

அமைச்சர் ரிஷாட் பதியுதீன் அது பற்றி வாய் திறக்காமலே தமிழ் மக்களின் காணிகளில் முஸ்லிம்களைக் குடியேற்ற முயற்சி கள் மேற்கொண்டதை மறந்துவிட முடியாது. மணலாற்றில் கொக்கிளாய், மண்கிண்டி ஆகிய பகுதிகளில் முஸ்லிம்களின் காணிகள் சிங்களவரால் அபகரிக்கப்படுகின்றன. அதுபற்றியெல்லாம் அமைச்சர் கண்டு கொள்வதேயில்லை.

ஆனால் முள்ளியவளையிலும் கற்பூரப் புல்வெளியிலும் முஸ்லிம் மக்களைக் குடியேற்ற முனைகிறார். முல்லை மாவட்டத்தில் ஊற்றங்கரையிலோ நீராவிப்பிட்டியிலோ நகரப் பகுதியிலோ முஸ்லிம்கள் மீளக்குடியமர்வதை எந்த ஒரு தமிழனும் எதிர்க்கவில்லை. எதிர்க்கப் போவதுமில்லை. ஏனெனில் அது முஸ்லிம்கள் ஏற்கனவே குடியிருந்த இடங்கள். ஆனால் வேண்டுமென்றே தமிழ் மக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் மோதல்களை ஏற்படுத்தும் வகையில் தமிழர்களின்நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவது தொடர்பாக முஸ்லிம் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

அதிலும் கற்பூரப் புல்வெளி தமிழர்களின் தன்மான உணர்வுடன் ஒன்றிவிட்ட ஒரு மையம். இதில் முஸ்லிம் மக்களைக் குடியேற்ற முயல்வது நிச்சயமாக நல்ல நோக்கத்துடன் இருக்க முடியாது. வடக்கிலிருந்து முஸ்லிம்கள் விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்டமை மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் ஊர்காவற்படையினர் சிறப்பு அதிரடிப் படையினருடன் இணைந்து கூட்டம் கூட்டமாக தமிழ் மக்களைக் கொன்று குவித்தமை போன்ற விரும்பத்தகாத சம்பவங்களால் தமிழ் முஸ்லிம் மக்களிடையே ஏற்பட்ட கசப்புணர்வு நீங்கி மீண்டும் தமிழ் பேசும் மக்களாக நாம் ஐக்கியப்பட்டு வரும் நிலையில் சிங்கள இன ஒடுக்குமுறையாளர்களின் கையாள்களான சிலரால் மீண்டும் முரண்பாடுகள் ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவை தொடர்பாகத் தமிழ், முஸ்லிம் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். கற்பூரப் புல்வெளி தமிழ் மக்களின் பாரம்பரிய அடையாளச் சின்னம் என்பது மட்டுமல்ல. விடுதலையை விரும்பும் சகல மத இனத்தவர்களுக்கும் ஓர் உணர்வு மையமாகும். அதைப் பாதுகாப்பது தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல முஸ்லிம் மக்களுக்கும் கூட ஒரு முக்கிய உரிமையாகும். கற்பூரப் புல்வெளி தீயிடப்பட்டு அது பற்றியெரியுமானால் அதன் ஒவ்வொரு பொறியும் தமிழ் மக்களின் நெஞ்சில் பெரும் காட்டுத்தீயாகக் கொழுந்துவிட்டெரியும். அது சாதாரண தீயாக அமையாது.

சகலநயவஞ்சங்களையும் கொடுமைகளும் சுட்டெரிக்கும் புனித வேள்வித் தீயாகவே அது அமையும்.




கற்பூரப் புல்வெளி வன்னி மக்களின் உணர்வுகளில் ஒன்றிவிட்ட ஜீவநிலம். இதைத் தீண்டுபவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் வன்னி மக்களின் தன்மானத்தில் வீரவரலாற்றில் விடுதலை உணர்வில் கை வைக்கிறார்கள் என்பதுதான் அர்த்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டத்துயானை

## திரை விமர்சனம்



ஒருவன் சென்னை செல்வதற்காக ... ஒரு பஸ்ஸில் ஏறி அமர்கிறான், அ... நேரே எகிப்து பிரமிட்களின் முன்னால் போய் நிற்கிறது, அவனும் சக பயணிகளும் எந்த வித அதிர்ச்சியும் அடையாமல், பஸ்ஸை விட்டு கீழே இறங்கி பிரமிட்களின் மீது சரசரவென ஏறுகிறார்கள், திடீரென்று பிரமிட்டுக்கு நடுவில் இருக்கும் ஓர் ஓட்டையை பார்க்காமல் ஏறுகையில் தொப்பென்று அவன் மட்டும் விழுகிறான், அங்கே ஓர் காரின் இருக்கையில் விழுந்தபடியே போய் அமர்கிறான், அவனுக்கு பக்கத்தில் ஒரு கவர்ச்சித்தாரகை சிரித்த படி வரவேற்கிறாள்.இருவரும் காரை இயக்கி, சுவீடன் நகரில் ஒய்யாரமாக ஓட்டி செல்கிறார்கள். ஓர் இடத்திற்குப் போனதும், அங்கே ஓராயிரம் பட்டாம் பூச்சிகள் பறந்து வந்து இருவரையும் காரோடு சேர்த்து தூக்கி சென்று மேகத்தின் மீது அமர்த்துகின்றன......

இப்படி ஒரு கதையை இந்த காலக்கட்டத்தில் ஒரு குழந்தைக்குச் சொன்னால் கூட, அது நம்மை மேலும் கீழும் பார்த்து,யதார்த்தம் இடிக்கிதே எனத் தலையைச் சொறியும். ஆனால் இது போன்று ஓர் யதார்த்தத்தோடு பொருந்தாத கதை தான் பட்டத்து யானை பட ரூபத்தில் வந்திருக்கிறது. ஆனாலும் இந்தப் படம் பார்ப்போரை ரசிக்க வைக்கிறது,

> இப்படி ஒரு கதையை இந்த காலக்கட்டத்தில் ஒரு குழந்தைக்குச் சொன்னால் கூட, அது நம்மை மேலும் கீழும் பார்த்து, யதார்த்தம் இடிக்கிறதே எனத் தலையைச் சொறியும்.

வழக்கமான அண்மைக்காலத் தமிழ் சினிமாவில் வருவது போன்று இந்த படத்திலும் சந்தானம் தான் நாயகன். நடுநடுவே விஷால் கதாநாயகியுடன் ஆடி, சண்டையெல்லாம் போடுவதால் பார்ப்பவர்கள் குழம்புகிறார்கள். அதை மட்டும் அடுத்த படத்தில் தகுந்த படி தவிர்த்தால் நலம். காரைக்குடியில் சமையல் ஒப்பந்தகாரராக இருக்கும் சந்தானம், ஒரு சமயம் பொலிஸ்வீட்டுக் கல்யாணமும், ரௌடி வீட்டுக் கல்யாணமும் ஒரே திகதியில் வர, ரௌடி கல்யாணத்தை தவிர்ப்பதற்காக, ரௌடியை திட்டமிட்டு பொய் முறைப்பாடு கொடுத்து உள்ளே தள்ளி விடுகிறார், ஆனாலும் அந்த வழக்கில் இருந்து வெளியே வரும் ரௌடி, சந்தானத்தை துரத்த, சந்தானம் திருச்சிக்கு ஓடி ஹோட்டல் ஆரம்பித்து தொழில் செய்யலாம் என செல்ல, சந்தானம் திருச்சி போய் ஹோட்டல் ஆரம்பித்தாரா இல்லையா என்பது தான் கதை. இதற்கு நடுவில் நடப்பதெல்லாம் தான் நகைச்சுவைத் திருவிழா.

விஷால் அவர் பாட்டுக்கு வருகிறார், சந்தானத்துடன் தொத்தி கொண்டு சில காட்சிகளில் வலம் வருகிறார், பாடல்களுக்கு உடற்பயிற்சி செய்கிறார், சண்டைக் காட்சிகளில் பல கார் கண்ணாடிகளை சுக்கு நூறாக்குகிறார். இன்னும் எத்தனை நாட்களுக்கு தான் விலை மலிவான, பேப்பர் போன்றிருக்கும் கண்ணாடிகளை உடைத்து சண்டை காட்சிகளை ஒப்பேற்றுவார்களோ தெரியவில்லை வில்லனின் அடியாட்கள் எல்லாம் ஒரே அடியில் சாகிறார்கள், வில்லன் மட்டும் 10 அடியில் சாகிறான். இப்போதெல்லாம் சண்டை காட்சிகள் குழந்தைகளுக்கான மகிழ்வூட்டலுக்காக மட்டுமே இடம்பெறுகின்றன போலும்.


ஒரு சிலருக்கு கதையில் எந்த வேலையும் இல்லையென்றாலும் கூட அவரை சும்மாவெனும் படத்தில் காட்டி, அவருக்கு கும்மாங்குத்து குத்திவிடுவார்கள். இந்த வகையில் நிறைய முறை சுத்தலில் விடப்பட்டது கோவை சரளா, நாசர், சுஹாசினி போன்றோர் தான். நாசர், சுஹாசினிக்கெல்லாம் வழமையான டாக்டர் வேஷத்தை கொடுத்தே அவர்களைக் கரை ஒதுக்கி விட்டார்கள். இதில் மயில்சாமியும் விதிவிலக்கல்ல. அவருக்கென்று ஒரு குடிகாரன் வேஷத்தை தான் எல்லா இயக்குனர்களும் வடிவமைக்கிறார்கள். ஆனால் இந்தப் படத்தில் மயில்சாமி உட்பட பலரிடம் பிரமாதமான வெளிப்பாடுகள் தென்படுகின்றன. ஒரு நகைச்சுவை கூட தவறவில்லை. எல்லா நகைச்சுவைகளுக்கும் வெடியாய் தியேட்டர் சிரித்து வெடிக்கிறது.

ஐஸ்வர்யா அர்ஜுன் மக்களின் மனதில் பதிய வேண்டும் என்று படத்திலும் ஐஸ்வர்யா எனும் பெயர் கொண்டே வருகிறார். ஆனால் பரிதாபத்திற்கு வந்து போகிறார், எல்லோரையும் பார்த்து பேந்தப் பேந்த முழிக்கிறார். அளவுக்கதிகமான ஒப்பனையோடு இருப்பது பொருந்தவில்லை.

ஷங்கர் மகாதேவன், கானா பாலா போன்ற பெரிய பெரிய தலைகள் எல்லாம் பாடியும், எந்த பருப்பும் இசையில் அவியவில்லை. ஆனாலும் பாடல்களை உட்கார்ந்து கேட்க முடிகிறது, யாரும் தெறித்து ஓடவில்லை.

இந்தப் படத்தில் நாயகியின் அப்பா, ஒரு கோயில் அறநிலையத் துறை அதிகாரி. அவர் அதிகாரியாக இருப்பதால் அவர் குடும்பத்துக்கு நிறைய சிக்கல்கள் வருகிறது. அதை நாயகர் எப்படி முறியடித்து காப்பாற்றுகிறார் என்று ஒரு கிளைக்கதை ஓடுகிறது. இந்த கதையில் ஒன்றும் அவ்வளவு விஷேசங்கள் இருப்பதில்லை. இயக்குநர்களும் இந்த மாதிரியான கதையைத் தான் தேடி பிடிக்கிறார்கள்.

பார்ப்பவர்கள் எல்லோரின் தலையிலும் சிரிப்பெனும் சம்பலை அரைத்துப் பணம் பண்ணும் பணி இவை போன்ற படங்கள் மூலம் தொடரவே செய்கின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனித குலமும் தமிழ்த் தேசியமும்

## இந்திய தேசியம் ஒரு மாயை



(கடந்த வாரத் தொடர்ச்சி)

**ஏக இந்தியத்துவம்**

''இந்தியா ஒரேநாடு - இந்தியர்கள் அனைவரும் ஒரே தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள்'' என்ற கோட்பாடு ஆங்கிலேயர்களால் முதன் முதல் உருவாக்கப்பட்டது. இதை ஆங்கிலம் கற்ற மேல்த்தர வர்க்கத்தினர் குறிப்பாகப் பார்ப்பினர்கள் வரவேற்றார்கள். பார்ப்பினியக் கலாசாரத்தை வளர்த்தெடுப்பதற்கும் நிலை நிறுத்துவதற்கும் தங்களின் சமூக மேலாதிக்கத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்கும் ஏக இந்தியத்துவம் பெரிதும் உதவுமென அவர்கள் உறுதியாக நம்பினார்கள். எதிர்காலத்தில் உருவாக்கப்படும் பாரதத் திருநாட்டுக்கும் இந்தியத் தேசியத்துக்கும் இவை உரமாக அமைந்து, தேசிய இயக்கத்தைக் கட்டமைக்க உதவும் எனக் கருதினார்கள். இந்த அடிப்படையில் இந்தியா முழுவதிலுமிருந்த படித்த மத்திய தர வர்க்கம் ஒன்று திரட்டப்பட்டது.

மொழிவாரியாகவும் வட்டார வாரியாகவும், சிதறிக் கிடந்த பார்ப்பினர்களும் மற்றும் உயர் சாதியைச் சேர்ந்தவர்களும் ஏக இந்தியத்துவ அடிப்படையில் ஒன்று திரண்டனர். பிரிட்டிஷ் இந்தியாவில் படித்த புதிய மத்தியதரவர்க்கமாக இவர்கள் உருவானார்கள்.

படிமரபான சாதிகளால் பிளவுபட்டுக் கிடந்த இந்தியச் சமுதாயம் அந்நிய ஆட்சியின் விளைவாக மேலும் பிளவுபட்டது. தேசிய உணர்விலும் இவை எதிரொலித்து, சமுதாய ரீதியான வேறுபாடுகள் முளைத்தன. சுதந்திரம் பெறப் போகும் இந்தியாவில் அதிகாரப் பகிர்வு என்பது சமமாக இருக்க வேண்டும் என்று கீழ்ச் சாதியினர், மலைச் சாதியினர், முஸ்லிம் மக்கள் ஆகியோர் எதிர் பார்த்தனர். ஏக இந்தியத் தத்துவத்துக்கும், கலாசார ரீதியான ஒற்றுமை என்பதற்கும் அப்போதுதான் பொருள்' இருக்கும் என்று அவர்கள் கருதினார்கள். ஆனால் பார்ப்பினர்களை மையமாகக் கொண்ட மேல்தட்டு வர்க்கத்தினர் கலாசார ஒற்றுமைக்கு அப்பால் அதிகாரமென்பது தங்களிடமே தரப்பட வேண்டும் என்று விரும்பினர். காலம் காலமாகச் சமுதாயத்தில் தாங்கள் வகித்து வரும் மேலாதிக்க நிலை நிறுத்தப்பட வேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக இருந்தார்கள். ஆங்கிலேயர் வருவதற்கு முன்னால் தங்களிடம் இருந்து வந்த சமூக ஆதிக்கமும், அரசியல் ஆதிகாரமும் ஆங்கிலேயர் வெளியேற்றத்துக்குப் பிறகு மீண்டும் தங்களிடமே ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரினர்.

இந்தியத் தேசிய உணர்வு என்பதும் கலாசார ஒற்றுமை என்பதும் பார்ப்பினிய மேலாதிக்கத்தை நிலை நிறுத்துவதுதான் என்பது புரிந்தபோது அடித்தள மக்கள் விழித்தெழுந்தார்கள். பழைய வர்ணக் கோட்பாடுகளின் அடிப்படையில் நீண்ட காலமாக நிலவி வந்திருக்கும் சமூக அநீதி நிறைந்த கட்டுக் கோப்பை அடியோடு தகர்ப்பதன் மூலம் மட்டுமே உண்மையான ஒற்றுமை உருவாக முடியும் என அடித்தள மக்கள் கருதினார்கள்.

இந்தக் கருத்தைச் சனாதன வாதிகள் ஏற்பதற்குப் பிடிவாதமாக மறுத்தனர். வர்ணாசிரமதர்ம சமுதாயக்கட்டுக் கோப்புக்குப் 'பாரத சமுதாயம்' என்ற நவீனப் பூச்சுக் கொடுத்து அதை நிலை நிறுத்த மேல்தட்டு வர்க்கம் தீவிர முயற்சி செய்தது. இதை எதிர்த்துப் போராட வேண்டும் என்ற உணர்வு அடித்தள மக்களிடம் பிறந்தது.

சமூக விழிப்புணர்வோடு அரசியல் விழிப்புணர்வும் வளர்ந்தது. சாதிய நிலப்பிரபுத்துவச் சமுதாய ஆதிக்கத்தின் கீழ்ப் பலவகையிலும் ஒடுக்கி வைக்கப்பட்டிருந்த அடித்தள மக்களைத் தட்டி எழுப்ப இயக்கங்களும் தலைவர்களும் தோன்றினார்கள்.

நாட்டின் தென் முனையில் தொடங்கி வடக்கே இமயம் வரையிலும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் அதே வேளையில் அடித்தள மக்களின் எழுச்சிக்கு இந்த இயக்கங்கள் வழிகாட்டின.



> படிமரபான சாதிகளால் பிளவுபட்டுக் கிடந்த இந்தியச் சமுதாயம் அந்நிய ஆட்சியின் விளைவாக மேலும் பிளவு பட்டது. தேசிய உணர்விலும் இவை எதிரொலித்து, சமுதாய ரீதியான வேறுபாடுகள் முளைத்தன.

*பழநெடுமாறன் நீண்ட காலமாகத் தமிழ்த் தேசியத்துக்காகக் குரல் கொடுப்பவர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தீவிர ஆதரவாளர். விடுதலைப் புலிகள் இயக்கம் வன்னியில் போராட்டங்களை நடத்தியபோது தமிழகத்திலிருந்து வந்து தலைவர் பிரபாகரனை நேரில் சந்தித்துச் சென்றவர். இன்று வரைக்கும் ஈழத் தமிழர்களின் விடுதலைக்காக தமிழகத்தில் இருந்தபடி தளர்வற்று தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வருபவர். தமிழ்த் தேசியத்தை மனித குல வரலாற்றுடன் தொடர்புபடுத்தி அவர் எழுதும் புதிய தொடர் இது. பல நூல்களை, ஆய்வுக் கட்டுரைகளைப் படித்த பின்னர் அவர் இந்தத் தொடரை எழுதுகிறார். ''தமிழினம் ஒரு தொல்லினம் மட்டுமல்ல செழுமையான பண்பாட்டுப் பரப்பை உருவாக்கி அதன் மீது ஒரு சீரிய நாகரிகத்தையும் உருவாக்கி உலகனைத்தும் தனது இருப்பை நிலை நிறுத்தி இருக்கும் ஓர் இனம் என்பதால் தமிழ்த் தேசியத்தை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். இன்று தேசிய இனங்களின் வாழ்வும் சுயநிர்ணய உரிமையும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றன. இந்த நிலையில் தமிழினத்தின் தொன்மை குறித்தும், அது தேசிய இனமாக இயங்கி வந்திருப்பது குறித்தும் இந்தத் தொடர் விளக்குகிறது.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 'கொண்டாட்டம்'

## மூன்று நாள்கள் நடைபெறும்

கொண்டாட்டம் ஒரு காலத்தில் மனித வாழ்வுக்கு பெரு மகிழ்வை தந்தவையாக வடிவமைக்கப்பட்டன. இதன் காரணம் சாதாரண மனிதன் விளங்கிக் கொள்ளக் கூடியதுதான்.

விசேடங்களில் அன்பளிப்பு வழங்குவது ''மொய் எழுதுதல்'' என அழைக்கப்பட்டது. இது உருவானதை புது வாழ்வை தொடங்கும் ஒரு தம்பதியினருக்கு தேவையான வசதியை ஏற்படுத்தி கொடுப்பதற்காக எம் முன்னோரது கூட்டு முயற்சி எனக் கருதலாம். (இதற்கு கதை எதுவும் கைவசம் இல்லை) விசேடத்தை நிகழ்த்துபவர் ஏதாவது வறுமை வசப்பட்டிருந்தால் அதை போக்குவதும் இதன் நோக்கமாக இருந்தது.

ஏழு வீட்டுக்கு ஒரே நாளில் மொய் எழுதுவதென்றால் அலுப்பு வருமல்லவா?

1981 வாக்கில் நாகலிங்கம் மாமா வீட்டுக்கு ஏழு பேர் விசேடத்துக்குச் சொல்ல வந்தார்கள். ஐந்து சொல்ல வந்த பின் ''மோனை படலையை இழுத்துக் கட்டு இனி என்னாலை படி அளக்க ஏலாது''

என்று அவர் சொல்லவும், ஆறாவது ஆள் வந்து நிற்கவும் சரியாக போயிற்று. வந்தவர் இந்தச் சத்தம் கேட்டு திரும்பிப் போய் விட்டார்.

தொடங்கியது கலகம்

''இந்தாளுக்கு வாயை மூடிக் கொண்டு சும்மா இருக்கேலாது.''

''உன்ரை உழைப்பே இஞ்சை வருகுது? தாரை வார்க்க!''

''சத்தம் போடாதையுங்கோ. மானம் போகுது.''

''அப்ப தாலிக்கொடியை விற்று எல்லாருக்கும் போடு.''

1981 வாக்கில் நாள் சம்பளம் ஐம்பது ரூபாவுக்கு குறைவாகவே இருந்தது.

ஒரு வீட்டுக்குச் சராசரி பத்து ரூபா போடவேண்டும். ஐந்து வீட்டுக்கு போட்ட பின் இரண்டு வீட்டுக்கு கடன் சொல்லவா முடியும். மொத்தத்தையும் கொடுத்துவிட்டால் வீட்டுச் சீவியம் எப்படி போகும்.

இப்பொழுது மொய்ப்பணம் ஐந்நூறு ரூபாவைத் தாண்டி ஆயிரத்தில் நிற்பதாகத் தெரிகின்றது.

நல்லதொரு துவக்கம் இப்பொழுது மக்களுக்கு கஷ்டம் தருவதாக மாறிவிட்டது துயரம்தான்.

சீதனம்கூட இப்படித்தான் தொடங்கப்பட்ட ஒரு நல்ல விடயம். அது கூட இன்று மாபெரும் சுமையாக மாறிவிட்டது.

இடைப்பட்ட காலத்தில், திருமணம் செய்த இருவருக்கு அவர்களுக்குரிய வாழ்வாதாரத்தை தாய், தகப்பன் வழங்க வேண்டியிருந்தது. ஏனெனில் எல்லா மக்களும் விவசாயிகள்தான். எனவே புதுக் குடும்பம் விவசாயம் செய்ய ஒரு துண்டுக் காணியை பெண்ணின் தகப்பனோ, ஆணின் தகப்பனோ வழங்கினார்.

அண்ணனோ, அக்காவோ இரண்டு மாட்டை வழங்கினர். ஆணின் தகப்பன் இரண்டு ஆட்டை கொடுப்பார். இதை வைத்து வாழ்வாதாரத்தை ஏற்படுத்திக் கொண்டவர் வாழ்க்கை சிறப்பாக இருந்தது.

எனது அம்மாவின் தகப்பனுக்கு அவரது தகப்பன் 10 ஏக்கர் நிலத்தை திருமணத்தின்போது சீதனமாகக் கொடுத்தார்.

அம்மப்பா, அம்மம்மாவிடம், ''நீ என்ன கொண்டந்தனி?''

''நானோ! ஒரு எரிந்த கூப்பன் மாரொட்டி''

''உண்ணாணை!''

அம்மப்பா ஆபிரிக்கா கறுப்பனை விடக் கறுப்பு. இதைக் குத்தவே அம்மம்மா அப்பிடிச் சொல்வார். அம்மப்பா சிரிப்பார்.

''சுப்பரிட்டை என்ன கிடந்தது? ஆறு பெட்டையை



அடுக்காய் பெத்துப் போட்டு கோற்காலியும் இரண்டு சட்டமும்''

இந்த உரையாடல் மூலம் நாம் விளங்குவது, முன் நாள்களில் சீதனம் இரண்டு தரப்பும் கொடுக்கும் விடயமாகவும், பாகப் பிரிவினை அற்றதாகவும் இருந்தது என்பதாகும்.

அந்த நாள்களில் நிலம் ஆண் வாரிசுகளுக்கே அதிகம் வழங்கப் பட்டது.

''போற இடத்தில் பொடியன் கௌரவமாக இருக்க வேணும் கண்டியளோ!''

''அவையின்ரையை என்ரை பொடியன் தின்ன வேணுமோ?''

இது ஆண்களுக்கு கொடுக்கும் மரபைக் காட்டுகின்றது.

எங்களூரில் வயல் நிலங்கள் ஆண் சந்ததிக்கே இன்னும் எழுதப் பட்டு கொடுபடுவது வழமை.

காசு சீதனமாக் கொடுப்பது தோன்றிய பின்னரே சீதனம் சிக்கலான விடயமாக இன்று மாறிவிட்டது. பண்டமாற்று பொருளாதாரம் இருந்த காலத்தில் காசு எவ்வாறு சீதனமாகக் கொடுக்கப்பட்டிருக்க முடியும்?. அரசர்கள் தங்கள் வாரிசுகளுக்கு பொன்னையும் பொருளையும் அள்ளி வழங்கிய பின்னர்தான் சீதனம் தோன்றி இருக்கலாம்.

அம்மப்பா சொல்வார்

''கொம்மம்மாவின் கொடி செய்ய எவ்வளவு முடிஞ்சது தெரியுமா?''

'சொல்லுங்கோ''

''தொண்ணூறு ரூபா.''

''பொய் சொல்லாதைபப்பா.''

''உண்ணாணை! அப்ப ஒரு பவுண் 10 ரூபா தானே. ஒன்பது பவுணிலை அப்பு செய்து தந்தது.''

நான் நினைக்கின்றேன் அம்மா பிறந்தது 1948 இல்- அம்மா மூத்த பிள்ளை. எனவே 1946, 47 இல் பப்பா- அம்மம்மா திருமணம் நடைபெற்று இருக்கும். ஆச்சரியமாக இருக்கின்றது அல்லவா?- அப்ப பவுணை தேடுவார் இல்லாமல் இருந்திருக்கும்- பண வீக்கம் குறைவாக இருந்திருக்கும்.

பப்பா ஆட்டுக்கார கந்தையாவிடம், ''பத்துப் பவுணுக்கு ஒரு சதமும் கிடாய்க்கு குறைக்க மாட்டன்'' என அடிபட்டது ஞாபகம் வருகின்றது (10 பவுண் நூறு ரூபா)

ஏனென்றால் அந்தக் காலத்து ஆள்கள் (1950 க்கு முன் பிறந்தவர்கள்) பத்து ரூபாவை ஒரு பவுண் என்று தான் சொல்வார்கள். பப்பா 1980 வரை அப்படித்தான் சொல்லியதாக ஞாபகம்.

1990இல் நாகலிங்க மாமா வீட்டில் திருமணம் -1990இல் சீதனம் வெளியாகப் பேசி யாழ்ப்பாணத்தில் கொடுக்க முடியாது.

பந்தல் போட வந்த இருவர்- மிக இரகசியமாய்

''எவ்வளவு சீதனமாம்?''

''தெரியேல்லையடாப்பா.''

''ஒரு பத்து வருமே?''

''இருக்கும் இருக்கும்.''

''மூன்று பேர் லண்டனில் எல்லே!''

அந்தப் பக்கம் வந்த நாகலிங்க மாமா காதில் விழுகின்றது.

'' மணியம் பந்தல் போட வந்தால் போடுங்கோ! சீதனக் கதை உங்களுக்கு என்னத்துக்கு''

''இல்லை அண்ணை!''

''நாள் என்ன பற்பொடி தந்தால் தான் விடியுதெண்டு போயிருக்க உங்களுக்கு விருப்பமே?''

1990 இல் ஒளிச்சு ஒளிச்சு சீதனம் கொடுத்தவர்கள் எம்மவர்கள்.

---




-சடா கோபன்

கவட்டுக்குள் அகப்பட்ட
மோட்டார் சைக்கிள்

காதுக்கும் வாய்க்குமிடையில்
தொங்குபாலமாய் கைபேசி

உழைத்தேயறியாத
கைகளில் தோள்களில்
கழுத்துகள் காதுகளிலெல்லாம்
அந்நியச் செலாவணி

சொந்தக்காலில் இல்லாத
நடையும்
சோறும் சோக்கும்

பகுத்தறிவில்லா மிருக விளையாட்டுக்காய்
விடுதிகள்

பண்பாட்டு கேந்திரத்தை
ஊடறுக்கின்ற
பண்பலை தொலைக்காட்சி
அலைவரிசைகள் பின்னே

நாக்கை தொங்க விட்டபடி
நட்சத்திரக் கனவுகள்
ஊடக அனுசரணையில்
உலாவரும் தெய்வங்கள்

ஒட்டுமொத்த போதைக்குள்
எல்லா பொழுதுகளும்

தேடிக்கொண்டே வந்தேன்
என் கல்லூரி அருகே
பஸ்தியாம்பிள்ளை சந்தியில்
காணாமல் போன என்நிலம்
கண்ணில் பட்டது
ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டியில்

எல்லாப் போதைகளுக்கும் எதிராக
எழுத்துகள் எழுதுகிறபோதுதான்
விடியல் நிகழும்

மண்டையில் போடுவதை விட
மண்டைக்குள் போடுவதே
மானிடச் சிறப்பு....!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி பெறலாம் வாங்க

### உங்களுக்கு உதவவல்ல தன்னார்வத் தொண்டாற்றும் 10 வாய்ப்புகள்

**முதலுதவி :** உயிர்களை எவ்வாறு காப்பாற்றுவது என்பதைத் தெரிந்து கொள்வது மிகச் சிறந்தது ஆகும். முதலுதவிப் பயிற்சி அளிப்பதற்கும், தன்னார்வலராக ஆக்குவதற்கும் எனப் பல்வேறு அமைப்புகள் உள்ளன. அது பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்.

**கலை :** உங்களுக்கு, கலை, இசை அல்லது உள்ளூர் நாடகக் குழுக்களில் உதவியாளராகப் பணிபுரிய விருப்பமிருந்தால் அதைச் செய்து பார்க்கலாம். உங்களுக்குப் பிடித்தமான, கலையை பணம் செலவு செய்யாமலேயே இலவசமாக அனுபவிக்கலாம்.

**பள்ளி :** இளையவர்களுக்கு உதவுவதற்கு எனப் பல்வேறு விதமான வாய்ப்புகள் உள்ளன. உள்ளூரில் உள்ள பாடசாலைக்கோ அல்லது கல்வி மையத்துக்கோ சென்று அவர்களுக்கு உதவலாம். அவர்களுக்கு உதவி செய்யப் போகும்போது அவர்கள் வாழும் உலகம் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

**குடும்பம் :** ஆதரவு தேடி வரும் குடும்பங்களுக்கு, அதாவது புகலிடம் தேடி வருபர்களுக்கு உதவலாம். அவ்வாறு உதவுவதன் மூலம் அவர்களின் வாழ்க்கையைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம். மேலும் புகலிடம் தேடி வந்தவர்களுக்கு, வந்திருக்கும் இடத்தின் தன்மை, கலாசாரம் போன்றவற்றையும் நீங்கள் எடுத்துரைக்கலாம்.

**சிறை :** சிறையில் இருக்கும் கைதிகளைத் தன்னார்வத் தொண்டராகப் போய்ப் பார்க்கலாம். சிறையில் என்ன விதமான வாழ்க்கை வாழ்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்வதுடன், அதை மேம்படுத்த என்ன செய்வது என்பது பற்றியும் அவர்களுடன் பேசலாம்.

**தொண்டு நிறுவனம் :** நகரில் பல தொண்டு நிறுவனங்கள் உள்ளன. அவற்றில் உங்கள் மனதுக்குப் பிடித்தமான ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அதில் சேர்ந்து, அவர்களுடன் இணைந்து தொண்டாற்றலாம். களத்தில் இறங்கிப் பணியாற்றலாம், அல்லது நிதி திரட்டவும் உதவலாம்.

**விளையாட்டு :** ஒரு சில விளையாட்டு அமைப்புகள்தான் வேலைக்குப் பணியாளர்களை நியமிக்கும் வசதி பெற்றிருக்கும். மற்ற அமைப்புகள் தன்னார்வத் தொண்டர்களைத்தான் நியமித்துக் கொள்ளும். நீங்களும் அது போன்ற அமைப்பில் சேர்ந்து கொள்ளலாம். முக்கியமான விளையாட்டுப் போட்டிகளின் போது சேர்ந்து பணி புரியலாம்.

**மருத்துவமனை :** குடும்பமற்ற அல்லது குடும்பத்தின் ஆதரவு அற்ற நோயாளிகளை மருத்துவமனையில் போய்ப் பார்க்கலாம். அவர்கள் விரைவில் குணம் பெறுவதற்கு நீங்கள் உதவலாம். பெரும்பாலான மருத்துவமனைகளில் இது போன்று உதவி செய்யும் வாய்ப்புகள் இருக்கும்.

**வழக்கறிஞர் :** பின்தங்கிய மக்களுக்காகப் போராடலாம். அவர்கள் தேவைகள் என்னவெனக் கேட்டு அதைச் சரி செய்யலாம். அவர்கள் மட்டுமல்லாது அனைத்து வகையான மக்களுடனும் இணைந்து பணியாற்றலாம். இது உங்களது எண்ணத்தையும், பார்வையையும் விரிவாக்கும்.

**நிதி திரட்டல்:** பெரும் நோய்வாய்ப்பட்ட குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்க பெருந்தொகைப் பணம் தேவைப்படும். பல பெற்றோரிடம் அந்த வசதி இருக்காது. நீங்கள் முயற்சித்து நிதி திரட்டி கொடுக்கலாம். நண்பர்களையும் சேர்த்துக் கொண்டு.

ஆதரவு தேடி வரும் குடும்பங்களுக்கு, அதாவது புகலிடம் தேடி வருபர்களுக்கு உதவலாம். அவ்வாறு உதவுவதன் மூலம் அவர்களின் வாழ்க்கையைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம்.




## ஐ.நாவுக்கு ஓர் அழைப்பு



வந்துபார் ஐநாவே வாழ்ந்தபடியே
செத்துக்கொண்டிருக்கும்
வளமான தேசத்தின் வயதான இனத்தை...!

வீடுகள் இங்கே வெறிச் சோடிக்கிடக்கும்
வெளிச்சம் தெரியவரும்!
நாடு விட்டு நாடு நம்மவர்கள்
நகர்ந்து செல்லும் நியாயம் புரியும்!

சொந்தக் கூட்டில் சுதந்திரமாய் முட்டையிட
சுதந்திரம் இல்லை எனில்
சுடுகாட்டில் மட்டுமல்ல
அண்டை வெளிகளில் முட்டை இட்டு
அக்கினிக்குள்ளும் அடைகாக்கும்
பறவைகள்!

தன்னினத்தை தக்கவைக்க
தமிழினமும் இப்படித்தான்
அறிந்துகொள் ஐ. நாவே!

பாவம் யார் இட்ட சாபம்,
தமிழினம் தவிக்கிறது!
உங்கள் யாவரினதும்
உள்நோக்கம் தெரியாது
உதடுகள் உமிழும் - பொய்களை
உண்மையென நம்பி
உருக்குலைந்து போய்விட்டது!

பகட்டுப் பேச்சுக்களை நம்பி
பகல் கனவு காணும்
பரிதாபம் தொடர்கிறது இன்னும்!

குண்டுகள் போட்டு
குருவிக் கூடுகளை அழித்தவன்
தூண்டில்கள் இட்டு
துரோகம் இழைக்கக் காத்திருக்கும்
துயரம் தெரியாதவரா நீங்கள்!

விடுதலைக்காகக் கொடுத்த
விலை அதிகம் - அந்த
விவரம் தெரியாதவரல்ல
விடுதலை கெடுத்தவரே நீங்கள்தானே
விழிநீர் வழிக்கின்றீர்கள்-இப்போ-சும்மா!

நடித்து நடித்து நம்ப வைக்கின்றீர்கள்
நல்லவர்கள் போல நம்மவரை
நாமும் நம்பி கொண்டிருக்கின்றோம்
நான்கு வருடங்களாய்!

நவநீதம்பிள்ளை வருவதாய்
நாளிதழ்களில் மட்டுமே வருகிறது
நாள்கள் வடருங்களாகியும்!
நடக்கவே இல்லை நல்லதாய் ஏதேனும்!

முள்ளிவாய்க்காலில் முடித்து வைத்தது
போரை அல்ல வெடிச் சத்தத்தை மட்டும்தான்
போர் நடந்தபடிதான்-உள்ளது
விடுதலை தீயும் எரிந்தபடிதான் உள்ளது!

முயன்றால் முடியாது என
ஒன்றுமே இல்லை
உங்களால் - முடிந்தால் - ஒருமுறை
வந்துப்பார்த்து விட்டு சொல்லுங்கள்
இணைவதா? பிரிவதா?
சமதானமா? சமஷ்டியா? என்பதை மட்டும்

*ப.அறிவு, வவுனியா.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உற்றார் உறவுகளின் ஏளனத்துக்கும் நக்கல்களுக்கும் ஆளாகி வாழ்க்கையின் ஓரத்துக்கே ஒதுக்கப்பட்டு விட்டான். தான் ஒரு குற்றவாளி, சமூகத்துக்கு ஒவ்வாதவன். இனியும் இந்த மண்ணில் வாழப் பிடிக்காமல் இந்த ஏமாற்றுலகை விட்டுப் பிரிய எண்ணி தற்கொலை புரிய எத்தனித்தும் யாரோ கண்டு அவனைக் காப்பாற்றி விட்டனர்

# வை... தீஸ் கொலைவெறி

மிருசுவில் தமிழ்தாசன்,
மீசாலை கிழக்கு, மீசாலை.

அந்த ஆஸ்பத்திரி விடுதியின் பழைய மின் விசிறி 'டக்கடா டக்கடா' என்னும் பயங்கர ஓசையுடன் அச்சுத் தேய்ந்து போன வண்டிற் சக்கரமாகத் தாராளமாக ஓடி ஆடி அசைந்து சுற்றிக் கொண்டிருந்தது. தனது ரணத்தின் உபாதையையும் மறந்து அந்த சீலிங் மின் விசிறியையே மிகுந்த பயத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான் ஆனந்தன்.

''கடவுளே! உதைப் பாக்கக் கிருஷ்ண பரமாத்மாவின்ரை சக்கராயுதம் போலை எல்லோ கிடக்கு. கழண்டு விழுந்தது எண்டால், கழுத்தாங் குத்தி பறந்து சில்லம் பொல்லமாய்ச் சிதறிப்போகிடும். ஆற்றை கழுத்துக்கு ஆபத்தோ!'' அதிகமாகக் கற்பனை பண்ணிப் பயந்து கொண்டிருந்த ஆனந்தன், அந்த அழகான தாதியின் இனிமையான குரல் கேட்டதும் சுய நினைவுக்கு வந்தான்.

ஏதோ பெயருக்கு நான்கைந்து மாத்திரைகளையெடுத்து அனாயாசமாகக் கொடுத்தாள். அவனும் அவைகளை வாங்கிய கையுடன் இயந்திரத்தனமாக வாய்க்குள் தள்ளி விழுங்கி விட்டு மீண்டும் அந்தக் காற்றாடியையே கண்வெட்டாமல் வெறித்துப் பார்த்துக் கொண்டு கிடந்தான்.

கடந்த பதினைந்து ஆண்டுகளாகத் திரை கடலோடித் திரவியம் தேடியவன் சுமார் மூன்று மாதங்களிற்கு முன்புதான் மீண்டும் தாய்த்திருநாட்டிற்குக் காலடி வைத்திருக்கின்றான். ஆரம்பத்தில் ஐந்து ஆண்டுகளை மத்திய கிழக்கு நாடொன்றில் கழித்தான். அங்கே சம்பாத்தியம் மத்திமம் என்பதால் முயற்சி செய்து மேலைத்தேய நாடான பிரான்ஸ்ஸுக்குப் போய் எதிர்பார்த்தளவுக்கு சம்பாதித்துக் கொண்டு வந்திருக்கிறான். எல்லா விதமான செல்வங்கள், ஐஸ்வரியங்களிலிருந்தாலும் புத்திரச் செல்வம் மட்டும் இல்லை. வெளிநாட்டுச் சம்பாத்தியம் போதுமென்றளவுக்குக் காணப்பட்டதால் ஊரிலே கணிசமானதொரு தகுதியையும் அந்தஸ்தையும் சுவீகரித்துக் கொண்டான்.

அந்த மட்டத்திலேயே அவன் தொடர்ந்தும் வாழ்ந்திருக்கலாம். ஆனால் அப்படி அவனால் வாழ முடியவில்லை. விதியோ! சதியோ! யாரறிவர்! கடந்த பதினைந்து ஆண்டில் யாழ்ப்பாண வாழ்க்கைமுறை இந்தளவுக்கு மாறியிருக்காது என கணக்குப் போட்டது அவன் செய்த மாபெரும் தவறு.

நேரம் நண்பகல் பன்னிரண்டு மணியாகி விட்டதென்பதற்கு அறிகுறியாக அந்த ஆஸ்பத்திரி விடுதியை நோக்கிப் பார்வையாளர்கள் சாரிசாரியாகப் படையெடுத்து வந்து கொண்டிருந்தனர். தமது உறவுகள், நண்பர்களைப் பார்த்துச் செல்வதற்காகக் கையிலும், பையிலும், நெஸ்ரோமொல்ட், குளிர்பான வகையறாக்கள், பழங்கள், பிஸ்கட் இன்னும் இன்ரோன்னவைகளுடன் ஆவலுடனும் அவசரத்துடனும் உள்நுழைந்து கொண்டிருந்த பார்வையாளர்களின் மேல் ஆனந்தனின் கண்கள் நிலைகுத்தி நின்றன. அந்தப் பார்வையில் ஒரு வித ஏக்கமும் தவிப்பும் தகித்துக் கொண்டிருந்ததை அவனின் மனம் மட்டுமே அறிந்திருந்தது. நீண்டதொரு பெருமூச்சு இயலாமையின் வெளிப்பாடாகப் பிரசவிக்க எப்படியோ தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டான்.

பார்வையாளர்கட்குரிய குறிப்பிட்ட நேரத்துக்குள் பார்வைகளை முடித்துக் கொண்டு இடத்தை விட்டுக் காலி செய்து விட வேண்டும். சற்றுத் தாமதித்தால் கூட 'செக்குறிற்றி' என நாகரிக நாமத்தால் அழைக்கப்படும் காவலாளிகளின் ஏச்சுக்கள் திட்டுக்களுக்கு ஆளாக வேண்டிவரும். அவர்கள் அந்தஸ்து, கௌரவம், வயது எதையுமே பார்க்காது கண்டபடி திட்டித் தீர்த்து விடுவார்கள். இந்த அனுபவங்களை ஏற்கனவே கண்டிருந்தால் அவர்கள் அவசரப் படத்தானே செய்வார்கள். பார்வைகளை முடித்தவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக வெளியேறிக் கொண்டிருக்க இன்னும் சிலர் இப்போதுதான் மிகுந்த அவசரத்துடனும் பயத்துடனும் விடுதிக்குள் நுழைந்து கொண்டிருக்கின்றார்கள். குறிப்பிட்ட பஸ்ஸைத் தவறவிட்டிருப்பார்கள். பாவம்! ஏற்கனவே பார்வைக்கென வந்தவர்களில் சிலர் ஏதுவித அவசரத்தையும் காட்டாது பதுங்கிக் கொண்டு விடுதியிலே நிற்கின்றனர். வெளியில் நின்ற காவற்காரனுக்குத் தண்ணியைக் காட்டி விட்டுத் தாங்கள் சாமர்த்தியமாகக் கொண்டு வந்த சாராயம், பீடி, வெற்றிலை, பாக்கு, புகையிலை போன்ற இன்னோரன்ன அயிட்டங்களைத் தமது உறவுகட்குக் கொடுத்து விட்டுப் போவதற்காகத் தகுந்த சமயம் பார்த்து மிலாந்திக் கொண்டிருக்கின்றனர். இவைகளெல்லாம் அன்றாடம் நடக்கும் வழமையான சங்கதிகள்தானே!

வெளிநாட்டில் சம்பாதித்துக் கொண்டு வந்த பணத்தை ஏதோவொரு வங்கியில் வைப்புச் செய்துவிட்டு கிடைக்கும் வட்டி வாசியைப் பெற்றுக் கொண்டு வாழ்க்கையை இலகுவாக ஓட்டியிருக்கலாம் ஆனந்தன். அவனது குடும்பமோ மிகச் சிறியது. மனைவிக்கு அவன் துணை. அவனுக்கு அவள் துணை. அமைதியாக வாழ்ந்திருக்கலாம்தான். ஆனாலும் ஏதோ ஒரு தொழிலை ஆரம்பித்து அதனூடாகச் சம்பாதித்துண்பதுதான் அவனுக்குக் கௌரவமாகப்பட்டது. எப்படியாவது ஒரு தொழில் தொடங்க வேண்டும். சிந்தித்தான்... சிந்தித்தான். காத்திரமான முடிவுகளெதுவுமே சிக்கிக்கொள்ளவில்லை.

இந்த வேளலயில்தான் அவனுடைய பால்ய நண்பன் தியாகுவின் ஞாபகமும் வந்தது. பழைய நட்பு மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. அபிப்பிராயங்கள் பிரேரணைக்கு விடப்பட்டுப் பலமான வாதப் பிரதிவாதங்கள்... மீண்டும் தீவிரமான ஆலோசனைகள், மீள் பரிசீலனைகள்... அப்பாடா! ஒருவாறு சாதகமான முடிவொன்று எடுக்கப்பட்டுவிட்டது.

தியாகுவிடம் பணபலமில்லாது விட்டாலும் ஊருக்குள் சத்தப்பட்ட ஒரு பேர் வழி. ஊரவர்களின் அனைத்து அந்தரங்க விவகாரங்களையும் அச்சொட்டாக அறிந்து வைத்திருக்கின்றான். எல்லாம் தெரிந்தவன். எல்லாம் புரிந்த படிக்காதமேதை. சமயம் வரும்போது சாமபேத தான தண்டங்களைப் பிரயோகிப்பதில் பின்னிற்க மாட்டான். மொத்தத்தில் இயமனுக்குப் பச்சடி தீத்திய மகா கில்லாடி. இவைகளையெல்லாம் அறிந்து வைத்திருந்த ஊரவர்கள் அவன் மீது ஒரு வித பணிவையும், பயத்தையும் காட்டியே வந்தனர் .

ஆனந்தன் சிகிச்சை பெற்று வரும் விடுதியில் இப்போதுதான் ஒரு புதிய நோயாளியை அனுமதித்திருந்தார்கள். அவனுடைய கட்டிலிலிருந்து நான்காவது கட்டிலில் சேர்க்கப்பட்டிருந்தான் அந்த நோயாளி. தற்கொலை முயற்சிக்கேஸ் என்று அங்கிருந்தவர்கள் பரபரப்புடன் பேசிக்கொண்டார்கள். வேறு விவரமெதுவும் தெரியாது. ஆனந்தன் தேவையற்ற காரியங்களில் என்றைக்குமே மூக்கை நுழைப்பதில்லை. எவ்வாறாயினும் வெ[illegible] காலங்கள் ப[illegible]னவோ! ஒரு 'டிசிப்பிளின்' தெரிந்த 'ஜென்டில்மனா'கவே விளங்கினான்.

இதே விடுதியில் சிவகுரு என்றொரு நோயாளி! அவரிப்போது எக்ஸ்றே படப்பிடிப்புக்காக விடுதியை விட்டுப் போய் விட்டார். சற்று நேரத்தில் வந்து விடுவார். அவர் வந்து விட்டால் அந்தப் புதிய நோயாளியின் விவரங்களனைத்தையும் அக்குவேறு ஆணி வேறாகப் பிரித்தெடுத்துத் தருவார். அவருக்கு நோயின் தாக்கம் அப்படியொன்றும் தீவிரமாகவில்லை. ஏதோ சிறுவருத்தம்தான். இதனால் அவரது கட்டிலில் அவரைக் காண முடியாது. குடுகுடென்று எல்லோருடைய கட்டில்களுக்கும் சென்று வம்பளப்பதும் காரியங்கள் பிடுங்குவதும்தான் அவரின் அன்றாடக் கடமைகள். பத்திரிகைபடிப்பது, அரசியல் பேசுவது, அடுத்தவனின் குற்றங்குறைகளை அலசி ஆராய்வது, வைத்தியசாலை நிர்வாகத்தை விமர்சிப்பது இவைகளெல்லாம் சிவகுருவின் முக்கியபொழுது போக்குகள், ஆள்கொஞ்சம் வசதியான 'பார்ட்டி' ஓரளவுக்கு ஏதோ படித்து அரசில் ஏதோ வேலையும் பார்த்திருக்கின்றார். சரியான வாய்ச் சவுடால் பேர்வழி. ஒப்பிறேஷன் முடிந்து மயக்கத்துடன் கொண்டு வந்து விட்ட நோயாளியைக் கூட எப்படியோ தட்டி எழுப்பி புதினங்களைப் புடுங்கிவிடுவார். அப்படிப்பட்ட சிவகுருவர் வரட்டும் வந்தவுடன் புதினங்கள் எல்லாவற்றையும் விலாவாரியாகஅவர் மூலமாகவே அறிந்து கொள்ளலாம் என்னும் நம்பிக்கையில் அந்தத் தற்கொலைக்கேஸ் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ள விரும்பவில்லை.

நல்லநாள், நல்ல கோள், நல்ல ஆள் என்று எல்லாமே பார்த்தாகிவிட்டது. ஆனந்தனின் வட்டித் தொழிலுக்கு முதலாவது வாடிக்கையாளராகக் கனகசபை தேர்ந்தெடுக்கப்பட்டு ரூபா மூன்று லட்சங்களும் கைமாற்றப்பட்டுவிட்டன. ஏதோ தொழில் செய்து மனிதன் நொந்து போய்விட்டார். இனிமேல் புதியதொரு தொழில் தொடங்கி ஒருவருடத்துக்குள் வட்டியும் முதலுமாகக் கொடுப்பதெனக் காகிதத்தில் எழுதி முத்திரையும் ஒட்டிக் கையெழுத்தும் வைத்துக் கொடுத்தாயிற்று.

கனகசபை காசுடன் நடையைக் கட்ட மற்றொருவர் சிதம்பரநாதன்! இவருக்கு இரண்டரை லட்சம் வேண்டுமாம். தியாகுவின் உத்தரவாதத்துடன் மேற்படி பணமும் கைமாற இப்படியே முதல்நாளிலேயே ஏராளமான வாடிக்கை[illegible]பாடு செய்து கொடுத்த பெருமை தியாகுவுக்கே என்பதில் மாற்றுக் கருத்துக்கே இடமில்லை.

''மச்சான் ஆனந்தன்! இப்போதைக்கு வட்டியை ஏழு வீதமாய் வாங்குவம். பிறகு தொழில் கொஞ்சம் பெருகப் பெருக வாழைப் பழத்தில ஊசியை ஏத்துற மாதிரி நோகாமல் கூட்டிக் கொண்டு போக வேண்டியதுதானே! விதி...விதி...விதி...''

எகத்தாளமாகச் சிரித்தான் தியாகு. தியாகுவின் தீட்சண்யமான புத்திசாலித்தனத்தை மனதுக்குள் பாராட்டிக் கொண்ட ஆனந்தன் அவ்வப்போது தியாகுவையும் பலவழிகளிலும் கவனித்தான். அதேபோலக் கடன் பெறுபவர்களும் ஒரு தொகையைக் கட்டி அழுதுதான் போக வேண்டும். இது ஒரு எழுதப்படாத நிபந்தனை வழக்கமாக ஒரு போத்தல் கள்ளுக்கு அல்லலாடும் தியாகு இப்போதெல்லாம் கள்ளுக் கடைப் பக்கமே போவதில்லை. உயர்ந்த ரகச் சாராயம்! முழுசாக வாங்கித் தன்கையாலே உடைத்து சண்முகத்தின் கடையில் கிளாஸ் எடுத்து அதே கடையில் கோழிப் பொரியல், முட்டை வறுவல்! அத்துடன் சிகரெட்டையும் வாங்கி நாலு புகைவிட்டு... சுருள் சுருளாக... வளையம் வளையமாகப் புகைகளைக் கக்கி... அப்பப்பா! உண்மையிலை ஒரு சந்தோஷமான வாழ்க்கைதான். ஆனந்தனையும் இந்த மதுப் பழக்கத்தில் இணைத்துக் கொண்டால் தியாகுவுக்கு ''கொம்பனி கொடுப்பதற்கு ஆள்பஞ்சமேயிருக்காது. உலகத்தைத் திண்டபுலிக்கு இது ஒரு வேலையாகத் தெரியவில்லை.

''எட என்ன ஒரு சோக்கான தொழில். சும்மாயிருக்கச் சுளை சுளையாய் வட்டியும் முதலும் கிடைக்குது. வெளிநாட்டிலை உந்தக் குளிருக்கை எவ்வளவு கஷ்டப்பட வேணும். உண்மையிலை தியாகுவின்ரை மூளையும் ஒரு மூளைதான்''

ஆனந்தன் இப்படி அடிக்கடி நினைப்பதுண்டு, உழைப்புப் பரவாயில்லை. வாடிக்கையாளர் தொகை நாளும் பொழுதும் அதிகரித்துக் கொண்டிருக்கப் பணப்பட்டு வாடாவும் கூடிக்கொண்டே போகின்றது. ஆனந்தனும் இப்போது மெல்ல மெல்ல மதுப் பழக்கதிற்காளாவிட்டான். தினமும் எத்தனை லகரங்கள் சுழன்று கொண்டிருக்க இலாபங்கள் எவ்வளவு! இந்த மகிழ்ச்சியைக் கொண்டாடி மகிழக்கொஞ்சம் மது வருந்துவது அன்றும் தவறான செயல் அல்ல.

(16 ஆம் பக்கம் பார்க்க )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித்துவத்தோ டிலங்கையராய்த் தமிழர் வாழ....

உலகமுதல் மொழிதானென் றுயர்ந்தோர் போற்றும்
ஒண்டமிழே எங்களின்தாய் மொழியா மென்ற
நிலையைநினைந் தேநெஞ்சை நிமிர்த்திக் கொண்டே
நெறிதவறி வாழ்ந்திடுதல் நியாயந் தானா?
நலந்தரும்அம் மொழி, பண்பை வாழ்விற் சேர்த்து
நமதுதனித் தன்மையினை நாளுங் காக்கச்
சலசலப்புஞ் சஞ்சலமுந் தவிர்த்துக் கொண்டு
சாத்தியமாம் வழிகளை நாம் சிந்திப்போமா?

'மம்மி டடி' எனவழைக்கும் மாயம் வேண்டாம்
மனங்குளிர அம்மாஅப் பாவென் போமே!
நம்முடைய கடப்பாட்டைத் "தாங்க்ஸ்" என் னாமல்
நலமுடைய செயலைக்கைம் மாறாய்ச் செய்வோம்
எம்முளெழு மெண்ணமெழிற் கோலம் எல்லாம்
இதயமொழி யாந்தமிழி லிதமாய்ச் சொல்வோம்
நம்பனவ னின்னருளை நாடும் போதும்
நல்லதமி ழைநாத மாக்கிக் கொள்வோம்

சொந்தமக னுக்கு, மகள், உறவோர்க் கெல்லாம்
சொல்லினிய பேர்தமிழிற் சூட்டிக் கொள்வோம்
எந்தவொரு தமிழுறவைக் காணும் போதும்
இனியதமி ழிற்பேசி இணைத்துக் கொள்வோம்
சந்தைவிளை யாட்டகஞ்சங் கீதக் கூடம்
சமயநிலை யம்நீதி மன்றம் சாலை
செந்தமிழி னொலிகமழு மிடமாய்க் கொள்வோம்
தேசமெலாஞ் சென்றொழிக்குஞ் சிறப்புஞ் செய்வோம்

அறிவுகலை யான்மிகம் அணு, விஞ் ஞானம்
ஆட்சிமுறை நீதி, மருத் துவத்தோடெல்லாம்
நெறிமுறையி னிற்றெளிவாய் விளக்கஞ் சொல்லி
நிரந்தரமா யுளம்பதிக்கும் நிகரில் லாற்றல்
செறிவுடைய தாய்மொழியின் சிறப்பே யென்ற
செகம்புரக்குங் கல்வியுளக் கொள்கை தேர்ந்து
சிறுகுழந்தை முதற்பெரியோர் சிந்தை ஓங்கச்
செந்தமிழை யேகல்வி மொழியாய்க் கொள்வோம்

ஆங்கிலமிவ் வுலகமொழி யாயிற் றின்று
அது யார்க்கும் அவசியமென் பதுமா யிற்று
ஓங்குபயன் பலவுளவா முலகத் தாரோ
டுறவுகொளச் செயுமாற்றல் லவற்றுள் ஒன்றாம்
ஈங்கெமது நலன்நோக்கி அதனைக் கற்போம்
ஏவலிலாச் சிங்களமும் இசைந்தே கற்போம்
தாங்குமுலைப் பாலனைய சத்தா யூறும்
தாய்மொழியாந் தமிழினையெம் முயிராய்க் கொள்வோம்

அரச திணைக் களங்களிலே அலுவல் பார்த்தல்
அன்னைமொழி யாந்தமிழி லியலும் என்ற
உரிமையினைப் பயன்படுத்தா துழல்வோ ரெல்லாம்
ஒருபெரிய தீங்கினையே இழைக்கின் றார்கள்
அரசறியா வாழ்வுடைய தமிழர்க் கான
அடிப்படையா முரிமையினை மறைக்கின் றார்கள்
அரசமொழி, ஆங்கிலத்திற் றொடர்பை யாக்கல்
அவசியமில் லை, யரிதாய் இருந்தாற் போதும்

நிறைவுடைய மனதுடனே நிதமும் வாழும்
நெறிகளினை இனியதமிழ் மரபாய்க் கூறும்
சிறப்புடைய காவியங்கள், தெய்வப் பாக்கள்
செம்மொழியாம் எம்மொழியின் தேட்டம் அன்றோ?
உறுதுணையாய் உயர்குருவாய் உளத்தைப் பற்றி
உன்னதமாம் ஓருலகுக் கெம்மை ஈர்க்கும்
திறனுடைய பனுவலெலாந் தெளிவாய்க் கற்றே
தேவருல காயெமது தீவைக் காண்போம்

ஈதலறம் தீவினைவிட் டீட்டல் செல்வம்
இல்லறமே நல்லறமா மென்றே கொண்டு
காதலுடன் கண்ணியமாம் கையைக் கோத்துக்
கடமைகளைக் கட்டுப்பாட் டுடனே செய்யும்
சாதனையால் வாழ்வினிற்சந் தோஷம், காண்போம்
சாத்விகத்தை நம் பண்பாய்ச் சதமுங் கொள்வோம்
நீதிமலி நெஞ்சுடனே நேராய் நிற்போம்
நிர்மலனின் மெய்யுருவை நினைந்தே யுய்வோம்

ஊருலகத் துடனொத்தெம் முரிமை காத்து
உளத்தினிலே அணுவளவாம் உடைவும் இன்றி
சீரியநற் செய்கையிலே சிந்தை வைத்து
செந்தமிழ் சொல் வாழ்முறையின் செம்மை தேர்ந்து
ஈரமுறு நெஞ்சுடனே இன்சொற் பேசி
இதயத்தி னாற்பலரை இணைத்துக் கொண்டு
பாருலகம் பைந்தமிழர் பாங்கைப் போற்றப்
பரம்பொருளின் பதங்களைநாம் பணிந்தே வாழ்வோம்.

இனவெறியோ மொழிவெறியோ எனக்குள் இல்லை
ஈனமிகு மதவெறியெள் ளளவும் இல்லை
சினம் பகைமை சூழ்ச்சிபொறா மைகளும் இல்லை
சீரிலங்கை யைச் சிதைக்கும் சிறுமை இல்லை
கனவினிலே முன்னோர்கண் டுகந்த வாழ்வைக்
கவிதையிலே நான் கொண்டு வந்தேன், கொள்வீர்,
தனித்துவத்தோ டிலங்கையராய்த் தமிழர் வாழச்
சாத்தியமா யானவழி யினிவே றில்லை.

– சிற்பி

(கொழும்பு தமிழ்ச் சங்கம் நடத்திய
கவிதைப் போட்டியில் பரிசு பெற்ற கவிதை இது)

# 'நதியைப் போல் இரு'

இளைஞனே நீயும் நதியைப் போல் செழிப்பாக வாழக் கற்றுக் கொள். உன் வாழ்வின் ஏற்ற இறக்கங்களைக் கண்டு சோர்ந்து விடாதே. ஒவ்வோர் அடியாக எடுத்து வைத்து முன்னேறு. போகும் இடமெல்லாம் வெற்றி மாலைகள் உன்னைத் தேடிவரும்.

நதி சிறு இடத்திலிருந்தே ஆரம்பிக்கின்றது. அது போகப் போக எப்படி மகா நதியாகிப் பெரும் பிரவாகமாக ஓடிச் செல்கின்றது என்பதைக் கவனி. இத்தனை சிறிய நீர்ப்பரப்பாக இருக்கிறோமே என்று தாழ்வு மனப்பான்மையோடு நதி அங்கேயே தங்கி நின்று விடுவதில்லை. இருக்குமிடத்திலிருந்து முன்னேறுவதே அதன் விவேகம். நீர்ச்சுனைகள் ஓடைகள் எல்லாம் வழியில் தன்னுடன் சேர்ந்து தாம் வளர்ந்து விட்டோமே என்று பெருமிதத்துடன் தேக்கமடைந்து அது தங்கி விடுவதில்லை. முன்னேற்றமே அதற்கு மூச்சு. அது தன் யாத்திரையை தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

வழியில் நிச்சயமாக தடைகள் இருக்கத் தான் செய்யும். அத்தடைகளை மற்றவர்கள் செய்த சதியென்று புலம்பி நதி செயலற்று நிற்பதில்லை. தடை சிறியதென்றால் நதி தாண்டிச் செல்லும். பெரியதென்றால் அதைச் சுற்றி வளைந்து செல்லும். தடைகளின் தடுப்பு குறித்து விமர்சிப்பதும், தடைகள் தானாக விலகும் என்று காத்து நிற்பதும் தன் பயணத்துக்கு முட்டுக்கட்டை என்பதை நதி நன்கு அறியும்.

அதுபோல் இளைஞர்களே உங்களுக்கும் தடைகள் வரலாம். காமம், கோபம், போதைவஸ்து, மது போன்றவற்றில் நீங்களும் சறுக்கி விழலாம். அவற்றைக் கடந்து தாண்டி நதியைப் போல் ஓடிக்கொண்டே இருங்கள். எங்கும் தங்காது நதியின் சுறுசுறுப்பையும் விவேகத்தையும் நீங்கள் கற்றுக்கொண்டு விட்டால் உங்கள் தடைகளெல்லாம் உங்கள் பாதங்களுக்கு வெற்றிப் படிக்கட்டுக்களாக மாறும்.

தான் ஓயும் முன்னே சாதிக்க வேண்டியது இன்னமும் நிறைய உள்ளது. என நினைவில் கொண்டு நதி முன்னேறிச் செல்கின்றது. தான் செல்கின்ற இடமெல்லாம் செழிப்படையுமாறு செய்தாலும் நதி அகங்காரம் கொள்வதில்லை. ஒரு மாபெரும் கர்மயோகியைப் போல் பற்றற்று அது தன் பயணத்தைத் தொடர்கிறது. லட்சக் கணக்



நதி கடலிடம் சரணாகதி அடைவதுபோல் நீங்களும் வாழ்க்கைப் பயணத்தில் இறைவனிடம் சரணாகதி யாகுங்கள். இதுவே உங்கள் இறுதி இலட்சியமாக இருக்க வேண்டும்.

கானோருக்குப் பயன்படும் விதத்தில்பயணம் செய்யும் நதி முடிவில் தன் தனித்துவத்தை கடலில் இழந்து இரண்டறக் கலக்கும் போதுகூட கலங்குவதில்லை. தன் வாழ்வை இலட்சியத்தோடு முடிக்கின்றது. ஜீவாத்மா பரமாத்மாவோடு கலக்கும் நிலைபோல்.

நதி கடலிடம் சரணாகதி அடைவதுபோல் நீங்களும் வாழ்க்கைப் பயணத்தில் இறைவனிடம் சரணாகதியாகுங்கள். இதுவே உங்கள் இறுதி இலட்சியமாக இருக்க வேண்டும். இதற்கு நீங்கள் நல்ல ஒழுக்க சீலர்களாக இருக்க வேண்டும். சிரத்தையுடன் 'நான்' என்ற உணர்வை விட்டு 'நாம்' 'நாங்கள்' என்ற உணர்வை வளர்த்துக் கொள்ள வேண்டும். அப்போ சுயநலம் சுருங்கிச் செல்லும். நதியும் நீங்களும் வாழ்வில் ஒன்று என்பதை மாணவர்களும், இளைஞர்களும் ஒருபோதும் மறந்து விடாதீர்கள். ஏய்! மனிதனே நீ எப்போதும் நதியைப் போல் இரு.

சா.ரமேஸ்குமார்,
மருதனார்மடம்.

# இசைந்து போவது எப்படி?

இன்றைய நவீன உலகில் மனிதன் சமூகச் சூழலுடன் இசைந்து வாழ வேண்டிய தேவை மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. சூழ்நிலைக்கு இசைந்து போகாத போது உயிர்கள் துன்பத்துக்கு ஆளாகின்றன. மனித வாழ்க்கையை பொறுத்த வரை சூழலுடன் மட்டுமன்றி பல்வேறு அம்சங்களிலும் ஏதோ ஒரு வகையில் இசைந்து போக வேண்டிய தேவை காணப்படுகின்றது. உறவுகளால் உருவாவதே மனித வாழ்வு. இதில் ஒருவர் இன்னொருவர் மீது காட்டும் செயலூக்கமான அக்கறை, நாம் ஒவ்வொருவரும் எம் வாழ்க்கையில் அரும்பாடுபட்டு தேடும் 'அன்பு' என உளவியலாளர் 'எரிக் புறொம்' கூறுகிறார். இந்த அன்பை அர்த்தமுள்ளதாக உருவாக்க நம்பிக்கை, ஆதரவு, பகிர்வு, விட்டுக் கொடுத்தல், புரிந்துணர்வு, அக்கறை என்பன தேவை. அதனை மெருகூட்ட இசைந்து போதல் தேவைப்படுகிறது.

இசைந்து போகாமையினால் முரண்பாடுகள் ஏற்படுகின்றன. முரண்பாடுகளை நீக்க இசைந்து போதல் அவசியமாகிறது. ஆழமும், அர்த்தமும் நிறைந்த மனித வாழ்க்கை அதன் தன்மையில் இருந்து சிதைந்து போகாமல் இருப்பதற்கு இசைந்து போதல் அவசியம் ஆகும். புரிந்து கொள்ளலின் அடிப்படையில் அது நடைபெறுமாயின் அதன் பெறுமதி உயர்ந்ததாக இருக்கும்.

*யோ.கினுஜா, ஊர்காவற்றுறை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலை கொடுத்து வாங்கிய...

● கிருஷ்ணா

நண்பகல் 12 மணி, வைத்தியசாலையில் நோயாளர்களைப் பார்வையிடும் நேரம். வைத்தியசாலை விறாந்தைகள் சுறுசுறுப்பாகச் செல்லும் பார்வையாளர்களால் நிரம்பிக் கொண்டிருந்தன. புதிதாக விடுதிக்கட்டடங்கள் அமைக்கப்பட்டதால் விடுதி தேடும் பணியில் நானும் நண்பனும் வேகமாகச் செயற்பட்டோம். அப்போது எமக்குத் தெரிந்த குடும்பமொன்று கவலை தோய்ந்த முகத்துடன் ஒரு கிளினிக் அறைக்கு முன்பாக நின்றதைக் கண்டு மெல்லிய புன்னகையை வீசிவிட்டு வேகமாகப் பறந்தோம்.

விடுதி தேடி அலைந்ததால் கிளினிக் அறையின் முன்னால் நின்றவர்களை நலம் விசாரிக்கக்கூட நேரம் போதவில்லை. நோயாளியைப் பார்த்துவிட்டு வந்து கதைக்கலாமென நினைத்துச் சென்றுவிட்டு, விடுதியைத் தேடிக் கண்டுபிடித்து நோயாளியையும் பார்த்து விட்டு அதே வழியில் அதே வந்த போது முன்னர் கண்ட குடும்பத்தைக் காணவில்லை.

விடுதி இலக்கங்கள் மாற்றப்பட்டதால் தெரிந்த குடும்பத்துடன் கதைக்க முடியவில்லையே என்று நண்பருடன் ஆதங்கப்பட்ட போது அவர் சொன்ன விடயம் எனக்குப் பேரிடியாக இருந்தது.

எமது பகுதியில் மதிப்புமிக்க குடும்பங்களில் ஒன்றாக குறித்த குடும்பம் இருந்தது. அரச தொழிலில் இருந்தாலும் வருமானம் தரக்கூடிய தென்னந்தோட்டமும் இரு போகங்கள் விதைக்கக் கூடிய வன்னி நெல்வயல்களும், விளை நிலங்களும் இருந்ததால் எந்தநாளும் மகிழ்வுக்கு குறைவில்லாத குடும்பமாக இருந்தது. முத்தான மூன்று பிள்ளைகளுடன் மன நிறைவுடன் வாழ்ந்த குடும்பம் அது. உறவினர்களின் வருகையினால் அவர்களது வீடு எந்த நேரமும் கலகலப்பாகக் காணப்படும். இவ்வாறான மகிழ்ச்சிகரமான குடும்பத்துக்கு பிறந்த மூன்று பிள்ளைகளும் சிறப்பாக கல்வியினைக் கற்று ஊர் மக்களின் அன்பினைப் பெற்று இருந்தனர்.

இந்தக் குடும்பத்தின் மூத்த மகளுக்கு திருமணம் செய்து வைக்கப் பெற்றோர் முற்பட்ட வேளையில் உள்ளூரில் உள்ள உறவினர்கள் போட்டி போட்டு முன்வந்தனர் வெவ்வேறு காரணங்களினால் திருமணம் தடைப்பட்டது. அந்த வேளையில் திருமணத் தரகரினால் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டு மாப்பிள்ளையின் குறிப்பு பொருந்தியதால் திருமணத்துக்கான ஏற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டன.

சகோதரங்கள் அனைத்தும் வெளிநாடுகளில் இருப்பதாலும் பெற்றோர் வெளிநாட்டுக்கு வரவிரும்பாததால் அவர்கள் கொழும்பில் தங்கியிருப்பதற்கு வீடுவாங்கித் தரவேண்டும், ஒரு வருட காலத்தினுள் பெண்ணின் பெற்றோர், சகோதரங்கள் வெளிநாட்டுக்கு எடுக்கப்படுவர் ஆகிய நிபந்தனைகள் சீதனமாக மாப்பிள்ளை பகுதியினரால் முன்வைக்கப்பட்டன.

குடும்பத்துடன் வெளிநாடு செல்வதென்றால் யாழ்ப்பாணத்தில் வீடு, வளவு எதற்கு? வன்னியில் வயல் நிலம் எதற்கு? என்ற எண்ணத்தில் அனைத்துச் சொத்துக்களும் விற்கப்பட்டு கொழும்பில் சம்மந்தியின் பெயருக்கு வீடு வாங்கிக் கொடுக்கப்பட்டது.

மாப்பிள்ளையும் வந்தார், மண்டபத்தில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. இரண்டு மாதங்கள் தங்கியிருந்து விட்டு மாப்பிள்ளை விரைவில் அனைவரையும் வெளியே எடுப்பதாக கூறிவிட்டுச் சென்று விட்டார்.



மணப்பெண் கர்ப்பிணியானார். ஐந்து மாதங்களின் பின்னர் கர்ப்பவதிக் கிளினிக்குக்குச் சென்ற போது பெண்ணுக்கு எயிட்ஸ் நோயின் ஆரம்பக் கட்டம் இருப்பது பரிசோதனைகளில் தெரியவந்தது.

இந்த நிலையில் வெளிநாடு செல்ல விசா மறுக்கப்பட்டது.

கொழும்பில் வசிக்கும் மாப்பிள்ளையின் பெற்றோரோ பெண்ணுக்கு ஏற்பட்ட நிலை குறித்து ஆறுதல் சொல்வதை விடுத்து இந்தப் பெண்ணின் நாகரிக நடவடிக்கைகளால் தமக்கு ஏற்கனவே சந்தேகம் இருந்ததாக குற்றஞ்சாட்டி தமது வீட்டுக்கும் வரக் கூடாது எனக் கூறி தொடர்புகளைத் துண்டித்துள்ளனர்.

சொந்த வீட்டினை, சீவியம் தந்த நிலபுலன்களை விற்றுவிட்டு வாடகை வீட்டில் தங்கியுள்ள பெண்ணின் பெற்றோர் தமது மகளுக்கு ஏற்பட்ட நோய் மற்றும் எதிர்கால நிலையை நினைத்து நினைத்துக் காலத்தைக் கழித்து வருகின்றனர் என்று நண்பன் கூறினார்.

இந்தவிடயம் என் மனத்தினை நெகிழ வைத்தாலும் இதன் உண்மையான நிலையை புரிந்துகொள்ள என்னால் முடியவில்லை. தவறு எங்கு உள்ளது. கண்டறியப்பட வேண்டியது ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும்.

# அது ஒரு பொற்காலம்

● எஸ்.எம்.கோபாலரத்தினம்

மாணிக்கவாசகர், புத்தரின் அடிச்சுவட்டில் எனப் பல நூல்களை சிவா எழுதியிருக்கிறார். இவர் பி.சி.சி. கம்பனிக்குப் போகும் வழியில் வீரகேசரிக்கு வந்து போவார். தான்தோன்றிக் கவிராயர் போல இவரும் தனிவழிக் கவிராயர் என்ற பெயரிலோ இதேபோல் வேறு பெயரிலோ கவிதை எழுதினார். சக்தி அ.பாலையா அவர்களும் ஒரு கவிராயர் பெயரில் கவிதை எழுதினார். தான்தோன்றியின் வழியில் தொடர்ந்து கவிராயர்கள் தோன்றினர்.

பள்ளிக்கூட அல்லது கல்லூரி வாழ்க்கைக்குப் பின் வீரகேசரியில் பணியாற்றிய ஏழு வருடங்கள் தான் உல்லாசமான, மகிழ்ச்சியான, சுதந்திரமான வாழ்க்கையாக அமைந்தது. இங்கு போட்டி சிறிது இருந்தது. ஆனால் பொறாமை சிறிதும் இருக்கவில்லை.

படி திருத்துநராக இருக்கையிலே இரவில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற இடங்களிலுள்ள நிருபர்கள் அவசரமான முக்கிய செய்திகளை தொலைபேசியில் தெரிவித்தால் காயாமொழி ஆதித்தன் என்னையே எடுத்து எழுதித் தலைப்புப் போட்டுக் கொடுக்கச் சொல்வார். நான் எடுத்து எழுதிக்கொடுப்பேன். யாழ்ப்பாணம், மட்டக்களப்புத் தமிழ் ஆதித்தனுக்கு ஒத்துவராது. தொலைபேசி மணி அடித்தாலே "அடசீ! அதை எடுங்கய்யா" என்பார்.




ஆசிரியர் குழுவில் ஓர் உதவி ஆசிரியராகத் தெரிவு செய்யப்பெற்ற இரண்டாம் நாளே என்னை இரவு வேலை பார்க்கச் சொன்னார். நான் பொறுப்பெடுக்கத் தயங்கினேன். "நீ ஒன்றுக்கும் யோசிக்காதே. நீ ஜமாய்ப்பாய். ஏதும் கஷ்டமென்றால் வாஸ் ஐயருக்கு போன் போட்டுப் பேசு" என்று வெங்கட்ராமய்யர் உற்சாகப்படுத்தினார்.

முதல் பதிப்புக்குத் தலைப்புச் செய்தியாக ஏதோ ஒரு உப்புச்சப்பற்ற வெளிமாவட்டச் செய்தி ஒன்றைப் போட்டு வெங்கட்ராமையர் சமாளித்துப் போய்விட்டார். நகரப் பதிப்புக்கு தலைப்புச் செய்திக்கு ஒன்றுமே கிடைக்கவில்லை. இப்பொழுதுதான் கணினி என்ற காமதேனுவிலிருந்து என்ன தேவையோ அதைப் பெற்றுக் கொள்ளலாம். கணினி கேட்டது மட்டுமல்ல கேட்காததைக் கூடக் கொடுக்கத் தயாராக இருக்கிறது. அன்றைய நாளில் இரவில் தலைப்புச் செய்திக்கு தலையைப் போட்டுப் பிய்த்துக்கொள்ள வேண்டும். முதல்நாளே இரவு வேலைக்குப் பொறுப்பாக இருந்ததால் இரவு பதினொரு மணிவரை பல முயற்சிகள் செய்தும் ஒன்றும் கிடைக்கவில்லை. செய்தி ஆசிரியர் வாஸ் ஐயருக்கு தொலைபேசி எடுத்து தலைப்புச் செய்திக்கு ஒன்றும் கிடைக்கவில்லை என்றேன். "எதையாவது பார்த்துப் போடுங்கய்யா" என்று சொல்லி முடித்துவிட்டார்.

இதன்பின் நானே சமாளித்தேன். எல்லோரும் இரவு வேலைக்கு தயங்குவார்கள். நான் ஒரு மாதம் முழுதும் இரவு வேலை செய்தேன். இரவு வேலையில்தான் முக்கிய செய்திகள் கிடைக்கும் அல்லது முக்கிய செய்திகளைத் தேடிக் கண்டுபிடித்து எழுதவேண்டும். நான் இரவு வேலை செய்யும் பொழுது முதல் பக்கத் தலைப்புச் செய்தியில் மட்டும் கவனம் செலுத்துவதுடன் நின்றுவிடாது பக்கவடிவமைப்பிலும் கவனம் செலுத்தினேன்.

தலைப்புச் செய்திக்கு மேல் மற்றும் முதல் பக்கத்தில் வரும் செய்திகளின் தலைப்புக்கள் உள்பக்கத்தில் வரும் முக்கிய செய்திகள் இரண்டொன்றின் தலைப்பின் சுருக்கத்தை இருவரிகளில் அடிக்கோடிட்டு வெளியிடுவேன். இதே போல் முதல் பக்கத்தின் அடியில் ஆறு கொலத்துக்குத் தலைப்புப் போட்டு உப தலைப்பில்லாமல் முக்கிய செய்தி ஒன்றை வெளியிடுவேன். ஆறுகொல நீளத்துக்கு ஒரே தலைப்புடன் செய்திபோடும் போது மீதி இரண்டு கொலத்துக்கும் இரண்டு பக்கமும் ஒரு கொலம் பெட்டிச் செய்தியும் வெளியிடுவேன்.

இதேபோல் தலைப்புச் செய்தியாகப் போடக்கூடிய மூன்று நான்கு செய்திகள் கிடைத்து விட்டால் தலைப்புச் செய்திக்கு மேல் அதே எட்டு கொலத்துக்கு கொஞ்சம் சிறிய எழுத்தில்– தலைப்புச் செய்திக்கு 72 பொயின்ற் எழுத்தே பொதுவாகப் பெரிய எழுத்தாகப் பாவிப்போம், 60 அல்லது 48 பொயின்ற் எழுத்தில் தலைப்புச் செய்திக்கு மேல் செய்தி வரக்கூடியதாகப் பக்கம் வடிவமைப்பேன். மறுநாள் பத்திரிகையைப் பார்த்ததும் வெங்கட்ராமய்யர் "வெளுத்துக்கட்டிட்டியே" என்பார். "பக்கம் நல்லாயிருக்குதையா" என்று வாஸ் ஐயரும் பாராட்டுவார்.

யாழ்ப்பாணத்துக்கு செல்லத்துரை என்பவர் நிருபராக இருந்தார். ஆசிரியராகத் தொழில் பார்த்து வந்தவர். பத்திரிகைப் பணியில் இருந்த ஈடுபாடு காரணமாக அந்த வேலையைத் துறந்து பத்திரிகைப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். அச்சுவேலிதான் அவரது சொந்த ஊர். மதியம் தாண்டி இரண்டு மூன்று மணிக்குத்தான் யாழ்ப்பாணம் வருவார். செல்லத்துரை சிறந்த எழுத்தாளரும்கூட 'இளவரசு' என்ற பெயரில் எழுதியதாக நினைவு. அவருக்காக செய்திகள் ஆள்களாகவும் கடிதங்களாகவும் வந்து காத்திருக்கும்.

கட்சி ஆர்ப்பாட்டங்கள், மாநாடுகள் என்றால் முதலிலேயே போய் செய்தி எடுக்க ஏற்பாடுகள் செய்துவிடுவார். வீரகேசரிக்கு நாடு முழுவதும் ஊருக்கு ஊர் செய்தி அனுப்புவதற்கு நிருபர்கள் நியமிக்கப்பட்டிருந்தாலும் யாழ்.நிருபர் செல்லத்துரையிடமிருந்து நாள் தவறாமல் குறிப்புக்களுடன் செய்திகள் வந்துகொண்டிருக்கும். முக்கியமான செய்திகள் என்றால் தொலைபேசியிலும் தருவார்.

அந்த நாளில் தொலைபேசியில் தொடர்பு கொள்வதென்பது பெரும் போராட்டம். தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் மூலமே தொலைபேசியில் தொடர்புகொள்ள முடியும். இதற்கு பரிவர்த்தனை நிலையத்தில் பதிவு செய்து கொள்ள முடியும். காலையில் தொலைபேசி எண் கொடுத்து பதிவு செய்யும் போது எட்டுமணி நேரம் தாமதம் என்று சொல்லுவார்கள்.

பின்னர் சிலமணி நேரம் கழித்து மேலும் நாலு மணி நேரம் தாமதம் என்பார்கள். பின்னர் சிறிது நேரம் கழித்து தொடர்பு பழுதடைந்து விட்டது என்பார்கள்.

*(வளரும்)*

## என் உயிர்....

இன்னமும் தூங்கி எழுந்தவுடன் - அன்பே
உங்கள் முகத்தில் தான் - நான்
கண் விழிக்க ஆசைப்படுகிறேன்
என்றாலும்... அன்பே (உயிரே)
இப்போதெல்லாம் தூங்குவதற்குமுன்
கொஞ்ச நேரம் உங்களை
இமைக்காமல் பார்த்து விட்டு
கண்மூட ஆசைப்படுகிறேன்
ஒரு வேளை...
தூக்கத்திலேயே என் உயிர் பிரிந்தால்
கடைசியாக நான் பார்த்தது
நான் உயிராக நேசிக்கும் உங்கள்
முகமாக இருக்க வேண்டும்.



சு.சுகிர்தா,
4 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை தாயின் அற்புதங்கள்

ரம்யகன்

இயற்கைத் தாயானவள் நம்ப முடியாதவள், சக்தி வாய்ந்தவள், மர்மங்கள் நிறைந்தவள், அழகில் இணையற்றவள்.

சுழல் காற்றுகள், உறைபனிப் புயல்கள், காட்டுத் தீக்கள், மழை வெள்ளம், கடல் தொந்தளிப்பு, இடிமுழக்கம் இவையெல்லாம் இயற்கைத் தாயின் சில அம்சங்கள் தாம்.

அவளது அபார சக்தியும், அழகும் எவ்வாறெல்லாம் வெளிப்படுகின்றன என்பதைப் பற்றிச் சிந்தித்தால் திகைப்புக்கு மேல் திகைப்பு தான் ஏற்படும்.

அப்படியான இயற்கை அற்புதங்களில் ஒருசிலவற்றைப் பற்றிய சில தகவல்கள்.

## துருவத்தில் தெரியும் விண்ணொளி

பெரிய ஒளி வளையங்கள் இவை. 'அவுறோறா' (Aurora) என்று ஆங்கிலத்தில் அழைக்கப்பெறும். இவை தென்-வட துருவங்களில் அடிக்கடி தென்படும். இவை சில சமயம் 12 ஆயிரம் மைல் விட்டம் கொண்டவையாக இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. துருவப் பகுதிக்கு அருகில் வாழ்பவர்கள் இந்த விசாலமான திரைச் சீலைகள் போன்ற வர்ணஜாலக் காட்சிகளை அடிக்கடி கண்டுகளிப்பார்கள். சூரியனிலிருந்து வெளிப்பட்டு மின்சாரம் கலந்த துணிக்கைகள் பூமியைக் கடந்து மணிக்கு மில்லியன் கணக்கான மைல்கள் வேகத்தில் பாய்ந்து செல்லும் போது பூமியின் காந்த சக்தியால் ஈர்க்கப்பட்டு துருவத்தை நோக்கிவடித்து வீசப் படுவதால் இது நிகழ்வதாகக் கூறப் படுகின்றது. இந்த துணிக்கைகள் எமது காற்று மண்டலத்தின் வாயுக்களில் மோதுகையில் வாயுக்கள் இந்த வர்ணஜாலங்களை நிகழ்த்துகின்றன. இயற்கை அன்னையின் மிகப்பெரிய அதிசய ஒளிக்காட்சிகளில் ஒன்றாகும் இது.



## தவளை மழை

சேர்பியாவில் ஒருமுறை மழை பெய்தது. மழை நீருடன் தவளைகள் வானிலிருந்து வந்து விழுந்தன. இதைக் கண்ட மக்கள் அச்சம் கொண்டு வீடுகளிலும் கட்டடங்களிலும் புகுந்து ஒளிந்துக் கொண்டார்கள். சூறாவளி போன்ற சுழல் காற்று அல்லது பெரும் நீர்ப் பெருக்கம் சில சமயம் தான் நகரும் பகுதியில் நிலத்திலுள்ள பெரிய குளங்கள், சதுப்புநிலங்கள் மற்றும் நீர் நிலைகளை உள்ளீர்த்துக் கொள்வதுண்டு. அவ்வாறு செய்கையில் தவளைகள், மீன்கள் போன்றவற்றை வாரிச் சென்று விடுவதுண்டு. சூறாவளியானது தான் உள்ளீர்த்துக் கொள்ளும் உயிரினங்களை பல மைல்களுக்கு அப்பால் கொண்டு போய் மழை போல கொட்டிவிடும்.





அசை போட ஒரு விடயம் 89

## காட்டுத்தீ

காட்டுத்தீயானது மனிதர்களாலும் மூட்டப்படுவதுண்டு - சில சமயம் இயற்கையாகவே ஏற்படுவதுண்டு. மூங்கில் மரங்கள் ஒன்றோடு ஒன்று வேகமாக உராயும் போது காட்டுத் தீ ஏற்படுவதுண்டு. இவைகளை சில சமயம் மனிதர்கள் பெரு முயற்சி செய்து தணிக்க விடுகிறார்கள். சில சமயம் பெரும் காட்டுத் தீயானது அணைக்க முடியாமல் போய் விடுகின்றது. அவை பெரும் சக்தி வாய்ந்தவையாய் இருப்பதால் தாமே தமக்கென காலநிலையையும் அவைகளால் உருவாக்கிக் கொள்ள முடியும். இவை எரியும் போது பெரிய அளவில் ஒட்சிசனை சாப்பிட்டு விடுகின்றது. வெப்பம் கடுமையாகும் போது காற்றை மேலெழச் செய்கின்றது.

புதிய காற்று உள்ளே சென்று அதன் இடத்தைப் பிடிக்கும் போது கடும் காற்று உருவாக்கப்படுகின்றது. இவ்வாறு தானே உருவாக்கிக் கொள்ளும் காலநிலையானது சுழன்றடிக்கும் நெருப்பு சூறாவளிகளைத் தோற்றுவித்துவிடுகின்றது. நெருப்பை வீசியடிக்கும் இந்தச் சுழல்காற்றுகள் 50 அடி வரை அகலமானதாகவும் 40 மாடிகள் உயரம் வரை வளரக் கூடியவையாகவும் இருக்கலாம் என்று கூறப்படுகின்றது.



## மர்மமான கடல் அலைகள்

நீங்கள் ஒரு கப்பலில் இருப்பதாக நினைத்துக் கொள்ளுங்கள். அதே வேளையில் ஒரு பத்து மாடிகள் அளவுக்கு உயரமான கடல் அலையொன்று உங்களை நோக்கி நிறுத்த முடியாத ரயில் வண்டி போல சுழன்று வருகிறது. அது கடலுக்கு அடியில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சியினால் உருவான சுனாமியல்ல. சுனாமிகள் கடற்பரப்பில் சிறிதாகவே தெரியும். கரையை அடையும் போதுதான் பெரிதாகி பயங்கரமாகி விடுகின்றன. ஆனால் இந்த அலைகள் கள்ளமானவை வினோதமானவை. இவைகள் எவ்வாறு ஏற்படுகின்றன என்பதை விஞ்ஞானிகள் இன்னமும் கண்டு பிடிக்கவில்லை. ஆனால் அவை எந்த வித எச்சரிக்கையும் இன்றி ஏற்படலாம். காலநிலை மிகச் சீராக இருக்கும் நிலையிலும் கூட இவை தோன்றுவதுண்டு. சமீப காலம் வரை 15 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த கடல் அலைகள் வெறும் கற்பனையான ஒன்றாகக் கருதப் பட்டது. ஆனால் அவை உண்மையாக நிகழ்கின்றன. அவை வரும் போது மிகப்பெரிய கப்பல்களும் தப்பி முடியாது என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

## பெரும் தீ பந்துகள்

இடி முழக்கம் இருக்கும் போது நமது தலையளவிலான தீ பந்து ஒன்று திடீரென்று தோன்றுகின்றது. பூமிக்கு மேலே சிறிது நேரம் இருந்துவிட்டு கீழே விழுகின்றது.

பிறகு மீண்டும் மேலெழுந்து விண்ணில் பறந்து தேய்ந்து விடுகின்றது. இதை மின்னல் பந்து என்பார்கள். சில சமயம் இது சிறு வெடிப்பை அடுத்து மறைந்து விடுவதும் உண்டு.

சாதாரணமாக ஒரு மின்னல் பூமியைத் தாக்கும் போது நிலத்தில் காணப்படும் சிலிக்கன் என்று கூறப்படும் கனிப்பொருளை ஆவியாக்கி விடுகின்றது. இந்த சிலிக்கன் ஒருவகை குமிழிகளாக மாறி அதைச் சுற்றியுள்ள ஒட்சிசனை எரிக்கின்றது. அதுவே இந்த மின்னல் பந்துகளுக்கு காரணம் என்று கருதுகிறார்கள் விஞ்ஞானிகள்.

(மூலம் இணையம்)

## சிறுநீரிலிருந்து பொஸ்பரஸ்

சிறுநீரானது கழிவு வாய்க் கால்களில் சேர்ந்து நீர்த்து போவதற்கு முன்னர் அதிலுள்ள பொஸ்பரஸ் அமிலத்தை பிரித்தெடுத்து பயன்படுத்துவதற்கான முயற்சியில் அமெரிக்க விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளார்கள். உயிர் காப்பு பொருள்களில் ஒன்றாகக் கருதுப்படும் பொஸ்பரஸ் சிறுநீரில் பெருமளவில் காணப்படுவதாக ஆராய்ச்சிகளில் தெரிய வந்துள்ளது. விவசாயப்பயிர்களுக்கு போஷாக்கு அளிப்பதற்கு ஆதிகாலத்தில் கிரேக்கத்திலும் ஆசியாவிலும் மக்கள் தம் சொந்த சிறுநீரையே பெரிதும் பயன்படுத்தியுள்ளனர்.

அண்மைக் காலத்தில் இந்தியத் தலைவர்களில் ஒருவரும் ஒரு சமயம் பிரதம மந்திரியாக இருந்தவருமான மொரார்ஜி தேசாய் சிறுநீரை ஒரு மருந்துப் பொருளாக பாவித்தமை குறித்து தெரிவித்திருந்தார். தினமும் சிறுநீரில் சிறு அளவில் பருகி வருவதாகவும் அது தமது ஆரோக்கியத்துக்கு உதவியாக இருக்கிறது என்றும் அவர் கூறியிருந்தார்.

உண்மையில் பொஸ்பரஸ் என்பது ஒரு வேதியல் பொருள். உயிரினங்கள் நிலைத்து வாழ்வதற்கு தேவைப்படும் முக்கிய பொருள்களில் இதுவும் ஒன்று. இந்தப் பொருள் இரவில் மிளிரக் கூடியது. காற்றில் இருப்பின் எரிந்து போய்விடும்.

மனித உடலில் உணவுகள் மூலம் சேரும் இந்தப் பொருள் சிறுநீரின் மூலம் வெளியேற்றப்படுகின்றது.

இப் பொஸ்பரஸானது பொஸ்பேட் என்ற வகையில் தொழிற்சாலைகளில் பயன்படுத்துவதற்கும் தாவரங்களுக்கு உரமாக பயன்படுத்துவதற்கும் பாறைகளில் இருந்து வெட்டி எடுக்கப்பட்டு வருகின்றது. ஆனால் அடுத்துவரும் 50 அல்லது 100 ஆண்டுகளில் இந்த வேதியல் பொருளை மனிதக் கழிவு நீரில் இருந்து பிரித்து எடுத்து பயன்படுத்தும் முறை நடைமுறைக்கு வந்துவிடும் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.


பொஸ்பேட் பொருளானது தற்போது இருக்கும் அளவில் எதிர் காலத்தில் கிடைக்காது. மிக விரைவிலேயே அதற்கு தட்டுப் பாடு ஏற்பட்டு விடும் என்பதால் மாற்று வழிகளை புளோரிடா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஆராய்ந்து வந்துள்ளார்கள்.

இவ்வாறு நடத்தப்பட்ட ஆய்வுகளின் போது ஆய்வு கூட சூழ்நிலையில் சிறு நீரிலிருந்து ஐந்து நிமிடங்களில் 97 வீத பொஸ்பரஸ் வேதியல் பொருளை பிரித்து எடுத்து விடக் கூடியதாய் இருந்தது என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். ஹெயிக்ஸ் என்ற பிசினைப் பயன்படுத்தி மின்சாரம் கலந்த அணு பரிமாற்றம் என்ற தொழில் நுட்பத்தை சிறுநீரிலிருந்து பொஸ்பரஸைப் பிரித்தெடுப்பதற்கு பயன்படுத்தியிருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இந்த தொழில்நுட்பத்தின் அடிப்படையிலேயே எதிர்காலத்தில் அமெரிக்காவில் கழிவறைகளில் சிறுநீரிலிருந்து பொஸ்பரஸை பிரித்தெடுப்பதற்கான அமைப்புகள் நிறுவப்படும் என்பது அவர்களின் கருத்து. இதன்படி எதிர் காலத்தில் அமெரிக்க குடிமனைகளில் தண்ணீர் பயன்பாட்டை தவிர்த்து சிறுநீரிலிருந்து பொஸ்பரஸ் பிரித்தெடுக்கும் தொழில் நுட்பங்கள் செயற்பாட்டுக்கு வரும் என்று கருதப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகப் பணக்காரன் உருவான கதை

# பில்கேட்ஸ்




தனிப் பாவனைக் கணினிகளை உற்பத்தி செய்யத் தொடங்கி இந்த ம்.ஐ.ரி.எஸ். அலுவலகத்திலேயே மைக்ரோசொப்ட் இயங்குவதற்கும் ஓர் அறை ஒதுக்கப்பட்டது. அங்கே சில கணினிகளுடன் பில்கேட்ஸின் வேலை தொடங்கியது. பால் ஆலன், எம்.ஐ.ரி.எஸ். மற்றும் மைக்ரோசொப்ட் என இரண்டிலும் தன் பங்களிப்பைச் செய்தார்.

எம்.ஐ.ரி.எஸ். நிறுவனத்தின் அல்டெய்ர் கணினிக்கு, மைக்ரோசொப்ட் பேஸிக் மென்பொருளை விற்பனை செய்வதற்காக பில்கேட்ஸும், ஆலனும் எட் ராபர்ஸுடன் ஓர் ஒப்பந்தம் போட்டார்கள். அந்த ஒப்பந்தத்தை உருவாக்கிக் கொடுத்தவர் பில்கேட்ஸின் தந்தைதான்.

''சின்னப் பையன்களாகக் காட்சியளிக்கும் நம்மை, பெரிய மனிதராகக் காட்சியளிக்கும் இந்த எட் ராபர்ட்ஸ் எந்த விதத்திலும் ஏமாற்றி விடக்கூடாது'' என்ற முன் எச்சரிக்கையில் வழக்கறிஞரான தன் தந்தையை வைத்து இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார் பில்கேட்ஸ். ஒரு வழியாக பலத்த எதிர்பார்ப்புகளுக்கிடையில் எம்.ஐ.ரி.எஸ். இன் அல்டெய்ர் கணினியும், மைக்ரோசொப்ட் பேஸிக் மென்பொருளும் வெளியாயின. மக்கள் அல்டெய்ர் கணினிகளை அள்ளிக்கொண்டு போனார்கள். எம்.ஐ.ரி.எஸ். நிறுவனத்துக்கு டொலர்கள் குவிந்தன. நியாயப்படிப் பார்த்தால் இதே ரீதியில் மைக்ரோசொப்ட்டுக்கும் டொலர்கள் குவிந்திருக்க வேண்டும். ஆனால், அப்படி ஏதும் நடக்கவில்லை. ''ஏன்? என்ன ஆனது?'' என்று பில்கேட்ஸ் விசாரணையில் இறங்கியபோதுதான் அவருக்கு அந்த அதிர்ச்சி கிடைத்தது.

நம் தமிழ் திரைப்படம் வெளியானதும்,அது திருட்டு வீடியோவாக மாறி, ஒன்று, பத்து, ஆயிரம், லட்சம் பிரதிகளாக மாறித் தயாரிப்பாளருக்கு நட்டம் ஏற்படுத்துகிறதல்லவா? இதே கதிதான் மைக் ரோசொப்டின் மென்பொருளுக்கும் ஏற்பட்டது.

அல்டெய்ர் கணினியை காசு கொடுத்து வாங்குகிறவன் மைக்ரோசொப்டின் மென்பொருளைக் காசு கொடுத்து வாங்குவதில்லை. மாறாக வேறொருவன் பயன்படுத்துகிற அந்த மென்பொருளை திருட்டுத்தனமாக ஒரு பிரதி எடுத்துக்கொண்டு போய் விடுகிறான். அவனைப் பொறுத்தவரையில் காசு மிச்சம். மைக்ரோசொப்டுக்கோ பெரிய நட்டம்.

விடயம் புரிந்ததும் ஆத்திரப்பட்ட பில்கேட்ஸ், மென்பொருள் திருடர்களிடம் நீதி கேட்டு பத்திரிகையில் "An open letter to Hoffyists" என்று தலைப்பிட்டு ஒரு கடிதம் எழுதினார். 1976 பெப்ரவரியில் வெளியான அந்தக் கடிதத்தில், ''ஏ...மென்பொருள் திருடர்களே... என்கிற தொனியில் தொடங்கி நானும், நண்பன் ஆலனும் சேர்ந்து, கால நேரம் விரயமாக்கிக் காசு பணம் செலவழித்து இந்த மென்பொருளை உருவாக்கி இருக்கிறோம். இதை நீங்கள் காசு கொடுத்து வாங்காமல் திருட்டுத்தனமாகப் பயன்படுத்துவது நியாயம்தானா?'' என்று கோபத்துடன் கேட்டிருந்தார். இந்தக் கடிதத்தைப் படித்துவிட்டும் திருடிக் கொண்டிருந்தவன் திருந்தவில்லை என்பதே உண்மை. வழக்கம்போல மென்பொருள் திருட்டு அமோகமாக நடமாடிக்கொண்டுதான் இருந்தது.

நிலைமை அப்படியே நீடிப்பதைப் பார்த்த பில்கேட்ஸ், 1976 ஏப்ரலில் பத்திரிகையில் இரண்டாம் கடிதத்தை எழுதினார். " A Second and Final Letter " என்ற தலைப்பில் வெளியான இரண்டாவது கடிதமும் பழைய பல்லவியைத் தான் பாடியது.

அமெரிக்கப் பொது சனங்களும் பில்லின் கடிதத்தைக் கண்ணுற்றுப் படித்தார்களே தவிர காது கொடுத்துக் கேட்கத் தயாராக இல்லை. வழக்கம் போல தங்களின் சேவையைத் தொடர்ந்தார்கள். மேற்கண்ட இரண்டு கடிதங்களிலும் மூலம் பில்லுக்குக் கிடைத்த ஒரே இலாபம் 'பில்கேட்ஸ் என்கிற பையன் மென்பொருளில் எதையோ செய்யத் துடிக்கிறான்'' என்கிற விளம்பரம் தான்!

எம்.ஐ.ரி.எஸ். அலுவலகத்தில் எட் ராபர்ட்ஸும் பில்லும் சந்திக்கும் போதெல்லம் அவர்களுக்குள் ஏதேனும் ஒரு வகையில் வாய்த் தகராறு ஆரம்பித்து விடும். ஒருவரின் பேச்சு மற்றவருக்குப் பிடிக்காது.

இந்த நிலையில் பில்கேட்ஸைப் பார்த்த எட் ராபர்ட்ஸ், ''நீ உன் பத்திரிகைக் கடிதத்தில் மென்பொருள் உபயோகிப்பாளர்களைத் திருடர்கள் என்று விளித்திருக்கிறாய், அது மிகப்பெரும் தவறு'' என்று வழக்கம் போல தனது வெடியை வீசினார்.

ஏற்கனவே நட்டத்தின் காரணமாக ஆத்திரத்தில் இருந்த கேட்ஸ் இதைக் கேட்டதும், ''யோவ்... உமக்கென்னய்யா... ஏதோ எங்கள் புண்ணியத்தில் உமது பெட்டியில் காசு நிறைந்து கொண்டிருக்கிறது. எங்கள் நட்டத்தைப் பற்றி உமக்கென்ன கவலை இருக்கப் போகிறது? ஒழுங்காக உம்முடைய வேலையை மட்டும் பாருமய்யா'' என்று எதிர்த்துப் பேச ஒரே களேபரமாகி விட்டது. வழக்கம் போல ஆலன் உள்ளே நுழைந்து இருவரையும் சமாதானப்படுத்தி பிரித்து விட்டார்.

எட் ராபர்ட்ஸ் வயதானவர். அதே சமயம் பீமன் போன்ற உருவம் உடையவர். பில்கேட்ஸோ இளைஞராகவும், ஒல்லிக்குச்சி உடம்புடனும் காட்சி அளிப்பவர். அவர் எம்.ஐ.ரி.எஸ். முதலாளி. இவர் மைக்ரோசொப்ட் முதலாளி.

எம்.ஐ.ரி.எஸ். இல்லாமல் மைக்ரோசொப்ட் இல்லை மைக்ரோசொப்ட் இல்லாமல் எம்.ஐ.ரி.எஸ். இல்லை என்கிற நிலையில் நிறுவனத்தின் வளர்ச்சி பற்றி இரு முதலாளிகளும் பேச உட்கார்ந்தால் இப்படித்தான் அடித்துக் கொள்வது வழக்கம். இருவருக்கும் இடையே நீதிபதியாக அமர்ந்து தீர்ப்பு வழங்குவது ஆலனின் அன்றாட வேலைகளில் ஒன்று.

பில்கேட்ஸை வெளியேற்றி விட எட் ராபர்ட்ஸ் விரும்பினாலும் அது நடக்காது. காரணம் பில்கேட்ஸ் வெளியேறினால் அவருடன் ஆலனும் வெளியேறி விடுவார். அது எம்.ஐ.ரி.எஸ். இற்கு இழப்பு. எனவே ஆலனுக்காகப் பில்கேட்ஸைப் பொறுத்துக் கொண்டார் ராபர்ட்ஸ். அவ்வாறே பில்கேட்ஸும் தன் நண்பனுக்காக எட் ராபர்ட்ஸை சகித்துக் கொண்டார்.

பில்கேட்ஸ், மைக்ரோசொப்ட்டுடன் தனது பார்வையை நிறுத்திக்கொள்ளாமல் எம்.ஐ.ரி.எஸ்.இன் வியாபார நுணுக்கங்களிலும் தன் மூக்கை நுழைத்தார். அல்டெய்ர் ஏராளமாக விற்பனையானால்தான் மென்பொருளுக்கும் இலாபம் கிடைக்கும் என்பதால் எம்.ஐ.ரி.எஸ். இன் விற்பனைக்கு நல்ல யோசனைகள் பலவற்றைச் சொல்வார் பில்கேட்ஸ். அவற்றை எல்லாம் அப்படியே தூக்கிக் குப்பையில் வீசுவதே ராபர்ட்ஸின் வழக்கம்.

ஒருபக்கம் திருட்டு மென்பொருள் விற்பனை. மறு பக்கம் ராபர்ட்ஸின் தொந்தரவால் நொந்து நூலாகிப் போன பில்கேட்ஸ், ''இனியும் இந்த ராபர்ட்ஸை நம்பினால் மைக்ரோசொப்ட் கப்பல் கவிழ்ந்துவிடும். அதற்கு முன்பு எம்.ஐ.ரி.எஸ். நிறுவனத்தைக் கழற்றி விட்டு விட்டு வேறு கணினி நிறுவனங்களுடன் கைகோர்த்துக் கொள்ள வேண்டியதுதான்'' என்ற முடிவுக்கு வந்தார் பில்

> பில்கேட்ஸை வெளியேற்றி விட எட் ராபர்ட்ஸ் விரும்பினாலும் அது நடக்காது. காரணம் பில்கேட்ஸ் வெளியேறினால் அவருடன் ஆலனும் வெளியேறி விடுவார். அது எம்.ஐ.ரி.எஸ். இற்கு இழப்பு. எனவே ஆலனுக்காகப் பில்கேட்ஸைப் பொறுத்துக் கொண்டார். அவ்வாறே பில்கேட்ஸும் தன் நண்பனுக்காக எட் ராபர்ட்ஸை சகித்துக் கொண்டார்

## ஆருக்குச் சொல்லி அழ...

*தாயும் வேலை செய்ய வேணுமாம்,*
*தந்தையும் வேலை செய்ய வேணுமாம்,*
*ஓய்வும் இல்லாதபடி படிக்கவும் வேணுமாம்,*
*ஒவ்வொரு கதிரையாய் பதவியும் வேணுமாம்,*
*நோயும் வரக்கூடாத நுணுக்கமும் வேணுமாம்,*
*நோகாதபடி இரண்டு பிள்ளைகளும் வேணுமாம்,*
*மாயும் இவ்வுடம்புக்கு வடிவும் வேணுமாம்,*
*மாபிளும், மாடியும், கேபிளும் வேணுமாம்,*
*வாயிலே கொறிக்க நொறுக்குத் தீனி வேணுமாம்,*
*வடிவாக வெளிக்கிட்டு போகவும் வேணுமாம்,*
*கோயிலில் நின்றுதான் கும்பிட வேணுமாம்,*
*கும்பிடு நேரத்தில் நாடகம் பார்க்கவும் வேணுமாம்,*
*பாயிலியே அல்ல படுக்க கட்டில் வேணுமாம்,*
*பாண் வாங்கக் கூட பெற்றோல் வேணுமாம்,*
*'ஏ' யிலே படித்து 'ஏ'யிலே பாஸ்பண்ணவும் வேணுமாம்,*
*ஆனால், அவர்களின் குழந்தையோ*
*அடுத்தவர் கையில் வளர்கிறது,*
*தீயிலே தொட்டு சத்தியம் செய்து சொல்கிறேன்*
*தேடிய பணம் கோடியோ மாடியோ யாவும் சேதாரமே!*
*தெய்வக் குழந்தைகளை மற்றவர் பசியாற விடலாமா?*

*கே.எஸ்.சிவஞானராஜா, கொக்குவில்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

04.08.2013 முதல் 10.08.2013 வரை

தருபவர் - வித்தியா



**மேடம்**- மனதில் புதிய உற்சாகம் பெறுவீர்கள். நியாய தர்ம குணம் மிகுந்த நல்லவர்களின் நட்பு உதவிகரமாக அமையும். வழக்கு விவகாரத்தில் அனுகூலமான தீர்வு கிடைக்கும். இல்லறத்துணை அன்பு, பாசத்துடன் நடந்து, குடும்ப நலன் பாதுகாத்திடுவர். சீரான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் அதிக வேலைவாய்ப்பு பெறுவர். மாணவர்கள், திட்டமிட்டு படித்து கூடுதல் மதிப்பெண் பெறுவர்.



**இடபம்**- மனசாட்சிக்கு கூடுதல் மதிப்பு தந்து செயற்படுவீர்கள். விலகிச்சென்ற நண்பர் விரும்பி அன்பு பாராட்டுகிற அனுகூல நிலை உண்டாகும். வாழ்வில் கூடுதல் வளம்பெற திட்டமிட்டு பணிபுரிவீர்கள். உங்களை அவமானப்படுத்த முயற்சிப்பவர்களின் தீய செயல் முடங்கிப்போகும். உத்தியோகத்தர் சிறப்பாகப் பணிபுரிந்து பாராட்டு, வெகுமதி பெறுவர். மாணவர்கள் ஞாபகத்திறன் வளர்ந்து படிப்பில் முன்னேற்றம் பெறுவர்.



**மிதுனம்**-எந்தச் செயலிலும் நிதான குணத்தைப் பின்பற்றுவது அவசியம். வேலைப்பளு மனதில் சஞ்சலத்தை உருவாக்கும். உங்கள் நலன் சிறக்க உதவுபவரின் ஆலோசனையால் வாழ்வில் எதிர்நோக்கும் சிரமங்களை சரி செய்வீர்கள். கண்டிப்பதைத் தவிர்த்து இயன்றளவில் அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். எதிரியிடம் சமயோசிதமாக விலகுவது நல்லது. அத்தியாவசிய செலவுக்கு கொஞ்சம் பணக்கடன் பெறுவீர்கள். மாணவர்கள் நண்பர்களிடம் கருத்து வேறுபாடு வராதபடி பேசுவது நல்லது.



**கடகம்**- உங்களின் முக்கியமான பணிகள் நிறைவேற அதிக பொறுப்புணர்வுடன் செயற்படுவது அவசியமாகும். வீண் பேச்சு பேசி பொழுதை கடத்துபவர்களிடம் விலகுவதால் மன அமைதியைப் பாதுகாக்கலாம். இளைய சகோதரரின் கருத்துக்கு மாறாக ஆலோசனை சொல்ல வேண்டாம். இல்லறத்துணை உங்களின் நல்ல குணங்களை பாராட்டுவார். பணியாளர்கள் ஒருமுகத்தன்மையுடன் செயற்படுவதால் மட்டுமே பணியில் ஏற்படும் குளறுபடிகளைத் தவிர்க்கலாம். மாணவர்கள் வெளியிடம் சுற்றுவதைக் குறைப்பதால் படிப்பில் கவனம் வளரும்.



**சிங்கம்**- புத்தி சாதுர்யமான பேச்சு, செயல்களால் நண்பர், உறவினர்களிடம் கூடுதல் மதிப்பு, மரியாதை பெறுவீர்கள். மனம் தெளிந்த நீரோடைபோல இருக்கும். எதிர் மனப்பாங்குடன் பேசியவரும் உங்களின் இனிய அணுகுமுறையைப் பார்த்து அன்பு பாராட்டுவர். புதிய தொழிற் கருவிகள் வாங்க அனுகூலம் உண்டு. பணியாளர் களுக்கு பதவி உயர்வு, சலுகைப்பயன் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் சிறந்த முன்னேற்றம் காண்பர்.



**கன்னி**-எதிர்பாராத வகையில் புதிய ஆதாய பலன் கிடைக்கும். எவரையும் மதித்து பேசுவதால் மட்டுமே பெற்ற நற்பெயரைப் பாதுகாக்க இயலும். இல்லறத்துணையின் கூடுதல் அன்பு, பாசம் மனம் நெகிழ வைக்கும். தொழில் செழிக்க தேவையான அரச உதவி பெற அனுகூலம் உண்டு. தொழில் நுட்பப் பணியாளர் புதிய நுட்பங்களை அறிந்து கொள்வர். மாணவர்கள் பாதுகாப்பு குறைவான இடங்களில் செல்ல வேண்டாம்.



**துலாம்**- வாழ்வில் கூடுதல் வளம் பெற புதிய வாய்ப்பு உருவாகும். முறையாக பயன்படுத்தி முன்னேற்றம் பெறுவீர்கள். தன்னைச் சார்ந்தவர்களுக்கு உதவும் மனப்பான்மை அதிகரிக்கும். இல்லறத்துணையின் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பீர்கள். உத்தியோகத்தர் நிர்வாகப் பணி சிறக்க பயனுள்ள ஆலோசனை சொல்வர். மாணவர்கள் புதிய முறையினால் படிப்பில் முன்னேற முயற்சி செய்வர்.




**விருச்சிகம்**-முக்கியமான பணிகளை பிறரிடம் கொடுக்காமல் நீங்களே பொறுப்பு உணர்வுடன் நிறைவேற்றுவது அவசியமாகும். தன்மானத்துக்கு சோதனை வரும் தருணங்களில் சகிப்புத்தன்மையைப் பின்பற்றுவதால் மட்டுமே சுய கௌரவம் பாதுகாக்கப்படும். அரசியல்வாதிகள் தன் சொல்லுக்கு கட்டுப்படாதவர் பிரச்சினையை சரி செய்ய முயற்சிக்க வேண்டாம். மாணவர்கள் சாகச விளையாட்டுகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.



**தனுசு** -வாழ்க்கையில் முன்னேற்றம் பெறுவீர்கள். கூடுதல் சொத்து சேர்க்கை பெற நல்யோகம் உண்டு. சமூக அந்தஸ்து உள்ளவர்களின் அன்பு, உதவி கிடைக்கும். தொழிலில் கூடுதல் கவனம் செலுத்தி அபிவிருத்தி காண்பீர்கள். புதிய ஒப்பந்தம் கிடைத்து லாபம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு கூடுதல் வேலை வாய்ப்பு, சம்பள உயர்வு கிடைக்க அனுகூலம் உண்டு. மாணவர்கள் ஆசிரியரின் சிறப்புக் கவனம் கிடைத்து கல்வியில் முன்னேற்றம் அடைவர்.



**மகரம்** - சிறு செயலும் நிறைவேற பலமுறை முயற்சிக்க வேண்டியதாயிருக்கும். உங்களை புகழ்ந்து பேசி சுயலாபம் பெற நினைப்பவரிடம் விலகுவது நல்லது. புதிதாகக் கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்துவதால், வாழ்வியல் நடைமுறைகள் சிறப்பாக அமையும். தொழில், வியாபார நடைமுறை சிறக்க முன் அனுபவங்களை உணர்ந்து பணிபுரிவது நல்லது. பணியாளர்கள் ஒழுங்கு நடவடிக்கை வராதபடி பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும். மாணவர்கள் நன்றாகப் படித்து பாராட்டு பெறுவர்.



**கும்பம்**- உங்கள் மனதில் புதிய சிந்தனைகளும் செயல்களில் பரிமளிப்பும் உருவாகும். பிறர் மனம் அறிந்து பேசி நற்பெயரைப் பாதுகாப்பீர்கள். குடும்பத்தில் ஏற்பட்ட நீண்ட நாள் பிரச்சினைக்கு சுமுக தீர்வு கிடைக்கும். பூர்வீக சொத்தில் பெறுகிற பணவரவு, அத்தியாவசிய செலவுக்குப் பயன்படும். தொழிலில் அளவான உற்பத்தி, விற்பனை இருக்கும். பணியாளர்கள், கடமைகளை சரி வர நிறைவேற்றி மனதில் நிம்மதி அடைவர். மாணவர்கள் ஆடம்பரச் செயற்பாடுகளைக் குறைப்பதால் கல்வியில் கவனம் வளரும்.



**மீனம்**- பணச்செலவும் பணவரவுக்கு காத்திருக்கிற சூழ்நிலையும் ஏற்படும். ஆர்வமுடன் செய்கிற பணிகள் கூட குறைந்த அளவிலான பயனையே பெற்றுத்தரும். எதிரியிடம் விலகுவதால், தேவையற்ற சிரமம் வராமல் தவிர்க்கலாம். தொழில் தொடர்பாக நீண்ட தூர பயணம் மேற்கொள்ள வேண்டியதிருக்கும். பிறருக்காக ப[illegible] மாணவர்கள் விளையாட்டைத் தவிர்த்து பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வை... திஸ் கொலைவெறி...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

''ஆற்றுத் தண்ணியை நாய்நக்கினாப் போலை அந்தத் தண்ணி குறையப் போறதில்லை'' இது ஆனந்தனின் சிந்தாந்தம்.

ஆனந்தனின் வீட்டுக் காணியை விட இன்னும் இருபது ஏக்கர் தென்னங்காணிகள் இரண்டிருந்தன.

''உதென்னடாப்பா! எல்லாம் சோடை பத்திப் போய் நிக்குது. உதை வித்துப் போட்டுவட்டிக்குப்போட்டமெண்டால் உதை மாதிரி இரண்டில்லை நாலு காணியே வாங்கலாம்சும்மா உந்த வெறும் மண்ணை வைச்சுக்கொண்டு என்ன பிரயோசனம்!''

தியாகுவின்ர ஆலோசனை ஆனந்தனுக்கு நியாயமாகவே பட உடனடியாகத் தீர்மானம் நிறைவேறியது. கொடுக்கல் வாங்கல்கள் உழைப்புப் பிழைப்புகள் எல்லாமே தெளிந்த நீரோடையாக எதுவித பிசகுகளுமின்றி மகிழ்ச்சியாக ஓடிக்கொண்டிருந்தது. ஆனந்தனுடைய ஒரேயொரு நம்பிக்கை நட்சத்திரம்தான் தியாகு. இத்தனை கொடுக்கல் வாங்கல்களுக்கும் இரு பகுதி உத்தரவாதி தியாகு ஒருவன் தான்.

அரச, தனியார் வங்கிகளில் புதிது புதிதாகப் புதிய பெயர்களுடன் கணக்குகள் அறிமுகமாகும். அதைப் பின்பற்றியோ என்னவோ தியாகுவும் அவசரமான கடன்கோரி நிற்கும் வாடிக்கையாளரின் நன்மை கருதி ஒரு புதிய திட்டமொன்றை உருவாக்கி அறிமுகப் படுத்தியும் வைத்தான். மீற்றர் வட்டியென்று அதற்கு பெயரும் சூட்டியாயிற்று. வட்டி விகிதம் உச்சம்தான். இருந்தாலும் அவசர தேவைக்காரருக்கு இது ஒரு வரப் பிரசாதமாகவே தெரிந்தது. மீற்றர் ஓடிக்கொண்டிருக்க ஆனந்தனும் தியாகுவும் மிக்க மகிழ்ச்சியில் திளைத்தனர்.

டக்டக்கெனச் சப்பாத்தின் ஒலி கேட்க அனைவரும் பின்னே மணியோசை வரும்முன்னே என்பது போல டாக்டர் ஒருவர்தாதிசகிதம்கம்பீரமாக நடந்து வந்து கொண்டிருந்தார். இதுவரை கடந்த காலச் சம்பவங்களை அசை போட்டுக் கொண்டிருந்த ஆனந்தன் தற்காலிகமாக அவைகளைப் பூட்டி வைத்து விட்டு நிஜவாழ்க்கைக்கு வந்தான்.

''என்னப்பா செய்யுது!'' என்ன சாப்பிட்டனீர்!

''ஒண்டும் சாப்பிட ஏலாது சேர்! சும்மா இரண்டு பிஸ்கட் தான் சுடுதண்ணியிலை தோய்ச்சுப் சாப்பிட்டுப் பார்த்தன். சாப்பிட ஏலாதாம்''

இப்படிச் சொல்லிவிட அவன் முயற்சித்தது என்னவோ உண்மை தான். ஆனால் வார்த்தைகள் வெளியில் வரவில்லை. நா அசைந்து கொடுக்க மறுத்தது. பிறந்து ஆறு மாதங்களேயான சிசுவொன்று பேசுவதற்கு முயற்சித்தது போன்றிருந்தது. ஒன்றுமே விளங்கித் தொலையவில்லை.

''அதுதான் சேர்! நாக்கு நல்லாய்த் தள்ளிப் போட்டுது. கழுத்திலும் கயிறு வெட்டித் தொண்டையும் கட்டிப் போட்டுது''. பவ்வியமாகக் கூறிய படி கட்டிலின் பின்புறத்திலிருந்த மருத்துவப் பதிவினை எடுத்து அந்தப் புதிய டாக்டரிடம் கொடுத்தாள் தாதி. நக்கற் சிரிப்பொன்றை உதிர்த்த டாக்டர் அவ்விடத்தை விட்டு நகர, வெட்க உணர்வால் கூனிக் குறுகி நின்றான் ஆனந்தன்.

யார் கண்பட்டதோ! இப்போது கொஞ்ச நாள்களாக அசுர வேகத்தில் ஓடிக் கொண்டிருந்த மீற்றரின் முட்கள் ஆமை வேகத்திலேயே ஓடிக்கொண்டிருந்தன. பணப்பட்டுவாடாவும் முந்திய மாதிரி இல்லை. வாடிக்கையாளர்களின் மீளச் செலுத்துதல் மற்றும் கொடுக்கல் வாங்கல்களில் வெகுவான வீழ்ச்சி. எல்லாவற்றுக்கும் மேலாக மேற்படி வட்டித் தொழிலுக்கு முதுகெலும்பாய் விளங்கிய தியாகுவின் பிரசன்னமில்லாமை ஆனந்தனுக்கு வயிற்றில் புளியைக் கரைக்கப் பேய் பிடித்தவன் போலாகி விட்டான் ஆனந்தன்.

ஏனிந்தத் தேக்க நிலை! இப் படியொரு தொய்வு வருவதற்குத் காரணமென்ன? ஆனந்தனுக்கு இப்போது மெல்ல மெல்ல எல்லாம் புரியத் தொடங்கியது. ஆழமறியாமற் காலை விட்டதை உணர்ந்து கொண்டான். கறந்த பால் முலைக் கேறாது. மிகவும் தளர்ந்து போனான். கடன் வாங்கியவர்களில் எல்லோரையும் நாணயமற்றவர்கள் என்று ஒரேயடியாகக் கூறிவிட முடியாது. ஒரு சிலர் வாங்கிய பணத்தை வட்டியும் முதலுமாக தியாகுவிடமே ஒப்படைத்துவிட்டனர். இன்னும் சிலர் பெரிய வட்டிச் சுமையைத் தாங்க முடியாது தலைமறைவாகினர்.

ஒரு நிறுவனத்தில் சிப்பந்தியாக வேலை பார்த்த ஒருவன் அந்தத் தொழிலின் நெளிவு சுளிவுகளைக் கச்சிதமாகப் புரிந்து கொண்டு பின்பு அந்த நிறுவனத்திலிருந்து விலகித் தானே சொந்தமாக ஒரு நிறுவனத்தை ஆரம்பித்து அதற்கு அதிபதியாகிக் கொள்வது ஒன்றும் ஊர் உலகத்தில் நடக்காத சங்கதியல்ல. அந்த வகையில் இப்போது தியாகு சொந்தமாக வட்டித் தொழிலை மிக நேர்த்தியாக நடத்தி வருகின்றான்.

தியாகுவிடம் வரிந்து கட்டிக் கொண்டு போய் நியாயம் கேட்க ஆனந்தன் விரும்பவில்லை. விரும்பினாலும் கூட அது சாத்தியப்படாத காரியம் தான். ஆனந்தன் மெது மெதுவாக ஓட்டாண்டி நிலைக்கு வந்துவிட்டான். யார் மீதும் சட்ட நடவடிக்கையுமெடுக்க முடியாது. செய்த தொழிலே கிறிமினல் தொழில். இந்த இலட்சணத்தில் பொலிஸ் நீதிமன்றம் என்று போனால் பொல்லைக் கொடுத்து அடி வாங்குவது போல இருக்கும். எனவே வேண்டாம் பொல்லாப்பு என்று இருந்து விடவும் முடியவில்லை. கட்டிய மனைவியின் நகை நட்டுக்கள், அருமையான தென்னங் காணிகள் எல்லாமே அவனை விட்டுப் போய் விட்டன. உற்றார், உறவுகளின் ஏளனத்துக்கும் நக்கல்களுக்கும் ஆளாகி வாழ்க்கையின் ஓரத்துக்கே ஒதுக்கப்பட்டு விட்டான். தான் ஒரு குற்றவாளி, சமூகத்துக்கு ஒவ்வாதவன். இனியும் இந்த மண்ணில் வாழப் பிடிக்காமல் இந்த ஏமாற்றுலகை விட்டுப் பிரிய எண்ணித் தூக்குக் கயிறு போட்டுத் தற் கொலைபுரிய எத்தனித்தும் யாரோ கண்டு அவனைக் காப்பாற்றி இந்த ஆஸ்பத்திரி விடுதியில் இப் போது சிகிச்சை பெற்று வருகின்றான்.

ஆனந்தனின் நான்காவது கட்டிற்காரன். அது தான் அந்தக் கிருமி நாசினித்தற்கொலைக் கேஸ்.இரண்டோ மூன்றோ டாக்டர் கள் தாதிகள் சிப்பந்திகளுடனிருந்து ஏதோ தீவிர சிகிச்சையில் அமர்க்களப் பட்டுக் கொண்டிருந்தனர். ஒரு புறம் சேலைன் ஏறிக் கொண்டிருந்தது. சில நொடிகளில் அதுவும் ஏறமறுக்க அந்த நோயாளியின் வாய்க்குள்ளிருந்து குதிரை நுரையாக நுரை திரள் திரளாகக் கக்கியபடியிருந்தது. சிலேட்டும் எனக் கூறப்படும் சேடம், பயங்கரமாக இழுக்கத் தொடங்கி டாக்டர்கள் உதட்டைப் பிரித்துவிட்டு நடையைக் கட்டினர். இனி வைத்தியம் செய்வது பைத்தியக்காரத்தனம் என்பதை அனைவருமுணர்ந்து கொண்டவுடன் நோயாளி தனிமைப்படுத்தப்பட்டான். '' ஐயோ! ஆரடா எருமையிலை வாறது! ஓடடா நான் வரமாட்டன். டேய் கயித்தைப் போடாதை டோய் டோய்! என்னை விடுங்கோடா'' பயத்திலே பரிதாபமாகக் கத்தியவனின் குரல் கிட்டத்தட்ட ஈனஸ்வரத்துக்கு வந்துவிட்டது. மெல்ல மெல்ல அவனுயிர் பிரிய உடல் சாய்ந்து சகலதும் அடங்கும் வேளையில்தான் ஆனந்தன் அவனைக் கவனித்தான். அவனால் நம்ப முடியவில்லை.

அவன்தான் இவனை இந்தநிலைக் குக் கொண்டு வந்த தியாகு. அவனுக்கென்ன நடந்தது. ஆனந்தன் தன்னுடைய சொந்த உழைப்பை விரயமாக்கிய விரக்தியில் தனது உயிரை மாய்க்கத் துணிந்தான். அது நியாயம். யாருடையோ பணத்தைச் சுறையாடி ஆடம்பரமாக வாழ்ந்து கொண்டிருந்த தியாகு எதற்காகத் தற்கொலை செய்ய வேண்டும்? -ஆனந்தன் தன்னைத் தானே கேட்டுக் குழப்பமடைந்தான்.

'' தம்பி ஆனந்தன் என்னைத் தெரியுதோ! இந்தாரும் உம்மட்டை வாங்கின பத்து லட்சமும் வட்டியுமிருக்கு. எடுத்துக் கொள்ளும்''

கையில் பணத்துடன் நின்றார் மாசிலாமணி வாத்தியார். ஆனந்தனுக்குத் தனது கண்களையே நம்பமுடியவில்லை.

# ஒளி விளக்கை ஏற்றுவோம்



பி.விபிஷனா

ஆணுக்கு அளிக்கும் கல்வி அவன் ஒருவனுக்கு; பெண்ணுக்கு அளிக்கும் கல்வி ஒரு குடும்பத்துக்கு என்பதை உணர்ந்து, பெண்கல்வி மேம்பட இந்தச் சமுதாயம் வழிவகை செய்ய வேண்டும். ஆண்களைப் போலவே பெண்களும் திறமையில் எந்த விதத்திலும் தாழ்ந்தவர்கள் இல்லை என்று முழுமனதுடன் நம்பினால் மட்டுமே பெண்கள் நிறைய வெற்றிகளைப் பெற முடியும். பெண்கள் முன்னேற்றத்தை ஊக்குவிக்காத சமுதாயம், நாகரிகமான சமுதாயமாக இருக்க முடியாது.

இன்று பெண்கள் கல்வியின் சிறப்பை உணர்ந்து, முழு மனதுடன் முயன்று, கல்வி கற்று, ஆண்களை விட அதிக புள்ளிகளைப் பெற்று மிகுந்த திறமை பெற்றவர்களாய் விளங்குகின்றனர். வேலை வாய்ப்பும் அவர்களுக்கு வளமாகவே உள்ளது. ஆனால் ஆண்களின் மூனதில் மட்டும் பெண்கள் மேல் உள்ள பார்வை இன்னமும் மாறவில்லை. சமுதாயத்தில் பெண்களுக்கு இன்னமும் முழுப் பாதுகாப்பும், அங்கீகாரமும் கிடைக்கவில்லை. அவர்கள் உழைப்பதற்கு, சவால்களைச் சந்திப்பதற்கான தைரியத்தை, திறமையை பெற்றிருந்தாலும் எந்த விடயத்திலும் சுயமாக முடிவு எடுக்க முடிவதில்லை.ஆண்கள் தான் அறிவார்ந்த முடிவுகள் எடுக்க முடியும் என்ற போக்கு மாறும் வரை பெண்களால் முழுமையான முன்னேற்றம் காண முடியாது.

குடும்ப அளவில் பொருளாதார பாரத்தைச் சுமக்கும் பெண்களில் பலர் இரட்டைக் குதிரைச் சவாரி செய்யும் நிலையிலேதான் இருக்கின்றனர். வீட்டுப் பணி, அலுவலகப்பணி இரண்டையும் திறம்பட செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் பலருக்கு. ஆண் பெண் இருவருக்கும் குடும்பப் பொறுப்பில் சம பங்கு இருக்கிறது என்பதை எந்த மட்டத்தில் இருக்கும் ஆண்களும் புரிந்து கொள்வதில்லை. ஏதோ குடும்பம் என்றால் அது முழுக்க முழுக்க பெண்கள் பொறுப்பு என்ற தவறான எண்ணம் ஆண்கள் மத்தியில் உள்ளது. இதுஒருபுறம் இருக்க, கல்வியும், பொருளாதார சுதந்திரமும் கிடைக்கப் பெற்ற ஒரு சில பெண்கள் மமதை கொண்டு எமது கலாச்சாரத்துக்குப் பொருந்தாத வகையில் அநாகரிகமாக நடந்து கொள்கின்றனர். ஆரோக்கிய மற்ற இந்தப் போக்கை மாற்றிக் கொண்டு,பெண்கள் பரிசுத்தமான சிந்தனைகளை வளர்த்து, சீராக நடந்துகொள்ள வேண்டும். பொறுமை பெண்ணுக்கு இயல்பான குணம் விட்டுக் கொடுத்தல் பெண்ணுக்கு சுலபமான கலை; அரவணைத்து, அனுசரித்துச் செல்வது பெண்மையின் தனிச் சிறப்பு. இந்தக் குணங்களைக் கடைப்பிடிக்கும் படித்த பெண்கள் சமூகத்தின் தூண்களாக விளங்குவர்.

எனவே, பெண்களுக்கு கல்வி அவசியம் என்ற விழிப்புணர்வு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், எமது சமுதாயம் பிறரை வியப்பில் ஆழ்த்தும் வண்ணம் முன்னேறியிருக்கிறது. பலதுறைகளில், வெற்றிப் பாதையில் வீறு நடைபோடும் இந்தச் சமுதாயம், பெண்கள் முன்னேற்றம் என்ற பாதையில் ஒரு சில மைல் கற்களைத் தான் கடந்திருக்கிறது. சமுதாயத்தில் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் தடைகளைக் களைந்து சீரானே பாதையில் சிரமமின்றி நடை போடத் தடையாய் இருக்கும் கற்களையும், முட்களையும் அகற்றுவோம். இருளில் மூழ்கியிருககும் சமுதாயத்தை வெளிச்சத்திற்குக் கொண்டு வர ஒளி விளக்கை ஏற்றுவோம்.

# இனி ஒரு விதி செய்வோம்...



இன்று உலகளாவிய ரீதியில் பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகள் காலத்துக்குக் காலம் வெவ்வேறு வடிவம் பெற்று வருகின்றனவே தவிர, குறைந்தபாடாயில்லை. பெண்கள் மீதான உடல் ரீதியான வன்முறைகளும் அதிகரித்த வண்ணமே உள்ளன.

அதில் ஆச்சரியம் என்னவென்றால் குடும்பத்தில் தனக்கு மிக நெருக்கமானவர்களாலேயே பெண்கள் பல்வேறு வன்முறைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். வன்முறைகளுக்கு எதிர்த்துக் குரல்கொடுக்கத் துணியாத நிலையிலேயே இவர்கள் மீதான வன்முறைகளும் அடக்குமுறைகளும் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன என்பதே உண்மை. உலக சனத்தொகையில் இன்று பெண்களின் சதவீதம் 50 ஐ எட்டிவிட்டது. ஆண்களை விட ஒரு சமூகத்தில் பெண்கள் அங்கம் வகிக்கும் பாத்திரங்கள் இன்றியமையாதனவாக உள்ளன. எனினும் குடும்பம் மற்றும் சமூக வன்முறைகளில் பெரிதும் பாதிக்கப்படும் ஒரு பாத்திரமாகவும் பெண் விளங்குவது வேதனைக்குரியது.

இன்று உலகம் எந்த அளவுக்கு நாகரீகத்திலும் அறிவியலிலும் ஏற்றம் கண்டுவருகின்றதோ அந்த அளவுக்கு குற்றச் சம்பவங்களும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன.

அமெரிக்காவில் 20 நிமிடங்களுக்கு ஒரு பெண் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப் படுகிறாள். பிரான்ஸில் வருடந்தோறும் 25 ஆயிரம் பெண்கள் பாலியல் வல்லுறவுக் குட்படுத்தப்படுகின்றனர். துருக்கியில் திருமணமான பெண்களில் 35 வீதமானோர் தமது கணவராலேயே பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

திருமண வயதை அடையும் முன்பாகவே பெண்களை இல்வாழ்வில் பலவந்தமாகச் சேர்க்கும் நடைமுறை இன்று உலகில் பல நாடுகளில் உள்ளது. ஆய்வுகளின்படி பாரம்பரியம், கலாசாரம், சடங்கு என்ற பெயர்களில் இன்று உலகம் முழுவதும் 10-17 வயதுக்கிடைப்பட்ட 82 மில்லியன் சிறுமிகள் கட்டாயத் திருமணம் செய்யவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.


குடும்பக் கௌரவம், சமூகத்தின் விமர்சனம் என்பவை காரணமாக பல பெற்றோர்கள் கூட தமது பிள்ளைகளுக்கு நடக்கும் அக்கிரமங்களை மூடிமறைத்து விடுகின்றனர். இதுவே அவர்களுக்கெதிராக மேலும் மேலும் குற்றங்கள் பெருக வழிவகுக்கிறது. போரினால் இடம் பெயர்ந்த அகதிகளில் 80 வீதமானோர் பெண்களும் சிறுவர்களுமே. இதுவரை உலகில் இடம்பெற்ற போர்களில் அதிகம் பாதிக்கப்பட்டவர்களும் பெண்களே. பெண் என்பவள் பிறந்த திலிருந்து பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் முகங்கொடுத்து வளரக் கூடிய ஒரு சூழல் உண்மையில் ஆசியக் கண்ட நாடுகளில், குறிப்பாக தென்கிழக்காசிய நாடுகளிலேயே நிலவுகிறது. இறுக்கமான கலாசார பண்பாடுகளைக் கொண்டமைந்த நாடுகள் என்பதாலேயே இந்த நிலை என்று நாம் எம்மைச் சமாதானப் படுத்திக்கொள்ள முடியாது. உலகமே போற்றும் தாய் என்ற அற்புதமான பாத் திரப்படைப்பை கொண்ட பெண்ணின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு தொடர் பில் இனி ஒரு விதி செய்வோம் .

> திருமண வயதை அடையும் முன்பாகவே பெண்களை இல்வாழ்வில் பலவந்தமாக இணைக்கும் நடைமுறை இன்று உலகில் பல நாடுகளில் உள்ளது. ஆய்வுகளின் படி பாரம்பரியம், கலாசாரம், சடங்கு என்ற பெயர்களில் இன்று உலகம் முழுவதும் 10-17 வயதுக்கிடைப்பட்ட 82 மில்லியன் சிறுமிகள் கட்டாயத் திருமணம் செய்யவேண் டிய நிலைக்கு தள்ளப்பட் டுள்ளனர்.

சுருதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவிந்தனும், மகாலட்சுமியும்



கோவிந்தன் ஓர் எளிமையான நேர்மையான மனிதன். அவனிடம் ஒரு பசு மாடு இருந்தது. அதற்கு மகாலட்சுமி என்று பெயரிட்டு அதை அன்போடும், பாசத்தோடும் வளர்த்து வந்தான். மகாலட்சுமியும் பாலை தாராளமாக வழங்கியது. அதை விற்றுப் பணமாக்கி சந்தோஷமாக வாழ்க்கை நடத்தி வந்தான் கோவிந்தன்.

நேர்மையானவன் என்பதால், அவன் பாலில் தண்ணீர் கலக்காமல் அப்படியே விற்று வந்ததால், அவனுடைய வாடிக்கையாளர்கள் மிகவும் திருப்தியடைந்தனர். கோவிந்தனுக்கு அவன் அம்மா திருமணம் செய்து வைத்தார். தொழு வத்துக்கு ஒரு மகாலட்சுமி. இல்லத்துக்கு மற்றொரு மகாலட்சுமி என்று கோவிந்தன் மகிழ்ச்சியடைந்தான். ஆனால் கோவிந்தனின் மனைவி ருக்மணி பேராசைக்காரியாக இருந்தாள். பாலில் தண்ணீர் கலக்காமல் கோவிந்தன் பாலை விற்பது அவளுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. அவனைப் பாலில் தண்ணீர் கலந்து விற்கச் சொன்னாள்.


கோவிந்தனும் அவள் கட்டளைக்குப் பணிய, விரைவிலேயே அவன் வாடிக்கையாளர்கள் பாலின் தரத்தைப் பற்றிப் புகார் செய்யத் தொடங்கினர். உடனே கோவிந்தன் ருக்மணியிடம் அதைப்பற்றிச் சொல்ல, அவள் மாட்டின் மேல் பழியைப் போடும்படி அருமையான யோசனை சொல்லிக்கொடுத்தாள். கோவிந்தனும் மகாலட்சுமி ஒழுங்காகப் பால் தருவதில்லை என்று வாடிக்கையாளர்களிடம் காரணம் கூறினான்.

அது மகாலட்சுமியின் காதுகளுக்கு எட்டியது. ருக்மணிக்கு ஒரு பாடம் கற்பிக்க மகாலட்சுமி விரும்பியது. அன்று முதல் பால் தருவதையே நிறுத்திவிட்டது. புல் மேயப் போகும் போது, வழியில் தன் பாலையெல்லாம் கன்றுக்குக் கொடுத்து வந்தது. கோவிந்தனின் வியாபாரம் மந்தமாகி விட்டது.

கோவிந்தன் கதிகலங்கிப் பைத்தியம் பிடிக்கும் நிலைக்கு ஆளானான். அப்போது அவனது கனவில் மகாலட்சுமி தோன்றி பாலைத் தராமல் நிறுத்தியதன் காரணத்தைக் கூறியது. மறுபடியும் பழையபடி பால் தருவதாக இருந்தால் பாலில் தண்ணீர் கலக்கக் கூடாது. கனவிலிருந்து திடுக்கிட்டு விழித்த கோவிந்தன் உடனே ஓடிச்சென்று தன் மகாலட்சுமியின் முன் மண்டியிட்டு வணங்கித் தன்னை மன்னிக்கும்படி கெஞ்சினான். மகாலட்சுமியும் தலையை ஆட்டிச் சம்மதித்தது. அன்று முதல் கோவிந்தன் மீண்டும் நேர்மையான மனிதன் ஆனான்.

நா.ஸ்ரீகிருஷ்ணா, தரம்-4ஏ,
யாழ்ப்பாணக் கல்லூரி.

# விஞ்ஞானியின் பணிவு




அமெரிக்க விஞ்ஞானி சேர் ஐசாக் நியூட்டன் பூமிக்குப் புவிஈர்ப்பு சக்தி இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்தார். அதற்காக நோபல் பரிசும் பெற்றவர். இவர் ஒரு சமயம் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தபோது அவரைப் பார்க்க நண்பர் ஒருவர் வந்திருந்தார். அவர் அங்கிருந்த அறைக் கதவில் வட்டமாகப்பெரியதும் சிறியதுமான இரண்டு துவாரங்கள் இருந்ததைப் பார்த்தார்.

அறைக் கதவில் இரண்டு துவாரங்கள் போட்டிருக்கிறீர்களே அது எதற்கு என்று நியூட்டனிடம் கேட்டார் அவர். அதற்கு விஞ்ஞானி சொன்னார்: நான் சிறியதும், பெரியதுமான இரண்டு பூனைகள் வளர்க்கிறேன். நான் வீட்டைப் பூட்டிக்கொண்டு வெளியில் போய்விட்டால் பெரிய துவாரம் வழியாகப் பெரிய பூனையும் சிறிய துவாரம் வழியாகச் சிறிய பூனையும் அறைக்குள் வருவதற்காகவே இந்த இரண்டு துவாரங்களையும் போட்டிருக்கிறேன் என்றார்.

இதற்கு இரண்டு துவாரங்கள் தேவை இல்லையே? பெரிய துவாரம் வழியாகவே இரண்டு பூனைகளும் வந்துவிடலாமே என்று நண்பர் கூறியதும், விஞ்ஞானி திடுக்கிட்டார். ஆமாம், நீங்கள் சொல்வது சரிதான். எனக்கு இந்த யோசனையே தோன்றவில்லையே என்றவர் சிறிய துவாரத்தை அடைக்கச் சொன்னார்.




போ.அலெக்ஸ்ராம, தரம்-8A



சு.அனிருத்தன், தரம்-2
மானிப்பாய் மகளிர் கல்லூரி





தே.கிருபானந், தரம்-7f
யா/ இந்துக் கல்லூரி



நி.விஸ்ணுகா, தரம்-5
யாழ்ப்பாணக் கல்லூரி

# பழங்கள்



பெரிய தாத்தா தோப்பிலே
பெரிய பெரிய மாமரம்
மாமரத்தின் கிளை முழுக்க
கொத்துக் கொத்தாய் மாம்பழம்

தோப்பு வேலி ஓரமா
சோடியாக கொய்யா மரம்
கொய்யா மரக் கிளைமுழுக்க
கனிந்திருக்கும் கொய்யாப் பழம்

கிணற்று மதில் பக்கமாக
ஓங்கி நிற்கும் புளியமரம்
புளிய மரக் கிளைமுழுக்க
தொங்குகிற புளியம் பழம்

பின்கட்டு மூலையிலே
அடர்ந்திருக்கும் பலாமரம்
பலாமரக் கிளைமுழுக்க
பழுத்திருக்கும் பலாப்பழம்

பார்க்கும்போதே எச்சிலூறும்
மரத்தைச் சுற்றி ஆடுவோம்
பறித்துத் தந்த பழத்தையுண்ண
நாங்கள் போட்டி போடுவோம்.

# தகவல் களஞ்சியம்

- மனித உடலிலேயே மூக்கின் நுனிதான் மிகவும் குளிர்ச்சியான பாகம்
- பிரேசில் நாட்டில் ஒரு வகை வண்ணத்துப் பூச்சி உள்ளது. அது சொக்லேட் நிறத்தில் காணப்படும். அது பறந்து செல்லும் போது சொக்லேட் வாசனை அடிக்கும்.
- ஒரே ஆண்டில் 7 புலிட்சர் விருதுகளை வென்ற அமெரிக்க பத்திரிகை நியூயோர்க் டைம்ஸ்.
- பிறந்த அன்றே நிற்கவும், நடக்கவும் முடிகிற விலங்கு வரிக்குதிரையும், ஆடுகளும் தான்.
- யூதர்களின் கலண்டரில் முதல் மாதம் செப்ரெம்பர்
- கண்ணாடியால் சாலைகள் போட்ட நாடு ஜேர்மனி
- ஆண்களுக்கான சட்டையைக் கண்டு பிடித்த நாடு எகிப்து
- மாரடைப்பால் நின்று போன இதயத்தை மீண்டும் இயக்க உதவும் கருவி மார்க்விட் ரெஸ் பாண்டர்.
- பூனைகளை வளர்ப்பது அதிர்ஷ்டமானது எனக் கருதுபவர்கள் ஐஸ்லாந்தினர்.
- உலகில் 50% மேற்பட்ட மக்கள் விரும்பும் நிறம் சிவப்பு

சி.சிந்து. சுதுமலை

## விடை தெரியுமா? 222

### உங்களுக்கும் பரிசுகள்

1. இலங்கையின் தலைநகரம் எது?
2. இலங்கையில் உள்ள மாகாணங்கள் எத்தனை? அவை எவை?
3. இலங்கையில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் எங்கே அமைந்துள்ளது.
4. இலங்கையின் கலாசார முக்கோண வலையம் எவை?
5. உலகிலேயே மிகப் பெரிய விளையாட்டரங்கம் எது?

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 10.08.2013 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாண[illegible] முதல் [illegible] முறையே ரூபா [illegible] ருக்கும் தலா ரூபா 75வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

**விடைகள் 220**

1. ஆங்கிலம்
2. சீனா
3. சிலிக்கா
4. மூங்கில்
5. காரியம்

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**வெற்றி பெற்றவர் விவரம் (220)**

விடை தெரியுமா 220 பரிசு பெற்றோர் விவரம் அடுத்த வாரம் வெளியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெங்கன்



இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையில் வாஷிங்டனில் ஆரம்பிக்கப்பட்ட அமெரிக்க அனுசரணையிலான பேச்சுக்கள் மத்திய கிழக்கில் நீடித்த அமைதிக்கு வழிகோலுவதாய் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 9 மாத காலத்தில் இணக்கப்பாடு ஒன்றுக்கு வருவதற்கு இருதரப்பும் பூர்வாங்கமாக முடிவு செய்துள்ளன.

# இஸ்ரேல்-பாலஸ்தீன பேச்சுக்கள் ஆரம்பம்

## மத்திய கிழக்கில் நீடித்த அமைதிக்கு வழிகோலும்

உலக நடப்புகள் ஒரு பார்வை

இஸ்ரேலியர்களுக்கும் பாலஸ்தீனர்களுக்கும் இடையில் முறிந்து போயிருந்த அமைதிப் பேச்சு மீண்டும் அமெரிக்க அரசின் அனுசரணையுடன் ஆரம்பமாகியிருப்பது பலராலும் வரவேற்கப்பட்டுள்ளது. கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான இந்த இரு தரப்பு பேச்சு ஒரு நல்லெண்ண சமிக்ஞையாக இஸ்ரேல் 1993ஆம் ஆண்டுக்கு முன்னர் காவலில் வைக்கப்பட்டு இருந்துவந்த 104 பாலஸ்தீனர்களை விடுவிக்கப் போவதாக கடந்தவாரம் ஞாயிற்றுக்கிழமை அறிவித்தது. இவர்களில் பலர் இஸ்ரேலுக்கு எதிராகத் தாக்குதல்களில் ஈடுபட்டவர்கள் ஆவர்.

மூன்று ஆண்டுகளின் பின்னர் பாலஸ்தீன மற்றும் இஸ்ரேல் அதிகாரிகள் கடந்த திங்கட்கிழமையன்று முதல் தடவையாக நேரடி பேச்சில் இறங்கினார்கள்.

இருதரப்பினரும் அமைதி ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதற்கு கடுமையான பேரம் பேசுதலில் இறங்க வேண்டியிருக்கும் என்று அமெரிக்க வெளியுறவு திணைக்களம் தெரிவித்துள்ளது. இருதரப்புக்கும் இடையில் அமைதியும் சகிப்புத் தன்மையும் நிலவ வேண்டும் என்பதற்கான சமிக்ஞையாக இஸ்ரேலிய தரப்பின் முதன்மை பேச்சாளரான திஸிப்பி லிவ்னி அம்மையாரும் பாலஸ்தீன தரப்பிலான சாஎப் எராக்காத்தும் அமெரிக்க சிரேஷ்ட ராஜதந்திரியான அமைச்சர் ஜோன் கெரியின் முன்னால் அருகருகே அமர்ந்து அன்றைய தினம் முஸ்லிம் பாரம்பரிய இத்பர் மாலை உணவில் கலந்து கொண்டார்கள்.

### ஆக்கபூர்வ பயனளிக்கும் பேச்சுக்கள்

வெளியுறவு அமைச்சிலுள்ள தோமஸ் ஜெபர்சன் அறையில் ஆரம்பமான பேச்சில் அமைச்சர் கெரி இருதரப்பினரையும் முதலில் வரவேற்று மாலை உணவில் பங்கேற்க அழைப்பு விடுத்தார்.

90 நிமிடங்கள் உணவு அருந்தும் நிகழ்வுடன் நடைபெற்ற பேச்சுக்கள் பற்றி வெளியுறவுத்துறையினர் கருத்து வெளியிடுகையில், இரு தரப்பிற்குமிடையிலான ஆக்கபூர்வமான, பயனளிக்கக்கூடியதான பேச்சு நடந்தது என்றார். அவர்கள் நல்ல நம்பிக்கையோடும் ஆழமான நோக்கங்களோடும் பேச்சுக்களை ஆரம்பித்திருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டனர்.

இஸ்ரேல்-பாலஸ்தீன பேச்சு ஆரம்பமாகியிருப்பதை அதிபர் பராக் ஒபாமா வரவேற்றுள்ளதுடன் நம்பிக்கையூட்டும் நடவடிக்கையென்றும் வர்ணித்துள்ளார். ஆனால் அவர்கள் கடுமையான தெரிவுகளை செய்ய வேண்டியிருக்கும் என்றும் எச்சரித்துள்ளார். ஒபாமா மேலும் தெரிவிக்கையில், இரண்டு நாடுகள் அருகருகே அமைதியோடும் பாதுகாப்போடும் வாழுகின்ற நிலையொன்றை குறிக்கோளாகக் கொண்டு நடைபெறும் பேச்சுக்கள் வெற்றிபெற இரு தரப்புக்கும் உதவி வழங்க அமெரிக்கா தயாராய் இருக்கிறது என்றும் தெரிவித்துள்ளார்.

இருதரப்புக்கும் இடையிலான முன்னைய பேச்சுக்கள் 2010 ஆம் ஆண்டு செப்ரெம்பரில் முறிவடைந்தன. இஸ்ரேலியர் தொடர்ந்தும் குடியிருப்பு கட்டமைப்புக்களை மேற்கொண்டு வந்தமையே இதற்குக் காரணம்.

### பிரச்சினைக்கான காரணங்கள்

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையில் பல்வேறு விடயங்களில் கடும் கருத்து வேறுபாடு நிலவி வருகின்றது. இதில் முக்கியமானது ஜெருசலேம் நகரின் எதிர்காலம். இந்த நகரை இரு தரப்பினருமே தலைநகராகக் கூறிக் கொள்கின்றனர். இது மாத்திரமின்றி பாலஸ்தீன அகதிகள் மீண்டும் தமது பழைய இருப்பிடங்களுக்குத் திரும்புதல், மேலும் பாலஸ்தீன நாட்டின் எல்லைப் பிரதேசம் மேற்குக் கரைப் பிரதேசத்தில் இஸ்ரேலியர் ஆங்காங்கே குடியேற்றங்களை ஏற்படுத்தியிருப்பதில் எல்லைகளை வகுப்பது மிகவும் குழப்பகரமான விடயமாக இருந்து வருகின்றது.

### ஒன்பது மாதங்களில் அமைதி ஒப்பந்தம்

இஸ்ரேல்-பாலஸ்தீன இருதரப்புப் பேச்சாளர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை மீண்டும் பேச்சு ஆரம்பமான போது இடைஞ்சல்களும் ஆத்திர மூட்டல்களும் எதிர்காலத்தில் நிறையவே ஏற்படக்கூடிய வாய்ப்புகள் இருந்த போதிலும் ஒன்பது மாத காலத்துக்குள் ஓர் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என்ற வகையில் தீர்மானித்துள்ளனர். அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெரியின் பக்கத்தில் அருகருகே நின்றிருந்த இருதரப்பு பேச்சாளர்களும், பல பத்து ஆண்டுகாலமாக நீடித்து வரும் மோதலுக்கு முடிவுகட்ட வேண்டிய காலம் வந்துள்ளது என்று தெரிவித்தனர். இஸ்ரேலிய பிரதம பேச்சாளர் திஸிப்பி லிவினி அம்மையார் தமது எதிர்த்தரப்பு பேச்சாளர் பிரதிநிதி சாஎப் எரக்காத்தைப் பார்த்து பின்வருமாறு கூறினார். நம்பிக்கையற்றவர்களால் வரலாறு படைக்கப்படுவதாக நான் கருதவில்லை. அது யதார்த்தவாதிகளாலேயே உருவாக்கப்படுகின்றது. அவர்கள் கனவு காண்பதற்கு அஞ்சுவதில்லை. நாமும் அந்த வகையிலான மனிதர்கள் ஆவோம் என்றார். இந்த முயற்சியின் வெற்றியினால் பாலஸ்தீனர்களைவிட வேறுயாரும் பயனடையப் போவதில்லை என்று பதிலளித்தார் எரகாத். ''பாலஸ்தீன மக்கள் தமக்கென சுதந்திரமான இறைமையுள்ள ஒரு நாட்டை பெற்றிருக்க வேண்டிய காலம் கனிந்துள்ளது'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

இன்னும் இரண்டு வார காலத்தில் மீண்டும் கூடிய பேசுவதற்கு இரண்டு தரப்பினரும் சம்மதித்துள்ளார்கள். அனேகமாக இந்தப் பேச்சு இஸ்ரேலில் அல்லது பாலஸ்தீன பகுதிகளில் நடைபெறும் என்று அமெரிக்க அமைச்சர் கெரி குறிப்பிட்டார். இறுதியான ஓர் அந்தஸ்து தொடர்பான ஒரு முடிவுக்கு வரும் நோக்கத்துடன் வரும் 9 மாத காலத்தில் பேச்சுக்கள் நடைபெறும் என்று இரண்டுநாள் பேச்சுக்கள் முடிவடைந்த போது அவர் தெரிவித்தார்.

★ ★ ★

### எகிப்தில் மோசமாகி வரும் உள்நாட்டு மோதல்கள்

கடந்த வாரம் 27ஆம் திகதி சனிக்கிழமையன்று எகிப்தில் பதவி நீக்கம் செய்யப்பட்ட அதிபர் மொகம்மது மோர்சியின் ஆதரவாளர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது ஏற்பட்ட மோதல்களில் குறைந்தது 72 பேர் கொல்லப்பட்டிருந்தார்கள். இந்த நிகழ்வினால் தற்போது ஆட்சியிலுள்ளவர்களுக்கும் அவர்களை பதவியில் அமர்த்திய ராணுவத்தினருக்கும் இஸ்லாமிய சகோதர அமைப்புகளால் கடும் எதிர்ப்புகள் தொடங்கியுள்ளன.

இந்த சம்பவங்களுக்கு எதிர்ப்பு கிளம்பியுள்ளது. மோர்சியை மீண்டும் பதவியில் அமர்த்தும் படி கோரியும் இலட்சக் கணக்கில் ஒன்றுகூடி ஆர்ப்பாட்ட பேரணிகளை நடத்துமாறு அந்த அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன. சனிக்கிழமை கெய்ரோ நகரில் 72பேர் கொல்லப்பட்டதற்கும் மேலதிகமாக எகிப்தின் இரண்டாவது நகரமான அலெக்சாண்டிரியாவில் ஏற்பட்ட கலவரங்களில் 9 பேர் கொல்லப்பட்டதாகவும் எகிப்திய சுகாதார அமைச்சு அறிவித்தது.

கடந்த ஜூலை 3 ஆம் திகதி ராணுவம் மேற்கொண்ட புரட்சி நடவடிக்கையை அடுத்து நிகழ்ந்துள்ள மிகப்பெரிய ஆர்ப்பாட்டமும் கலவரமுமாகும் இது. கடந்த 27 ஆம் திகதி நடந்துள்ளவை என்று சுகாதார அமைச்சு அறிவித்தது. இந்த ஆர்ப்பாட்டங்களின் போது ராணுவத்தினர் ஆள்கொல்லி துப்பாக்கிக் குண்டுகளையே பாவித்துள்ளார்கள் என்று உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இந்தச் சம்பவம் குறித்து பல வெளிநாடுகள் குறிப்பாக அமெரிக்கா பெரும் கவலை தெரிவித்துள்ளன. இத்தனைக்கும் எகிப்துக்குப் பல மில்லியன் பெறுமதியான ராணுவ மற்றும் பொருளாதார உதவிகளை அமெரிக்காவே வழங்கி வருகின்றது.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன்கெரி வெளியிட்டுள்ள செய்தியில் ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளார்.

அமைதியாக மக்கள் ஒன்று கூடுவதற்கும் கருத்து வெளியிடுவதற்குமான உரிமைகளை மதித்து நடந்து கொள்ளுமாறு எகிப்திய அதிகாரிகளை அவர் கேட்டுக்கொண்டார்.

மோர்சியின் முஸ்லிம் சகோதரத்துவ பேச்சாளர் அகமது ஆரெப் தெரிவிக்கையில் கெய்ரோவிலுள்ள ரபாஅல்-அடாவியா பள்ளிவாசலில் மட்டும் 66 பேர் கொல்லப்பட்டனர் என்றார். அங்கு மோர்சியை பதவியில் அமர்த்தும் படியாக கோரி வருபவர்கள் தங்கியிருந்தார்கள். கெய்ரோவில் இடம்பெற்ற பெரும் எடுப்பிலான எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இது என்று கூறப்பட்டது. கெய்ரோவில் மட்டுமன்றி வேறு பல இடங்களிலும் இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

### எழும் கேள்வி

அரச படைகள் உயிர்ப்புள்ள தோட்டாக்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பயன்படுத்தினார்கள் என்று நேரில் கண்டவர்கள் கூறிய போதும் உள்துறை அமைச்சகம் அதை மறுத்து வெறும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளைத்தான் பாவித்துள்ளனர் என்று அறிவித்தது. அவ்வாறானால் இவ்வளவுபேர் எவ்வாறு கொல்லப்பட்டார்கள் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்கள்.

இஸ்லாமிய சகோதர அமைப்புகள் இந்த விதமான இராணுவத்தின் அடக்கு முறைகளுக்கு அஞ்சப் போவதில்லை என்ற முறையில் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளன.

### ஆர்ப்பாட்டம் செய்வோரை கைது செய்ய கட்டளை

ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்களைக் கைது செய்வதற்கு இராணுவத்துக்கு அதிகாரம் அளிக்கும் கட்டளை ஒன்றில் இடைக்கால அதிபர் அட்லி மன்சூர் கையெழுத்திட்டுள்ளார் என்று தெரிய வந்துள்ளது. இந்த நடவடிக்கையால் நாடு முழுவதும் கலவரங்கள் மேலும் பரவக்கூடும் என்ற அச்சம் உருவாகியுள்ளது. இராணுவத்துக்கு இந்த அதிகாரத்தை பிரதம மந்திரி வழங்குவதற்கு இடைக்கால அதிபரின் கட்டளை வழி செய்வதாக அரசின் தகவல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை உடனடியாக மனித உரிமை அமைப்புகளாலும் அரசியல்வாதிகளாலும் கண்டிக்கப்பட்டுள்ளது.

முன்னால் அதிபர் ஹொஸ்னி முபாரக் காலத்தில் கொண்டுவரப்பட்டு பின்னர் கைவிடப்பட்ட இந்த செயற்பாட்டை இராணுவ அதிகாரிகள் மீண்டும் செயற்படுத்த முனைகிறார்கள் என்று மனித உரிமை அமைப்புகள் கண்டித்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயம் 04 08 2013 ஞாயிற்றுக்கிழமை

தமிழ் ஆஸ்திரேலியன்



தம்மை அழைத்த குரல், சிடோன் மீனவக் கிராமத்திலுள்ள தற்காலிக பிணவறையில் இருந்து வந்ததை அவள் அறிவாள். கடலில் இருந்து கண்டெடுக்கப்பட்ட மற்றுமொரு சடலத்துடன் ஒரு நோயாளர் காவு வண்டி சற்று முன்னர்தான் பிணவறையை அடைந்திருந்தது.

# புகலிடம் தேடிய சாதல்

புகலிடம் தேடி, சாவடைதல்: வாழ்க்கையின் பசுமைக்காக கடலுக்கு மகனைப் பறிகொடுத்த தாயின் கதை (News Limited Network நிறுவனத்தின் செய்தியாளர் Paul Toohey எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்)

1

அவளின் கனவெல்லாம் ஆஸ்திரேலியாவை அடைவதுதான். அந்த நாட்டில் தனியாகத் துயருரும் தனது கணவனை அடைந்து மகிழ்ச்சியான குடும்ப வாழ்க் கையை வாழ்வதுதான்.

தம்மைச் சந்தித்த சிலரின் ஏமாற்று வார்த்தைகளை அந்தப் பெண் நம்புவதற்குக் "கனவுகள் மெய்ப்பட வேண்டும்" என் பதைத் தவிர வேறென்ன காரணம் வேண் டும்? தன்னை சந்தித்தவர்கள் என்ன சொன்னார்களோ, அவற்றை எல்லாம் அவள் நம்பினாள்.

"அம்மா! நீங்கள் சொகுசுக் கப்பலில் போகப் போகிறீர்கள். இது வாழ்க்கையில் ஒரு நாளும் கிடைக்காத சந்தர்ப்பம்", என்று அவர்கள் கூறியிருக்கலாம்.

"இஞ்ச பாருங்கோ! நீங்கள் இஞ்ச கிடந்து ஏன் தனியக் கஷ்டப்பட வேணும்? உங்கட அவரோட ஆஸ்திரேலியாவில சொகுசா வாழலாம்தானே!" என்று ஆசை வார்த்தைகளையும்கூட அவர்கள் சொல்லியிருக்கலாம்.

அவர்கள் அதனுடன் நிற்கவில்லை. அழகான கப்பலின் புகைப்படமொன்றையும் அவளிடம் காண்பித்தார்கள்.

அந்த அபலைப் பெண் அவர்களை நம்பினாள்.

மறுபுறத்தில், தமது மனைவி ஐந்து மாதக் கர்ப்பிணியாக இருக்கும் சமயத்தில், அவரைத் தன்னந்தனியாக விட்டுவிட்டுப் படகு மூலம் ஆஸ்திரேலியாவை அடைந்த கணவன், முகம் தெரியாத தன் குழந்தையைப் பார்க்கும் ஆவலோடு காத்துக்கிடந்தான்.

புலம்பெயர் மண்ணின் தனிமை தந்த ஏக்கங்கள். இந்த ஏக்கத்தைத் தணிப்பதற்காக தமது மகனினதும், மனைவியினதும் புகைப்படங்களை வெட்டியெடுத்து குடும்பப் புகைப்படமாக அழகு பார்க்கும் அப் பாவி மனிதன் அவன்.

அவர்களின் வாழ்நாள்கள் இப்படியே கழிந்தன.

2

நாம் மேற்கு ஜாவாவில் உள்ள சிடோன் என்ற கிராமத்தில் இருக்கிறோம். இது மேற்கு ஜாவா மாநிலத்தின் கரையோரத் தீவு. இந்தோனேஷியாவிற்கும், கிறிஸ்மஸ் தீவிற்கும் மிகவும் அருகிலுள்ள பகுதி.

இரண்டு பெண்களின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுக்கிறது. தழுதழுத்த குரலில் தமது துயரங்களை விவரிக்கும் கணங் களில் அவர்கள் உடைந்து போகிறார்கள்.

தாம் வந்த படகு கடலில் மூழ்கியதைத் தொடர்ந்து, தமது கணவனும், மூன்று பிள்ளைகளும் காணாமல் போன கதையை ஒரு பெண் சொல்கிறாள். மற்றொரு பெண் தமது மகன் இன்னமும் கிடைக்கவில்லை என்கிறாள்.

யாரோ இரண்டாவது பெண்ணின் பெயரைச் சொல்லி அழைக்கிறார்கள். அவளது அடிவயிற்றில் பந்தாய் உருளுகிறது அச்ச உணர்வு.

தம்மை அழைத்த குரல், சிடோன் மீனவக் கிராமத்திலுள்ள தற்காலிக பிணவறையில் இருந்து வந்ததை அவள் அறிவாள். கடலில் இருந்து கண்டெடுக்கப்பட்ட மற்றுமொரு சடலத்துடன் ஒரு நோயாளர் காவு வண்டி சற்று முன்னர்தான் பிணவறையை அடைந் திருந்தது.

அந்தப் பெண் ஓடுகிறாள்; செய்வதறியாமல் திகைத்து நிற்கிறாள். பிணவறையை நாட அவளுக்கு மனமில்லை. என்றாலும், அவளால் அதனைத் தவிர்க்க முடியவில்லை. அங்கு தமக்குக் கிடைக்கும் செய்தி என்னவென்பது அவளுக்குத் தெரியும்.

நெருங்கிப் பார்க்கிறாள். பிணமாகக் கிடப்பது, தான் பத்து மாதம் சுமந்து பெற்ற பிள்ளை எனக் கண்டதும் பெருங் குரலெடுத்துக் கதறியழுகிறாள். தோல் வெளுத்து உயிரற்றுக் கிடக்கும் தனது ஆசை மைந்தனின் உடலைக் கட்டியணைக்கிறாள்.

3

ஜூலை 24ஆம் திகதி புதன்கிழமை. சிடோன் கிராமத்தின் மண் கண்ணீரால் கழுவப்பட்ட நாள்.

கண்ணீர்க் கதைகள் ஒன்றல்ல. இரண்டல்ல. அதற்கு முந்தைய தினம் பயணத்தைத் தொடங்கி, சில மணித்துளிகளில் கடலில் மூழ்கிய படகில் இருந்ததாகக் கூறப்படும் அகதிகள் 187 பேரின் பின்னணியிலும் ஒவ்வொரு கதைகள் இருந்தன.

ஆஸ்திரேலியா செல்லும் கனவுடன் கிறிஸ்மஸ் தீவை நோக்கிப் புறப்பட்ட படகில் இலங்கையர்களே பெரும் எண்ணிக்கையாக இருந்தனர். ஈரானியர்களும் கூட இருந்தார்கள்.



உயிர்தப்பிய இலங்கையர்களிடம், தமது மகனை இழந்து கதறியழும் பெண்ணைப் பற்றிக் கேட்டோம். அவர்களுக்கு அந் தப் பெண்ணைப் பற்றி அவ்வளவாகத் தெரிய வில்லை. அவர்கள் அந் தப் பெண்ணுக்கு இட்ட பெயர் ராதா என்பதா கும். ராதாவும், அவளது மகனும், சகோதர ரும் ஏனைய இலங்கையர்களுடன் பயணித்தபோதிலும், அவர்கள் ஏற்கனவே அறிமுகமான குழுவைச் சேர்ந்தவர்களாக இருக்கவில்லை.

மறுநாள் அந்தப் பெண்ணைக் கண்டு பிடித்தோம். அவள் ஜாவா தீவின் மறு புறத்தில் இருந்தாள். அவளு டன் மற்றொரு தம் பதியினரும் இருந் தார்கள். அவர்களும் தமது ஒரு வயது குழந் தையை கடலுக்குப் பறிகொடுத்தவர்கள்.

அந்தப் பெண் குழம் பிய நிலையில் கத வைத் திறந்து கொண்டு வந்தாள். அவளது உண்மையான பெயர் செல்வமலர். வயது 39. அவளது மகனின் பெயர் தர்மிதன். நான்கு வயது பாலகன். செல்வமலர் புரிந்து கொள்ளக்கூடிய ஆங்கிலத்தில் பேசினாள். தமது மகனைப் பார்க்க விடுகிறார்கள்



இல்லையென பொலிஸாரைச் சாடினாள். "எனது மகனைப் பார்க்க வேண் டும், பார்க்க வேண்டும்," என்று அரற்றிய அந்தத் தாய்மையின் வலி புரிந்தது. தமக்கு ஏற்பட்ட நிலை பற்றி செல்வமலர் விளக்கினாள். தாம் இங்கு வந்த விதத்தையும் அவள் விபரித்தாள்.

4

இலங்கையின் இனப்பிரச்சினையாலும், அரசியல் நெருக்கடிகளாலும் பெரிதும் அல்லற்பட்டு படகுமூலம் ஆஸ்திரேலியா சென்றிருந்தார் செல்வமலரின் கணவன் பாலமனோகரன். அவரை முறையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைவதற்கு பயணித்த சட்டபூர்வப் பாதை யின் கதவுகள் செல்வமலருக்கு இறுக்கி மூடப்பட்டன. ஆஸ்திரேலியா செல்வதற்கு அனுமதி கோரி அவர் சார்பில் சமர்ப்பிக் கப்பட்ட விசா விண்ணப்பம் நிராகரிக்கப் பட்டது.

"அதுதான் ஏனென்று தெரியவில்லை", என்றார், செல்வமலர்.

வேறு வழியில்லாமல், தனது பிள்ளையுட னும், சகோதரனுடனும் அவர் வவுனியா வில் இருந்து காலி சென்றார். அவர்களுடன் மேலும் 43 பேர் இருந்தார்கள். ஓவ்வொ ருவரும் 7,200 அவுஸ்திரேலிய டொலர் களைப் பயணக் கட்டணமாகச் செலுத்தி யிருந்தார்கள்.

அடுத்து காலியில் இருந்து இந்தோனே ஷியா நோக்கிய ஆபத்தான கடற்பயணம். சுமார் 2,000 கிலோ மீற்றர் தூரத்தைக் கடக்க வேண்டிய நிலை.

"நாங்கள் 45 நாள்கள் கடலில் தத்த ளித்தோம். 25 நாள்களுக்குப் பின்னர் உணவு தீர்ந்தது. அதிர்ஷ்டவசமாக ஒரு கப்பலில் உள்ளவர்கள் சாப்பாடு தந்தார்கள். இந்தோனேஷியாவை நெருங்கிய சம யத்தில் கப்பலின் எஞ்சின் செயலிழந்ததை மறக்க முடியாது," என்றார் செல்வமலர்.

ஜனவரி மாதம் இந்தோனேஷியாவை அடைந்த பின்னரும் சோதனைகள் ஓய வில்லை. அகதிகள் அனைவரும் சுமாத் ராவின் வடபகுதியிலுள்ள மேதான் நகருக்கு அழைத்துச் செல்லப்பட்டு சன நெரிசல் நிறைந்த தடுப்பு முகாமில் அடைக் கப்பட்டார்கள். அங்கு ஈரான், ஆப்கான், மியன்மார் ஆகிய நாடுகளைச் சோந்த வர்களுடன் நாட்களைக் கழிக்க நேர்ந் தது.

தடுப்புமுகாமில் மரண பயம் நீடித்தது.

"ஏப்ரல் நான்காம் திகதி மியன்மாரைச் சேர்ந்த ரொஹிங்கிய முஸ்லிம்கள் எட்டுப் பேர் சிறைச்சாலையில் உள்ள பௌத்தர் களால் குத்திக் கொல்லப்பட்டார்கள். இதனைப் பார்த்து, எனது மகன் குலை நடுங்கிப் போனான்."

மூன்று மாதங்கள் நீடித்த அவலத்தின் பின்னர், புலம்பெயர்வு தொடர்பான சர்வதேச நிறுவனம் அவர்களை விடுதலை செய்தது. செல்வமலர் ஆட்கடத்தல்காரர் ஒருவரைக் கண்டுபிடித்தார். அவர் மூன்று நாள்கள் படகிலும், பஸ் வண்டிகளிலும் பயணித்து ஜகார்த்தாவை அடைந்தார்.

ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி. மூவரும் மேற்கு ஜாவா பிராந்தியத்தின் மத்திய பகுதியை அடைந்தார்கள். அங்கு தான் புகலிடக் கோரிக்கையாளர்கள் தம்மை ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் தூதரகத்தில் பதிவு செய்வது வழக்கம். அங்கு ஆள் கடத்தல்காரர்களின் புழக்க மும் அதிகம்.

செல்வமலருக்கு ஆள்கடத்தல்காரர்களைக் கண்டுபிடிப்பது அவ்வளவு சிரமமான காரியமாக இருக்கவில்லை. அங்கு கழுகுக் கண்களால் நோட்டமிட்டுக் கொண்டு அகதிகளை ஆள்கடத்தல்காரர்களிடம் சிக்க வைக்கும் தரகர்கள் ஏராளமாக இருந் தார்கள். அவர்களில் ஒருவர் செல்வமலரைக் கண்டார். நீண்ட கலந்துரையாடலுக்குப் பின்னர் பேரம் பூர்த்தியானது. அதன் பிரகாரம், செல்வமலரும், அவரது சகோ தரரும் ஆளுக்கு 7,200 டொலர் களைச் செலுத்த வேண்டும். மகன் தர்மிதமனுக்கு கட்டணம் இல்லை.

ஆள்கடத்தல்காரர்கள் அழகான கப்பலின் புகைப்படத்தைக் காண்பித்தார்கள். "நீங்கள் கப்பலில்தான் செல்கிறீர்கள், படகில் அல்ல," என்றார்கள்.

நம்புவதற்குக் கடினமாக இருந்தாலும், ஆஸ்திரேலியா அவ்வளவு தூரத்தில் இல்லை என்பதால் அந்தப் பயணத்துக்கு அவர் ஒப்புக் கொண்டார்.

ஜூலை 22ஆம் திகதி. சக இலங்கை யர்களுடன் செல்வமலர், இந்தோனே ஷியாவின் கரையோரக் கிராமமொன் றிற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

"அங்கிருந்த படகைக் கண்டு அதிர்ச்சி யடைந்தேன். ஆனால், அந்தப் படகின் மூலம் அனைவரும் கப்பலுக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள் என்று அவர்கள் சொன்னார்கள்," என்றார் செல்வமலர்.

அலைகளைத் தாண்டி முன்னேறிய அவர்களின் படகு நடுக்கடலை அடைந்த போதும், கப்பல் எதுவும் தென்படவில்லை. மாறாக, அடித்தளத்தில் இருந்து பிரவகித்த கடல் நீர் படகை நிரப்பியது. படகு அபாயத்தில் உள்ளதை பயணிகள் உணர்ந்தார்கள். தம்மைக் காப்பாற்றுமாறு மாலுமியைக் கோரினார்கள்.

அவர்களின் கெஞ்சலால் மனமுருகிய மாலுமி. படகை ஜாவா தீவை நோக்கித் திருப்பினார். படகு இயந்திரம் கடகடத்தது. சில நிமிடங்களின் பின்னர் படகு கடலில் மூழ்கத் தொடங்கியது.

5

கடலில் விழுந்த பயணிகளில் நீந்தத் தெரிந்தவர்கள் அலைகளுடன் போராடி னார்கள். மற்றவர்கள் சாவு போராட்டம் நடத்தினார்கள்.







"இந்தப் போராட்டத்தை சுமார் 50 மீற்றர் தூரத்தில் நங்கூரமிட்டிருந்த நவீன படகில் இருந்தவர்கள் பார்த்துக் கொண்டு தானிருந்தார்கள்," என்றார் செல்வமலர்.

"எங்களைக் காப் பாற்றுங்கள் என்று அபயக் குரல் எழுப்பியபோதும், அவர்கள் ஒன்றும் செய்யவில்லை. வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தார்கள்."

அலைகளுக்கு நடுவே தன்னுயிரையும் தமது மகனின் உயிரையும் பாதுகாப்ப தற்காக தாம் அனுபவித்த துயரங்களை அவர் விவரித்தார்.

"எனது சகோதரனைக் காணவில்லை. நான் மகனை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டு கடலில் மிதந்தேன். ஒரு இலங்கையர் அருகில் மிதந்து வந்தார். அவர் நீந்தத் தெரிந்தவர். அவரிடம் மகனை ஒப்படைத் தேன். அவர் மகனை கரைசேர்ப்பார் என்று நம்பினேன்."

ஆனால், மகன் தர்மிதன் சடலமாகவே கரைசேர்ந்தார். தர்மிதனை வாங்கிக் கொண்டவர் கரைசேர்ந்தாரா அலலது கடலில் தத்தளித்தவர்கள் பிள்ளையின் உயிர்பாதுகாப்பு அங்கியை பறித்துக் கொண் டார்களா - எதுவுமே தெரிய வில்லை.

அந்த சந்தர்ப்பத்தில் ஒரு பரோபகாரி செல்வமலரிடம் தொலைபேசியை ஒப் படைத்ததார். தனது கணவரிடம் மகன் பற்றிய செய்தியை செல்வமலர் அழுதழுது ஒருவாறு சொல்லி முடித்தார்.

தர்மிதன் பற்றி நாங்கள் வினவியபோது, அவன் இறந்து விட்டதை செல்வமலரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

"அவன் மிகவும் அழகானவன். நன்றாக ஆடுவான். அப்பாவைப் பார்க்க வேண்டும் என்பான். எப்போ அப்பாவைப் பார்க்கப் போகிறோம் என்று கேட்பான். அவன் கெட்டிக்காரன். அவனை ஒரு விமானி யாக்க வேண்டுமென ஆசைப்பட்டேன்," என்கிறார் செல்வமலர்.

இந்த அபலைப் பெண்ணுக்கு ஆஸ்திரேலி யாவின் பிரதமர் யாரென்பதுகூடத் தெரிய வில்லை. கெவின் ரூத் பற்றி கேள்விப் பட்டிருக்கிறீர்களா என்றால், "அது என்ன?" என்று பதில் கேள்வி கேட்கிறார்.

புகலிடக் கோரிக்கையாளர்களை பப்புவா நியூகினியாவிற்கு அனுப்பும் திட்டம் பற்றி அவர் அறிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால், நிச்சியமாக் ஆள்கடத்தல்காரர்கள் அறிந்தி ருக்கக்கூடும்.

தாம் அறிந்த ஆங்கிலத்தில், "ஆள் கடத்தல் காரர்கள் ஏமாற்றுக்காரர்கள். அவர்களுக்கு வாழ்க்கை என்றால் என்ன வென்று தெரியாது. பிள்ளைகள் பற்றியோ, கர்ப்பிணிகள் பற்றியோ அவர்கள் புரிந் திருக்கவில்லை" என்று திட்டுகிறார் செல்வ மலர்.

6

பாலமனோகரனுக்கு இருக்கும் ஒரே யொரு ஆதங்கம், தான் இதுவரை நேரில் கண்டிராத தமது பிஞ்சுமகனின் முகத்தை ஒரு தடவையேனும் பார்த்து விட வேண்டும் என்பதுதான். அதற்காக, இந் தோனேஷியா செல்வதற்கு அவர் ஆஸ்தி ரேலிய அரசின் அனுமதிக்காக ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்.

இந்த அபலைப் பெண்ணுக்கு ஆஸ்திரேலி யாவின் பிரதமர் யாரென் பதுகூடத் தெரிய வில்லை. கெவின் ரூத் பற்றி கேள்விப் பட்டி ருக்கிறீர்களா என்றால், "அது என்ன?" என்று பதில் கேள்வி கேட்கிறார். புகலிடக் கோரிக்கையாளர்களை பப்புவா நியூகினியா விற்கு அனுப்பும் திட்டம் பற்றி அவர் அறிந்திருக்க வாய்ப் பில்லை. ஆனால், நிச்சியமாக ஆள்கடத் தல்காரர்கள் அறிந்தி ருக்கக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேறு யாருமல்ல நாமே தான்

எப்படி யிருந்த யாழ்ப்ப(ா)ணம் இன்று
ஏன்தான் இப்படியாய் போனதோ?... யாமறியோம்
அப்பிடி இப்படி என்று மற்றவையைச் சாட்டாது
அத்தனைக்கும் காரணம் வேறுயாருமல்ல நாமேதான்

நாகரிகம் என்று சொல்லி நம்மை மாற்றினோம்
நரையை மாற்ற நஞ்சைத் தலையில் அடித்தோம்
வாகு என வடிவு காட்ட வடிவுக்கு முதலிட்டோம்
வடிவுக்கு அடிபட்டனர்; வலையில் சிக்கினோம்

அழகு அமைதியாக அடக்கமாக இருந்தால்
ஆன்மிகம் குடிகொண்டு அத்தனையும் சித்திக்கும்
அழகு ஆழமாகி அத்துமீறி வெளிப்பட்டது,
அதைக் கைப்பற்ற ஆபத்துக்கார் நுழைந்திட்டனர்

சந்தையில் அவதி, சாப்பாட்டில் அவதி, சமயமாம்
சிந்தையில் அவதி, சரிநிகர் சமானமாய் நின்றிட
பந்தியில் அவதி, படிப்பினில் பாலகனை அழவைத்து
முந்தியிருக்க அவதி, மூச்சுவிட முடியாத வேலையும் அவதி

படிப்போ அப்படி இப்படி பகுத்தறிவோ இல்லை
பகட்டான வாழ்வுக்கு பஞ்சமே இல்லை
குடிப்போர்! போதையடிப்போர் குறைவில்லை, ஆ!
குழந்தைகள் குமருகள் பாடு என்னத்தைச் சொல்ல!

சிக்கனமாய் வாழ்ந்த யாழ்ப்பாணம் மெள்ளமெள்ள
சீவியத்துக்கே கஷ்டப்பட்டு உழலப் போகிறது
இக்கணமே சிந்தித்து எளிமைக்குத் திரும்புங்கள்
இல்லாவிடின் எதிர்காலம் அவ்வளவுதான் ஆம்!


அப்பாவும் நேரத்துக்கு வீட்டிற்கு வரவேண்டும், அதோடு
அம்மாவும் நேரத்துக்கு சாமி விளக்கேற்ற வேண்டும்
தப்பாமல் நேரத்தோடு பிள்ளைகள் வீடுவரவேண்டும்,
தவறான தொலைபேசிகளைத் துண்டிக்க வேண்டும்

என்னதான் படித்தாலும் எங்களுடைய
வேலைகளை எங்களைத் தவிர
வேறுயாருமே செய்யமாட்டார்கள்
பின்னே என்ன பெரிசா கோட்டை கட்டாதீர்கள்
பிள்ளை வாழக் கற்கட்டும், உணர்ந்தால் மேதாவியே

சிறுகக்கட்டி பெருக வாழுங்கள் என்றனர் எம்மவர்
சிந்தித்தார்களா? இல்லை சீதேவி வாழ வருவாளா?
விறகடுப்பு இல்லை, வசந்த மாளிகையில் வசந்தமில்லை
வீடு விற்பனைக்கு என்றதும் வாழ்வு சிறுகதையானது

நம்மை நாம் சுய ஆய்வு செய்ய வாரீர்!
நாளை நமதாக நம்மை எளிதாக்க வாரீர்!
பொம்மையெனும் போலி வாழ்வுக்கு உருகாதீர்
பேறாகும் யாழ்ப்பாணம் வரம்பெற வாழ்வீர்

கே.எஸ்.சிவஞானராஜா,
கொக்குவில்.



## சொற்சிலம்பம் - போட்டி இல: 277

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ | 5 | | 6 |
| 7 | | | | 8 | | ■ | |
| 9 | | ■ | 10 | | ■ | 11 | |
| ■ | 12 | 13 | | ■ | 14 | | ■ |
| 15 | | | ■ | 16 | | | 17 |
| 18 | | ■ | 19 | | ■ | 20 | |
| | ■ | 21 | | | 22 | ■ | |
| 23 | | | ■ | 24 | | | |

அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### இடமிருந்து வலம்

1. முழு இருட்டு நாள்
5. வாகனம்
7. சாமர்த்தியசாலி
9. சாப்பிடு
10. முகத்தில் வளர்வது
11. நீரோட்டத்துக்கு குறுக்கே கட்டுவது
12. மகிமைகள் நிறைந்தவர்
14. வேகம்
15. கூரையின் உச்சம்
16. எட்டுமுறை பத்து
18. பன்மையைக் குறிக்கும் விகுதி/ போதை தருவது
19. அணி
20. மூன்று
21. தீர்ப்பளிப்பவர்
23. முறையீடு
24. துண்டிக்கப்பட்ட பகுதி

### மேலிருந்து கீழ்

1. அயர்ச்சியால் வருவது
2. மச்சாள்
3. கச்சை
4. பிசாசு
5. நிணம்
6. முன்னைய காலத்தில் வீட்டின் முன்புறம் அமைந்திருந்தது
8. கம்பு
11. தலைவன்
13. வனம்
14. விழி
15. முன்புறத் தோற்றம்
16. ஏழு தடவைகள் பத்து
17. விரைவு
19. பாய்
21. தண்ணீர்
22. பலமானது

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.
★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 275 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) கதிர்காமம் (6) வட (7) தறி (8) ஆண்
(9) சம்பல் (11) கரடி (12) ஓலம் (13) கடகம்
(15) பசு (17) அண்ணல் (18) சம்பா (19) கணம்
(20) பல (21) தின் (22) குடும்பம்

**மேலிருந்து கீழ்**

(1) கவசம் (2) திடம் (3) காதல் (4) மறி
(5) ஆண்டி (8) ஆரம்பம் (10) பட்டணம்
(11) கல - (12) ஓம் (13) கண்ணன் (14) கல்
(16) சுபாவம் (17) அகதி (18) சலம் (20) படு

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 277**
நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (14.08.2013) ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.277 இல்வெற்றி பெறுவோர்களது விவரம் 18.08.2013 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 275 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
மு.விஷ்ணுசோபன்,
பட்டிக்குடியிருப்பு, நெடுங்கேணி.

**2 ஆம் பரிசு**
த.சரவணபவன்,
சென்.மேரிஸ் சேர்ச் ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை.

**3 ஆம் பரிசு**
வி.அ.புவிராஜ்,
கலையரசு வீதி, நவாலி தெற்கு,
மானிப்பாய்.

**4 ஆம் பரிசு**
ப.துரைராசா,
இல. 101, ஓட்டுமடம் வீதி, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**
பூபதி தாமோதரம்பிள்ளை,
தபாற்கந்தோர் வீதி, மன்னார்.

**பாராட்டுப் பெறுவோர்**

சி.பிரிதாஜினி,
மாவிலங்கை, அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

யூ.விஷாக்கா மிலேனியா,
இல. 43/2 சிவன்கோவில் வீதி, தோணிக்கல், வவுனியா.

திருமதி.ம.பரமேஸ்வர ஐயர்,
இல.270, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் [illegible] 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். [illegible] தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலை இல்லா ஊருக்கு....

தி.ராஜ்



வடக்கு மாகாணசபைக்கான தேர்தல் திருவிழாவுக்கான முதல் கட்டப் பணிகள் கடந்த வாரத்துடன் நிறைவுக்கு வந்துள்ளன. வேட்பு மனுத் தாக்கலுடன் அந்தப் பணிகள் நிறைவடைந்திருப்பினும் தேர்தல் நடக்குமா என்பது இன்னமும் விடை தெரியாக் கேள்வியாகத் தொடர்கின்றது. இதை உறுதி செய்யும் விதத்தில், வடமாகாணசபைத் தேர்தலைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசு சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்ற அபாய அறிவிப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பத்திலிருந்தே குறிப்பிட்டு வந்தது.

அதற்கேற்றால் போல் யாழ். மாவட்டத்தில் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுள்ள முருகன் குமாரவேல் தலைமையிலான சுயேச்சைக் குழுவினர், தமது வேட்பு மனு நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து நீதிமன்றத்தை நாடப்போவதாகத் தெரிவித்துள்ளனர். இந்தத் தேர்தலை எப்படியாவது அடுத்த ஆண்டுக்குத் தள்ளிப் போடுவதற்கே அரசு ஆரம்பத்திலிருந்து திட்டம் தீட்டியது. அதற்காகத் தற்போது காய்களை நகர்த்துகின்றது.

மறுபுறம் வடமாகாணசபைத் தேர்தலின் இரு போட்டிக் குதிரைகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் உள்கட்சிப் பூசல்களால் ஆட்டங் கண்டு கொண்டிருக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பத்திலிருந்தே தனது வேட்பாளர் தேர்வில் தடுமாற்றத்தையே சந்தித்தது. வடக்கு மக்களுக்கு நன்கு பரிச்சயமில்லாத முன்னாள் நீதியரசரை தனது முதன்மை வேட்பாளராகத் தேர்வு செய்தது முதல் சாதாரண வேட்பாளர் தேர்வு வரை மக்களுக்கு அறிமுகமில்லாத முகங்களையே கூட்டமைப்பு களமிறக்கியுள்ளது. தீர்க்கமான போர்க் களத்தில் அறிமுக வீரர்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இறக்கியிருக்கின்றது. இவர்களின் பரீட்சார்த்த நடவடிக்கைகள் ஆளும் கட்சியின் வெற்றிக்கு உறுதுணையாகி விடுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது.

வடமாகாணசபைத் தேர்தல் வெற்றியைத் தீர்மானிக்கும் சக்தியாக இருப்பது யாழ். மாவட்டமே. 4 லட்சத்து 26 ஆயிரம் வாக்காளர்கள் 16 பேரைத் தேர்வு செய்யவுள்ளனர். இந்தத் தீர்மானிக்கும் சக்தியாக இருக்கின்ற யாழ்ப்பாணத்தின் வாக்காளர்களைக் கவரும் வகையில் வேட்பாளர்கள் நிறுத்தப்படவில்லை. இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது ஆரம்பத்திலிருந்தே விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும் அவற்றை தலைமைகள் கண்டு கொள்ளவில்லை.

மாறாக இந்தியாவின் தாளத்துக்கும், தமது தலைவர்களின் ஆட்டத்துக்கும் ஏற்றால்போல் ஆடுவதையே இலக்காகக் கொண்டு அவர்கள் செயற்பட்டனர். இதனால்தான் ஒரு சில தொகுதிகளில் மூன்று வேட்பாளர்களை வரை களமிறக்கப்பட்டுள்ளதுடன் சில தொகுதிகளுக்கு வேட்பாளர்களே இல்லை என்ற நிலையும் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறாக வேட்பாளர் தெரிவு முரண்பாடுகளுக்கு மத்தியில் முடிவை எட்டியிருக்கின்றது. இதன் பின்னராவது ஒன்றாக களம் இறங்கி மக்களிடம் வாக்கு கேட்பார்கள் என்றால் அதுவும் இல்லை என்கின்றதே நிலைப்பாடாக இருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களுக்கிடையிலான குத்துவெட்டுகள் தொடங்கியிருக்கின்றன. இந்தப் புகைச்சல்கள் மெல்ல மெல்ல வெளிக்கிளம்பத் தொடங்கியுள்ளன. இதனைக் கட்டுப்படுத்துவதற்குத் தலைமை இன்னும் எந்த நகர்வுகளையும் முன்னெடுக்கவில்லை. இதனால் ஏற்படப் போகும் விளைவுகளையும் அவர்கள்கருத்தில் கொள்வதாகவும் தெரிய வில்லை.

தேர்தலில் காதலில்லை என்ற மன்னார் தமிழரசுக் கட்சி உறுப்பினர் ஒருவர் மன்னார் மாவட்ட வேட்பாளராகக் களமிறங்கியுள்ளார். அது மட்டுமல்ல யாழ். மாவட்டத்திலும் வேட்பாளர் தெரிவிலும் மூக்கை நுழைத்து குட்டையையும் குழப்பியிருந்தார். சமூக அடிப்படையிலான வேட்பாளர் தெரிவை அவர் முன்னிறுத்தியிருந்தார். குறிப்பாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளராக இருந்தவருக்கு வழங்கப்பட வேண்டிய ஆசனத்தை வடமராட்சியைச் சேர்ந்த ஒருவருக்கு அவர் பெற்றுக் கொடுத்திருந்தார். வடமராட்சியில் நிறுத்தப்பட்ட ஏனைய வேட்பாளர்கள் சமூகரீதியில் பின்தங்கியவர்கள் என்றும் எனவே மேல் சமூகத்தவர்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்ள ஒருவரைக் களமிறக்க வேண்டும் என்றும் கூறியே கற்கோவளத்தைச் சேர்ந்த ஒருவரை அவர் களமிறக்கியுள்ளார்.

இவற்றுக்கு மேலாகத் தற்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணி கலைக்கப்பட்டு விட்டது என்று அறிக்கை விட்ட, குறித்த மன்னார் வேட்பாளரே இளைஞரணிக்காகப் பிரசாரக் களத்தில் இளைஞர்களை இறங்குமாறு கேட்டுக் கொண்டிருக்கின்றார். அதிலும் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியின் தலைவராக இருந்தவருக்காகப் பிரசாரப் பணிகளை மேற்கொள்ளப் போவதாக இளைஞர் அணி உறுப்பினர்கள் தெரிவித்த போது, தன்னால் களமிறக்கப்பட்ட வேட்பாளருக்கே பிரசாரம் செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதனையும் தாண்டி இளைஞரணித் தலைவரைத் தான் தோற்கடிப்பேன் என்று தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் வைத்து தெரிவித்திருக்கின்றார். சொந்தக் கட்சி உறுப்பினரையே தோற்கடிப்பேன் என்று சொல்லிக் களமிறங்கும் இந்த வேட்பாளர்களுக்கு எல்லாம் அனுமதி கொடுத்த தலைமை அதன் பின்னராவது அவர்களின் செயற்பாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்தலாமல்லவா? அதற்கும் பின்னடிக்கின்றனர் அவர்கள்.

பின்னடிப்புக்கான காரணம் பணம் என்கின்றனர் கட்சியைச் சேர்ந்த இளைஞர்கள். குறித்த மன்னார் வேட்பாளரின் பணத்தைப் பெரும்பான்மையாக நம்பி கட்சியிருப்பதே காரணம் என்கின்றனர். இவ்வாறு சொந்தக் காசில் சூனியம் செய்கின்ற நிலைமையிலேயே தற்போது கூட்டமைப்பு இருக்கின்றது.

கட்சிக்குள் இருக்கின்ற புல்லுருவிகளைக் களைந்தெடுத்து கட்டுக்கோப்பான பாதையில் பயணிக்க தவறுமாயின் வடக்குத் தேர்தலில் கூட்டமைப்பு பெரும் ஏமாற்றத்தை எதிர்கொள்ள நேரிடும்.

தமிழரசுக் கட்சியின் முதலமைச்சர் வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரனின் கருத்துக்கள் வாரா வாரம் ஒவ்வொரு விதமான சர்ச்சைகளை ஏற்படுத்தி வருகின்றன.

வேட்புமனுத் தாக்கலின் பின்னர் கருத்துரைத்திருந்த விக்னேஸ்வரன், 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த மக்களை வாக்களிக்குமாறு கோரியிருந்தார். இதனை விட 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் ஏற்பட்டால் அரசுடன் இணைந்து பேசித் தீர்ப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

1987 ஆம் ஆண்டு மாகாணசபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட போது அன்றிலிருந்து அதனை [illegible] பலிகொடுத்தது தமிழினம். 13 ஆவது திருத்தம் தமிழருக்கு தீர்வாகாது என்று இடித்துரைத்து அதன் வழி செயற்பட்டு வந்தது. ஆனால் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளரோ 13 ஆவது திருத்ததுடன் தமிழரின் தீர்வை முடக்கும் இந்தியாவின் செயல்திட்டத்துக்கு நடைமுறை வடிவம் கொடுக்க முற்படுகின்றாரோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

முதலமைச்சர் வேட்பாளரின் மென்போக்கான அணுமுறை, சிங்களப் பேரினவாதத்துடன் மோதுவதற்கு சரியானதா ? என்ற கேள்விகள் எழாமல் இல்லை. ஆனாலும் அவர் தனது அணுகுமுறைகளை மாற்றியமைப்பதாகத் தெரியதில்லை. தொடர்ந்தும் சர்ச்சைகளுக்குள் சிக்கும் கருத்துகளையே உதிர்ந்து கொண்டிருக்கின்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்முரண்பாடுகள் வெளித்தெரியப் பட்டிருக்கின்றன. மறுபுறத்தி'ல் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினுள்ளும் கழுத்தறுப்புக்கள் வெளித்தெரியாமல் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஈ.பி.டி.பிக்கும் இடையிலான முரண்பாடுகள், ஈ.பி.டி.பிக்கு உள்ளான என்று அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த யாழ்ப்பாணத்துக்கு வந்து வேட்புமனுத்தாக்கல் செய்த நாளன்றே இவர்களின் உட்கட்சி மோதல்கள் சுழன்று சுழன்று புயலாக வெளிக்கிளம்பத் தொடங்கின.

அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் மாவட்ட செயலகத்துக்கு வந்து நீண்ட நேரம் காத்திருந்தனர். இவர்களைக் காக்க வைத்தே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் அவரின் அணியினரும் வருகை தந்தனர்.

கிறீன் கிறாஸ் விடுதியில் இடம் பெற்ற வேட்பாளர் அறிமுகத்திலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் உள்ள இரு பிரதான கட்சிகளான ஈ.பி.டி.பியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் தெளிவான கொள்கையில் இல்லை என்பதை எடுத்துக் காட்டின.

ஈ.பி.டி.பி முதன்மை வேட்பாளர், இருக்கின்ற அதிகாரங்களைப் பயன்படுத்த வேண்டும் என்ற தொனிப் பொருளில் கருத்துரைத்தார். மறுபுறம் அங்கஜன், 13 பிளஸ் பிளஸ் தீர்வு என்று கருத்துத் தெரிவித்தார். இவர்களுக்கே மாகாணசபை தொடர்பில் தெளிவான நிலைப்பாடு இன்னமும் இல்லை.

இதற்கு மேலாக கடந்த மாதம் சுதந்திரக் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தலைமையிலான கூட்டத்தில் உரையாற்றிய அங்கஜன், மாகாணசபை என்பது அபிவிருத்திக்கானதே அரசியலுக்கானது அல்ல என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால் கிறீன்கிறாஸில் இடம்பெற்ற கூட்டத்தில் அபிவிருத்தியை மறந்து அரசியலைக் குறிப்பிட்டுள்ளார். அவரே மாகாணசபை எதற்கு என்பது தொடர்பில் திடமான கொள்கையில் இல்லை என்பது மட்டுமே புலனாகின்றது.

கடந்த 2010 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின் போது இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் போல் இந்த முறைத் தேர்தலில் இவர்கள் மோதிக் கொள்ளும் நிலையே காணப்படுகின்றது.

பிரதான இருகட்சிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் உள்முரண்பாடுகளுடனேயே உள்ளன. வெற்றியைத் தீர்மானிக்கின்ற மூன்றாவது சக்தி இல்லாததே இவர்களின் அலட்சியப் போக்குக் ஒருவகையில் காரணமாகின்றது.

எது எப்படியிருப்பினும் எமது உரிமைகள் எங்களுக்கானவை. அவற்றை அபிவிருத்தி மாயைக்கு விலை கொடுக்கக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜாவா கரையிலிருந்து சாவுகளின் சாட்சி



தே. பிரேம்

## டைடானிக் போல் மூழ்கியது

ஆஸ்திரேலியாவை நோக்கி இலங்கையர்கள் குறிப்பாகத் தமிழர்கள் சாரை சாரையாகப் படையெடுத்து வரும் நிலையில், சாவும் அவர்களைத் தொடர்ந்து துரத்தியே வருகின்றது. பாதுகாப்பு அல்லது தொழில் தேடி ஆஸ்திரேலியா நோக்கி ஓடும் தமிழர்களை ஏற்க முடியாது என்று அந்த நாட்டு அரசு என்னதான் காட்டுக் கத்தல் கத்தி னாலும் ஆபத்தான பயணத்தை மேற்கொண்டு தமிழர்கள் அங்கு சென்று கொண்டுதான் இருக்கிறார்கள்.

அப்படிச் சென்ற ஒரு படகு கடலில் மூழ்கிப் போனதால் ஜுலை மாத இறுதியில் நால்வர் உயிரிழந்தனர். அவர்களில் மூன்றரை வயதுக் குழந்தை உட்பட இருவர் தமிழர்கள். திரைகடல் ஓடித் திரவியம் தேடிய தமிழர்களை இன்று அலை கடல் எல்லாம் சாவுகள் துரத்தும் கொடுமை நடந்து கொண்டிருக்கிறது.

இந்த சாவுக் களத்துக்குள் போய் கடைசி நிமிடத்தில் உயிர் தப்பிய மணிவண்ணன் அந்தப் பயங்கர அனுபவத்தை எம்முடன் பகிர்ந்து கொண்டார்:



மே முதலாம் திகதி கொழும்பிலிருந்து சிங்கப்பூர் போனோம். அங்கிருந்து இந்தோனேஷியாவை அடைந்தோம். சிங்கப்பூரிலிருந்து இந்தோனேஷியாவுக்கு 'பெரி' எனப்படும் படகு சேவை மூலமும் செல்லலாம்; வானூர்தி மூலமும் செல்லலாம். நானும் அண்ணனும் வானூர்தியில் சென்றோம்.

இந்தோனேஷிய தலைநகர் ஜகார்த்தாவில் 'ஏஜென்ட்' ஆள்கள் பொறுப்பேற்றார்கள். அங்கிருந்து போகூர் என்ற இடத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கேதான் தமிழர்கள் கூடுதலாக இருக்கிறார்கள். அவர்களுடன் ஆள்கடத்தல்காரர்களும் இருக்கிறார்கள்.

அங்கு சென்ற சில வாரங்களில் ஒரு தடவை ஆஸ்திரேலியாவுக்குச் செல்லவெனப் புறப்பட்டோம். எங்கள் 'ஏஜென்ட்' மற்றொரு 'ஏஜென்ட்'டிடம் எங்களைப் பொறுப்புக் கொடுத்தார். அவர்கள் எங்களை அழைத்துச் சென்று கொண்டிருந்தபோது திடீரென ஏதோ சோதனை நடக்கிறது எனத் தெரிவித்து எங்களை நடு வீதியில் இறக்கி விட்டு அவர்கள் தப்பிச் சென்றுவிட்டார்கள். தெரியாத ஊர், அறியாத மொழி. திக்கு முக்காடிப் போனோம். எங்கள் 'ஏஜென்ட்'டிடம் தொலைபேசி மூலம் பேசினோம். அருகில் யாராவது இந்தோனேஷியர்கள் இருந்தால் அவர்களிடம் தொலைபேசியைக் கொடுக்கச் சொன்னார்கள். அவர்களுடன் அந்த நாட்டு மொழியில் ஏதோ சொல்ல, பின்னர் அவர்கள் எங்களை ஒரு வாகனத்தில் ஏற்றி அனுப்பி விட்டார்கள். நாங்கள் மீண்டும் போகூர் வந்து சேர்ந்தோம். சுமார் இரண்டு மாதங்கள் கடந்த நிலையில் ஜுலை 24ஆம் திகதி மீண்டும் எங்களை கூட்டிச் செல் வதாகச் சொன்னார் கள். போகூரில் இருந்து 10 மணி நேரக் கார் பயணத்தில் எங்களை ஒரு காட்டுப் பகுதிக்கு அழைத்துச் சென்றார்கள். காட்டின் ஊடாக அரை மணி நேரம் நடந்த பின்னர் ஒரு கடற்கரையை அடைந்தோம். அங்கிருந்து சிறிய படகுகள் மூலம் நான்கைந்து பேராக அழைத்துச் சென்று கரையிலி ருந்து தள்ளி நின்ற பெரிய படகு ஒன்றில் ஏற்றினார்கள். பகல் 11 மணியளவில் எல்லோரையும் ஏற்றிக் கொண்டு படகு புறப்படத் தயாரானது.

அதில் அதிகளவானோராகத் தமிழர்களே இருந் தார்கள். தவிர, ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான், ஈராக் மனிதர்களும்கூட இருந்தார்கள். புதிய, நல்ல படகு ஒன்றில் ஏற்றித்தான் எங்களை கொண்டு செல்லப் போவதாக 'ஏஜென்ட்' கூறி இருந்தார். ஆனால் நாங்கள் ஏற்றப்பட்ட படகோ மிகப் பழையது. அது சுமார் 25, 30 வருடங் களுக்கு முன்னர் கட்டப்பட்டது. இருந்தாலும் ஒரே ஒரு நாள் பயணம்தானே என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டு இருந்தோம். (இந்தோனேஷியாவில் இருந்து 26 மணிநேரத்தில் கிறிஸ்மஸ் தீவை அடைந்து விடலாம்.)

படகு புறப்பட்ட நேரத்தில் இருந்து 6 மணி நேரம் கடலில் பயணித்தது. பயணத்தை ஆரம்பித்த போது கடல் அலை குறைவாக, அமைதியாகத்தான் இருந்தது. ஆனால், நேரம் செல்லச் செல்ல அலை வேகம் அதிகரித்து கடலடி மோசமானது. படகு பேயாட்டம் ஆடத் தொடங்கியது. பெரும் அலைகள் படகை மோதி அறைந்து நிலைகுலைய வைத்தன. அந்தப் பழைய படகால் கடலின் இந்தச் சீற்றத்தைத் தாங்க முடியவில்லை. அது உடைந்து கடல்நீர் உள்ளே வர ஆரம்பித்தது.

படகில் இரு நீரிறைக்கும் இயந்திரங்கள் இருந்தன. அவற்றை இயக்கி இருபுறங்களாலும் நீரை வெளியேற்றினார்கள். ஆனால் நீர் மட்டம் குறைவதாக இல்லை. இன்னும் இன்னும் அதிகமாகியது. இதனால் நாங்களும் ஈரானியர்களும் சேர்ந்து கிடைத்த பொருள்களால் எல்லாம் தண்ணீரை அள்ளி அள்ளி வெளியே கொட்டினோம். நாங்கள் அரைவாளி அள்ளி வெளியே கொட்டினால் நான்கு வாளியை கடல் உள்ளே தள்ளியது. ஒரு கட்டத்தில் எல்லோரும் சோர்ந்து போனோம். இனி தாக்குப் பிடிக்க முடியாது என்று தெரிந்தபோது படகைத் திருப்பச் சொன்னோம். ஓட்டிகள் படகைத் திருப்பினார்கள். ஆனால் தண்ணீர் உள்ளே வருவது குறைவதாக இல்லை. உடனே நங்கூரத்தைப் போட்டு படகை நிலைப்படுத்த முயன்றார்கள். கடல் எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை. அது படகை ஆவேசத்தோடு மோதியது. படகின் முன் புறமான அணியம் பக்கம் பலகைகள் உடைந்து ஏற்பட்ட ஓட் டைக்குள்ளால் தண்ணீர் குபுகுபு எனக் கொட்ட ஆரம்பித்தது. வெள்ளம் நிறைய நிறைய படகின் பின்புறம் கடலில் மூழ்க ஆரம்பித்தது. அதில் சிலர் கடலினுள் இழுத் துச் செல்லப்பட்டனர். நாங்கள் அணியப் பக்கம் இருந்தோம். படகின் பின்புறம் அமிழ அமிழ முன்புறம் கடல் மட்டத்தில் இருந்து மேலெழ ஆரம்பித்தது. ஒரு கட்டத்தில் 'டைட்டானிக்' கப்பல் முறிந்ததைப் போன்று படகு இரண்டாகப் பிளந்து விரைவில் மூழ்கிப் போனது. படகில் இருந்த எல்லோரும் கடலுக்குள் தள்ளப்பட்டோம். அனேகமாக எல்லோரிடமும் 'ஜாக்கெட்' (அவசர உதவி அங்கி) இருந் தன. ஆனால் பலருக்கு நீந்தத் தெரியவில்லை. நாங்கள் கடல் தொழிலுடன் சேர்ந்தவர்கள் என் பதால் கரையை நோக்கி நீந்தத் தொடங்கினோம்.



எங்கள் படகு மூழ்கியது மாலை 5 மணிக்கு. நாங்கள் கரை சேர்ந்ததோ அதிகாலை 2 மணிக்குத்தான். உயிரிழந்தவர்கள்கூட கரைக்கு நெருக்கமாக நீந்தி வந்திருந்தார்கள். ஆனால் அங்கும் அலையும் காற்றும் அதிகமாக இருந் ததால்தான் களைத்துப்போன நிலையில் மீண் டும் நீரில் அள்ளுண்டு இறந்து போனார்கள்.

எல்லோரும் தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருநந்தபோது அருகிலேயே மற்றொரு படகு வந்தது. ஆனால் யாரையும் அவர்கள் காப்பாற்றவில்லை. முந்திய காலங்களில் அப்படிச் செய்திருக்கிறார்கள். இப்போது ஏற்றுவதில்லையாம். ஏறிய பின்னர் எங்கள் ஆள்கள் அந்தப் படகை விட்டு இறங்காமல் தங்களை தாங்கள் கூறும் இடத்திற்குக் கொண்டு சென்று விடுமாறு அடம்பிடிப்பார்கள் என்ற அச்சமே அதற்குக் காரணமாம்.

நாங்கள் ஒருவாறு தப்பிக் கரையேறியபோது எங்களுடன் மன்னாரைச் சேர்ந்த ஒருவரும் மூச்சுத் திணறியபடி கரையேறினார். கரையேறியவர் விம்மி விம்மி அழுதார். அவருக்கு நீந்தத் தெரியும் என்பதால் மூன்றரை வயதுக் குழந்தை ஒன்றை அதனது தாய் இவரிடம் கொடுத்திருக்கிறார். ஒருவேளை தான் இறந்துபோனாலும் பிள்ளையாவது பிழைக்கட்டுமே என்ற பாசத்தில் அப்படிச் செய்திருக்கிறார். கரையேறியதும் தனது குழந்தையைச் சேர்ப்பிக்க வவுனியாவில் ஒரு முகவரியும் சொல்லி இருக்கிறார். அந்த அண்ணனும் குழந்தையை கரைக்கு அண்மித்த தூரம் வரைக்கும் காப்பாற்றி அழைத்து வந்து விட்டார். ஆனால், கரையோரம் மிகப் பலமாக எழுந்து தாக்கிய அலை ஒன்று அவரை உருட்டி விட திக்குமுக்காடி திசை தெரியாமல் இழுபட்ட அவர் குழந்தையின் பிடியை விட்டுவிட்டார். பின்னர் எவ்வளவு தேடியும் குழந்தையைப் பிடிக்க முடியவில்லை. இறுதியில் குழந்தையின் சடலத்தைத்தான் பொலிஸார் மீட்டெடுத்தார்கள். நீந்தி வரும்போது அந்தக் குழந்தை "அண்ணா! எனக்குப் பசிக்கிறது; நித்திரை வருகிறது" என்று கூறியதாம். இன்னும் கொஞ்ச நேரத்தில் கரை வந்திடும் அங்கே பணிசும் பிளேன் ரீயும் வைத்திருக்கிறார்கள் சாப்பிட்டுவிட்டுத் தூங்கலாம் என்று சமாதானப்படுத்தி அழைத்து வந்த குழந்தையைக் கைவிட்டுவிட்டேனே என்று அவர் அழுது புலம்பிக் கொண்டிருந்தார். இதில் சோகம் என்னவென்றால் அந்தக் குழந்தையின் தாயும் மாமனும் மறுநாள் இந்தோனேஷியப் பொலிஸாரால் உயிருடன் மீடகப்பட்டுவிட்டனர் என்பதுதான்.

இந்தக் கதையைச் சொல்லி முடித்தபோது மணிவண்ணனின் குரல் கம்மியிருந்தது. குரல் உடைந்திருந்தது. இந்தப் பயணத்துக்காக அவர் கிட்டத்தட்ட 8 லட்சம்ரூபாய்களைச் செலவிட்டிருக்கிறார். அவருக்கும் சகோதனுக்குமாக கிட்டத்தட்ட 15 லட்சம் ரூபா கடலோடு போயிருக்கிறது. ஆனால் இப்போது எதுவும் மிச்சமில்லை. நாடு திரும்பப் போவதாகக் கூறும் மணிவண்ணன் மீண்டும் ஒரு தடவை இந்தப் பயங்கரத்தை அனுபவிக்கத் தயாராக இல்லை. கூழோ கஞ்சியோ கிடைப்பதைக் குடித்துக் கொண்டு ஊரோடு கிடப்போம் என்பதுதான் அவரது முடிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி மேரி அத்தனாசியார்

சில்லாலையைச் சேர்ந்த மேரி அத்தனாசியார் 25.07.2013 அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சில்லாலை வைத்திய கலாநிதி பாக்கியநாதர் அத்தனாசியாரின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மத்தேஸ்பிள்ளை சுவாம்பிள்ளை-எலிசபெத் ஆகியோரின் அருமை மகளும், காலஞ்சென்ற வைத்திய கலாநிதி சுவாம்பிள்ளை அத்தனாசியார்-மேரி யோசப்பின் அவர்களின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா இம்மனுவேல், லில்லி இராஜேந்திரம் மற்றும் பாக்கியம் எட்வேட் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், டொரிஸ் பெனடிக்ற், Dr. எமில் அத்தனாசியார், பசில் அத்தனாசியார் ஆகியோரின் அன்புத் தாயும், அகஸ்ரின், வுளோறிடா, வினோ ஆகியோரின் அன்பு மாமியும், றஜனி பெனடிக்ற், Dr. கறல் பெனடிக்ற், Dr.டெனிஸ் பெனடிக்ற் நீட்றா பொன்கலன், Dr.வின்ஸ் அத்தனாசியார் குளோடின் சஜீவன், கொறினா றட்ணறாஜா, சிந்தியா அத்தனாசியார் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சனா, அபினி, அர்விந்த், டிவின்யா, றணிஷா, ஜெனல், எமி ஆகியோரின் அருமைப் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் நல்லடக்கம் எதிர்வரும் 05.08.2013 திங்கட்கிமை காலை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

Dr. எமில் அத்தனாசியார்
T.P: 0112 364700

(C/10686)(10,6.3)

# எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்தும் சோயா பீன்ஸ்




சோயா பீன்ஸ் எய்ட்ஸ் நோயை குணப்படுத்தும் தன்மை கொண்டது என ஆய்வொன்றின் மூலம் தெரிய வந்துள்ளது.

உயிர் கொல்லியான எய்ட்ஸ் நோயைக் கட்டுப் படுத்த மருந்துகள் கண்டு பிடிக்கும் ஆராய்ச்சியில் அமெரிக்காவில் உள்ள ஜார்ஜ் மேசன் பல்கலைகழக விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

ஆராய்ச்சியின் முடிவில், சோயா பீன்ஸ் எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்தும் தன்மை உடையது என தெரியவந்துள்ளது.

அதாவது, சோயா பீன்சில் எய்ட்ஸ் நோயை உண்டாக்கும் எச்.ஐ.வி கிருமிகளை தடுக்கும் ஜெனிஸ்டின் என்ற மூலப்பொருள் இருப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இந்த ஜெனிஸ்டின் செல்களில் ஊடுருவி எச்.ஐ.வி கிருமிகள் பரவாமல் தடுக்கும் சக்தி படைத்தது. எனவே எய்ட்ஸ் நோயை சோயா பீன்ஸ் கட்டுப் படுத்தும் என விஞ்ஞானிகள் கருத்து தெரிவித் துள்ளனர்.

# 43ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 15.05.1969

விண்ணில் 23.06.2013

## பொன்னு சதியகுமார்

(இத்தாலி)

அன்பின் உறைவிடமே!
அறிவின் சுடரொளியே!
அழகின் திருவுருவமே!
அணையாா விளக்காய் நின்று - எங்கள்
அனைவரையும் காத்த தெய்வமே!

எத்தனை நாள்கள் சென்றாலும்
நினைவலைகள் எம்மனதை விட்டு அகலவில்லை.
உங்களை அன்புடன் நினைவுகூரும்.

M. ஐயம்பிள்ளை
கற்பகப்பிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு.
T.P: 077 98 750 42

அத்தான், அக்கா
குடும்பத்தினர்.

(30068)(10.6.3)


5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு
தயாராகும் சின்னஞ் சிறார்களுக்கு சம்பத் வங்கியிடமிருந்து ஏராளமான பரிசுகள்



தேசிய மட்டத்தில் வெற்றிபெறும் நீங்கள், சம்பத் சிறுவர் சேமிப்பு கணக்கு வைத்திருந்தால்

- முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு 40,000 ரூபாய் மற்றும் 18 வயது வரை புலமை பரிசில்களை வெல்லலாம்.
- 4,5ம் இடங்களுக்கு 40,000 ரூபாய் பணப்பரிசு காத்திருக்கின்றது.

தேசிய மட்டத்தில் வெற்றிபெறும் நீங்கள், சம்பத் சிறுவர் சேமிப்பு கணக்கு வைத்திராவிடின்

- முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு 20,000 ரூபாய் மற்றும் 18 வயது வரை புலமைப் பரிசில்களை வெல்லலாம்.
- 4,5ம் இடங்களை பெறுவோருக்கு தலா 20,000 ரூபாய் பணப்பரிசினை வெல்லலாம்.

மாவட்ட மட்டத்தில் வெற்றிபெறும் நீங்கள், சம்பத் சிறுவர் சேமிப்பு கணக்கு வைத்திருந்தால்

1-5வரையான இடங்களைப் பெறுவோருக்கு தலா 10,000 ரூபாயினை வெல்லலாம்.

மாவட்ட மட்டத்தில் வெற்றிபெறும் நீங்கள், சம்பத் சிறுவர் சேமிப்பு கணக்கு வைத்திராவிடின்

1-5வரையான இடங்களைப் பெறுவோருக்கு தலா 5,000 ரூபாயினை வெல்லலாம்.

சிறுவர் சேமிப்பு கணக்குகள்
Children's Savings Accounts

(C/10685)

www.sampath.lk

சம்பத் வங்கி
SampathBank


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகுடம் சூட்டப்பட்டதில் பெருமையடைகிறோம்...

GREAT PLACE TO WORK®
Best companies to work for 2013
Sri Lanka




## இலங்கையில் பணியாற்றுவதற்கு தேர்வுபெற்ற மிகச்சிறந்த 5 நிறுவனங்களுள் LOLC குழுமத்தின் 3 நிறுவனங்கள் இடம்பெற்றுள்ளதை

Great Place to Work சர்வதேச நிலையத்தின் இலங்கைப் பிரிவு அடையாளம் கண்டுள்ளது.

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ்

CLC
கொமர்ஷல் லீசிங் & பினான்ஸ்

LOLC மைக்ரோ கிறெடிட்







எமக்குக் கிடைத்துள்ள இந்த நன்மதிப்பானது, சிறந்த தொழிற் சூழலில் மனநிறைவுடன் பணியாற்றும் ஊழியர்களுடன் இணைந்து, நாடெங்கிலும் இல்லங்கள் தோறும் மக்களின் வாழ்வுக்கு வளமூட்டும் எமது பேரார்வமான முயற்சிக்குக் கிடைத்த அங்கீகாரமாகும். ஐக்கிய அமெரிக்காவில் தலைமை அலுவலகத்தைக் கொண்டு 46 நாடுகளில் 25 ஆண்டுகளாகச் செயற்பட்டுவரும் Great Place to Work நிலையத்தின் இலங்கைப் பிரிவே இந்த நன்மதிப்பை எமக்கு வழங்கியுள்ளது. நம்பகத்தன்மை, கௌரவம், நேர்மை, நற்புகழ், சகோதரத்துவம் என்பன உள்ளடங்கிய சிறந்த விழுமியங்களின் அடிப்படையிலேயே நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இனிய சூழலில் மகிழ்ச்சியுடன் பணியாற்றும் ஊழியர்களின் மூலமே வாடிக்கையாளர்களுக்குத் திருப்திகரமான சேவையை வழங்கி, அவர்களின் சுபீட்சப் பாதைக்கு வழிகாட்ட முடியும் என்ற எமது நம்பிக்கைக்கு இது மேலும் வலுவூட்டுகின்றது.

(C/10695)

BRANDS ALLEY

www.lolc.com

LMD

The Ceylon Chamber of Commerce

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்சார் வெற்றியை நோக்கி உங்களை இட்டுச் செல்லும் நிகரில்லாத வர்த்தக வலையமைப்புடன் இணைந்து கொள்ளுங்கள்......

LOLC

வளர்ச்சிக்கான புதிய சந்தர்ப்பங்களை உருவாக்கும் LOLC Micro Credit Ltd. நிறுவனமானது நுண் நிதித்துறையில் சிறப்பியலைக் கொண்ட ஸ்தாபனமாகும். நுண் மற்றும் கீழ் நிலை SME பிரிவினருக்கு அர்ப்பணிப்புடன் ஆதரவளிக்கின்றது. இதற்கு வெளிநாட்டுக் கடன் வழங்கும் முகவர் அமைப்புக்களின் முழு அளவிலான ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்கின்றது. LOMC தோன்றிய காலத்திலிருந்து வலுவான நிதிவழங்குநர் என்ற முறையில் நுண்கடன் துறையில் குறிப்பாக நாட்டின் கிராமப் புறங்களில் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்பியுள்ளது. இந் நிறுவனமானது முனைப்பான 150,000 கடன் பெறுநர்களுக்கு ஈடு இணையற்ற சேவையை வழங்கியுள்ளது. அந்த வகையில் இலங்கையில் அதுவும் தனியார் துறையில் முன்னோடி நுண் கடன் வழங்குநர் என்ற வகையில் பெருமையடைகின்றது. கடந்த பல வருடகாலமாக தனது அடிச்சுவட்டினை அகல விரித்துள்ளதுடன் LOMC யானது வலுவான தேசிய கண்ணோட்டத்தையும் கொண்டுள்ளது. நாட்டின் சகல (25) மாவட்டங்களிலும் 34 கிளைகளையும் 94 இசுறு திரிய சேவை நிலையங்களையும் அமைத்துள்ளது.

LOLC மைக்ரோ கிறெடிட்
(ஒரு LOLC குழுமக் கம்பனி)

## நுண் நிதி அலுவலர்கள்

**மேற்படி பதவிக்கு பொருத்தமான விண்ணப்பதாரிகள் பின்வரும் தகுதிகளையும் திறமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.**

- 20-27 வயதுக்கிடைப்பட்டவராக இருத்தல்.
- க.பொ.த (சா/த) ஆங்கிலம், கணிதத்தில் சாதாரண சித்தியுடன் க.பொ.த (உ/த) குறைந்த பட்சம் இரண்டு பாடத்தில் சித்தியடைந்திருந்தல்.
- மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் இருத்தல்
- குழுவாக ஒத்துழைத்து பணிபுரியும் தன்மை இருத்தல் அவசியம்
- நுண் நிதி துறையில் அனுபவம் இருப்பின் மேலதிக தகைமையாகக் கருதப்படும்

(C/10691)

| பதவி | பணிக்குரிய இடங்கள் |
|---|---|
| நுண் நிதி மேற்பார்வையாளர் | மன்னார் |
| நுண் நிதி அலுவலர்கள் - குழுக் கடன் | சுன்னாகம், கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, வாழைச்சேனை |
| நுண் நிதிய அலுவலகர்கள் - குத்தகை | யாழ்ப்பாணம், சாவகச்சேரி, செட்டிகுளம், மட்டக்களப்பு, நிலாவெளி, பொத்துவில், கிண்ணியா, வாழைச்சேனை, கொக்கட்டிச் சோலை |

மேற்குறித்த பதவிகளுக்கு நீங்கள் தகுதியானவர் என்று கருதுவீர்களானால் உங்களது முழு விவரங்களையும் உறவினர் அல்லாத இரு நடுவர்களின் தொடர்பு விவரங்களுடன் 15.08. 2013 ஆம் திகதிக்கு முன் எமக்குக் கிடைக்கும் வகையில் கீழ்வரும் முகவரிக்கு தபாலில் அல்லது மின்னஞ்சலில் அனுப்பிவையுங்கள்.


The Recruitment Centre, LOLC Group, No.100/1, Sri Jayawardenepura Mawatha,Rajagiriya.
E-Mail - careers@lankaorix.com



# CAUSEWAY PAINTS




**ISO**
**தரச்சான்றிதழ்**
**கிடைக்கப் பெற்றுள்ளது**




SLS 533

SLSI SYSTEM CERTIFIED ISO 9001 2008

SLS 557

(C/10889)

Causeway Paints Lanka (Pvt) Ltd.
# 15, Noel Mendis Mawatha, Modarawila Industrial Estate, Panadura, Sri Lanka.
T: +94(38) 2240040-5 F: +94(38) 2240046 E: luxury@sltnet.lk W: www.causewaypaints.com

KENLUX DE BEER Farecla AEROMIX


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
04/08/2013

# ஒட்டுசுட்டானில் சிறப்புற நடந்த பண்பாட்டுப் பெருவிழா





இந்தப் பிரதேசத்தின் வரலாறு களைக் கலை வடிவமாகவும், நூல் வடிவத்திலும் வெளியிட்டு வந்த கலைஞர்கள் பொன்னாடை அணிவித்துக் கௌரவிக் கப்பட்டனர்.

நெருங்கேணி, ஓக. 4

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட பண்பாட்டுப் பெருவிழா சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் பிரதேச பண்பாட்டுப் பெருவிழா வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளது.

ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் தேவஸ்தான வளாகத்தில் கடந்த 30 ஆம் திகதி செவ்வாய்கிழமை ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் தி.திரேஸ்குமார் தலைமையில் இந்த நிகழ்வு ஆரம்பமானது. விழாவுக்கு முன்னர் ஒட்டுசுட்டான் - முல்லைத்தீவு சந்தியில் இருந்து பண்பாட்டு முறையைச் சித்தரிக்கும் வகையில் விருந்தினர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

முதலில் தேசியக் கொடி மற்றும் பொதுச்சுடர் என்பன முல்லை மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகத்தால் ஏற்றி வைக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து பாரம்பரிய கலை நிகழ்வுகளும் இடம்பெற்றதோடு ''முத்தெழில்'' சிறப்பு மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

மேலும் இந்தப் பிரதேசத்தின் வரலாறுகளைக் கலை வடிவமாகவும், நூல் வடிவத்திலும் வெளியிட்டு வந்த கலைஞர்கள் பொன்னாடை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த விழாவில் முல்லைத்தீவு அரச அதிபர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டதுடன் வடக்கு மாகாண பண்பாட்டு அலுவலர்கள் அமைச்சின் பணிப்பாளர், புதுக்குடியிருப்பு, கரைதுரைப்பற்று, துணுக்காய், பாண்டியன்குளம் பிரதேச செயலர்கள், கல்விமான்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-435)

13 ஆண்டுகளாக தலைமுடி சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு உலகளாவிய ரீதியில் நம்பிக்கையை வென்ற ஒரே தயாரிப்பு ஒரிஜினல்




பயோட்டினெக்ஸ் e இல் மட்டுமே
தலைமுடி உதிர்வதை முற்றாக தடுத்து
பளபளப்பான மேனியழகை தரக்கூடிய
Bionutra Formula அடங்கியுள்ளது.




நாளொன்றுக்கு இரண்டு கெப்சூல் வீதம் பாவித்து சிறந்த பலனை பெற்றிடுங்கள்

MRP 850/-

"அருமையான கூந்தல்... அழகான மேனி..."

ஒரிஜினல் என்றுமே நம்பகரமானது

மேலதிக தொடர்புகளுக்கு 011 3094914

Distributed By : JEGAN PHARMACY
No. 462/B, Hospital Road, Jaffna.
Tel : 021-222-2194, 021-222-3191 Mob : 077-3269464



## Special Tour Packages to South India
### தென்னிந்திய திருத்தல யாத்திரைகள்


| | | |
|---|---|---|
| Lord Muruga Aaru Padai Veedu<br>ஆறுபடை வீடுகள் | 08 Nights / 09 Days | 04 Pax - Rs. 82000 pp<br>06 Pax - Rs. 72000 pp<br>08 Pax - Rs. 66000 pp |
| South Indian Temple Tour<br>தென்னிந்திய திருத்தல யாத்திரை | 11 Nights / 12 Days | 04 Pax - Rs. 96000 pp<br>06 Pax - Rs. 87000 pp<br>08 Pax - Rs. 79000 pp |
| Thirupathi Temple Tour<br>திருப்பதி | 03 Nights / 04 Days | 04 Pax - Rs. 43000 pp<br>06 Pax - Rs. 40000 pp<br>08 Pax - Rs. 37000 pp |
| Velankanni Church<br>வேளாங்கன்னி | 03 Nights / 04 Days | 04 Pax - Rs. 45000 pp<br>06 Pax - Rs. 41000 pp<br>08 Pax - Rs. 38000 pp |
| Navagraha Temple Tour<br>நவக்கிரக தரிசனம் | 04 Nights / 05 Days | 04 Pax - Rs. 47000 pp<br>06 Pax - Rs. 43000 pp<br>08 Pax - Rs. 40000 pp |

Package Includes
- 3 Star Hotel Accommodation on Twin Sharing Basis
- Breakfast
- A/C Transport Door To Door
- Visa Fee
- Return Air Ticket
- One Day of Shopping In Chennai
- English / Tamil Speaking Guide

Reserve your seats at your earliest.
*Conditions Apply

For more details visit 272, Stanly Road, Jaffna or call 021-222 0404 / 021-2219423 / 077 9152563 / 071 6512685

(C/10715)




சிறந்த வருமானத்தை* வழங்கும் நிலையான வருமான வழியொன்றில் முதலீடு செய்யும் முறை சம்பந்தமாக நாம் நடத்தும் இலவச கருத்தரங்கில் பங்குபற்றி புதிய முதலீட்டு வழி பற்றிய சகல புதிய தகவல்களையும் அறிந்துகொள்ளுங்கள்.

| திகதி | இடம் | விபரங்களுக்கும் பதிவிற்கும் | நேரம் |
|---|---|---|---|
| ஓகஸ்ட் 10 | கொழும்பு பங்குப்பரிவர்த்தனையின் யாழ் - கிளை, 147- 2/3, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். | தொலைபேசி: 021-2221455<br>0777-822014 | மு.ப. 9.00 – நண்பகல் 12.00 |

*தற்போதைய நிறைசேரி உண்டியல் வீதத்தைவிடக் கூடுதலானது.

CSE
COLOMBO STOCK EXCHANGE

(C/10696)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனம் பொருள் உற்பத்தியாளருக்கும் தனியார் நிறுவனங்கள் உதவ வேண்டும்

## பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஓக.4

பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டுள்ள குடும்பங்களது வாழ்வாதார மேம்பாட்டுக்கு உதவிகளை மேற்கொள்ளும் தனியார் நிறுவனங்கள், பனைசார் உற்பத்திகளை மேற்கொள்ளும் குடும்பத் தலைமைத்துவம் வகிக்கும் பெண்களுக்கும் கைகொடுப்பதன் ஊடாக அதிகளவான குடும்பங்கள் நன்மையடைவர் என்று பனை அபிவிருத்திச் சபைத்தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் பாதிப்புற்றுள்ள பெண்கள் தமது குடும்ப வாழ்வாதாரத்துக்கான தொழில் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இவற்றில் அதிகமானோர் பனைசார் உற்பத்திப் பொருள்களைப் பயன்படுத்தி சுயதொழில் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிராம ரீதியாக பனை அபிவிருத்திச் சபையால் 'சிறு சுவடுகள்' அமைப்பின் ஊடாக பெண்களைத் தலைமைத்துவக் கொண்ட குடும்பங்களுக்கு உதவிகள், ஆலோசனைகள் வழங்கப்பட்டு வரும் நிலையில், அதற்கான நிதிப் பற்றாக்குறைகளால் கூடுதலான உதவிகளை வழங்க முடியாத நிலையில் பனை அபிவிருத்திச் சபை உள்ளது.

எனினும் அரச சார்பற்ற நிறுவனங்கள் பெண்களைத் தலைமைத்துவமாக் கொண்ட குடும்பங்களுக்கு தமது நிகழ்ச்சித் திட்டத்துக்கு அமைவாக செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் நிலையில் இத்தகைய நிறுவனங்கள் பனை அபிவிருத்திச் சபையுடன் தொடர்பு கொள்ள தொடர்பை ஏற்படுத்தினால் உரிய பய னாளிகளை அடையாளப் படுத்திக் கொடுக்க பனை அபிவிருத்திச் சபை கைகொடுக்கும்.



ஏனெனில் பனை அபிவிருத்திச் சபையுடன் ஆற்றல் உடைய தொழில் முயற்சியாளர்கள் பலர், மூலப் பொருள்கள் மற்றும் நிதிப் பற்றாக்குறை காரணமாக மேலும் முன்னேற்றம் அடைய முடியாத நிலையில் உள்ளனர். இதனால் கிடைக்கக் கூடிய வளங்களும் விரயமாக்கப்படுகின்றன. இதனைச் சரியான முறைகளில் பயன்படுத்தி பொருளாதார ரீதியாக முன்னேற்றமடைய சுயதொழில் முயற்சியாளர்களுக்கு உதவிகள் தேவைப்படுகின்றன.

இந்த நிலையில் அரச சார்பற்ற நிறுவனங்கள் பனை அபிவிருத்திச் சபையுடன் இணைந்து தமது செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் பெண்கள் நன்மையடைய வாய்ப்பு அமையும்-என்றார். (வ-14)

# பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் ஊர்காவற்றுறைக்கு வேலைத்திட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 4

பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் கீழ் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந்த ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்துக்கு மின்பிறப்பாக்கி, றோ.க.வித்தியாலயத்துக்கு இசைக் கருவிகள், பத்திமா சனசமூக நிலைய சிறுவர் பூங்கா புனரமைப்பு, நாரந்தனை காந்திஜி சனசமூக நிலையத்துக்குத் கணினிகள், இருதயநாதர் சனசமூக நிலையத்துக்கு தளபாடங்கள், மத்திய கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு தளபாடங்கள்,நாரந்தனை தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு தையல் இயந்திரம், கரம்பொன் கிழக்கு, சனசமூக நிலையத்துக்கு மின் இணைப்பு, அன்னை வேளாங்கண்ணி தேவாலய மலசலகூட புனரமைப்பு, ஊர்காவற்றுறை பருத்தியடைப்பு சனசமூக நிலைய தளபாடக் கொள்வனவு அனலைதீவு தெற்கு சனசமூக நிலையத்துக்கு தளபாடக் கொள்வனவு ஆகியவற்றுக்காக வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (வ-7)



கொமர்ஷல் வங்கியில் திறமையான பிள்ளைகளுக்கு சிறப்பான பரிசுகள்




தேசிய மட்டத்தில் சிறப்பாக சித்தியடைந்தோருக்கு

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் உங்கள் பிள்ளை அகில இலங்கை ரீதியில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றால், பிள்ளைக்கு 18 வயதாகும் வரை மாதாந்தம் ஒரு தொகைப் பணம் புலமைப் பரிசாக வழங்கப்படும்.

1 ஆம் இடம் - மாதாந்தம் ரூபா.2,000 வீதம் அதிகபட்சம் ரூபா.170,000 வரை
2 ஆம் இடம் - மாதாந்தம் ரூபா.1,500 வீதம் அதிகபட்சம் ரூபா.127,000 வரை
3 ஆம் இடம் - மாதாந்தம் ரூபா.1,000 வீதம் அதிகபட்சம் ரூபா.85,000 வரை பரிசாக வழங்கப்படும்.

மாவட்ட மட்டத்தில்

உங்கள் பிள்ளை மாவட்டத்தில் முதலிடம் பெற்றால் ரூபா.50,000 பணப் பரிசு வழங்கப்படும்.

பாடசாலை மட்டத்தில்

சிறப்பாக சித்தியடைந்தோருக்கு அனைத்துப் பாடசாலைகளிலும்.
1 ஆம் இடம் - ரூபா.10,000
2 ஆம் இடம் - ரூபா.7,500
3 ஆம் இடம் - ரூபா.5,000 பரிசாக வழங்கப்படும்.

இச் சலுகைகளைப் பெற செய்யவேண்டியது யாதெனில், 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறும் தினத்தின் போது அருணலு கணக்கில் ஆகக் குறைந்தது ரூபா. 5,000 ம் மீதி இருக்க வேண்டும்.

* தேசிய மட்டத்தில் சிறப்பாக சித்தியடைந்தோருக்கு புலமைப்பரிசில் தொகை 6ஆம் வகுப்புத் தொடக்கம் பிள்ளைக்கு 18 வயதாகும் வரை மட்டுமே வழங்கப்படும்.
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது

Arunalu
Children's Savings Account
COMMERCIAL BANK
(C/10687)
11 2353 333 www.combank.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
04/08/2013







யாழ்.நாச்சிமார் அம்பாள் தேவஸ்தானத்தின் கீழ் இயங்கும் காமாட்சி முன்பள்ளி சிறார்களின் மெய்வன்மைப் போட்டியில் விநோத உடையில் தோன்றிய மாணவிகள். (ஒ-எ)

# சட்டவிரோதமாக சுண்ணக்கல் ஏற்றியோர் பொலிஸாரிடம்



வலி. வடக்கு, ஒக.2

சட்டவிரோதமாக சுண்ணக்கற் கள் ஏற்றியவர்கள் பொலிஸ் அதிரடிப் படையினரிடம் வசமாக மாட்டிக் கொண்ட சம்ப வம் ஒன்று தெல்லிப் பழை பொலிஸ் பகுதயில் கடந்த திங்கள் கிழமை இரவு இடம் பெற்றுள்ளது. தெல்லிப்பழை பிரதேச செய லாளர் பிரிவுக்கு உட்பட்ட வித் தகபுரம் பகுதியில் உள்ள தனி யார் காணிகளில் இரவு நேரங் களில் திருட்டுத்தன மாக சுண் ணக்கற்கள் அகழ்வதில் ஒரு சிலர் கடந்த சில தினங்களாக ஈடுபட்டு வந்துள்ளார்கள்.

இந்நிலையில் கடந்த திங்கள் கிழமை இரவு பொலிஸ் அதிர டிப் பகுதியினர் திடீரென மேற் கொண்ட நடவடிக்கையின் போது 5இற்கு மேற்பட்ட டிரக்டர்கள் மற்றும் இரண்டு சிறய ரக வாகனங்களும் கற் களுடன் பொலிஸ் அதிரடிப் படையினரால் கைப்பற்றப் பட்டு தெல்லிப்பழை பொலி சாரிடம் ஒப்படைக்கப்பட்டுள் ளது.

சுண்ணக்கற்கள் அகழ்ந்தவர் கள் தெல்லிப்பழை பொலிஸாரால் மல்லாகம் நீதிமன்றத்தில் முன் னிலைப்படுத் தப்படவுள்ளார்கள் என தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரி வித்துள்ளார்.

வாகனங்க ளின் சாரதிகள் பொலிஸ் பிணை யில் விடப்பட்டுள்ள போதிலும் வாக னங்கள் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. (வ-86)

MINISTRY OF YOUTH AFFAIRS AND SKILLS DEVELOPMENT

german cooperation
DEUTSCHE ZUSAMMENARBEIT

## இலங்கை - ஜேர்மனி பயிற்சி நிறுவனத்துக்கான (SLGTI)
# ஒரு சின்னத்தை வடிவமைக்கும் போட்டி

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் வரும் தேசிய தொழில் பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை கிளிநொச்சி மாவட்டத்தில் ஜேர்மனி சமஷ்டிக் குடியரசின் நிதி உதவியுடன் இலங்கை – ஜேர்மனி பயிற்சி நிறுவனத்தை (SLGTI) இப்பொழுது நிர்மாணித்து வருகின்றது.

1970 களின் ஆரம்பம் தொடக்கம் Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) அமைப்பு இலங்கையில் தொழில் பயிற்சியை மேம்படுத்துவதில் மிகவும் முக்கியமானதொரு பாத்திரத்தை வகித்து வந்துள்ளது. அது தொழிற் பயிற்சி தொடர்பாக புதுமைப்புனைவிலான கருதுகோள்கள் மற்றும் திட்டங்கள் என்பவற்றை அறிமுகம் செய்து வைப்பதனூடாக பல்வேறு கருத்திட்டங்களையும், நிகழ்ச்சித்திட்டங்களையும் இலங்கையில் அமுல் செய்திருந்தது. அதன் பிரகாரம், இலங்கை - ஜேர்மனி பயிற்சி நிறுவனத்தின் (SLGTI) தொனிப்பொருள் மற்றும் ஆணைப்பத்திரம் என்பவற்றை பிரதிபலிக்கும் விதத்தில் ஒரு சின்னத்தை வடிவமைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. நாங்கள் உங்களுக்கு இதன் மூலம் ஒரு பகிரங்க வேண்டுகோளை விடுக்க விரும்புகின்றோம். புதுமைப்புனைவிலான கருத்துக்களுடன் கூடிய வித்தில் ஆக்கபூர்வமான சின்னங்களை வடிவமைத்து, சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். அவற்றிலிருந்து நாங்கள் மிகச் சிறந்த சின்னத்தைத் தெரிவு செய்ய உள்ளோம்.

**இலங்கை - ஜேர்மனி பயிற்சி நிறுவனம் (SLGTI) குறித்து**

கிளிநொச்சியில் அமையவிருக்கும் இலங்கை – ஜேர்மனி பயிற்சி நிறுவனம் ஒரு தேசிய நிறுவனமாக இருந்து வருவதுடன், அதில் நாட்டில் வாழும் அனைத்து இளைஞர் யுவதிகளும் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ள முடியும். அது இளைஞர் யுவதிகளுக்கு சான்றிதழ் பாடநெறிகளையும், டிப்ளோமா பாடநெறிகளையும் வழங்கும். கிளிநொச்சி SLGTI 2015 ஆம் ஆண்டு தொடக்கம் செயற்படவிருப்பதுடன், பின்வரும் துறைகளில் பாடநெறிகள் ஆரம்பிக்கப்படும்:

1. மோட்டார் வாகனத் தொழில்நுட்பம்
2. கட்டுமான தொழில்நுட்பம்
3. உணவு பதப்படுத்தல் தொழில்நுட்பம்
4. மின்சார மற்றும் மின்னியல் தொழில் நுட்பம் (சூரிய ஒளித் தொழில்நுட்பத்தையும் உள்ளடக்கிய விதத்தில்)
5. எந்திரவியல் பொறியியல்

மேலும், SLGTI தேசிய தொழிற் பயிற்சித் தராதர மட்டங்கள் (NVQ) 4, 5 மற்றும் 6 என்பவற்றைச் சேர்ந்த தொழில்களில் உயர் தரம் வாய்ந்த பயிற்சியை வழங்கவுள்ளது. தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் தெரிவு செய்யப்பட்ட தொழில் துறைகளில் நிலவி வரும் கேள்விகளை நிறைவேற்றி வைக்கக் கூடிய விதத்தில் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளைத் தயாரிப்பதற்கு இந்தப் பாடநெறிகள் பங்களிப்புச் செய்யும்.

**போட்டியில் சேர்ந்து கொள்வதற்கான தகைமைகள்**

சின்னம் பின்வருவரும் விதத்தில் அமைதல் வேண்டும்...

- இளைஞர் யுவதிகளுக்கு வலுவூட்டி, அவர்களுக்கு புதிய வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுப்பதற்கென இலங்கைக்கும் ஜேர்மனிக்கும் இடையிலான ஒத்துழைப்பை SLGTI பலப்படுத்த வேண்டும் என்ற அடிப்படை நோக்கத்துக்கு பொருந்தக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
- அது கல்விப்புலம், இணைப்பு மற்றும் ஒத்துழைப்பு என்பவற்றுடன் சம்பந்தப்பட்டதாக இருந்து வருதல் வேண்டும்.
- நவீனமானதாக, எளிமையானதாக, எடுப்பானதாக, எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதாக, கருத்தைக் கவர்வதாக இருந்து வருதல் வேண்டும்.
- இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் ஆதரவுடன் செயற்பட்டு வரும் ஏனைய நிறுவனங்களின் சின்னங்களுடன் பொருந்தக் கூடியதாக இருந்து வருதல் வேண்டும். அதாவது, ஒரே குரலை பிரதிபலிக்க வேண்டும்; ஆனால், அவற்றுடன் போட்டி போடக் கூடாது.
- தற்பொழுது செயற்பட்டு வரும் ஏதேனும் பயிற்சி நிறுவனங்களின் சின்னங்களிலிலுள்ள கூறுகளைப் பயன்படுத்தக் கூடாது.
- GIZ இன் சின்னம் மற்றும் ஏனைய பங்காளர் நிறுவனங்களின் சின்னங்கள் என்பவற்றுடன் சேர்த்து முறையாகப் பயன்படுத்தக் கூடிய வித்தில் அமைதல் வேண்டும்.
- S-L-G-T-I என்ற எழுத்துக்களை உள்ளடக்குதல் வேண்டும். சொல் அல்லது பெயர் (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்) மூன்று மொழிகளிலும் இருந்து வர முடியும்.
- 'இலங்கை - ஜேர்மனி பயிற்சி நிறுவனம்' என்ற பெயருடன் இணைந்த விதத்திலும், அதே போல பெயர் இல்லாத விதத்திலும் பயன்படுத்தக் கூடியதாக இருந்து வருதல் வேண்டும்.
- வர்ணத்திலும், கறுப்பு - வெள்ளையிலும் இருத்தல் வேண்டும்; பல்வேறு அளவுகள் மற்றும் பல்வேறு பாவனைகள் என்பவற்றுடன் அனுசரித்துச் செல்லக் கூடியதாக இருந்து வருதல் வேண்டும். (உதாரணமாக, இணையதளப் பக்கங்கள், மின்னஞ்சல், வன் பிரதி, காட்சிப்படுத்தப்படுதல், சுவரொட்டிகள்).
- எவரேனும் நபரினால் அல்லது நிறுவனத்தினால் / கழகத்தினால் அல்லது சங்கத்தினால காப்புரிமை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் பொருட்களை (புகைப்படம், அடையாளம், குறியீடு முதலியவை) உள்ளடக்கக் கூடாது.

➢ பங்கேற்பாளர்கள் தமது வடிவமைப்புக்களை A4 அளவுத் தாளில் அச்சடித்து, கீழே தரப்பட்டிருக்கும் நுழைவு விண்ணப்பப் படிவத்தை உரிய விதத்தில் பூர்த்தி செய்து அனுப்பி வைத்தல் வேண்டும்.

➢ ஒரு வடிவமைப்பாளரிடமிருந்து ஒரு விண்ணப்பம் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

**பின்வரும் அளவுகோலின் பிரகாரம் சிறந்த சின்னம் நடுவர்களால் தெரிவு செய்யப்படும்:**

- வடிவமைப்பின் அசல் தன்மை
- கவர்ச்சியான தோற்றம், பிராந்தியத்தின் / நிறுவனத்தின் அர்ப்பணிப்புணர்வு, அபிலாசைகள் மற்றும் கலாசார பன்முகத்தன்மை என்பவற்றைப் பிரதிபலித்தல்.
- போட்டிக்கான தேவைப்பாடுகளை நிறைவேற்றி வைக்காத ஏதேனும் ஒரு விண்ணப்பத்தை அல்லது விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வதற்கான அல்லது நிராகரிப்பதற்கான உரிமையை இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு கொண்டுள்ளது.
- SLGTI சின்ன வடிவமைப்பு போட்டியின் நடுவர் குழுவின் முடிவு இறுதியானதாக இருந்து வருவதுடன், அந்த முடிவுக்கு எதிராக முன்வைக்கப்படும் முறையீடுகள், மேன்முறையீடுகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

**காப்புரிமை மற்றும் பரிசு**

- இந்தப் போட்டியில் பங்கேற்பதன் மூலம் வடிவமைப்பாளர், தான் அனுப்பி வைக்கும் சின்னங்களை இலங்கை - ஜேர்மனி பயிற்சி நிறுவனத்தின் மேம்பாட்டுச் செயற்பாடுகளில் பயன்படுத்துவதற்கான உரிமைகளை இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சுக்கு வழங்குகின்றார்.
- வெற்றியீட்டுபவர்கள் பிரயோகிக்கத்தக்க அனைத்து அறிவுசார் சொத்துக்களையும், இலங்கை – ஜேர்மனி பயிற்சி நிறுவனத்தின் பிரத்தியேகமான, முழுமையான மேம்பாட்டுச செயற்பாடுகளில் பயன்படுத்திக் கொள்வதற்கென இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சுக்கு மாற்றுதல் வேண்டும்.
- தெரிவு செய்யப்படும் சின்னத்தின் வெற்றியாளருக்கு நடுவர் குழுவினால் ஒரு விசேட பரிசு வழங்கப்படும்.

உங்கள் விண்ணப்பங்களை **2013 ஆகஸ்ட் 31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கும் விதத்தில் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும் (தயவு செய்து கடித உறையின் இடது மேல் மூலையில் "LOGO DESIGN CONTEST FOR - SLGTI" எனக் குறிப்பிடவும்)

**நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர், GIZ – VTN, இல. 33, 4 ஆவது ஒழுங்கை, கனகபுரம், கிளிநொச்சி**

**SLGTI சின்ன வடிவமைப்புப் போட்டி உத் தியோகபூர்வ நுழைவுப் படிவம்**

முழுப் பெயர் :........................................

பிறந்த திகதி :........................................

முகவரி :........................................

தொலைபேசி இலக்கம் :........................................

மின்னஞ்சல் :........................................

**பிரகடனம்:** SLGTI சின்ன வடிவமைப்புப் போட்டி தொடர்பாக உருவாக்கப்பட்டிருக்கும் விதிகள் மற்றும் நிபந்தனைகள் என்பவற்றுக்கு இணங்கியொழுகுவதற்கு நான் உடன்படுவதுடன், சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் சின்ன வடிவமைப்பு, பதிப்புரிமையின் மூலம் பாதுகாக்கப்பட்ட அல்லது நூலாசிரியர் பாகம் செலுத்தப்பட வேண்டிய பொருட்கள் எவற்றையும் உள்ளடக்கவில்லை என்பதனை அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

திகதி : ____________ கையொப்பம் : ____________

Implemented by NAITA

giz Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH

KFW

(C/10690)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org